வெளியீடு 10-10-2005

Issued 10-10-2005

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செய்லக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

DIGITIZED

வியாழக்கிழமை, ஏப்ரல் 7, 2005—தொகுதி 80 — எண் 2

Thursday the 7th April, 2005 —Volume 80 — No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...tive Assembly Secretariat, Chennai - 600 009

V 2U,31805
805.80.2
186280.

[Price Rs. 3.00

565
21.2.06

# 7-4-2006

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. இரங்கற் குறிப்புகள்—**

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு 291-292

**2. கவன ஈர்ப்பு—**

(அ) கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமங்களில் தூண்டில் வளைவு மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல் 292-296

(ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், முத்திரைத் தாள் கட்டணம் அதிக அளவில் வசூலித்தல் 296-300

**3. அறிக்கை அளித்தல்—**

அவை உரிமைக் குழு 301

**4. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த குழுவின் அறிக்கையை விதி 229(ஆ)—ன்கீழ் ஆய்வு செய்தல் மற்றும் அதன் பரிந்துரைகளுக்கு விதி 229(ஈ)—ன்கீழ் இசைவு கோருதல் 301-302

(ஆ) விதி 32—ஐத் தளர்த்தல் 437-438

(இ) விதி 55(6)—ஐத் தளர்த்தல் 439

பக்கங்கள்


5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 19 – உயர் கல்வித் துறை
(ஆ) கோரிக்கை எண் 41 – பள்ளிக் கல்வித் துறை
(இ) கோரிக்கை எண் 44 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – தமிழ் வளர்ச்சி –பண்பாடு — 302-309, 314-363

* மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 306,308, 314-316, 321,322, 324-325, 328,330,331, 333-350

திரு. கே. மகேந்திரன் — 303-309

திரு. வை. சிவபுண்ணியம் — 314-326, 351

திரு. எச். ராஜா — 325-332

(ஈ) கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(உ) கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை — 364-437

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 364,377,387,388, 395-396,397, 398, 399-400, 401-402, 423-424, 425, 427-428,431

திரு. மு.பெ. சாமிநாதன் — 391-396, 399, 400-401, 402,403,404




பக்கங்கள்


5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(உ) கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை—தொடர்ச்சி

திரு. பி.கே. சேகர்பாபு — 405-421,

திரு. கே.ஆர். இராமசாமி — 423-424, 426-427, 430-437

6. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—

(அ) ஊராட்சிப் பணியாளர்களுக்குத் தொகுப்பூதியம் உயர்த்துதல் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை — 309-311

(ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை — 311-313

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 439-441

தமிழ்நாடு ஆவணக் கா...
186280
சென்...-600 008
...லகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 25, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2036**
**2005 ஏப்ரல் 7, வியாழக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்*
*செல்வார்க்குச் செல்லாதது இல்.”*

*செய்யக்கூடிய செயலைக் குறித்து ஒருவர் அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்து, அவற்றிலே தம் முழுக் கவனத்தையும் செலுத்தி, மேற்கொண்டு முயலுபவருக்கு முடியாதது என்று ஒன்றுமில்லை.*

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர் ஆகியோர் 5–4–2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நெல்லிக்குப்பம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1962 முதல் 1967 வரை, 1971 முதல் 1976 வரை மற்றும் 1980 முதல் 1984 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், 1967 முதல் 1970 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.*

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 7

திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர் அவர்கள் சைதாப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1989 முதல் 1991 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்கள்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

**[குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### (அ) கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமங்களில் தூண்டில் வளைவு மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. டி. மணி மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமங்களில் தூண்டில் வளைவு மற்றும் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:



2005 ஏப்ரல் 7] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

**அறிக்கை**

26–12–2004 அன்று ஏற்பட்ட சுனாமிப் பேரலையின் காரணங்களால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட பேரழிவில், இத்துறைமூலம் அமைக்கப்பட்டிருந்த தூண்டில் வளைவுகளினால் அப்பகுதி மக்கள் பெருமளவு பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது நிரூபணமாகியிருக்கிறது. இதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்பினைத் தடுப்பதற்காகவும், மீனவர்களின் மீன்பிடிப் பயன்பாட்டிற்காகவும், 18 கிராமங்களில் தூண்டில் வளைவுகள் அமைக்க, ரூ.4,050 இலட்சத்திற்கும், கடலரிப்பினைத் தடுப்பதற்காக மிக அவசியமான வெவ்வேறு இடங்களில் மொத்தம் 10.75 கி.மீ. நீளத்திற்குக் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்ட ரூ.5,375 இலட்சத்திற்கும் மற்றும் விடுபட்ட 10 இடங்களில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்க ரூ.404.6 இலட்சத்திற்கும் கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து இடங்களையும், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளை ஆய்வு செய்து முடிவெடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு, பார்வையிட்டுச் சென்றுள்ளது. மேற்கூறிய பகுதிகள் தவிர, அப்பகுதி மக்களின் கோரிக்கைகளுக்கேற்பவும் அனைத்து இடங்களையும் பார்வையிட்டிருக்கிறது.

மேற்கூறிய வல்லுநர்களின் அறிக்கை கிடைக்கப்பெற்றபின், நிதி ஒதுக்கீடு பெற்று, அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கையினுடைய முழு விவரங்களையும் நான் படித்துப் பார்த்தேன். ஏற்கெனவே, அந்த மாவட்டத்தினுடைய கடலோரத்தில், குறிப்பாக கன்னியாகுமரியிலிருந்து இனையம்புத்தன்துறை வரையிலும் சமீபத்தில் ஏற்பட்ட சுனாமியினுடைய தாக்குதலால் மிகப் பெரிய பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு முன்னால் ஒரு கட்டத்தில் நிறைய கற்களைப் போட்டு நாம் பாதுகாத்து வந்திருக்கின்றோம். அப்படிப்பட்ட இடங்களில் இந்தக் கடல் கொந்தளிப்பு பெரிய தாக்குதலைத் தொடுக்கவில்லை. எனவே, விடுபட்டுப்போயிருக்கின்ற பகுதிகளில், குறிப்பாக வள்ளவிளை, சின்னத்துறை, பூத்துறை, மார்த்தாண்டம்துறை, அதுபோன்று கோவளத்தினுடைய சில பகுதிகளில், குளச்சலினுடைய சில பகுதிகளில், முழுமையாகக் கற்களைப் போடுவது, அவ்வாறு

கற்களைப் போட்டு இந்தக் கொந்தளிப்பைத் தடுப்பது என்பது தவிர்க்க முடியாத ஒரு காரியமாக உள்ளது. எனவே, இதில் விடுபட்ட இடங்களை, அந்த ஊர்களினுடைய நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கவேண்டும். அடுத்த ,'மாதம், பங்குனியைத் தாண்டி ஆனி, ஆடி மாதம் என்று வருகின்றபோது மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்படுகின்ற நேரம்; அதற்கு முன்னால்—இந்த விடுபட்ட சில gap–களில், அந்த gap–களில் மட்டும் நிரப்பினால், இந்த வீடுகளை ஆக்கிரமிக்காமல் இருக்கக்கூடிய நிலை ஏற்படும். அந்தவகையிலும், அதுபோன்று தூண்டில் வளைவு என்பது, அது சாதாரணமாகச் செலவினம் அதிகம் என்று நான் கருதுகின்றேன். அந்தத் தூண்டில் வளைவுகள், ஒரு தொகுதிக்கு ஒன்று என்ற அடிப்படையிலே அதைச் சீர் செய்வது என்பது, நீண்டகாலம் இந்தக் கடல் ஆக்கிரமிப்பைத் தடுப்பதிலிருந்து நாம் மீனவ மக்களையும், அந்தக் கிராமங்களையும் பாதுகாத்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். அந்த வகையிலே நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த 4 ஆண்டுகளில், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, கடலோர மாவட்டங்களில் கடல் அரிப்பினால், அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற குடிசைகள் மற்றும் அவர்களுடைய உடைமைகள் பாதிக்கப்படுவதை—கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனேயே, தமிழகத்தில், குறிப்பாக, அந்தக் கடல் அரிப்பு அதிகமாக இருக்கின்ற பகுதிகளில், 6 மாவட்டங்களுக்கு உடனடியாக ரூ. 68.78 கோடி என்ற அளவிற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, கல் தடுப்புச் சுவர்களும், தூண்டில் வளைவுகளும் ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பகுதிகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த சுனாமிப் பேரலையால் ஏற்பட்ட பாதிப்புகள், கடலோர மாவட்டங்களில் அதிக அளவு இருந்தன என்பது கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் எடுத்த நல்ல நடவடிக்கையின் காரணமாக, கல் தடுப்புச் சுவர்களும், தூண்டில் வளைவுகளும் இருந்த பகுதிகளில் சேதங்கள் குறைவாகவே நிகழ்ந்திருக்கின்றன என்பதனை அனுபவபூர்வமாக நாம் கண்டறிந்து இருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள், கடலோர மாவட்டங்களான





13 மாவட்டங்களிலும், 1076 கி.மீ. என்ற அளவிற்கு இருக்கின்ற கடற்கரைப் பகுதிகளில், மனித உயிர்கள், குடிசைகள், அவர்களுடைய உடைமைகள் எதிர்காலத்தில் நிரந்தரமாகப் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, அந்தப் பகுதிகளில் ஒரு நீண்ட ஆய்வு நடத்தப்படவேண்டுமென்று ஆணையிட்டிருந்தார்கள். அந்த அடிப்படையில், இந்தியத் தொழில்நுட்பக் கழகத்திற்கு 3.6 இலட்சம் ரூபாயினை மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதித்து, இந்தியத் தொழில்நுட்பக் கழகம், 1,076 கி.மீ. நீளத்திற்குத் தன்னுடைய ஆய்வுகளை முடித்திருக்கின்றது. அறிக்கை நிறைவுபெறும் நிலையில் இருக்கின்றது. அறிக்கை அரசுக்கு வரப்பெற்றவுடன், அந்த அறிக்கையில் இருக்கின்ற சாராம்சங்களை அரசு தீவிரமாக ஆய்வு செய்து, கடலோரம் இருக்கின்ற 1076 கி.மீ. நீளத்திற்கும், எங்கெல்லாம் கடல் அரிப்பு அதிகமாக ஏற்பட்டு, அங்கு மக்களுடைய உயிர்களுக்கும், உடைமைகளுக்கும், மிகுந்த சேதத்திற்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு, பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்று, நிரந்தரத் தீர்வு காண்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்னும் இரண்டொரு மாதங்களில் வரவிருக்கின்ற கடல் அலையினால் ஏற்படும் சேதங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கோரிக்கை முன்னுரிமை கொடுத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்தக் கடல் அலையிலிருந்து நம்முடைய மக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எடுத்திருக்கின்ற சீரிய நடவடிக்கையை நான் பாராட்டுகின்றேன். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், விடுபட்டுப் போயிருக்கின்ற பகுதிகளில், நான் ஏற்கெனவே சொன்னதுமாதிரி, இந்த ஒரு மாதத்தைத் தாண்டுகின்றபோது, கடல் அலை தாக்கக்கூடிய சில gap–கள் இருக்கின்றன. அதைப் போடுகின்ற காலத்தில், அந்த gap–ஐ நீங்கள் கொடுக்கக்கூடாது என்று அன்றைக்கே சொன்னேன். ஆனால், அவர்கள் பணம் பற்றாக்குறை என்று சொல்லி, அந்த gap–ஐக் கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் கூட, மிகப் பெரிய நெருக்கடி ஏற்படும். ஏற்கெனவே வல்லவிளை கிராமம், இப்படி ஆக்கிரமிக்கப்பட்டு, உயிர்ச் சேதம் வரையிலும் ஏற்பட்டுள்ள பகுதியாகும். ஆகவே, இவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய, குறிப்பாக இந்த 4, 5 தொகுதிகளில் இருக்கின்ற இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காண, அவசரமாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, இந்தப் பிரச்சினையில் அரசு இன்னும் சீரிய நிலையிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டு, என்னுடைய நிலையை நான் தெளிவுபடுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் முக்கியத்துவம் கருதி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, பணிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், முத்திரைத் தாள் கட்டணம் அதிக அளவில் வசூலித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு, திரு. சி. சண்முகவேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. சண்முகவேலு.

முற்பகல் 10–10

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் பத்திரப் பதிவிற்கு முத்திரைத் தாள் கட்டணம் அதிக அளவில் வசூலிப்பது" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்:



### அறிக்கை

பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும்போது, கை மாறும் சொத்தின் சந்தை மதிப்பின்மீது, இந்திய முத்திரைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களில் முத்திரைத் தீர்வை வசூலித்திட வேண்டும். ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட சொத்து மதிப்பு, சந்தை மதிப்பைவிடக் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளில், சொத்தின் சரியான சந்தை மதிப்பை நிர்ணயம் செய்யும் பொருட்டு, ஆவணம் பதிவு செய்தபின், தனித் துணை ஆட்சியர் (முத்திரை) / மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) அலுவலர்களுக்கு மதிப்பு நிர்ணயம் செய்ய அனுப்பப்படுகின்றன. சொத்து நேரில் பார்வையிடப்பட்டு, சொத்து அமைவிடம், உள் கட்டமைப்பு வசதிகள் மற்றும் உள்ளூர் விசாரணை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, சொத்து மதிப்பு, தனித் துணை ஆட்சியர் (முத்திரை) / மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) அவர்களால் நிர்ணயிக்கப்பட்டு, குறைவு முத்திரைத் தீர்வை செலுத்த 2 மாத கால அவகாசம் வழங்கப்படுகிறது. இக்காலக் கெடுவிற்குள், குறைவு முத்திரைத் தீர்வை செலுத்தப்படாத ஆவணங்களைப் பொறுத்து மட்டுமே, இந்திய முத்திரைச் சட்டத்தின்படி மாதம் ஒன்றுக்கு 2 சதவீதம் வட்டி விதிக்கப்படுகிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுவது, குறைவு முத்திரைத் தீர்வை செலுத்தாமல், காலம் தாழ்த்தப்பட்ட ஆவணங்களுக்கு வசூலிக்கப்படும் வட்டி வீதத்தைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. குறைவு முத்திரைத் தீர்வையாக முடங்கிக் கிடக்கும் அரசு வருவாயை உடனுக்குடன் வசூல் செய்யும் நோக்குடனும் பொது மக்கள் தாமதம் செய்யாமல் குறைவு முத்திரைத் தீர்வையை விரைவாகச் செலுத்தவும் வட்டி விதிக்கப்படுகிறது.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்ட விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். உடுமலை வட்டத்தில் சட்டப் பிரிவு 47–ஏ(1)–ன்கீழ், நடவடிக்கை எடுக்கப்புடும் ஆவணங்களுக்கு, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் உண்மையான சந்தை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல், 70 முதல் 80 சதவிகிதம் என்கிற அடிப்படையில் மதிப்பு நிர்ணயம் செய்யப்படுவதால், பொதுமக்கள் ஆவணங்களைத் திரும்ப வாங்க முடியாமல் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகிறார்கள். மேலும், ஆவணங்களை வாங்க இயலாத நிலையிலுள்ள பொதுமக்களை வருந்தவைக்கும் செயலாக, நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பிற்கு 24 சதவிகிதம் வட்டி சேர்த்து வசூலிக்கப்படுகிறது. அப்படி வசூல்

செய்யப்படும் வட்டி, கட்ட வேண்டிய தொகையைவிட அதிகமாக உள்ளது. இதனால், பொதுமக்கள் பத்திரங்களை வாபஸ் பெற இயலாமலும், புதிதாகக் கிரயம் செய்வதற்கும் சிரமப்படுகிறார்கள். இதனால், பணப் புழக்கம் மிகவும் குறைகிறது. பொதுமக்களின் முதலீடுகளும் வேறுவகையில் செல்ல நேரிடுகிறது. இதனை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு துறை அமைச்சர் மூலமாக, எனது தொகுதியில் சரியான சந்தை மதிப்பை நிர்ணயம் செய்யவும், 24 சதவிகித வட்டி என்பது எனது சட்டமன்றத் தொகுதியில் மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் உள்ள பொதுவான ஒரு பிரச்சினை என்பதால், நடவடிக்கை எடுக்க நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே வழிகாட்டு மதிப்பிற்கும், சந்தை மதிப்பிற்கும், பத்திரங்கள் பதிவு ஏற்படுகின்றபோது, அதிக அளவு வித்தியாசம் காணப்படின், அது தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களுக்கு 47–ஏ–ன்கீழ் அனுப்பி வைக்கப்படுகின்றது. அவர் அந்தப் பகுதிக்கு வருகை தந்து, அங்கிருக்கின்ற நிலைமைகளையெல்லாம், சந்தை மதிப்பு நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து அவர் தனக்குரிய அதிகாரத்தில் சில சதவிகிதங்கள் குறைத்து, பத்திரங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படுகின்றன. அதற்கு மேலும், வாடிக்கையாளர்கள்— பத்திரப் பதிவிற்கு வந்த உரிமையாளர்கள் — சந்தை மதிப்பிற்கும், வழிகாட்டு மதிப்பிற்கும், வித்தியாசங்கள் அதிகம் என்ற நிலையைத் தெரிவித்து, இன்றைக்குப் பல்வேறு இடங்களிலிருந்து இம்மாதிரியான பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் முத்திரைச் சீரமைப்புக் குழு அமைக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக அறிவித்திருக்கின்றார்கள். அரசு, இன்னும் ஓரிரு மாதங்களில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் முத்திரைச் சீரமைப்புக் குழு அமைத்து அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற வழிகாட்டு மதிப்பிற்கும், சந்தை மதிப்பிற்கும் இருக்கின்ற முரண்பாடுகளைக் களைவதற்கு நல்ல ஆலோசனைகள் வழங்கும். அதன் அடிப்படையில், அரசு இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காணும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, இங்கு வழிகாட்டு மதிப்பிற்கும், சந்தை மதிப்பிற்கும் தனித் துணை ஆட்சியர் அவர்கள் முடிவிற்குமேல், பத்திரம் பதிந்திருப்போர், தங்களுடைய





பத்திரங்களை இரண்டு மாதங்களுக்குள் வாங்கவில்லையென்றால், 2 சதவிதக வட்டி என்றும், ஒரு வருடத்திற்குமேல் வாங்கவில்லையென்றால் 24 சதவிகித வட்டி என்றும் வசூலிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதையும் வாடிக்கையாளர்கள் அதிகம் என்று கோரிக்கையினை விடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையும், வட்டி விகிதத்தினுடைய பிரச்சினையும் எடுத்துச்செல்லப்பட்டு, ஒரு நல்ல தீர்வு காணப்படும் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் பத்திரப் பதிவுத் துறையில் பொதுமக்களுடைய சௌகரியங்களுக்கு, பொதுமக்களுக்கு பல்வேறு வகையான சலுகைகளை வழங்கி இருக்கின்றார்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10–15*

குறிப்பாக, கிரய ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை, 13 சதவிகிதத்திலிருந்து, 8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. அடமானத்திற்கு 4 சதவிகிதத்திலிருந்து, ஒரு சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஒத்தி போன்ற ஆவணங்களுக்கு, 8 சதவிகிதத்திலிருந்து, 3 சதவிகிதமாகவும், குத்தகை போன்ற ஆவணங்களுக்கு, 4 சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகவும், பாகம், ஏற்பாடு, விடுதலை போன்ற ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை, 4 சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகவும், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள், இங்கே (மேசையைத் தட்டும் ஒலி) முத்திரைத் தீர்வையைக் குறைத்து, பொது மக்கள் பயனுறும்வகையில், நல்ல பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், அரசு, இன்னும் ஓரிரு மாதங்களில் நல்ல பல நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குழு ஒன்று அமைத்து, இரண்டொரு மாதங்களில் உரிய நடவடிக்கையை அம்மா அவர்களுடைய அரசு

எடுக்கும் என்று கூறினார்கள். அதற்கு அவருக்கு மிக்க நன்றி. இருப்பினும், என்னுடைய உடுமலைப்பேட்டை முழுவதும், சார் பதிவாளர் அலுவலகங்களில், சந்தை மதிப்பைவிட, வழிகாட்டிப் பதிவேட்டிலுள்ள மதிப்பு, பல இடங்களில், 300 சதவிகிதத்திலிருந்து 600 சதவிகிதம் வரை, 1996 ஆம் ஆண்டு அதிகப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கூற விரும்புகிறேன். இதனால், பத்திரப் பதிவின்போது, முத்திரைத் தீர்வை அதிகமாக வசூலிக்கப்படுகிறது. இதனால், எனது தொகுதியிலுள்ள பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். கிரய ஆவணப் பதிவு, மிகவும் குறைவாகப் பதிவாகிறது. இந்தப் பிரச்சினை காரணமாக, பொதுமக்கள் கடந்த நான்காண்டுகளாக, என்னிடம் கூறப்படும் பிரச்சினைகளில், இந்தப் பிரச்சினை, அதிக அளவில் உள்ளது என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மதிப்பை நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில், நிர்ணயம் செய்யப்படுவதால், பொது மக்கள் மிகுந்த துயரத்திற்கு உள்ளாகிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள், எனது தொகுதியில், மிக முக்கியமான பிரச்சினையான, சந்தை மதிப்பை, அதிகாரிகள் மற்றும் பொது மக்களுடன் கலந்த ஒரு குழுவை—அதாவது அந்தக் குழு அமைக்கும்போது, அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்களுக்கும் ஒரு முன்னுரிமையை அளித்து, அந்த உறுப்பினர்கள்—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும், அதிலே ஒரு குழு உறுப்பினராக நியமித்து, சந்தை மதிப்பை நிர்ணயம் செய்ய வேண்டுமாய்க் கேட்டு, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி—அந்தக் குழுவில் இடம் பெறுகிறவர்கள், உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்தவர்களும் என்று பல வகைகளில் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அரசு இதுகுறித்து ஆவன செய்யும். இந்தத் தீர்வையினைச் சீரமைக்கும் குழு ஏற்படுத்தியபின், திருப்பூர் பதிவு மாவட்டத்திலே இருக்கின்ற உடுமலைப்பேட்டைக்கு முன்னுரிமை கொடுத்து, முதலாவதாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



## 3. அறிக்கை அளித்தல்

### அவை உரிமைக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை குறித்து, அவையில் நடந்த நிகழ்வுகள் தொடர்பாக, அவர் எழுத்துமூலமாக வருத்தம் தெரிவித்திருப்பதால், இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கலாம் என, அவை உரிமைக் குழு தீர்மானித்து, அதனடிப்படையில், அறிக்கையைப் பேரவையில், அவை உரிமைக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானங்கள்

**(அ) திரு. எஸ்.ஆர் பாலசுப்பிரமணியன் அவர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த குழுவின் அறிக்கையை விதி 229 (ஆ)-ன்கீழ் ஆய்வு செய்தல் மற்றும் அதன் பரிந்துரைகளுக்கு விதி 229 (ஈ)-ன்கீழ் இசைவு கோருதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)—ன்கீழ், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 7

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்கீழ், இந்தப் பேரவை இசைவைத் தரவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 5. மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 41 — பள்ளிக் கல்வித் துறை**

**(இ) கோரிக்கை எண் 44 — தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு**

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 6–4–2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதமும், வாக்கெடுப்பும் தொடர்ச்சி. திரு. மகேந்திரன், சரியாகப் பத்து மணித்துளிகள்.



2005 ஏப்ரல் 7]

முற்பகல் 10–20

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி, பள்ளிக் கல்வித் துறை, தமிழ் வளர்ச்சி பண்பாடு ஆகிய துறைகளின் மீதான மானியக் கோரிக்கைகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பான கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பில் தொடக்கத்தில் 'ஒரு நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு கல்வி மிகவும் இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரப்படி தமிழகத்திலே அரசுக் கல்லூரிகள் 67, உதவிபெறும் கல்லூரிகள் 162, சுய நிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை 274 என்று இருக்கிறது. அதேபோன்று ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளைப் பொறுத்தவரை அரசுக் கல்லூரிகள் 7, உதவி பெறும் கல்லூரிகள் 14, சுய நிதிக் கல்லூரிகள் 22. தொழிநுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரை அரசுக் கல்லூரிகள் 22, உதவி பெறும் கல்லூரிகள் 34, சுய நிதிக் கல்லூரிகள் 150. பொறியியற் கல்லூரிகளைப் பொறுத்தவரை அரசுக் கல்லூரிகள் 6, உதவி பெறக்கூடிய கல்லூரிகள் 3, அண்ணா பல்கலைக்கழகத்தின் சார்பாக 4, சுய நிதிக் கல்லூரிகள் என்பது 226 என்ற விவரம் இருக்கிறது.

தமிழகத்தில் உயர் கல்வி பெற வேண்டுமென்றால், அநேகமாக அரசுக் கல்லூரிகள் உதவிப் பெறக்கூடிய கல்லூரிகளினுடைய எண்ணிக்கையைவிட இன்றைக்கு சுய நிதிக் கல்லூரிகளினுடைய எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்பதால், சாதாரணமான தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் உயர் கல்வி பெறுவதிலே சிரமம் ஏற்படும். இன்றைக்கு, சாதாரண மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, கல்வி என்பது எட்டாக் கனியாகிவிடக் கூடாது என்பதற்காக, உயர் கல்வியைத் தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துப் பகுதி மக்களும் பெறுவதற்கு உயர் கல்விக்கு இன்னும் கூடுதலான நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அரசு மற்றும் அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளிலே 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110 அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளில்

[திரு. கே. மகேந்திரன்] 

சாதாரணமாக ஐந்திலிருந்து பதினைந்து ஆசிரியர்கள் வரை இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பல்வேறு கல்லூரிகளில் இன்றைக்குப் பல்வேறு துறைகள், ஆராய்ச்சித் துறைகளாகப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆராய்ச்சித் துறைகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அங்கும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கக்கூடிய காரணத்தினால், ஆராய்ச்சிப் பணிகளுக்கு வழிகாட்டக்கூடிய ஆசிரியர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. அந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். முடங்கிப் போய் உள்ள ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அதேபோன்று, அரசுக் கல்லூரிகளிலே காலியாக உள்ள பணியிடங்கள், நேற்றையதினம் அறிவிக்கப்பட்டிருப்பதுபோல, *500* பணியிடங்கள் நிரப்பப்படும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். *1,800* பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அரசுக் கல்லூரிகளுக்குத் தொகுப்பு ஊதியம் அடிப்படையிலே அவை நிரப்பப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு அவர்கள் நிரந்தரப்படுத்தப்பட்டு, காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது போல, அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளிலும், அங்கே தொகுப்பு ஊதிய அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, அந்தப் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

அதேபோன்று, பல்வேறு கல்லூரிகளிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு கல்லூரிகளிலே, இன்றைக்குப் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு என்பது முறையாக அமல்படுத்தபடாமல் இருக்கிறது. அது முறையாக அமல்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோன்று, பல்வேறு கல்லூரிகளில், இன்றைக்குத் தனியார் நடத்தக்கூடிய கல்லூரிகளாக இருந்தாலும் சரி, வேறு பல கல்லூரிகளாக இருந்தாலும் சரி, P.T.A. என்ற பெயரிலே கட்டட நிதி, அதேபோன்று கணினிக்கான பயிற்சி நிதி என்ற வசூல் நடைபெறுகிறது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.



 [திரு. கே. மகேந்திரன்]

அதேபோன்று, சுயநிதிக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நியாயம் வழங்கப்படும் என்று *2002* ஆம் ஆண்டு, இதே மாமன்றத்தில் கல்வி அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தில் இருக்கக்கூடிய சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை இன்றைக்கு *1,000* ரூபாய் *1,500* ரூபாய் ஊதியம் என்பதுதான் வழங்கப்படுகிறது. பல்வேறு கல்லூரிகளிலே Provident Fund கூட பிடிக்கப்படாமல் இருக்கிறது. அந்த ஆசிரியர்களுக்கு முறையான நியமன ஆணை என்பதுகூட வழங்கப்படாமல் இருக்கிறது. பல்கலைக்கழகத்திடம் தகுதி ஒப்புதல்கூட பெறுவதில்லை என்ற நிலைமை சுயநிதிக் கல்லூரிகளிலே இருக்கிறது. 'தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டம்' என்பது, சுயநிதிக் கல்லூரிகளுக்கும் பொருந்தும் என்ற அடிப்படையில், அந்தக் கல்லூரிகளிலே பணியாற்றக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை நாம் மேற்கோள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளிலே ஆசிரியர் பணியிடங்கள், தொகுப்பு ஊதிய அடிப்படையிலே நிரப்பப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. Non–Teaching Staff என்று அழைக்கப்படக்கூடிய, ஆசிரியர்கள் அல்லாத பணியிடங்கள் என்பது, இன்றைக்கு *800*–க்கும் அதிகமான பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படுவதற்கான முயற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல்நிலை கல்வித் தொகுதியில், M.Phil., Ph.D. போன்ற உயர் கல்வித் தகுதிக்கு வழங்கப்படும் ஊக்க ஊதியம், *1–3–1993*–க்குப் பின்னர் உயர் கல்வி பட்டம் பெற்றவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. *1993*–க்கு முன்னர், M.Phil., Ph.D. படித்தவர்களுக்கு அந்த ஊக்க ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்ற ஊக்க ஊதியம், *1–3–1993*–க்கு பின்னர் படித்தவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

முற்பகல் *10–25*

அதேபோன்று, மாணவர், ஆசிரியர் விகிதாச்சாரத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே தமிழகத்திலே, ஓர் ஆசிரியருக்கு *20* மாணவர்கள் என்று இருந்த விகிதாச்சாரம் என்பது, G.O. எண் *525* மூலமாக மாற்றப்பட்டு, 1:40 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. நேற்றையதினம்கூட, மாமன்ற உறுப்பினர் ஒருவர் பேசும்போது, 1 : 36 என்ற அடிப்படையிலே விகிதாச்சார அடிப்படை இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்கள். ஆனால், என்னுடைய தொகுதியிலேகூட,

மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, Madhavaram High Road–லே இருக்கிறது. அங்கே, ஒரு வகுப்பிலே 90–க்கும் அதிகமான மாணவிகள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். குறைந்தபட்சம், High School, Higher Secondary School–ல் 1:40 என்பதை அமலாக்குவதோடு, மாநிலம் முழுவதும் மாணவர்களது கல்வித் தரம் உயர வேண்டுமென்றால், இந்த விகிதாச்சாரம், 1:25 என்று மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

அதேபோன்று, ஐந்தாண்டு காலம் ஒப்பந்த அடிப்படையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அனைவருக்கும் கல்வித் திட்டத்திலே 1:40 என்கிற சதவிகிதத்திலேதான் இன்றைக்கு அந்தத் தகுதியை நிர்ணயித்திருக்கின்றது. ஆனால், தமிழகத்திலே 1:40–க்குப் பதில், ஒரு ஆசிரியருக்கு 36 மாணவர்கள் படிக்கின்ற நிலையை, அதாவது மத்திய அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற அந்த விதிகளுக்கு உள்ளாக 1:36 என்ற அடிப்படையிலே தமிழகத்திலே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற West Bengal மாநிலத்திலே 1:70 என்ற விகிதாச்சாரத்திலே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. மகேந்திரன்:** ....நியமிக்கப்பட்டுள்ள அனைத்து இளநிலை ஆசிரியர்களையும், நியமனத் தேதியிலிருந்து பணிவரன்முறை செய்து, காலமுறை ஊதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன். அதேபோன்று, பிற ஆசிரியர்களுக்கு வழங்கப்படக்கூடிய விடுப்புச் சலுகைகள் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். கலந்தாய்வு முறை என்பது, கடந்த ஆண்டிலிருந்து முறையாக அமலாகவில்லை என்ற ஒரு குறை, ஆசிரியர்களிடையே இருந்து கொண்டிருக்கிறது. மீண்டும் அந்த முறையைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும்போது, ஐந்து ஆசிரியர்களுக்கான பணியிடம் என்பது அனுமதிக்கப்படுகிறது. நான்கு ஆசிரியர்கள்போக, ஒருவர் language–க்கு என்று, தமிழ் ஆங்கிலம் என்று ஏதாவது ஒரு மொழிக்குத்தான் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். தேவையான அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கான



ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதேபோன்று, ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் பாடப் பிரிவின் அடிப்படையிலே, ஆசிரியர்களை நியமிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுபோன்று, முழு ஓய்வூதியம் பெறுவதற்கான காலம் என்பதை 30 ஆண்டு பணிக்காலம் இருந்தால்போதும் என்ற பழைய விதிமுறையை மீண்டும் கொண்டுவர வேண்டும். ஓய்வூதியம் கணக்கிடுவதற்கு, கடைசியில் பெற்ற ஊதியத்தை மட்டுமே கணக்கில் கொள்ளப்படும் என்ற பழைய விதிமுறை பின்பற்றப்பட வேண்டும். சரண் விடுப்புச் சலுகை மீண்டும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, காலியாக இருக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தவரை, அவர்கள் சுட்டிக்காட்டுவது, 45,000 காலியிடங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. அந்த 45,000 காலியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அதேபோன்று, அரசுத் தேர்வுத் துறையில் 1988 முதல் பணியாற்றியிருக்கக்கூடிய, 17 ஆண்டுக் காலம் பணியாற்றியிருக்கக்கூடிய தினக்கூலித் தொழிலாளர்கள் 86 பேரை நிரந்தரப்படுத்த வேண்டும்.

அதேபோன்று, மாவட்ட நூலக அதிகாரி பணியிடங்கள் என்பது, மாநிலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன், 2 மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாநிலத்தில் 12 D.L.O. Posts காலியாக இருக்கின்றன. அந்தக் காலியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அதேபோன்று, முன்னுரிமைப் பணியிடங்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்கான பணியிடங்கள் சில மாவட்டங்களில் போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால், அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. பிற மாவட்டங்களில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பட்டியலைச் சேர்ந்த ஆசிரியர்களைக் கொண்டு அப்பணியிடங்கள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். அதேபோன்று, கடந்த பத்தாண்டுகளாக புதிதாகத் தொடங்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகளுக்குத் தலைமையாசிரியர் பணியிடங்கள் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற வேண்டுகோள் வைக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளுக்குத் தலைமையாசிரியர் நியமிக்கப்படவில்லை என்று சொல்கின்றார். அது தவறான கருத்து. நடுநிலைப் பள்ளிகளுக்கு, தரம் உயர்த்தப்பட்ட அந்த ஆரம்பப் பள்ளிகளுக்கு, ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு, என வந்து, பின்னர் மூன்றாம் ஆண்டு எட்டாம் வகுப்பு வரும்போது, அதற்கான தலைமையாசிரியர் பணியிடம் ஒதுக்கப்படுகின்றது. அப்படி, இந்த 2–3–2005 அன்று அந்தப் பள்ளிகளுக்கு தலைமையாசிரியர் பணியிடம் ஒதுக்கப்பட்டது. ஆனால், இங்கு சொன்னதுபோல, அந்த ஆசிரியர் கூட்டணியில் இருக்கின்ற கருத்து வேறுபாட்டின் காரணமாக, ஓர் ஆசிரியர் கூட்டணி, சென்னை உயர் நீதிமன்றத்திலே தடையாணை வாங்கியதால், அந்தத் தலைமையாசிரியர் பணியிடம் நிரப்பப்படாமல் இருந்தது. இப்போது அந்தத் தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டது. இப்போது அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

**திரு. கே. மகேந்திரன்:** 1997–2000 ஆம் ஆண்டுகளில் தருமபுரி உள்ளிட்ட பல மாவட்டங்களில் இடைநிலை ஆசிரியர்கள் நியமனத்தின்போது, தகுதி வாய்ந்த இடைநிலை ஆசிரியர்கள் இல்லாததால், மேற்படி பணியிடங்களில் தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சார்ந்த பி.எட். தகுதி பெற்ற ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டார்கள். மேற்படி ஆசிரியர்கள், அலகுவிட்டு அலகு செல்வதற்கு ஆணை வழங்கப்பட்டது. மாறுதல் உத்தரவு கிடைக்கப்பெற்ற ஆசிரியர்கள், ஓராசிரியர் மற்றும் ஈராசிரியர் பள்ளிகளில் பணியாற்றிய சூழ்நிலையால், அவர்களைப் பணி விடுவிப்பு செய்ய இயலவில்லை. மாறுதல் உத்தரவு பெற்றும்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** நாளது தேதிவரை பணிமாறுதல் மறுக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஆசிரியர்களுக்குப் பொது மாறுதலின்போது, அலகுவிட்டு அலகு செல்வதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பினை நல்கிட வேண்டுகிறோம்.



அதேபோன்று, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகத்தின்கீழ் இயங்கி வந்த ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை ஆசிரியர் பணியிடத்துடன் ஈர்த்து அரசுப் பள்ளியாக மாற்றிட தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் வாரியத்தின்கீழ் இயங்கிவரும் பள்ளிகளை வரும் கல்வியாண்டோடு மூடுவதாக நிர்வாகம் அறிவித்துள்ள நிலையில் அப்பள்ளிகளை அரசு ஏற்று நடத்த வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஒன்றியம், ஜி.டி.ஜி. நடுநிலைப் பள்ளியில் பணியாற்றிவரும் 19 ஆசிரியர்களைப் பயன்படுத்தி அங்கே இருக்கக்கூடிய நிர்வாகம் வங்கியிலே 43 இலட்சம் ரூபாய் கடனாகப் பெற்று இன்றைக்கு ஆசிரியர்களை மோசடி செய்துகொண்டிருக்கிறது. அந்த ஆசிரியர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மதுரை மாநகராட்சியில் காலியாக இருக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் காலப்பட்டியில் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு 2 இலட்சம் ரூபாய் பணம் கட்டப்பட்டும், இதுவரை அந்தப் பள்ளி மாற்றப்படாத நிலைமையில் இருக்கிறது. அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்....

## 6. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) ஊராட்சிப் பணியாளர்களுக்குத் தொகுப்பூதியம் உயர்த்தல்–மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகளை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பொருளாதார மேம்பாடு அடைந்து வளமான வாழ்க்கையைப் பெறவேண்டும் என்பது என்னுடைய அரசின் குறிக்கோள் ஆகும். இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில், எனது அரசு முனைப்பான பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சாலை மேம்பாடு, சிறு பாலங்கள், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல், உரக் குழிகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கிராமச் சந்தைகளை மேம்படுத்துதல், மீன் உலர் களங்கள் அமைத்தல், சத்துணவுக் கூடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு கட்டமைப்பு வசதிகளை எனது அரசு ஏற்படுத்தி வருகிறது.

இதேபோன்று, கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் அதிகாரம் அளித்தல் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டம்—Empowerment and Poverty Reduction Programme என்ற திட்டத்தை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. மேலும், சுய உதவிக் குழுக்களின்மூலம், கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்குச் சுய வேலைவாய்ப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் அரசால் கட்டித் தரப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 154.31 கோடி ரூபாய் செலவில் 37,676 புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தொகுப்பு வீடுகள் கட்டும் பணி, மிக விரைவாக தமிழகத்தில் செயல்படுத்தப்பட்ட காரணத்தால், மைய அரசு முதலில் ஒதுக்கீடு செய்த 90 கோடி ரூபாயுடன் கூடுதலாக 8.95 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தது.

1991 ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளில் பெரும்பாலானவை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவற்றைச் செப்பனிட வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தொகுப்பு வீடுகளின் பராமரிப்புப் பணிகளைப் பயனாளிகளே மேற்கொள்ள வேண்டும் என்றாலும், பயனாளிகளின் ஏழ்மை நிலைமையைக் கருத்தில்கொண்டு, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் செப்பனிட, நான் தற்போது வழிவகை செய்துள்ளேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)





இதன்படி, 1991 ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்டு, புழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகள் அனைத்தும் செப்பனிடப்படும். இப்பணிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் 10,000 ரூபாய்க்கு மேற்படாத செலவு மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) பயனாளிகள்மூலம் மேற்கொள்ளப்படும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து இந்தச் செலவுகள் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்பட்டு வந்த நிதி 82 இலட்சம் ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாயாக 2005–2006 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிதியை எவ்வகையில் பகிர்ந்தளித்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. தற்போது, நான் அறிவித்துள்ள தொகுப்பு வீடுகள் செப்பனிடும் திட்டத்துக்கு, நிதி ஒதுக்கம் செய்யும்வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியைப் பகிர்ந்தளித்துப் பயன்படுத்தும் முறையைத் திருத்தி அமைக்க, எனது அரசு முடிவு எடுத்துள்ளது. இதன்படி, குடிநீர்ப் பணிகளுக்காக 5 இலட்சம் ரூபாய், நமது கிராமம் திட்டத்துக்காக 10 இலட்சம் ரூபாய், மாணவர் இல்லங்கள் கட்ட 5 இலட்சம் ரூபாய், கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்க 10 இலட்சம் ரூபாய், தெரு விளக்குகள் அமைக்க 5 இலட்சம் ரூபாய், தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்க 25 இலட்சம் ரூபாய், (மேசையைத் தட்டும் ஒலி) இதரப் பணிகளுக்கு — Untied outlay — 40 இலட்சம் ரூபாய் என்ற அளவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதியைப் பகிர்ந்தளித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்க 25 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக ஒதுக்க விரும்பும் சட்டமன்ற உறுப்பினர்கள், இதரப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 40 இலட்சம் ரூபாயிலிருந்து இந்தப் பணிகளுக்கு நிதி ஒதுக்கம் செய்துகொள்ளலாம்.

தற்போது நான் அறிவித்துள்ள திட்டத்தின் வாயிலாக 1991 ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் வசிக்கும் 1,02,659 குடும்பங்கள் பயன் அடையும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை
(ஆ) கோரிக்கை எண் 41 — பள்ளிக் கல்வித் துறை
(இ) கோரிக்கை எண் 44 — தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம். திரு. வை. சிவபுண்ணியம்.

முற்பகல் 10–40

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ் வளர்ச்சி என்ற அறிவிப்பின் மூலமாக, சென்ற ஆண்டிலே, ஆங்கில வழி பயில்கிற மாணவர்களுக்கு அறிவியல் தமிழைக் கொண்டு வந்து, நமது மாநில அரசால் சாதனை படைக்கப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அறிவியல் தமிழைக் கொண்டு வந்ததை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சென்ற ஆண்டு வரவேற்றது, இப்போதும் நான் வரவேற்கிறேன். அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இந்த அறிவியல் தமிழைக் கொண்டு வந்ததற்குப் பின்னாலே, அந்த ஆங்கில வழிக் கல்வியைப் பயில்கிற மாணவர்களுக்கு இதுவரையிலும் எந்தவிதமான தேர்வுகளும் நடத்தப்படவில்லை. ஆகவே...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தவறான தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தப் புரட்சிகரமான திட்டத்தை, அறிவியல் தமிழை L.K.G.–யிலிருந்து 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் அனைவரும்



தமிழைப் படிக்க வேண்டும் என்பதற்காக—கடந்த ஆட்சியில், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கற்பிக்க வேண்டுமென்று அரசாணை போடப்பட்டு, அந்த அரசாணையின் மேலே தடை பெற்றிருப்பதால், அதை நீக்கும் வழியாக எப்படியாவது தமிழகத்திலே தமிழைப் படிக்காமல் எந்த மாணவரும் வெளியேறக்கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு, 8–வது உலகத் தமிழ் மாநாட்டிலே அம்மா அவர்கள், 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று முழக்கமிட்டதன்பேரிலே—அந்த அறிவியல் தமிழை அறிவித்து இன்றைக்கு அத்தனை பள்ளிகளிலும் ஒரு வாரத்திற்கு இரண்டு பாடங்கள் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக, இந்தத் தேர்வுகள் நடைபெறுகின்றன. பொதுத் தேர்வைத் தவிர மற்ற அனைத்துத் தேர்வுகளிலும் அறிவியல் தமிழும் ஒரு தேர்வாக நடைபெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுகூட மாவட்டத்திலே நடைபெறுகின்ற, L.K.G.–யிலிருந்து 9–வது வகுப்பு வரை நடைபெறுகின்ற தேர்வுகளிலே பொதுத் தேர்வாக மாவட்ட நிர்வாகத்தால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, உறுப்பினர் அவர்களுக்குக் காட்ட வேண்டுமென்றால்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆங்கில மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே அறிவியல் தமிழ் நடத்தப்படவில்லை என்று சொல்கிறார்கள். தேர்வுகளும் நடத்தப்படுகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 6 முதல் 9 வரை மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான அறிவியல் தமிழ்ப் பாடப் பொதுத் தேர்வு, 16–4–2005 அன்று சென்னை மாவட்டத்திலே ஒரே நாளிலே நடைபெற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், Quarterly examination, Half yearly examination, ஆண்டுத் தேர்வு நடைபெறுகிற அந்தக் கேள்வித்தாள்களும் இங்கே இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் குறிப்பிட்டுச் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இனிதான் நடக்கப் போகிறது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். நடந்தால் சரியானதுதான்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2003–2004 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் அறிவித்த ஆண்டிலிருந்தே அந்தப் பாடங்கள் நடைபெற்றுக்

கொண்டிருக்கின்றன. அந்தப் பாடங்களில் தேர்வுகளை நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே நம்முடைய அரசாங்கத்தால் இந்த வருடம் ஒரு புதிய அறிவிப்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது. கணினியை அதிகமாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கிற காரணத்தாலே ஆங்கிலப் பாடத்தையும் கட்டாயப் பாடமாக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே குறிப்பிட்டுச் சொல்வது என்னவென்றால், தமிழகத்திலே தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தாய்மொழியை நாம் கட்டாயமாக்கிப் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை சென்ற பல முறை இந்த அவையிலேயே நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். இதை நான்...

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் எப்படியாவது குறை கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகவே பேசுவதுபோல் தெரிகிறது. இதில் குறை சொல்வதற்கு என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. இதுவரையில் தமிழகத்தை ஆண்ட எந்த அரசும் செய்யாத ஒரு சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு செய்துள்ளது. இந்த அறிவியல் தமிழை ஒரு கட்டாயப் பாடமாக அறிவிப்பதற்கு முன்னால் எத்தனையோ மாணவர்கள், இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மாணவ, மாணவியர், தமிழகத்தில் முழுப் பள்ளிக் கல்வியை முடித்து ஒரு வார்த்தைகூட தமிழ் படிக்காமல் அவர்கள் தேறிய காலம்தான் இதுவரை நடைமுறையில் இருந்து வந்தது. விரும்பினால் தமிழைப் படிக்கலாம். இல்லையென்றால் தமிழ் படிக்காமலேயே தேர்ச்சி பெற்று கல்லூரிக்கும் செல்லலாம் என்ற நிலைதான் இதுவரையில் தமிழகத்தில் இருந்தது. அதை மாற்றிக் காட்டி, வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய நிலையில், இன்றைய சூழ்நிலையில், தமிழகத்தில் எந்தப் பள்ளியாக இருந்தாலும், தனியார் நடத்துகின்ற பள்ளியாக இருந்தாலும், Minority வகுப்பைச் சேர்ந்தவர்கள் நடத்துகின்ற பள்ளியாக இருந்தாலும் அங்கே முக்கியமான பாடமொழி என்ன மொழியாக இருந்தாலும், மழலையர் வகுப்பு, அதாவது L.K.G. முதல் 12 ஆம் வகுப்புவரை கட்டாயமாகத் தமிழைப் படித்தே ஆகவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவியல் தமிழ்ப் பாடத்தைக் கொண்டு வந்ததால், எந்த மாணவராக இருந்தாலும், எந்த மாணவியாக இருந்தாலும், தமிழைப் படித்தே ஆகவேண்டும் என்ற ஒரு நிலையை உருவாக்கி இருக்கிறோம். ஆகவே, இதுவரை தமிழ் படிக்காத மாணவ, மாணவியர் எல்லாம் இன்றைக்குத் தமிழ் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை தமிழ்ப் பாடமே நடத்தாத பள்ளிகளில் எல்லாம் இன்றைக்குத் தமிழ்ப் பாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யாராக இருந்தாலும், தமிழகத்தில் ஒரு பள்ளியில் சேர்ந்தால் அவர்கள் தமிழைப் படிக்காமல் தேர்ச்சி பெறமுடியாது என்ற நிலையை உருவாக்கி இருக்கிறோம். அதற்காக நீங்கள் இந்த அரசைப் பாராட்ட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சிவபுண்ணியம் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரே ஒரு செய்தி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவியல் தமிழைப்பற்றி இங்கே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இப்போது —நான் Matriculation பள்ளிகளிலே, ஏராளமான பள்ளிகளிலே ஆதாரத்தோடு வேண்டுமானால் பள்ளிகளின் பட்டியலைத் தருகிறேன். அந்தப் பள்ளிக்கூடங்களிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள். அமைச்சர் எல்லா விளக்கங்களும் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. ஜி.கே. மணி:** பாடமே நடத்தவில்லை. ஆசிரியர்களே கிடையாது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாடம் நடக்கிறது, தேர்வு நடக்கிறது என்று எல்லா விளக்கங்களையும் அமைச்சர் சொல்லிவிட்டார். மறுபடியும், மறுபடியும் அதையே கிளறாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்... (குறுக்கீடு)

[2005 ஏப்ரல் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அறிவியல் தமிழ்ப் பாடமே நடத்துவதில்லை. Matriculation பள்ளிகளிலே அப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறது.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சில Matriculation பள்ளிகளில் இந்த அறிவியல் தமிழ்ப் பாடமே நடைபெறவில்லை என்று கூறிக் கொண்டிருக்கிறார். ஆதாரங்களுடன் புகார் தரவேண்டும். அதை எழுத்தில் தரவேண்டும். ஆதாரத்துடன் புகாரைத் தந்தால், எந்தப் பள்ளியில் அறிவியல் தமிழ்ப் பாடம் நடைபெறவில்லையோ அந்தப் பள்ளிமீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, தமிழ் வளர்ச்சி என்ற முறையில், 1970 ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டிருக்கிறது. இது ஒரு மிக முக்கியத் துறையாகச் செயல்பட்டு வருகிறது. இந்தத் துறையிலே கிட்டத்தட்ட இந்த ஆண்டிலே 400–க்கு மேற்பட்ட நூல்கள் பதிப்பிக்கப்பட்டிருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. 531 நூல்கள் வெளியீடு செய்யப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல, இன்னும் ஏராளமான பணிகளை இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், நான் சென்ற ஆண்டு பேசுகிறபோது ஒரு குறிப்பைச் சொன்னேன். அதிலே நிதி ஒதுக்கீட்டைப்பற்றி ஒரு விளக்கமும் இல்லாத காரணத்தாலே அதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா என்ற ஒரு கேள்வி இருக்கிறது. நிதி ஒதுக்கியிருந்தால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். நான், அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஆனால், போதுமான அளவு அதற்குரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்ற கருத்து, பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. ஆகவே, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நல்ல முறையிலே பயன்படுத்துவதற்கான முயற்சிகளை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டும்; நிதியையும் கூடுதலாக ஒதுக்க வேண்டும்.

அதோடு, கூடுதலாக அதிலே பணியாற்றக்கூடியவர்களுக்குரிய பலன்கள் இருக்கின்றனவே, அவை மற்ற அரசுப் பணியாளர்களுக்கு



2005 ஏப்ரல் 7] [திரு. வை. சிவபுண்ணியம்]

இருப்பதைப்போல இல்லை என்றும், சில குறைபாடுகள் இருப்பதாவும் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு pension திட்டம், இன்னும் பல சலுகைகள் வழங்கப்படுவதிலே குறைபாடு நீடிக்கிறது என்று சொல்லப்படுகிறது. அவற்றையும் நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–50*

இங்கே கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே, பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டிருப்பதை நான் பொதுவாக வரவேற்கின்றேன். அதிலே குறிப்பாக, 3 கி.மீ.–ல் நடுநிலைப் பள்ளி, 5 கி.மீ.–ல் உயர்நிலைப் பள்ளி, 8 கி.மீ.–க்குள்ளாக மேல்நிலைப் பள்ளி என்ற ஒரு வரையறை செய்யப்பட்டு, அதை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது; பாராட்டக்கூடியது. அந்தப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய குழந்தைகளுக்குப் பல சலுகைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, 2007 ஆம் ஆண்டுக்குள்ளாக 5 ஆண்டுக் கல்வியை நிறைவு செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படியானால், இப்பொழுது 2005 ஆம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது 3 ஆண்டுக் கல்வி முடிந்த நிலையிலே எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்ற அந்தப் பட்டியலை அளிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், 2007 ஆம் ஆண்டுக்குள்ளாக 5 ஆண்டுக் கல்வி பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றபோது, இப்பொழுது 3 ஆண்டுக் கல்வி முடிகின்ற நிலையிலே குழந்தைகள் இருக்கவேண்டுமே, அதில் எத்தனை பேர்களுக்கு அப்படிப்பட்ட கல்வி வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, 2010 ஆம் ஆண்டுக்குள்ளாக 8 ஆண்டுக் கல்வி முடிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதெல்லாம் ஒரு நல்ல இலக்குதான். இந்த இலக்கை நோக்கி முயற்சிகள் எடுத்து முன்னேற வேண்டியது மிகவும் அவசியமான ஒன்று. அந்த முயற்சிகள் வேகமாக நடைபெறுகின்றதா என்பதைத் தெரிந்துகொள்வதற்காகச் சொல்கின்றேன். அதேபோல, இடைநிற்றலை 2010–க்குள்ளாக சரிசெய்யப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்கான புள்ளி விவரங்களும் இருக்கின்றன. அதற்கும், தேவையான அளவுக்கு இந்த அவையில் அறிவிப்பதன்மூலமாக, அதிலிருக்கின்ற குறைபாடுகளைக்

களைந்து நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பாக, 3 கி.மீ., 5 கி.மீ. 8 கி.மீ, என்ற தூரத்திற்கு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மாணவிகள் செல்கின்ற வகையிலே, இங்கே சைக்கிள் வழங்குகின்ற திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டு நடைமுறையில் இருந்துகொண்டிருக்கின்றது. அதற்கும் நான் இந்த அவையில் பாராட்டுகின்றேன்; வரவேற்கின்றேன். அதிலே ஒரு வேண்டுகோள் என்னவென்றால், 5 கி.மீ., 8 கி.மீ. தூரம் என்ற நிலை வருகின்றபோது அந்தத் தூரத்தை பெண் குழந்தைகள் கடந்து சென்றுகொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இது 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மாணவிகளுக்குப் பயன்படுவது என்ற நிலையிலிருந்து, 8 ஆம் வகுப்பிலிருந்து அந்த மாணவிகளுக்கு சைக்கிள் வழங்குவதற்கான முயற்சிகளை நமது அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதைப் பரிசீலித்து நிறைவேற்ற வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி பற்றியும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது. கிட்டத்தட்ட 3,10...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இப்பொழுதுதான் இரண்டாவது பாயிண்ட்டுக்கு வந்திருக்கின்றேன். நிறைய குறுக்கீடுகள் இருந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, குறுக்கீடுகளைக் கழித்துத்தான் சொல்கின்றேன். திரு. மகேந்திரனுக்குக் கொடுத்த அதே நேரம்தான். இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அந்தீப் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அவற்றிலே, குறிப்பாக, கும்பகோணம் தீ விபத்துக்குப் பிறகு, அதைச் சரிசெய்வதற்கான முயற்சி எடுப்பதாக இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தீ விபத்து நடந்த காரணத்தால், தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற எல்லாக் கீற்றுக் கொட்டகைகளிலும் உள்ள பள்ளிகளின் கூரைகள் பிரிக்கப்பட்டுவிட்டன. அதைச்



சரிசெய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பது உண்மைதான். ஆனாலும், கூரைகள் பிரிக்கப்பட்ட அந்தப் பள்ளிகளில் இன்னும் பல இடங்களில் கட்டப்படாமல் இருக்கின்றன. வேறு மாற்று இடங்களில் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தீ விபத்துக்குப் பிறகு, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளிலும் அந்தக் கூரைகள் அகற்றப்பட்டு, தீப்பிடிக்காத கொட்டகைகளாக மாற்றப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்ட பிறகு, தமிழகத்திலே மாற்றியமைக்கப்பட வேண்டிய பள்ளிகளின் எண்ணிக்கை 4,135. நிரந்தரக் கட்டடங்களாக மாற்றியமைக்கப்பட்ட பள்ளிகள் 1,506. தீப்பற்றாத கொட்டகைகளாக மாற்றப்பட வேண்டியவை 2,629. தீப்பற்றாத கொட்டகைகளாக மாற்றி அமைக்கப்பட்டவை 2,536. தீப்பற்றாத கொட்டகைகளாக மாற்றி அமைக்கப்பட வேண்டிய பள்ளிகள் இன்னும் 93. ஆக, தமிழகத்திலே இதுவரைக்கும் 100–க்கு 96.16 சதவிகிதம் பள்ளிகளின் கூரைகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் மாற்றியமைக்கப்பட வேண்டிய பள்ளிகள் 3.84 சதவிகிதம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல் பொதுப் பணித் துறை மூலமாக, ரூபாய் 10 கோடி கொடுத்து, அரசாங்கப் பள்ளிகளாக இருக்கின்ற, ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆகிய அந்தப் பள்ளிகளின் கூரைகளையும் மாற்றி, அந்தப் பணிகளும் நிறைவடைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதைத்தான் நானும் சொல்கின்றேன், மீதமிருப்பதை செய்யவேண்டுமென்ற எண்ணத்திலே குறிப்பிட்டேன். இந்தப் பணிகள் நடைபெறுவதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியாவது குற்றச்சாட்டுச் சொல்ல வேண்டுமென்று திரு. சிவபுண்ணியம் அவர்கள் முயற்சி செய்து தோல்வி அடைந்திருக்கின்றார். அதை ஒப்புக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பெரும்பாலான பள்ளிகளில் இன்னும் கூரைகள் மாற்றியமைக்கவில்லை என்று குறிப்பிட்டார். ஆனால், கல்வி அமைச்சர் இப்போது விளக்கம் அளித்து, இன்னும் 93 பள்ளிகள்தான் மீதமுள்ளன

என்று தெரிவித்தார். ஆகவே, தோல்வியை ஒப்புக்கொள்வதுதான் அழகு. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீங்கள் கொஞ்சம் பேசுகின்றபோது...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 93 பள்ளிகளில்கூட முதலில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தபடி பொதுப் பணித் துறை மூலம் 10 கோடி ரூபாய் மதிப்பீடு செய்து, அந்தப் பள்ளிகளில் கூரைகளை மாற்றுவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டது. அதற்குப் பிறகு 'நபார்டு' திட்டத்தின்மூலம், அந்தப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்காக 30 இலட்சம், 40 இலட்சம் ரூபாய் செலவிட அந்தப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவை முழு நிலையிலே அனைத்து முழுமையான அடிப்படை வசதிகளைக் கொண்ட பள்ளிகளாக மாற்றி அறிவிக்கப்பட்டதால், அந்த 93 பள்ளிகளுக்கும் இவ்வாறு காலதாமதம் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித்துளியிலே முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒளிவுமறைவற்ற நேர்மையான கலந்தாய்வு முறையின்மூலமாக, ஆசிரியர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டு வந்தது சென்ற முறை. அது இப்போது நிறுத்தப்பட்ட காரணத்தினாலே திரும்பவும் அதில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் கலந்தாய்வு முறை இப்போதும் நடந்துகொண்டிருக்கிறது. நல்ல முறையிலே, ஆசிரியர்கள் பாராட்டுகின்ற வகையிலே, அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கின்ற வகையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றன்பின் ஒன்றாக திரு. சிவபுண்ணியம் அவர்கள் குற்றச்சாட்டுகளைச் சொல்லி, அவையெல்லாம் உண்மையல்ல என்று நிரூபிக்கப்பட்டுள்ளன. இப்போதாவது அவர் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், தோல்வியை ஒப்புக்கொண்டு ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதெல்லாம், அரசுக்கு நல்லதுதானே சொல்லிக்கொண்டிருக்கிறேன்? இதையெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கான முயற்சியை நான் இதிலே சொல்லிக்கொண்டிருக்கிறேன். குறிப்பாக, டெஸ்மா சட்டத்தின்மூலமாக பணி நீக்கம் செய்யப்பட்ட ஐந்தாயிரம் பேர்களுக்குப் பணி வழங்கியிருக்கிறீர்கள், வரவேற்கிறேன்.

அதேபோல, மீதமுள்ள 999 பேர்களுக்கும் அந்தத் தண்டனையைக் குறைத்து அவர்களைப் பணியில் சேர்க்கப்பட்டிருப்பதற்குரிய – அதிலே இருக்கிற சலுகைகளை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை உடனடியாக நிரப்ப வேண்டும். தொகுப்பூதியத்திலே ஆசிரியராகப் பணியாற்றக் கூடியவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு, ஐந்தாண்டு என்ற முறையை மாற்றி, அவர்களை நிரந்தரம் செய்வதற்கான முயற்சி மேற்கொள்ள வேண்டும். நிறைய சலுகைகள் வழங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றபோது, முழு நேரமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை நிரந்தரம் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. எச். ராஜா. (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. ஒரேயொரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். இன்று அமைச்சர் வேறு பதில் சொல்ல வேண்டும். இன்னொரு மானியக் கோரிக்கை வேறு இருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதேபோல, உயர்நிலைப் பள்ளியிலே ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். அதேபோல, பெற்றோர் ஆசிரியர் கழகத்தின்மூலமாக பணியாற்றக் கூடியவர்களைக்கூட, தேர்வு வைத்து அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். அதேபோல, உயர்நிலைப் பள்ளிகளிலே ஆங்கில வகுப்புப் பாடத்தை நடத்துவதற்கான ஆங்கில வழிக் கல்வியைப் பயின்ற ஆசிரியர்களை நியமனம் செய்வதற்குப் பதிலாக இதர துறைகளைச் சார்ந்த ஆசிரியர்களை நியமனம் பண்ணுகிறார்கள். அதை நிறுத்த வேண்டும். 50 சதவீதம் என்ற அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட.... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைச் சொல்கின்றார். உயர்நிலைப் பள்ளிகளிலே ஆங்கிலக் கல்வியைப் பயிற்றுவிப்பதற்காக அம்மா அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, இந்த ஆண்டு 1,761 மொழியாசிரியர்கள், அதிலே ஆங்கில ஆசிரியர்களும் இன்றைக்கு தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதேபோல, கணினி ஆசிரியர்களாக பணியில் இருந்தவர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின்மூலமாக அவர்களது சம்பளம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. இப்போது அது நிலுவையில் இருக்கிறது. அவர்களுக்கு...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினி ஆசிரியர்கள் அரசின் பணி ஆசிரியர்களாகக் கிடையாது. அவர்கள் ஒப்பந்ததாரருடைய பணியாளர்களாகத்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, அரசினுடைய நேரடிப் பணியில் என்று கிடையாது. கணினிப் பாடத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக ஒப்பந்தமிடப்பட்டது. அந்த ஒப்பந்ததாரருடைய பணியாளர்களாகத்தான் அவர்கள் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். ஐந்தாண்டுக் காலத்திற்கான ஒப்பந்தம் முடிவடைந்துவிட்டது. அந்த



ஒப்பந்தம் முடிந்த பிறகு, அந்தப் பணியாளர்கள் நீதிமன்றத்திலே சென்று தடையாணை பெற்றிருக்கின்றார்கள். இருந்தாலும், பணி செய்த அந்த ஆசிரியர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த ஆசிரியர்களுடைய நலனைக் கருதி, இன்றைக்கு அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் ஊதியத்தை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்; வரவேற்கிறேன். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், இப்படித் தனியாரிடம் ஒப்படைப்பதை இரத்து செய்து, அதை நமது அரசே ஏற்று நடத்த வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். ஏற்கெனவே அது நடைமுறையிலே அப்படி ஆகிவிட்டது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, அறிவியல் தொழில்நுட்பத்தைத் தமிழகத்திலே வளர்க்க நாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவற்றை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சிவபுண்ணியம் அவர்கள் தெரிவித்ததுபோல் அரசு ஒப்பந்தத்தை இரத்து செய்யவில்லை; ஒப்பந்தக் காலம் முடிந்துவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். அதுதான் சரியானது. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒப்பந்தக் காலம் முடிந்துவிட்டது. உங்களுக்கு நேரமும் முடிந்துவிட்டது. (சிரிப்பு) திரு. ராஜா. (குறுக்கீடு) திரு. ராஜா. (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், வேறொரு நேரத்திலே பேசலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், கடைசி வாக்கியத்தை முடியுங்கள் இப்போது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதைப்போல, வேளாண்மைத் தொழில் பயிற்சி முடித்த ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களையும் நியமிக்க வேண்டும். அதைப்போல, சத்துணவுத் திட்டத்திலே ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் பணி வழங்க வேண்டும். அதுபோல, உடற் கல்வித் துறையிலே முறையாகப் பணியாற்றக் கூடியவர்கள் 218 பேர்களுக்குப் பணி வழங்காமல் விடுபட்டுப் போய்விட்டது. மூன்று ஆண்டுகளாக இந்த அவையிலே சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதையும் பரிசீலித்து அவர்களுக்குப் பணி வழங்க வேண்டும் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா. (குறுக்கீடு) மற்ற கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். மற்றவற்றை எழுதிக் கொடுங்கள். உட்காருங்கள்.

*முற்பகல் 11–00*

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி, பள்ளிக் கல்வி...

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன அரசன்?

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் முடிந்துவிட்டது என்று சொன்னீர்களே, அது என்ன அரசியல் நேரமா என்று...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசன் சார்ந்திருக்கிற கட்சிக்கு அரசியல் நேரம் ஏற்கெனவே முடிந்துவிட்டது. ஆகவே, மற்றவரை அவர் எதிர்பார்த்து காத்திருக்கிறார் போலும்!

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி, பள்ளிக் கல்வி மற்றும் தமிழ்ப் பண்பாடு ஆகிய கொள்கை விளக்கங்களிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாகப் பேச அனுமதித்தமைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். Education is the manifestation of perfection which is already in man என்று விவேகானந்தர் சொன்னார். ஆகவே, கல்வி



மனிதனை முழுமைபெறச் செய்கிறது. எழுத்தறிவு, தேசிய அளவிலே 65 சதவிகிதமாக இருந்தாலும், தமிழகத்தில் 73 சதவிகிதமாக இருப்பது வரவேற்கத்தக்கது. எனினும், விழுப்புரம் மற்றும் தருமபுரியிலே தேசிய சராசரியைவிடக் குறைவாக இருக்கிறது. எனவே, அங்கு நாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது என்பதை நான் கவனப்படுத்த விரும்புகின்றேன்.

நாம் மனித வளம் என்று சொல்கிறோம். மனித வளம் மேம்பட வேண்டுமானால், கல்வி அறிவு அதிலேயும் excellence–க்காக நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது. இதிலே ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதம்பற்றி இங்கு அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். பலரும் இதுபற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். Matriculation பள்ளிகளிலே, இது 20–க்குக் குறைவாக இருக்கிறது. ஏனென்றால், Matriculation பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளிலே 15 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருக்கிறார். மேல்நிலைப் பள்ளியிலே 18 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருக்கிறார். ஆனால், தனியார் பள்ளி, அரசு உதவி பெறுகின்ற தனியார் பள்ளி, உதவி பெறாத தனியார் பள்ளிகளிலே இது மிக அதிகமாக இருக்கிறது. தனியார் பள்ளிகளிலே, தொடக்கப் பள்ளிகளிலே 54 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர், அதிலும் உயர்நிலைப் பள்ளியில் நிரம்ப மோசம்; 67 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று இருக்கிறது. எனவே, தனியார் பள்ளிகளிலும் குறைந்தபட்சம் 40, என்னைக் கேட்டால் 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று இருப்பது ஒரு ideal situation–ஆக இருக்கும். இருந்தாலும்கூட, 40 என்பதையாவது தனியார் பள்ளிகளிலே அவர்கள் செயல்படுத்த வேண்டும் என்றும், அரசு அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே, மாணவர் சேர்க்கையைப் பொறுத்தவரை, 14 வயதுவரை மாணவர்கள் சேர்க்கை 94.37 சதவிகிதம் இருக்கிறது. ஆனால், இதுவே Higher Secondary School–க்கு வரும்போது 14 முதல் 18 வயதுவரை 39.63 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. அதிலும், உயர் கல்வி என்று வரும்போது 5 இலட்சத்து 25 ஆயிரம் பேர், அதாவது 6 வயதிலிருந்து 18 வயதுவரை படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை, கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றபடி ஒரு கோடியே 30 இலட்சம் இருக்கிறது. ஆனால், உயர் கல்வி படிப்பவர்கள் எண்ணிக்கை 5 இலட்சத்து 25 ஆயிரம் என்பது மிகக் குறைவாக இருக்கிறது. இதற்கு கல்விக் கட்டண உயர்வு ஒரு காரணமாக இருக்கிறதா என்பதைப் பற்றியும் அரசாங்கம் சிந்தித்து...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 ஆம் வகுப்பிற்குப் பிறகு பள்ளியிலே சேருகிற மாணவர்களுடைய சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். 10 ஆம் வகுப்பிற்குப் பிறகு சில மாணவர்கள் Polytechnic–க்கு செல்வார்கள். I.T.I. செல்வார்கள். சிலர் வந்து 11–வது, 12–வது வகுப்பிற்குச் செல்வார்கள். அதிலே இருக்கிற, கொள்கை விளக்கத்திலே இருக்கிற குறிப்பிலே 11–வது, 12–வது வகுப்புச் செல்கிற மாணவர்கள் Polytechnic–லும், I.T.I.–லும் மற்ற பிரிவுகளிலும் செல்கின்ற மாணவர்கள் விவரம், இடம்பெற்றிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் சேர்த்து அது 6 இலட்சத்து 30 ஆயிரம்தான் வருகிறது. ஏனென்றால் Polytechnic போகிறவர்கள், 58 ஆயிரம் பேர், Engineering Colleges போகிறவர்கள் 69 ஆயிரம் பேர்; மற்ற உயர் கல்வி—நான் சொல்வது––Ph.D.வரை, 5 இலட்சத்து 25 ஆயிரத்து 436. எனவே, உயர் கல்வியிலே சேருகிற மாணவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் மேற்படி நடவடிக்கைக்காக. எனவே, உயர் கல்விக்கு முக்கியத்துவம் தரவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைப்பற்றி நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

*முற்பகல் 11–05*

அதேபோல, அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலே பயின்று, பாதிக்கப்பட்ட மாணவர்கள் 20 ஆயிரம் பேரிலே, ஏற்கெனவே 15,670 பேர் பயிற்சி முடித்திருக்கிறார்கள். மேலும் 3,576 பேர் இப்போது படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உயர் நீதிமன்ற ஆணை 21–10–2002–ன்படி 26–11–2002–ல் நானூற்றுச் சொச்சம் மாணவர்களுக்கு counselling நடந்திருக்கிறது. அவர்கள் இன்னமும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, அரசு, கருணை அடிப்படையிலே அவர்களையும் சேர்த்துக்கொண்டு, அவர்களுடைய துயர் துடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். பல பள்ளிகளிலே, அதுவும் கிராமப்புறங்களிலே இருக்கிற பள்ளிகளிலே, பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாகப் படித்தவர்கள், சேவை மனப்பான்மையோடு பல ஆண்டுகளாக அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், Consolidated Pay–யிலே. அந்தமாதிரி இருப்பவர்களுக்கு, ஆசிரியர்கள் நியமனத்திலே முன்னுரிமை கொடுத்து,



அவர்களுக்கு ஒரு quota–வாவது கொடுத்து, அவர்களுக்கு நாம் பணி நியமனம் செய்யவேண்டும். ஏனென்றால், 5 வருடம், 10 வருடம் ஆகிவிட்டது. இதை நம்பி குடும்பமும் மேற்கொண்டு, அவர்கள் கஷ்டத்திலே இருக்கின்ற காரணத்தினாலே, அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும். அதேபோல, 60 கலைக் கல்லூரி, 7 கல்வியியல் கல்லூரிகளிலே, ஆசிரியர் பணியிடங்கள் 1,500–க்குமேல் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன. அதேபோல, நூலகர்கள். 34 நூலகர்கள் இடங்கள் காலியாக இருக்கின்றன. அதற்கும் அரசு உடனடியாக, பணியிடங்களை, காலியிடங்களை நிரப்பவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, செம்மனூர் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலையாக உயர்த்துவதற்கு ஏற்கெனவே deposit பணம் கட்டி, சென்ற ஆண்டும் நான் கோரிக்கை வைத்திருந்தேன். அது இன்னமும் மேல்நிலைப் பள்ளியாக அங்கீகரிக்கப்படவில்லை. இந்த ஆண்டாவது உடனடியாக அதற்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கணினி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, கணினி ஆசிரியர் ஒப்பந்தம் முடிவுற்றுவிட்டது. ஆனால், இப்பொழுது கணினியினுடைய முக்கியத்துவமானது அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. Information Technology–தான், இப்பொழுது ஒரு up–coming area of development. அதனாலே, அரசாங்கமே ஆசிரியர் பணி நியமனத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதை ஒரு கோரிக்கையாக நான் இங்கு வைக்கிறேன். வேண்டுமானால், இந்த computer maintenance–க்காக நாம் Annual Maintenance Contract மூலம் அந்தப் பழைய ஒப்பந்தம் ELCOT–க்கே நாம் கொடுக்க முடியும், Computer and other accessories, maintenance–க்கு. ஆகவே, அவ்வாறு வைத்துவிட்டு ஆசிரியர்களை அரசாங்கமே பணி நியமனம் செய்வது பிற்காலத்திலே இதிலே இடையூறு ஏற்படாமல், தடை ஏற்படாமல் computer கல்விக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

Engineering Colleges–ஐப் பொறுத்தவரைக்கும், 226 சுயநிதிக் கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றிலே, பல்வேறு கல்லூரிகளிலே, Hygienic conditions இல்லை; மாணவர்களுக்குப் படிப்பதற்கான வசதிகள் இல்லை; ஆசிரியர்கள் இல்லை. அதிலும் குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட கல்லூரியிலே—தினதயாள் Engineering College–லே, Vice–Chancellor ஒரு Team–ஐ அனுப்பி, அங்கு inspect பண்ணுவதற்கே உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இதுபற்றி, Higher Education, Secretary–க்கு D.G.P.

complaint கொடுத்திருக்கிறார்கள், அங்கே இருக்கின்ற irregularities– பற்றி investigate பண்ணுவதற்கு. அதையும் அவர்கள் நடத்த முடியாமல் இருக்கிறது. அதோடுகூட அங்கு படிக்கின்ற மாணவர்கள்....

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்த தீனதயாள் பொறியியல் கல்லூரி, இதுபோன்று பல்வேறு தடவை மாணவர்களிடம் முறைகேடாக நடந்துகொண்டார்கள் என்ற புகாரின் அடிப்படையிலே விசாரிக்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகமும் விசாரணை செய்தது. இதுபற்றி அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமமும் ஆய்வு செய்தது. இந்தக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை இரத்து செய்வது மற்றும் மற்ற புகார்கள் பற்றி அண்ணா பல்கலைக்கழகமும், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமமும் பரிசீலித்து வருகின்றன. அப்படியும், அங்கு படிக்கின்ற *38*, *39* மாணவர்களில் இப்பொழுது நடைபெற்ற தேர்விலே, ஒரு மாணவரைத் தவிர, மற்ற *38* மாணவர்களுக்கும் zero mark என்றும், ஒரு mark என்றும், internal mark–லே போடப்பட்டிருக்கின்ற, அந்தச் செய்தி வந்தவுடனே, அண்ணா பல்கலைக்கழகம், அதை விசாரணைக்கு உத்தரவிட்டு, அந்தக் கல்லூரியினுடைய Principal, முதல்வர் நேரிலே வந்து விளக்கவேண்டுமென்று கடிதம் அனுப்பியும், அந்த முதல்வர் வரவில்லை. இப்போது அதன்மேல் விசாரிக்கப்பட்டு, அந்த விசாரணையினுடைய அறிக்கை, அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய Syndicate Meeting–ல் வைக்கப்பட்டு, அதன்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எச். ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் முடித்து விடுங்கள்.

**திரு. எச். ராஜா:** இன்னும் மூன்று நிமிடங்கள்; ஏனென்றால் இரண்டு, மூன்று பிரச்சினைகளை நான் சொல்லிவிடுகிறேன். அதாவது, இதிலே என்னுடையது ஒரே ஒரு கோரிக்கைதான்; தயவுசெய்து அந்த *39* மாணவர்களையும், Anna University–க்கு affiliated ஆக உள்ள வேறு college–களுக்குப் போவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால்...



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தமாதிரி, அந்த தீனதயாள் பொறியியல் கல்லூரியிலே நிர்வாகம் முறைகேடாக நடந்ததன்பேரிலே, அந்த மாணவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தக் கல்லூரியிலே படித்த அத்தனை மாணவர்களும், அண்ணா பல்கலைக்கழகத்தின் மற்ற உறுப்புக் கல்லூரிகளுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டார்கள். இப்போதும், அந்த மாணவர்களுடைய அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எச். ராஜா:** அதேபோல, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே சிறுபான்மை மொழி தெலுங்கு ஆசிரியர்களை நியமிக்கும்பொழுது, அவர்கள் தமிழகத்திலேயே படித்து Employment Exchange–லே பதிவு பெற்றவர்களை நியமிக்கவேண்டுமென்கின்ற கோரிக்கையையும் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*முற்பகல் 11–10*

அதேபோல, சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே உடற்கல்வி பல்கலைக்கழகமானது அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனென்றால், என்னுடைய கன்னிப் பேச்சிலேயே உடற்கல்விக்காகத் தனிப் பல்கலைக்கழகம் வேண்டும் என்கிற கோரிக்கையை நான் அவையிலே வைத்திருந்தேன். அது என்னுடைய தொகுதியான காரைக்குடிக்கு வர வேண்டும் என்கிற என்னுடைய விருப்பத்தையும் நான் தெரிவித்திருந்தேன். இருந்தாலும், உடற்கல்விக்காக தனிப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதற்கு *50* இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலே, உடற்கல்விக்கான பல்கலைக்கழகத்தைப்பற்றி எந்தவிதமான அறிவிப்பும் அறிவிக்கப்படவில்லை. அது என்னவாயிற்று என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். ஏற்கெனவே மத்திய அரசுக்குப் போய் ஒரு கேள்வி போட்டு வந்திருக்கிறது என்று விளக்கம் சொன்னார்கள்.

**திரு. எச். ராஜா:** நன்றி. இதிலே உடற்கல்வி Education–ல் Ph.D. படிப்பவர்களுக்காக, there is an Expert Committee for Viva voce. ஆனால், அதிலே Ph.D.–யே படிக்காத நபர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் Springfield–ல் Doctorate of Physical Education Degree என்று ஒன்று வாங்கி வந்திருக்கிறார். இதை Association of Indian Universities பரிசீலித்து,

'it is not equivalent to Ph.D.' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது. Springfield–லேயும் அவர்கள் clarify பண்ணியிருக்கிறார்கள். 'they cannot call themselves as Doctorate' என்று. ஆகவே, இதிலே Doctorate—Ph.D. படிக்கக்கூடியவர்களுக்கு Viva voce நடத்தக்கூடியவர், குறைந்தது Doctorate–ஆக இருக்க வேண்டும். ஆகவே, அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதில் மாற்றம் கொண்டு வர வேண்டும். அவரை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தகுதியுடையவர் நியமிக்கப்பட வேண்டும்.

அதேபோல, Y.M.C.A. College–ல் Bachelor of Mobility Science என்று ஒரு course இருக்கிறது. It is meant only for blind students. Disabled people–க்காக அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அங்கே என்ன செய்யப்படுகிறது? B.Ph.Ed.–ல் இடம் கிடைக்காதவர்களையெல்லாம் அங்கே சேர்க்கிறார்கள். இந்த course–க்கு அங்கீகாரம் வாங்கியது என்பது disabled persons–க்காக. But, இப்போது abled persons, but not qualified persons அவர்கள் B.Ph.Ed. படிப்பதற்காக அங்குக் கொண்டுசெல்லப்படுகிறார்கள்; அதிலே அவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். எனவே, இதுபற்றியும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே ஒரு குற்றச்சாட்டு வந்திருக்கிறது. இதை F.I.R. மாதிரி treat பண்ணுங்கள். Charge Sheet இல்லை. அதாவது, ஒரு தகவல் வந்திருக்கிறது, ஒரு pregnant girl was admitted there. பிறகு, அந்தக் குழந்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அந்தமாதிரி குற்றச்சாட்டை இப்படிச் சொல்லக் கூடாது. ஆதாரம் இல்லாமல் சொல்லக் கூடாது. நீங்கள் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எச். ராஜா:** நிறைவு செய்கிறேன். ஆனால், இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை நான். இதற்கு விசாரணை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்தமாதிரி நடந்திருக்கிறது என்று மாணவர்கள், ஆசிரியர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும், அவ்வளவுதான். நான் வேறு குற்றச்சாட்டுகள் இங்கே சொல்லவில்லை.

அதேபோல, அங்கு Y.M.C.A. College–லிருந்து 17 லாரி load மரங்கள் வெட்டி எடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. எனவே, இதுபற்றியும் அரசாங்கம் உடனடியாக விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வாழ்க்கை கொடுத்து, எனக்கு உயிர் கொடுத்து, மீண்டும் எனக்கு ஒரு வாழ்க்கையைக் கொடுத்து என்னையும், என் குடும்பத்தையும் வாழ வைத்துக்கொண்டிருக்கும் எங்களுடைய அம்மா தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

கங்கையைப்போல், காவிரியைப்போல் கருத்துகள் ஊறும் உள்ளம் கொண்ட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சாதனைப் பட்டியலில் கல்வித் துறைக்குத் தனியிடம் உண்டு. எல்லோருக்கும் கல்வி எளிதாகக் கிடைக்க வேண்டும். படிக்காதவர்கள் யாரும் இல்லையென்ற நிலையைத் தமிழகம் அடைய வேண்டும் என்ற இலக்குடன் செயல்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதனை படைத்து வருகிறார்கள். எனவே, மக்களுக்குக் கல்விக் கண் தந்தாக வேண்டும் என்பதில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிவரும் ஈடுபாடு மகத்தானது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வாழ்கின்ற சமுதாயத்தை மட்டுமின்றி, வரப்போகிற வளரும் சமுதாயத்தையும் எண்ணி, தொலைநோக்குப் பார்வையுடன் கல்வித் துறை பயணம் செய்திட பாதை காட்டி வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதையைத் தொடர்ந்து, கல்வித் துறை பல சாதனைகளைப் படைத்து வருகிறது. தொடக்கக் கல்வி மற்றும் நடுநிலைப் பள்ளி வசதியில், தமிழகம் 100 விழுக்காடு சாதனை அடைந்துள்ளது. அனைவருக்கும் கல்வி இயக்கத்தினைச் செயல்படுத்துவதில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரி மாநிலமாகத் திகழ்வதாக மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையினுடைய அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள் பாராட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எதற்காக நாங்கள் சொல்கிறோம் என்றால், இங்கே தமிழகத்தில் இருக்கின்ற சில அரசியல் கட்சிகளுக்கு, நாங்கள் எதைச் சொன்னாலும் அவர்களுக்குக் காது கேட்காது; கண்கள் பார்க்காது. அதனால்தான், அவர்கள் அங்கம் வகித்துக்கொண்டிருக்கிற அரசின் மத்திய அமைச்சர் சொல்கின்ற வார்த்தையை–தமிழகத்தைப் பற்றி,

தமிழகத்தினுடைய கல்வித் துறை எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்பதை–அவர்கள் அங்கம் வகிக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) அரசின், அவர்களுடைய அமைச்சர் சொல்வதை இங்கே நாங்கள் எடுத்துச் சொல்கிறோம். அப்போதாவது அவர்கள் இந்தக் கல்வித் துறையில் தமிழகம் சாதனை படைத்திருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்காக இதை நாங்கள் குறிப்பிட விரும்புகின்றோம்.

*முற்பகல் 11–15*

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு, உலக வங்கி, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்த 4 ஆண்டுக் கால தமிழகத்தினுடைய சாதனைகளைப் பார்த்து இந்தியாவிலேயே தமிழகம்தான் கல்வியிலே முதல் மாநிலமாகத் திகழ்கிறது என்று அறிக்கை வெளியிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், அனைவருக்கும் கல்வித் திட்டத்தை ஆய்வு செய்த மத்திய அரசினுடைய குழு, அதாவது, உலக வங்கியும், ஐரோப்பிய கூட்டமைப்பும், மத்திய அரசும் சேர்ந்த அந்தக் குழுவினுடைய அறிக்கையிலே, தமிழகத்திலே கல்வியினுடைய தரத்தைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். "அனைத்துக் குடியிருப்புகளுக்கும், பள்ளி வசதி ஏற்படுத்தித் தருவதிலும், பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்ப்பதிலும், தமிழ்நாடு தொடர்ந்து சீரான முன்னேற்றம் அடைந்து உள்ளது. தமிழ்நாட்டின் திட்டச் செயல்பாடுகளின் வேகம் மற்றும் தரம் நன்றாக உள்ளது. எனவே, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோளில் இம்மாநிலம், மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று அந்த அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; பள்ளிக் கல்வித் துறையில் தமிழக அரசின் செயல்பாடுகள், இந்தியாவிலேயே முதல் இடம் வகிப்பதாகத் தெரிவித்துள்ளது. உலக வங்கியே பாராட்டுகின்ற அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையில் தமிழகப் பள்ளிக் கல்வித் துறை சிறந்து விளங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், கடந்த 4 ஆண்டுகளில், இதுவரை 46,494 ஆசிரியர்களை நியமிக்க ஆணையிட்டுள்ளார்கள். ஆனால், கடந்த 1996–1997, 1999–2000 ஆண்டுகளுக்கான 4 ஆண்டுக் கால தி.மு.க. ஆட்சியிலே, 43,937 ஆசிரியர்கள்தான் நியமனம் செய்யப்பட்டு இருக்கின்றார்கள். முந்தைய



தி.மு.க. ஆட்சியைவிட, 2,557 ஆசிரியர்களைக் கூடுதலாக இந்த அரசு நியமித்து இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி தரமாக இருக்கவேண்டும் என்பதில் அம்மாவின் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. அதற்காக, ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆண்டுதோறும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுவது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் என்பதைக் குறிப்பிடுவதில் பெருமிதம் அடைகிறேன்.

பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, சாதனை படைத்துள்ளது. முதன்முறையாக "நபார்டு வங்கி" நிதியுதவியுடன், கிராமப்புறங்களிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும், வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. 5 கட்டங்களாக 1,154 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.414.84 கோடி செலவில் பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் 'நபார்டு' திட்டத்தின்கீழ் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் குறிப்பாக, கிராமப்புறங்களில் இயங்கிவரும் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் போதுமான வகுப்பறைகள், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தர, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் 15,644 வகுப்பறைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றிலே 10,526 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு, அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள வகுப்பறைகள் கட்டும் பணி, விரைவில் முடிவடையும் நிலையிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். கடந்த 4 ஆண்டுகளில் 1,112 தொடக்கப் பள்ளிகளும், 2,106 நடுநிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. தரம் உயர்த்தப்பட்ட அனைத்துப் பள்ளிகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைப்படி, புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். முந்தைய ஆட்சிக் காலத்தில், அவர்களின் 5 ஆண்டுக் காலத்தில் தொடங்கப்பட்ட பள்ளிகளை ஒப்பிடும்போது, அவர்களைவிட மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு 73 தொடக்கப் பள்ளிகளையும், 1,594 நடுநிலைப் பள்ளிகளையும் அதிகமாகத் தொடங்கியுள்ளது

என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 4 ஆண்டுகளில், 295 அரசு உயர்நிலைப் பள்ளிகளும், 335 அரசு மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. வரும் கல்வியாண்டிலே மேலும் 90 உயர்நிலைப் பள்ளிகளும், 60 மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்படவுள்ளன. இது கடந்த 5 ஆண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியை ஒப்பிடும்போது, 16 உயர்நிலைப் பள்ளிகளையும், 97 மேல்நிலைப் பள்ளிகளையும் அம்மாவினுடைய அரசு அதிகமாகத் தொடங்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும் இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களின் இடைநிற்றல் விகிதம் 2001–2002 ஆம் ஆண்டில் இருந்த 16 விழுக்காட்டிலிருந்து 2004–2005 ஆம் ஆண்டில் 6 விழுக்காடாகவும், நடுநிலைப் பள்ளிகளிலே இடைநிற்றல் விகிதம் 2004–2005 ஆம் ஆண்டில் 9 விழுக்காடாகவும் குறைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இடைநிற்றல் விகிதத்தினை மேலும் குறைக்கும் நோக்கத்தோடு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆண்டு முதல், 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்புவரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைவருக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்களை வழங்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், சுமார் 93 இலட்சம் மாணவ மாணவியர் பயனடைகின்றார்கள் என்பதையும் அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழி செய்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

முற்பகல் 11–20

தமிழ்நாட்டில் பயிலும் எந்த ஒரு மாணவ மாணவியும் தமிழ் மொழியை அறியாமல் பள்ளியை விட்டுச் செல்லக்கூடாது என்பதற்காக, 8–வது உலகத் தமிழ் மாநாட்டிலே, மாண்புமிகு அம்மா அவர்கள், அறிவியலில் தமிழ், அனைத்திலும் தமிழ் என்பதை உணர்த்திடவும், மேலும், 'இன்றும் தமிழ் என்றும் தமிழ்' என்று முழக்கமிட்டதைச் செயல்படுத்தும்விதத்தில், அனைத்துப் பள்ளிகளிலும் மழலையர் வகுப்பு முதல் மேல்நிலை வகுப்புவரை அறிவியல் தமிழை, ஒரு பாடமாக 2003–2004 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தி



மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை படைத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துவகை ஆசிரியர் நியமனத்திற்கும் உச்ச வயது வரம்பை நீக்கி பல்லாயிரக் கணக்கானவர் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளியேற்றியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பாதிக்கப்பட்ட 23 ஆயிரம் ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கு மீண்டும் ஆசிரியர் பயிற்சியை வழங்கி அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கணினி பயன்பாட்டிற்கும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் ஆங்கிலம் இன்றியமையாததாக உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தொலைநோக்கோடு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில், 2004–2005 ஆம் ஆண்டிலிருந்து முதலாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்றுத் தர ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்றைய உலகின் தேவையை உணர்ந்து வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் ஆங்கிலத்தில் சிறப்பாகப் பேசவும், எழுதவுமான திறனை வளர்த்துக்கொள்ளவும், மேம்படுத்தவும் 600 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகம் உருவாக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெண் கல்விக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. குறிப்பாக பெண் குழந்தைகள் தன்னம்பிக்கையோடு எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்ற தொழில் கல்வியைப் பெறும்வகையில், கடந்த 4 ஆண்டுகளில் 6 ஆம் வகுப்பு, 7 ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்புகளில் படிக்கும் 18 இலட்சம் மாணவியர்களுக்கு ஆடை வடிவமைப்பு, காகிதப் பைகள் தயாரித்தல், செயற்கைப் பூக்களால் பூங்கொத்து தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில் திறன் பயிற்சிகள், அம்மா அவர்களின் அரசால் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்வில் தோல்வி என்பது, இளம் உள்ளங்களின் தன்னம்பிக்கையைத் தகர்க்கும்; அவர்களின் கல்வியைத் தடைபடுத்தும். இதனை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்று முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 75 விழுக்காடு வருகைப் பதிவு இருக்கும்பட்சத்தில் தேர்ச்சி வழங்கலாம் என்று ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

பள்ளியிலிருந்து, வறுமை. மற்றும் பல்வேறு காரணங்களால் நின்றுவிட்ட மாணவ, மாணவியர் மீண்டும் தங்கள் கல்வியைத் தொடரும்பொருட்டு அவர்களைக் கல்வி ஆண்டின் எந்த நேரத்திலும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாறு சேர்க்கப்படும் மாணவர்களிடம் பிறப்புச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்றவற்றை, சேர்க்கையின்போது வற்புறுத்த வேண்டாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, பிற மாநிலங்களுக்குக் கல்வித் துறையிலும் தமிழகத்தை முன்மாதிரியாக ஆக்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதில் அம்மாவின் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் உயர் கல்வியை மேம்படுத்தும்வகையில், முதற்கட்டமாக 500 இளநிலை விரிவுரையாளர்களையும், இதேபோன்று, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 300 இளநிலை விரிவுரையாளர்களையும் நியமிக்க அம்மா அவர்கள் நேற்று ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள், அரசுக் கல்லூரிகளுக்கு மட்டும் விரிவுரையாளர்களை அம்மா அவர்கள் நியமிக்கின்றார்கள்; மற்ற உதவிபெறும் கல்லூரிகளுக்கும் நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நேற்று, அம்மா அவர்கள் அறிவித்த அந்த அறிவிப்பில், அரசுக் கல்லூரிகளுக்கும், அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கும் அரசு விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்தார்கள் என்பதையும், நேற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கவனிக்கத் தவறி விட்டார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மேலும், உயர் கல்வியின் தரத்தினை மேம்படுத்தும் எண்ணத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளும் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவின் தரச் சான்றிதழ் பெறவேண்டும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இதேபோன்று தமிழகத்தில் உள்ள கல்லூரிகள் தன்னாட்சித் தகுதி பெற்று, காலத்திற்கேற்ப பாடத் திட்டங்களைத் தாங்களே வகுத்துக்கொள்ளவும் அம்மா அவர்களின் அரசு, தொடர்ந்து ஊக்கம் அளித்து வருகிறது. இதன் காரணமாகத்தான் தற்போது தமிழகத்தில் 134 கலை மற்றும் அறிவியல் கல்வியியல் கல்லூரிகள் தன்னாட்சி பெற்றுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில், வேலைவாய்ப்புமிக்க புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பு மற்றும் முதுநிலை பட்டப் படிப்பு பயிலும்போதே, கூடுதலாக வேலைவாய்ப்புமிக்க பட்டயப் படிப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் கல்வியைப் பொறுத்தவரையில், தமிழகத்திலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் இணைத்து, இந்தியாவிலேயே மிகப் பெரிய பொறியியல் பல்கலைக்கழகத்தை உருவாக்கிய பெருமை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை, உலகத் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களுக்கு இணையாக மேம்படுத்தும் நோக்கத்துடன் நவீனப்படுத்துவதற்கு, முதல்கட்டமாக 63.21 கோடி ரூபாயை உலக வங்கி நிதி உதவியைப் பெற்று செயல்படுத்தியவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், அனைத்துப் பொறியியல் கல்லூரி மாணவர்களும் வேலைவாய்ப்பு வசதிகளைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், மண்டல வாரியாக, தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், வேலைவாய்ப்புத் தேர்வுகளும் நேர்காணல்களும் முதல்முறையாக அம்மா அவர்களுடைய அரசு அறிமுகப்படுத்தி, நடத்திக்

கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்படி, பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பேசவும் எழுதவுமான திறனை மேம்படுத்தும் வகையில், British Council–வுடன் தொழில்நுட்ப இயக்குநரகம் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, பொறியியல் கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்களின் நலனில் அம்மா அவர்கள் அரசு அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்ணா பல்கலைக்கழகம், தன்னுடன் இணைந்துள்ள கல்லூரிகளுக்குத் தரம் வாய்ந்த விரிவுரைகள் அளிப்பதற்கு 'Edusat' எனப்படும் செயற்கைக்கோளை நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு காரணங்களால் கல்லூரிகளுக்குச் சென்று உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பை இழந்தவர்கள், குறிப்பாக கிராமப்புற இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு, தரமான உயர் கல்வியைக் குறைந்த செலவில் அளிக்கும் நோக்கத்துடன், அம்மா அவர்களின் அரசு, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி, கல்வி பெறும் வாய்ப்பை மிகவும் எளிதாக்கியுள்ளது. இதனால், தமிழ்நாட்டின் உயர் கல்வி வரலாற்றில், ஒரு புதிய அத்தியாயத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லூரிகளிலிருந்த புகுமுக வகுப்பை, அதாவது P.U.C. வகுப்பை, பள்ளிக்கூடங்களுக்கு மாற்றி, மேல்நிலைப் பள்ளிகளாக்கி, ஏழை எளிய கிராமப்புற மாணவ மாணவியர், மேலும் தொடர்ந்து தங்களுடைய பள்ளிப் படிப்பை, இந்த மேல்நிலைப் படிப்பைத் தொடருவதற்காக, மறைந்த நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால், அந்த மேல்நிலைக் கல்வியைப் பள்ளிகளிலேயே கொண்டுவந்து, அதை அறிமுகப்படுத்தியது புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி. அதன்மூலம், அன்றைக்கு ஒரு இலட்சம் மாணவர்களாக இருந்த அந்த மாணவர்களின் எண்ணிக்கை, அந்தப் படிப்பை அறிமுகப்படுத்தியதன்மூலம், ஒரே ஆண்டிலே 3 இலட்சம் மாணவர்கள் அதிகமாகப் பெற, அந்தக் கிராமப்புற மாணவர்கள் அந்தப் பள்ளியிலே சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தியவர் புரட்சித்



தலைவர் அவர்கள் மற்றும் அவர்களுடைய அரசு என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பசிக்கும் வயிற்றுக்கு உணவு இல்லாமல் இருக்கும் ஏழை மாணவ மாணவிகளுக்குக் பள்ளிக் கல்வி கிட்டாது என்பதால், ஏழை எளிய கிராமப்புற மக்களின் குழந்தைகள் பசியின்றிப் படிப்பதற்கு, மனிதாபிமான உணர்வில், சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தது அ.தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

படிக்கின்ற மாணவர்களின் மனத்தில் நம்பிக்கையை உருவாக்கவும், உயர்வு தாழ்வு மனப்பான்மையை நீக்கவும், மாணவர்களுக்குச் சீருடை வழங்க முன்வந்தது அ.தி.மு.க. அரசு.

மாணவியர் நடந்து சென்று, பள்ளிக்கூடம் போவதிலுள்ள தொல்லைகளைத் தடுக்கவும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், படிக்கும் நேரத்தை அதிகமாக்கவும், மாணவிகளுக்கு மிதி வண்டிகளை வழங்கி, பள்ளிக் கல்வியில் வரலாற்றுச் சாதனையை ஏற்படுத்தியவர், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு குடும்பத்தில் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்துவிட்டாலோ, அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாயின்மை காரணமாக கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள், கல்வியைத் தடைப்படாமல் தொடர, அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியர் அனைவருக்கும், ரூபாய் 50,000 நிதி வழங்க ஆணையிட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவசப் பாட நூல், நோட்டுப் புத்தகங்கள், இலவசச் சீருடைகள் ஆகியவற்றை உடனடியாக வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சுனாமியால் தங்களது அசல் கல்விச் சான்றிதழ்களை இழந்த மாணவ மாணவிகளுக்கு, கட்டணம் ஏதும் இன்றி இரண்டாம் படி சான்றிதழ்கள் வழங்கவும், மாணவ, மாணவிகளின் நலன் கருதி, தேர்வுகளைத் தள்ளி வைத்தும், தேர்வுக் கட்டணம், கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் ஆகியவற்றை இரத்து செய்தும்,

தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் துறை என்ற தனித் துறையை உருவாக்கியது அ.தி.மு.க. அரசு காலத்தில்தான். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ் வளர்ச்சித் துறைக்கென ரூபாய் 2 கோடி செலவில் கட்டப்பட்ட தனிக் கட்டடத்தில், தமிழ் வளர்ச்சி வளாகத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். இதுநாள்வரை, வாடகைக் கட்டடத்திலிருந்த தமிழ் வளர்ச்சித் துறையைச் சொந்தக் கட்டடத்திற்கு உரிமையாக்கியிருப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது நாம் பயன்படுத்திவரும் சீர்திருத்த எழுத்துக்களை அரசு நிலையில் ஏற்று, அனைவரும் பயன்படுத்த, தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டையொட்டி, ஆணையிட்டது அ.தி.மு.க. அரசு என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

*முற்பகல் 11–35*

அரசு அலுவலர்கள், பணியாளர்கள் தமிழிலேயே கையொப்பமிடவேண்டுமென்று ஆணை பிறப்பித்தது அ.தி.மு.க. அரசு. ஆங்கில ஆண்டோடு, திருவள்ளுவர் ஆண்டையும் குறிப்பிட வேண்டுமென்று ஆணையிட்டது அ.தி.மு.க. அரசு. தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்தும்வகையில், இதுவரை தமிழ்நாட்டில் மூன்று உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றுள்ளன. அவற்றில், அறிஞர் அண்ணா காலத்தில், 1968–ல் ஒரு மாநாடு நடந்தது. ஏனைய இரண்டு மாநாடுகள் அ.தி.மு.க. ஆட்சி காலத்திலே நடைபெற்றன. மதுரையில், 5–வது உலகத் தமிழ் மாநாடு, 1980–ல் சிறப்பாக நடத்தப்பட்டது. தமிழ் மொழியின் பெருமையும், வளமும் வெளிப்படும் வண்ணமும், தமிழ் மொழி மேலும் பொலிவுபெறும் வண்ணமும், உலகமே பாராட்டும் வகையில் 8–வது உலகத் தமிழ் மாநாடு, தஞ்சாவூரில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நடத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர் அண்ணா, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், புலமைப்பித்தன், திருமதி கு.ப. சேது அம்மாள் நாட்டார், க.நா. சுப்பிரமணியம், ந. பிச்சமூர்த்தி ஆகியோரது நூல்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில்தான் நாட்டுடைமையாக்கப்பட்டன. இந்தியத் தலைநகரிலும் தமிழ் வளர வேண்டி டெல்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவ ரூபாய் 50 இலட்சத்தை ஒரே தவணையில் வழங்க ஆணையிட்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



பெண்குலத்திற்குப் பெருமை சேர்க்கும்வகையில் citizen என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் தமிழில், குடிமகன், குடிமகள் என்று பயன்படுத்த வேண்டுமென்று 25–4–2003 அன்று சட்டமன்றத்தில் அறிவித்து, அதற்கான ஆணையைப் பிறப்பித்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் மொழியின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, தமிழ் மொழிக்கென்று ஒரு தனிப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூரில் தோற்றுவிக்கப்பட்டதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் மொழியையும், தமிழ்நாட்டு எல்லையையும் காப்பதற்குத் தியாகம் செய்தவர்களைப் பாராட்டிப் போற்றும் வகையிலும், அவர்கள் இன்னல்களை நீக்கும் வகையிலும், மொழிக் காவலர் நிதியுதவித் திட்டம் தோற்றுவிக்கப்பட்டு, திங்கள்தோறும் நிதியுதவி வழங்கப்பட, சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வயதான காலத்தில் வறுமையில் வாடும் தமிழ் அறிஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் நிதியுதவித் திட்டத்தைக் கொண்டு வந்தது அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சங்க இலக்கியங்களை நமக்குத் தேடித் தந்த தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத அய்யர் அவர்களின் பிறந்த நாள் விழாவை ஆண்டுதோறும் கொண்டாடும் வகையில் ஆணை பிறப்பித்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் ஒன்றுக்குகூட திரு. ஜி.கே. மணி கைதட்டுவதாகத் தெரியவில்லையே? இதில் உங்களுக்கு ஒப்புதல் உண்டா? இல்லையா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** 8–வது உலகத் தமிழ் மாநாட்டில் முத்தமிழோடு, நான்காவது தமிழாக அறிவியல் தமிழ் என்பதை அறிவித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவியல் தமிழுக்கென்று முதன்முதலாக அரசு நிலையில், 'அறிவியல் தமிழ்-தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கம்', ரூபாய் 8 இலட்சம் செலவில் நடத்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2001–ல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் நடத்திய மாவட்ட ஆட்சியாளர்கள், காவல் துறை அலுவலர்கள் மாநாட்டில், முதன்முறையாக ஆட்சி மொழி செயலாக்கத்தையும் ஒரு பொருண்மையாகச் சேர்த்து, அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டம் சிறப்புற ஆக்கம் தந்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில், தமிழ் மொழியில் சொல் வளத்தைப் பெருக்கிட, பிற மொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை உருவாக்கும் சொல் வங்கித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 15 வகைப்பாடுகளில் வெளிவந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு வந்த நிலையை மாற்றி, விளையாட்டுத் துறை உட்பட 31 வகைப்பாடுகளில் வெளிவரும் நூல்களுக்குப் பரிசுகள் வழங்க ஆணை பிறப்பித்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிஞ்சு உள்ளங்களிலும் செந்தமிழை விதைப்பதற்காக பள்ளி, கல்லூரி மாணவர்களின் தமிழ் படிப்பாற்றலையும், பேச்சாற்றலையும் வளர்க்கும் வண்ணம், மாவட்ட நிலையிலும், மாநில நிலையிலும் மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தவும், பரிசுகள் வழங்கவும் ரூபாய் 5,19,178 நிதி ஒதுக்கி ஆணையிட்டது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாவட்டம் தோறும் ஆட்சி மொழிக் கருத்தரங்கம் நடத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் வளர்ச்சித் துறைமூலமாக வழங்கி வரும் 5 விருதுகளில், 3 விருதுகளை வழங்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, திருவள்ளுவர் விருது ஆகிய விருதுகளை வழங்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு அலுவலகங்களில் இருக்க வேண்டிய தமிழ்த் தட்டச்சுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி ஆணையிட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்சி மொழித் திட்டத்தை செயற்படுத்த கேடயமும், பரிசுகளும் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவியல் தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட, நிதியுதவி வழங்கும் திட்டத்தை உருவாக்கியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகத் தமிழர்களையும், அமைப்புகளையும், ஒருங்கிணைத்துச் செயல்படவும், தமிழ், தமிழர்களின் சிறப்புகள் மேலும் பெருகிடவும், உலகத் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்படும் என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்ததோடு, 10 கோடி ரூபாயை நிதியொதுக்கீடு செய்ததும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழாவை, அவர் பிறந்த ஊராகிய திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், கோமதிமுத்துபுரம் மற்றும் சென்னை ஆகிய மூன்று இடங்களில் சிறப்பாகக் கொண்டாட ஆணையிட்டது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட பாரதப் பிரதமரிடம் வலியுறுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4213*, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி பேரூராட்சிப் பகுதியில் அடிக்கடி குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு, மக்கள் அவதிப்படுவதால் அப்பகுதியில் 30 கைப்பம்புகள் உடனடியாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *577*, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் அரைகுறையாகக் கட்டப்பட்டுள்ள நிலையில், கட்டடங்களை முழுமையாகக் கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5383*, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, மாட்டப்பள்ளி ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5940*, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியில் புதிய மண் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6254, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5429, டாக்டர் ஆர். கோவிந்தசாமி., இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7059, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், திருப்பத்தூரில் இருந்து திருவண்ணாமலை சாலையில் பேராம்பட்டிற்கு அருகில் உள்ள ஏரிக்கரையில் மிக மிகக் குறுகிய வளைவில் பேருந்துகள் முதல் அனைத்து வாகனங்களும், பொது மக்களும் செல்லும் வகையில், உள்ள ஏரிக்கரை வளைவை அகற்றி நேராக தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7168, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7474, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் உள்ள பாப்பாரப்பட்டியில் உள்ள பேருந்து நிலையத்தில், நவீன கட்டணக் கழிப்பிடம் அமைக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3212, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3810, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குந்தா தாலுகா, இத்தலார் ஊராட்சிக்கு உட்பட்ட எமரால்டு அண்ணா நகரில் வசிக்கும் மக்களுக்கு போதிய குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5499, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5582, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி முதல்நிலை சிறப்பு ஊராட்சியில் உள்ள ஆதனூர், நாட்டானிக்கோட்டை, பொன்னாங்கண்ணிக்காடு கிராமங்களில் உள்ள உட்சாலைகளை மேம்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6483, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2777, திரு. ப. ரங்கநாதன்.



**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3937, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3084, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4912, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் இரண்டாவது தொகுதி, சேலம் ஊராட்சி ஒன்றியம், கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியான காந்தி நகரில் கழிப்பிடம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7012, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் அன்னியாளம் ஊராட்சி, சின்னதோகரை அரசகுப்பம் ஊராட்சி, லிங்கதீரனப்பள்ளி, சின்னபெண்ணங்கூர், சின்னமங்கலம் ஊராட்சி, மத்தேன் அக்ரஹாரம், உரிமம் ஊராட்சி உடுபரணி, பிளிக்கல் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6910, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் ஊரக வளர்ச்சித் துறை சார்பாக, கிராமங்களுக்குத் தெரு விளக்கு, குடிநீர், கழிப்பிட வசதி, ரோடு வசதிகள் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4375, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், செம்பாக்கம் ஊராட்சியில் உள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4575, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அந்தியூர் தொகுதியில் பெண்கள் சுயநிதிக் குழு மிகச் சிறப்பாக செயல்படுகிறது; இவர்களுக்குப் போதிய கடன் வசதி வழங்கி, சுய தொழில் தொடங்க அரசு ஊக்கமளிக்கவும் மற்றும் ஆண்கள், சுயநிதிக் குழு ஆரம்பிக்க ஆவன செய்வதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6378, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் தொகுதிக்கு உட்பட்ட துரும்பூர் ஊராட்சிக்கு, ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் இதுவரை கட்டப்படாமல் உள்ளதால் துரும்பூரில் புதிதாக ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6002, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதியிலுள்ள கிராமப் பகுதியிலுள்ள அனைத்து மண் சாலைகளையும் தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6211, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிகளின் குடிநீர், மின்சாரக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 643, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வருமானம் இல்லாத கிராம ஊராட்சிகளின் சாலைகள், தெரு விளக்குகள் பராமரிப்பிற்குச் சிறப்புச் சலுகை அளிப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6634, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், சிறு நாத்தாரிலிருந்து குண்ணங்குப்பம் வரையுள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6704, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3257, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்சமயம் அரசுமூலம் கட்டிக் கொடுக்கப்படுகின்ற தொகுப்பு வீடுகளுக்கு வழங்கப்படும் தொகையினை, கூடிவருகின்ற விலையேற்றத்தின் காரணமாக அதிகரித்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், தற்சமயம் கொடுக்கப்படுகின்ற கச்சா வீடுகள் கட்டுவதற்குரிய ரூ.10,000–ஐ அதிகரித்து வழங்க வேண்டியது குறித்தும், பழைய ஓட்டு வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு சிறப்பு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7215, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் உள்ள ஊரகச் சாலை மிகவும் பழுதடைந்துள்ள நிலைமையினைச் சீர் செய்து செப்பனிடுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.479,76,39,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை பற்றிய

கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களது அரிய கருத்துகளைத் தெரிவித்தபின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை மீது விவாதம். திரு. சாமிநாதன். *(குறுக்கீடு)*

*** திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் வழங்கல் துறை சார்பாக இந்த மன்றத்திலே விவாதம். வேலூர் மாவட்டத்தில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவுவதைப் பலமுறை நானும், திரு. ஞானசேகரன் போன்றவர்களும், இந்த அரசினுடைய கவனத்திற்கும், முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், அது கவனிக்கப்படும்; நிதி வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களும், மற்றவர்களும் வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், மாவட்ட நிர்வாகத்திலே இன்னும் நிதி வரவில்லையென்ற நிலைமை இருக்கிறது. ஆனால், நிலைமை மோசமாக இருக்கிறது. நேற்றுகூட, பெய்த மழையெல்லாம் சாதாரண மழையே தவிர, ஊர்ப் பக்கம் எந்த மழையும் இல்லை. எனவே, நிரந்தரமாக இந்தப் பிரச்சினைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வேலூருக்குப் போங்கள், மழை பெய்யும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்றும், இதற்குத் தீர்வு காண உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், 8–3–2005 அன்று இந்த அவையில் மரியாதைக்குரிய உறுப்பினர்கள் திரு. துரைமுருகன் அவர்கள், திரு. ஞானசேகரன் அவர்கள் போன்றவர்களால் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. இதுகுறித்து உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களை அழைத்து

@ *443 முதல் 550 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.*



ஓர் அவசரக் கூட்டம் நடத்தி, தேவையான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் ஆணையிட்டேன்.

*பிற்பகல் 12–05*

இதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் 9–3–2005 அன்று ஓர் அவசரக் கூட்டத்தை நடத்தி, எந்தெந்த மாவட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது என்றும்; இதனைச் சரிபடுத்திட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்தனர். இந்தக் கலந்தாலோசனைகளின் அடிப்படையில் அளிக்கப்பட்ட அறிக்கைகளின்பேரில், வேலூர் உட்பட 16 மாவட்டங்களில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக 9.90 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினைகளைச் சமாளிக்க, தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, குடிநீர்ப் பிரச்சினைகளைச் சமாளிக்க, உடனடி ஒதுக்கீடாக ஏற்கெனவே ஒரு கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டது. மேலும், வேலூர் மாவட்டத்தில் கடும் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுவதாக மதிப்பிடப்பட்டுள்ள 189 குடியிருப்புகளுக்குக் குறைந்தபட்ச குடிநீர் வழங்க ஓர் அவசரத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. 3.62 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இந்தத் திட்டம் ஏப்ரல் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்படும். இதன்வாயிலாக இந்த 189 குடியிருப்புகளில் நீண்ட காலமாக நிலவி வரும் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும்.

அண்மையில் பெய்த மழை, பல மாவட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க உதவியுள்ளது. வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதன் கிழக்குப் பகுதிகளில் ஓரளவுக்கு மழை பெய்திருந்தாலும், மேற்குப் பகுதிகளில் அவ்வளவாக மழை பெய்யவில்லை. எனவே, இந்தப் பகுதிகளில் தொடர்ந்து நிலவிவரும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க, மேலும் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. வேலூர் மாவட்டத்தில் இன்னமும் பல இடங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு தொடர்ந்து நிலவுவதாகவும் அதனைச் சமாளிக்க, மேலும் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது என்றும் அம்மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். எனவே, வேலூர் மாவட்டத்தின் உடனடித் தேவைகளைக் கணக்கிட்டு, குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக, கூடுதலாக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்க நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும்,

தேவைக்கேற்ப கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதனைப் பயன்படுத்தி, மாவட்ட நிருவாகம் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். மேலும், 2005–2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள திட்ட ஒதுக்கீடுகளையும் பயன்படுத்தி தேவையான குடிநீர் வழங்கு திட்டங்களை மாவட்ட நிருவாகம் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நன்றி சொல்லணுமா?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை பலமுறை இந்த மாமன்றத்திலே வைத்த நேரத்தில் கவனிப்பதாகச் சொன்ன முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு மாவட்டத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு பெருந்தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் எங்கள் மாவட்டத்தின் சார்பிலே முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்னும் நிதி போய்ச் சேரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிச்சயமாக இன்றைக்கு மழை பெய்யும்.

**திரு. துரைமுருகன்:** ஆனால், ஒன்றை முதலமைச்சருக்கு இப்போதே சொல்கிறேன். கடுமையான குடிநீர்ப் பஞ்சம் என் தொகுதியிலும்தான் உண்டு. அதை அரசியல் ரீதியிலே கவனிக்காமல் குடிநீர்ப் பிரச்சினை ரீதியாக கவனிக்கும்படி, நீங்கள் அதிகாரிகளுக்கு ஆணையிட வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நான் அறிவித்தேன். ஏற்கெனவே வேலூர் மாவட்டத்தில் நிலவுகின்ற குடிநீர்த் தட்டுப்பாட்டை சமாளிக்க ஒரு கோடி ரூபாய் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டது. மேலும் இப்போது 5 கோடி ரூபாய் விடுவிக்க ஆணையிட்டுள்ளேன். மேலும் தேவைக்கேற்ப விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தொடர்ந்து பின்தங்கிய மாவட்டம், வறட்சியான மாவட்டம் தருமபுரி மாவட்டம், கடுமையான குடிநீர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் எல்லா மாவட்டங்களுக்கும் சேர்த்துத்தான் சொன்னார்கள். (குறுக்கீடு) எல்லா மாவட்டங்களுக்கும் சொன்னார்கள். திரு. மு.பெ. சாமிநாதன். (குறுக்கீடு) எல்லா மாவட்டங்களுக்கும் சேர்த்துத்தான் சொன்னார்கள். எல்லா மாவட்டங்களுக்கும் சொன்னார்கள். குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் சேர்த்துத்தான் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திரு. மு.பெ. சாமிநாதன்.



***திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்தில் என்னை இடம்பெறச் செய்த எங்களுடைய தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கும், கழகத்தினுடைய பொதுச் செயலாளர் இனமான பேராசிரியர் அவர்களுக்கும் எங்களுடைய ஆருயிர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் உரித்தாக்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், என்னுடைய வெற்றிக்காக உழைத்திட்ட தோழமைக் கட்சி நண்பர்களுக்கும், தொகுதி மக்களுக்கும் இந்த நேரத்தில் நான் மீண்டும் ஒரு முறை நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். 'எழுச்சிமிகு சிங்கம்தான், ஏறுநடை தங்கம்தான், எனக் கொடி தூக்கி, இனி பொழுத்திவிட்ட உமிகள்தான், குள்ளநரிக் கூட்டத்தார்' என இடியென ஒலிக்கும் கழகத்தின் கொள்கை மறவர் கூட்டமாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஊரக வளர்ச்சி, நகராட்சி, குடிநீர் வழங்கல் மானியத்தின்மீது என்னுடைய கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாக சட்டமன்றம் விளங்கிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. தயவு செய்து...(குறுக்கீடு)

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாகிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைமுருகன், திரு. ஞானசேகரன் ஆகியோர் வைத்த கோரிக்கைக்கு மதிப்பு அளித்து, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இப்போதுதான் நிதியொதுக்கீடு செய்ததாக அறிவித்தேன். அதற்குள் இப்படி மாண்புமிகு உறுப்பினர் பேசுவது நியாயமல்ல.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பேசிக்கொள்கிறார்கள், பலர். ஔவையார் இருந்திருந்தால்கூட, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மக்களுக்குப்போய் விளக்கம் சொல்லுங்கள், நீங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** ஔவையார் இருந்திருந்தால்கூட, ** என்று பாடியிருப்பார் என்ற சூழ்நிலையை, இன்றைக்கு மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ரொம்ப முறைகேடானது. இது மாதிரிப் பேசுவது ரொம்ப முறைகேடானது. தவறு. ஏனென்றால், ஏறத்தாழ எல்லா எதிர்க் கட்சி உறுப்பினர்களும் இருக்கின்றார்கள். எல்லாரும் பேசுகிறார்கள். அவைக் குறிப்பிலிருந்து, கண்ணியத்திற்குக் குறைவாக சில கருத்துகளை, அவர்கள் சொல்கிற முறையிலே இருக்கக்கூடிய தன்மையின் காரணமாக நீக்கப்படுகிறதே தவிர, ** என்று சொல்வது, முறைகேடானது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள், உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். சாமிநாதன், என்ன திடீரென்று உங்களுக்கு இப்படி வந்துவிட்டது?

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, நீங்கள் அந்த அறிவுறுத்தலைச் செய்திருந்தால், நாங்களும் அதுபோலச் செய்திருப்போம். என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு நான் வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு மூன்று ஊராட்சித் தலைவர்களும், அதேபோல, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களும், இன்றைக்கு ஒரு பிரச்சினையில், அரசினுடைய நிலையின் காரணமாக, இராஜிநாமா செய்ய முற்பட்டிருக்கின்றார்கள். இது, பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட பிரச்சினை. இது சம்பந்தமாக நான் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானமாகவும், கவன ஈர்ப்பு அறிவிப்பாகவும் தந்திருக்கின்றேன். அதாவது, பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்திலிருந்து, வறட்சிப் பகுதியாக இருக்கின்ற தாராபுரம் வட்டத்திற்குப் பயன்படும் வகையில், என்னுடைய வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட உப்பாறு அணைக்கு நீர் வழங்க வேண்டும் என்கின்ற அரசாணை இருந்தும், இதுவரை வழங்கப்படாமல், இன்றைக்குப் பல்வேறு போராட்டங்கள், தொடர் போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதனுடைய ஆதாரங்களைக்கூட நான், செய்தித்தாளிலே வந்ததை, இறுதியிலே கொடுக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் அந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தி, உப்பாறு அணைக்கு நீர் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்—ஆழியாற்றினுடைய ஒட்டுமொத்தப் பாசனப் பரப்பிற்கான நீரில், தற்போது பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்தின் மூன்றாவது மண்டலத்திற்கு இன்றைக்கு நீரைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதற்கும், அந்தப் பகுதியில் இருக்கின்ற குடிநீருக்கும், தேவையான நீர் மட்டும்தான் தற்போது திருமூர்த்தி அணையிலே இருக்கின்றது. மிகையான நீர் இல்லை. ஏற்கெனவே, உப்பாற்றிற்கு நாம் நீரைக் கொடுக்க வேண்டுமென்றால், 48 கிலோமீட்டர் சென்று, அதற்குப் பின்னர் 46 கிலோமீட்டர் சென்றதற்குப் பின்னால்தான், உப்பாறு dam—க்குச் சென்றடையக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், தற்போது போதிய நீர் அங்கு இல்லாத காரணத்தினால், நீரைக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** அதேபோல, நான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையிலே, தொகுதியிலே பல்வேறு இடையூறுகள், இந்த அரசுமூலம் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக, தாராபுரம் வட்டம், மாம்பாடி ஊராட்சியிலே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க வேண்டுமென்று சொல்லி, அந்தப் பகுதியினுடைய விவசாயப் பெருமக்கள் கோரிக்கை வைத்து, 6 மாத காலம் ஆகிறது. அரசியல் தலையீட்டின் காரணமாக, அந்தப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படாமல், தடைபட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது என்கின்ற அந்த நடைமுறை, பால் உற்பத்தி செய்கிற 25 நபர்களுக்குக் குறையாமல், கோரிக்கை மனு, அந்தத் துணைப் பதிவாளர் அவர்களிடம் தரப்பட்டிருந்தால், நிச்சயமாக அங்கே சங்கம் பதிவு செய்து கொடுக்கப்படும். நம்முடைய உறுப்பினர் அவர்கள், அந்தக் கோரிக்கையைத் தந்தால், உடனடியாக அதற்கு வாய்ப்பு இருக்குமானால், பதிவு செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு தங்கள்மூலம் நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். கடந்த 1991—லேயிருந்து, 1996 வரை இதே அரசு செயல்பட்டு வந்தது. அன்றைக்கு உள்ளாட்சித் தேர்தலை,...

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கோரிக்கை, இதுவரை அரசுக்குப் பெறப்படவில்லை; அரசிடம் வரவில்லை. ஆனால் அவர், அரசியல் குறுக்கீடு காரணமாக, அங்கே சங்கம் பதியப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார். அது அவைக் குறிப்பில் இருக்கலாமா என்பதை முடிவெடுத்து, நீக்க வேண்டுமென்று –– கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உங்களுடைய கோரிக்கையைக் கொடுக்கச் சொல்கிறார்கள். வாய்ப்பிருந்தால் பண்ணிக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** கோரிக்கை, தக்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 1991...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உப்பாறு அணைக்கு நீர் பெறப்பட வேண்டுமென்று இங்கே கோரிக்கையினை வலியுறுத்தினார்கள். திருமூர்த்தி அணையில் 7–4–2005 நிலவரப்படி, 803.72 மில்லியன் கன அடி நீர்தான், தற்போது இருப்பில் இருக்கின்றது. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் உள்ள அணைகளுடைய ஒட்டுமொத்த நீர் இருப்பு 1290 மில்லியன் கனஅடி. 7–4–2005 முதல் 30–5–2005 வரையிலான காலத்திற்கு ஆழியாறினுடைய மூன்றாம் மண்டலப் பாசனத்திற்குத் தேவைப்படும் நீர், 2900 மில்லியன் கன அடி. மணக்கடவில், கேரளாவிற்கு இன்னமும் நாம் அளிக்கப்பட வேண்டிய நீர் 1500 மில்லியன் கன அடி. தற்போது உப்பாறில் மழை பெய்து, 600 கன அடி நீர் அந்த அணைக்கு வந்து கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒட்டுமொத்த கணக்குகளை நாம் எடுத்துக்கொண்டு பார்க்கின்றபோது, மூன்றாம் மண்டலத்திற்கு— பரம்பிக்குளம்–ஆழியாறினுடைய மூன்றாம் மண்டலத்திற்கு–– பாசனத்திற்குத் தேவைப்படுகின்ற, third zone-க்கு மூன்றாவது wetting அளவிற்குக்கூட நாம் தண்ணீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தினால்தான், அங்கே கொண்டு சேர்க்கின்ற சூழ்நிலை



இருக்கிறது. நான்காவது wetting–க்கு கொடுக்க முடியாத சூழ்நிலை அங்கேயிருக்கின்ற காரணத்தால், உப்பாறு அணைக்குத் தற்போது நீர் வழங்க இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மணக்கடவில் ஆண்டு ஒன்றுக்கு நாம் தர வேண்டியது 7.25 டி.எம்.சி.தான். ஆனால், அதற்கு மேலும் கொடுத்துக் கொண்டிருப்பதாக, கோவை மாவட்டத்திலே பலர் என்னிடம் தெரிவித்தார்கள். அவர்கள் கேட்கிற, 12 டி.எம்.சி.யை அவர்கள் demand செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் அவ்வளவு தரப் போகிறோமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு 7.25 டி.எம்.சி. என்று குறைவாகக் கொடுத்து இருக்கிறீர்களா? அதிகமாகக் கொடுத்து இருக்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7.25 டி.எம்.சி. அளவிற்கு தற்போதைய நிலையில் நாம் குறைவாகத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். தற்போது உள்ள நிலவரப்படி இன்னமும் நாம் மணக்கடவின் மூலமாக, கேரளாவிற்கு 1500 மில்லியன் கனஅடி தண்ணீர் கொடுக்க வேண்டிய சூழ்நிலை தற்போது நிலவுகின்றது. இருந்தாலும், பரம்பிக்குளம்–ஆழியாற்றினுடைய மூன்றாம் மண்டலத்திற்கு நீர் அவசியம் தேவைப்படுவதால், தற்போது கேரளாவிற்கு நாம் நீர் கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1991–1996 வரை இதே அரசு செயல்பட்டு வந்தது. உள்ளாட்சித் தேர்தலை நடத்தவில்லை. அது மட்டுமல்ல தேவையான நிதியும் வழங்கப்படாமல் அந்த உள்ளாட்சி எவ்வளவு சீர்குலைந்தது என்பது தங்களுக்குக்கூட தெரியும். அதற்குப் பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள், 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்று, உள்ளாட்சித் தேர்தலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி வழங்கவில்லை என்பது அவர்களுடைய காலத்தில். அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் மூன்று ஆண்டுக் காலத்திற்கு மின்சாரக் கட்டணத்தைக்கூட கட்டாமல், அன்றையதினம் சென்றுவிட்டார்கள்.

இன்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, வருகின்ற ஏப்ரல்–மே மாதங்களுக்குண்டான நிதியைக்கூட, மூன்று மாதத்திற்கு ஒரு முறை அனுப்பப்பட்டிருந்த நிதியானது, இன்றையதினம் மாதா மாதம் அனுப்புகின்ற நிலையை உருவாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாதத்திற்கும் அடுத்து வரும் ஏப்ரல்–மே மாதங்களுக்குண்டான நிதியைக்கூட இப்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலை, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் நடத்தியது மட்டுமல்லாமல், பல்வேறு பணிகளை, அதாவது 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை நீங்கள் விட்டுச்சென்ற பணிகளும், அதேபோன்று 1996 முதல் 2001 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் 1,41,141 பணிகளும் அந்த 5 ஆண்டுக் காலத்திலே செய்து முடிக்கப்பட்டன. அதேபோல, கழக ஆட்சியில் சமன்பாட்டு நிதி, அங்கு உள்ளாட்சி மன்றம்மூலம் 100 சதவிகித வரி வசூல் செய்யப்பட்டால், மூன்று மடங்கு நிதி அரசுமூலம் வழங்கப்பட்டு, மொத்தத்தில் 4 மடங்கு நிதி அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலவு செய்யப்பட்டது. ஆனால், இப்பொழுது, இந்த ஆட்சியிலே அந்த மூன்று மடங்கு சமன்பாட்டு நிதி ஒன்றேகால் மடங்காகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, கழக ஆட்சியில், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில், கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, யூனிட் ஒன்றிற்கு ரூபாய் 1.60 வசூல் செய்யப்பட்டது; கட்டணம் விதிக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு இந்த ஆட்சியிலே உள்ளாட்சி அமைப்புகளில் யூனிட் ஒன்றிற்கு ரூ. 3.60 விதிக்கப்படுவது, எந்தவிதத்தில் நியாயம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே, உள்ளாட்சித் தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு இந்த ஆட்சியினால், கிட்டத்தட்ட இராஜினாமா செய்கின்ற சூழ்நிலைக்கு உட்பட்டிருக்கின்றார்கள்; ஏற்கெனவே நொந்து கிடக்கின்றார்கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இந்த அறிவிப்பு இருக்கிறது என்பதை...



**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே கூறியது போல, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மூன்று ஆண்டுக் காலத்திற்கு மின்சாரக் கட்டணத்தை, கிராம ஊராட்சிகளுக்குக் கட்டாமல் விட்டுச் சென்றுவிட்டார்கள். அன்றையதினம் அந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு, அவர்கள் அறிவுறுத்தாத காரணத்தினால், அவர்கள் மின் கட்டணம் கட்டாமல் விட்டுச் சென்றதை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் அந்த மின் கட்டண பாக்கியையும் க்ட்டி, மேலும், முடிந்த 31–12–2004 வரையுள்ள மின் கட்டண பாக்கிகளையும் கழித்து, இன்றையதினம் அந்தக் கிராம ஊராட்சிகளுக்கு முறையான வகையிலே அந்த நிதியானது செல்கின்ற வகையிலே அறிவித்ததன்பேரில்தான், சிறிது நேரத்திற்கு முன்பாகச் சொன்னேன், ஏப்ரல்–மே மாதங்களுக்குண்டான நிதிகூட அந்தக் கிராம ஊராட்சிகளுக்கு அனுப்பப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–20

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, மின்சாரத் துறைக்குச் செலுத்தவேண்டிய நிதியை அரசு செலுத்தியதா? அல்லது, கிராமப் பஞ்சாயத்துக்கு வரவேண்டிய அந்தப் பணத்திலிருந்து பிடித்தம் செய்து செலுத்தி இருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** அதற்குப் பதில் சொல்லச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மின்சார நிலுவையை இப்பொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் இன்றைய தினத்திலே செலுத்தி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் அரசு செலுத்துகிறது. திரு. சாமிநாதன், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உள்ளாட்சிகளுக்கு வர வேண்டிய நிதியிலேயிருந்து

இது பிடித்தம் செய்யப்பட்டிருக்கிறதா அல்லது அரசு அதற்குத் தனியாக சலுகை வழங்கி மானியமாக வழங்கி இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியமாகத்தான் வழங்கப்படுகிறது. சில உள்ளாட்சி அமைப்புகளுக்கு அது செல்கிறபோது, அங்கு அரசியல் ஆதிக்கம் இருக்கிற காரணத்தால், சில உள்ளாட்சி அமைப்புகள், ஒரு வேளை நீங்கள் கூறுகிற உள்ளாட்சி அமைப்பு போன்ற அமைப்புகள் இருக்கிற காரணத்தால், மின் கட்டணத்தை அந்த மின் வாரியத்திற்குச் செலுத்தாமல் வேறு செலவுகளுக்குச் செய்துவிடுகிறார்கள். எனவே, மானியமாக அந்த அமைப்புகள் சார்பில்— உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில்—அரசே செலுத்துகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன் பேசுங்கள். (குறுக்கீடு) அவரைப் பேச விடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசாமல் நேரம் முடிந்துவிடும். இன்னும் 5 நிமிடம்தான் இருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சிகளுக்கு வரவேண்டிய நிதியிலிருந்துதான் செலுத்தப்பட்டிருக்கிறது. அரசு மானியமாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல செலுத்தவில்லை என்பதை நான் சொல்லி பொறுப்பேற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், சொல்லட்டும், விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 398.26 கோடி ரூபாய் ஆகும் ஊராட்சி மன்றங்களுக்கு. ஒதுக்கப்பட்ட தொகை, முழுமையாக கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டது. மேலும், கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டிய நிலுவை மின் கட்டணத்திற்காக 198.29 கோடி ரூபாயைச் சிறப்பு நிதியாக, அரசு கூடுதலாக ஒதுக்கீடு செய்து, இந்தத் தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மார்ச் 2005–ல் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது செலுத்தி இருக்கிறது என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன்.



**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதும், அதேபோல அதற்கு முன்பு 1991–லிருந்து 1996 ஆம் ஆண்டுவரை இதே ஆட்சி இருந்தபொழுதும் 5 ஆண்டுக் காலம் நடைபெற்றன. அப்பொழுது தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்காக அரசு மூலம் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டன. அப்பொழுது அந்த 5 ஆண்டுக் காலம் இதே ஆட்சியில் 1,20,700 வீடுகள்தான் கட்டப்பட்டன. ஆனால், தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே 1996–லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை 2 இலட்சத்து 97 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன என்பதை இந்தநேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, ஏழை ஆதிதிராவிட மக்கள் குடும்பத்தினர் இறந்துவிட்டால், ஈமச் சடங்குக்கு உதவித் தொகை, வருவாய்த் துறையின்மூலம் முன்பு வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இப்பொழுதெல்லாம், ஏற்கெனவே நிதிநிலையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகள்மீது அது சுமத்தப்பட்டு, அவர்கள்தான் வழங்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்து, இன்றைக்கு அதன்மூலம் உள்ளாட்சி அமைப்புகள் மீண்டும் சீரழிந்துகொண்டிருக்கின்றன என்பதை இந்தநேரத்தில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோல, கச்சா வீடுகள் முன்பெல்லாம் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலும் சரி, கடந்த 3 ஆண்டுகளில் இந்த ஆட்சியிலும் சரி, இலவசமாக 100–க்கு 100 சதவிகிதம் மானியத்திலே கொடுக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது இந்த நிதி ஆண்டிலே கொள்கைக் குறிப்பிலே மானியத்துடன்கூடிய கடன்கொண்ட அந்தக் கச்சா வீடுகள் திட்டம் அறிவிக்கப்பட்டதனுடைய வருத்தத்திற்குரிய செய்தியாக...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியமாக கொடுக்கின்ற கச்சா வீடுகளும் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மேற்கொண்டு, தமிழ்நாட்டிலே அதிகப்படியான ஏழை மக்கள் இருக்கின்ற காரணத்தினால்—அவர்கள் அனைவருக்குமே வருடா வருடம் 20 ஆயிரம் கச்சா வீடுகள்தான் கட்டிக் கொடுக்கப்படும்—ஆக, ஒரே நேரத்தில் தேவைப்படும்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குக் கோரிக்கையாக பல்வேறுவகைகளிலே இந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதிகள்

கொடுத்ததன் காரணமாக, அம்மா அவர்கள், அவர்களுக்கும் வழி வகுக்கின்ற வகையிலே 500 ரூபாயைச் செலுத்தினால், 2,500 ரூபாய் மானியமாகக் கொடுக்கப்பட்டு 7 ஆயிரம் ரூபாயை அங்கே கடனாகப் பெறுகின்ற வகையிலே, குறைந்த வட்டிக்குக் கடனாகப் பெற்று, அவர்களும் தங்களுடைய தரத்தினை மேன்மைப்படுத்திக்கொள்ளலாம் என்ற அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த திட்டம்தான் அந்தத் திட்டம். மேற்கொண்டு உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டியதற்கும் கூடுதலாக, இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது, கச்சா வீடுகளும் கட்டிக் கொடுக்கிறது. மத்திய அரசிலே முழுமையாக கான்கிரீட் வீடானது கட்டிக் கொடுக்கின்ற வகையிலே, 100 சதவிகிதத்தைக் கட்டி முடித்ததன் காரணமாக, கூடுதலாக 25 சதவிகிதத்தை மத்திய அரசானது இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பாராட்டி 25 சதவிகிதம் கூடுதலாக நிதியையும் ஒதுக்கீடு செய்தது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது, அங்கே கான்கிரீட் வீடுகளும் கட்டிக் கொடுக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–25

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று மக்களுக்கு பணியைக் கூடுதலாகப் போட்டி போட்டிக் கொண்டு செய்வதிலே எங்களுக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. அதற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஏழை மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகளுக்கான மதிப்பீட்டுத் தொகை, வருடா வருடம் கூடுதல் செய்வது இல்லை. இப்போது, பொதுப் பணித் துறையிலும் சரி, அதேபோன்று நெடுஞ்சாலைத் துறையிலும் schedule of rates ஒவ்வொரு வருடமும் கூட்டப்படுகிறது, பொருள்களுடைய விலை ஏற்றத்தின் காரணமாக. ஆகவே, இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் நேரடியாகப் பயனாளிகளாக இருக்கக்கூடிய அந்த வீடுகளைக் கட்டுகின்ற பணிக்கு, அவர்களுக்கும் அந்த மானியத் தொகையைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அரசின் கவனத்திற்குத் தங்கள்மூலம் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி. பேரவைத் தலைவர் அவர்களே, இதைச் சொல்வதற்காக நீங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. முன்பெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள், உங்களுடைய குரலுக்கு, ஏற்போர் 'ஆம்' என்றும்,



மறுப்போர் 'இல்லை' என்கிற குரலையும் கொடுத்துக்கொண்டிருந்தனர். சட்டமன்ற உறுப்பினர்களை, மக்களுக்கு நேரடிப் பணியைச் செய்யக் கூடியவர்களாக்க, இந்தியாவிலேயே முதன் மாநிலமாக, தமிழகத்தில்தான் தொகுதி மேம்பாட்டு நிதியை வழங்கினார்கள். முதன்முதலில் ரூபாய் 25 இலட்சத்தில் தொடங்கப்பட்ட அந்த நிதி, கடைசியில் தலைவர் கலைஞருடைய ஆட்சி மாறுகிற நேரத்தில் ரூ.77 இலட்சமாக உயர்த்தப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டு 5 இலட்சம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கினீர்கள். ஆனால், 'நமது கிராமம்' என்ற திட்டத்திற்கு எங்களுடைய அனுமதி இல்லாமல், இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டால், அந்தத் திட்ட அலுவலர் அவர்களிடத்திலே கேட்டால், 15 இலட்சம் ரூபாய் ஏற்கெனவே நாங்கள் transfer செய்து விட்டோம் என்கிறார்கள். இது எந்தவிதத்தில் நியாயம் என்பதை அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** ஏற்கெனவே வழங்கப்பட்ட நிதியும், இன்றைக்குக் குறைந்திருக்கிறது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, மகளிர் துப்புரவு வளாகம் கட்டப்படுவதிலே எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், இன்றைக்கு வறட்சியின் காரணமாக, குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிற சூழ்நிலையில் அங்கெல்லாம் வலுக் கட்டாயமாக தொகுதி மேம்பாட்டு நிதியிலேயும், அரசினுடைய மானியத்திலேயும் கட்டப்படுகிறது. ஆனால், இன்றைக்கு 80 சதவிகித துப்புரவு வளாகங்கள் இழுத்துப் பூட்டப்பட்டு இருக்கிற சூழ்நிலைதான் அங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அதுபோன்ற திட்டத்தை நீங்கள் தனி ஒரு குடும்பத்திற்குக்கூட...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுகாதார வளாகமானது 80 சதவிகிதம் மூடப்பட்டு இருப்பதாக அவர் சொல்கிறார். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற காலத்திலே, சுகாதாரத்திலே தமிழகமானது 15 சதவிகிதமாக இருந்தது. இன்றையதினம் அதனுடைய நிலைப்பாடுகள் என்ன என்பது மாண்புமிகு உறுப்பினருக்குக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. 54 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே மூடப்பட்டு

இருந்தால், அப்படி உயர்த்தப்பட்டு இருக்குமா? (மேசையைத் தட்டும் ஒலி)

UNICEF நிறுவனம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை இதற்காகப் பாராட்டி இருக்கிறது. மேலும், மற்ற மாநிலங்களில் இருக்கிறவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நான்கு ஆண்டுக் காலத்திலே எப்படி இந்தத் திட்டத்தை, இவ்வளவு பெரிய சுகாதாரத்தை கிராமப்புறங்களிலே வளர்த்தார்கள் என்பதைப் பார்ப்பதற்காக குழுக்கள் வேறு மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டை வந்து பார்வையிட்டுச் செல்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இன்றைக்கு என்னுடைய தொகுதியில்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தமாதிரி வாய்க்கு வந்தமாதிரி பேசக் கூடாது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஒரு நிமிடத்திலே உரையை முடியுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் இன்றைக்குச் சென்றாலும், பொன்னிவாடி ஊராட்சி, எழுகாம்வலதி என்ற ஊரிலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட கழிப்பறை மூடி வைக்கப்பட்டிருக்கிறது, தண்ணீரினுடைய பிரச்சினையின் காரணமாக என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 80 சதவிகித துப்புரவு வளாகங்கள் தண்ணீர் வசதியின்றி மூடப்பட்டிருக்கின்றன என்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



கருத்தை அவர் இங்கு சொல்வது அவர்களுடைய காலமான தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டு, தண்ணீர் வசதி இல்லாத துப்புரவு வளாகங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தப் புதிய திட்டத்தை, மக்களிருடைய சிறப்புப் புதிய திட்டமான இந்தத் துப்புரவு வளாகங்களைக் கட்ட ஆணையிட்டபோதே, முதலில் நீர் ஆதாரத்தை உருவாக்கிவிட்டுத்தான் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில்தான் தற்போது நீர் ஆதாரத்தை உருவாக்கிய பின்புதான் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில், தற்போது நீர் ஆதாரங்களை உருவாக்கிய பின்புதான், கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளக்கோவில் தொகுதியில், அவர் சொல்லிய அந்த ஊரில், இப்போது 40 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அணை கட்டிக் கொண்டிருப்பது அவருக்குத் தெரியுமா? அல்லது 3 கோடி ரூபாய் இப்போது அந்த விவசாயிகளுக்கு நிலத்திற்காகக் கொடுக்கப்பட்டிருப்பது; சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நல்லதங்காள்ஓடை திட்டம், தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே, அண்ணன் துரைமுருகன் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது அறிவிக்கப்பட்டது; செயல்படுத்தப்பட்டது. இப்போது அமைச்சர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார். அதுபோல, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குத் தவறான தகவலைச் சொல்லவில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, 40 கோடி ரூபாய் அளவில் இப்போது அந்தத் திட்டங்கள், அணைகள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த விவசாயிகளுக்காக, நிலங்கள் கொடுத்த விவசாயிகளுக்கு, 3 கோடி ரூபாய் அம்மா அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த விவசாய நிலங்களில் இருந்த மின்சார மோட்டாரை வேறு இடத்திற்குப் பயன்படுத்துவதற்கும்

அனுமதியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தந்திருக்கிறது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், பேச்சை முடியுங்கள், நிறைவு செய்யுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே ஒரு தொகுதிக்கு ஒரு ஊராட்சி மன்றத்தை தேர்ந்தெடுத்து மக்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் ஏற்கெனவே பேசி முடிக்கப்பட்டு விட்டது. திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடு) திரு. பி.கே. சேகர்பாபு.

பிற்பகல் 12–30

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**திரு. இ. புகழேந்தி:** அவர் முடித்துவிடட்டும். அவர் இன்னும் முடிக்கவே இல்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடியுங்கள் என்றால் முடிக்கமாட்டேன் என்கிறாரே! சாமிநாதன், வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடுகள்) வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடுகள்) இத்தனை பேரும் என்ன கோரஸா? சாமிநாதன், ஒரு நிமிடத்தில் வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய உதவிக் குழுக்களுக்கு, தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே சிறப்பான பல உதவிகள் செய்யப்பட்டன மட்டுமல்ல; அவர்களை நேரடியாக, மண்டலம் வாரியாக அழைத்து, கலந்துரையாடல் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் நேரடியாகக் கலந்துகொண்டு, அதிலே பல்வேறு சலுகைகளை மேலும் அறிவித்தார்கள். அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல,... (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு வாசகம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு முடியுங்கள். திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடு) சாமிநாதன், நீங்கள் முடித்துவிட்டீர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா அவர்களின் நேர்கொண்ட பார்வையும், சீர்கொண்ட நன்னோக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) வாய்மையை வலியுறுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா அவர்களின் தடையில்லாமல் அள்ளித்தரும் தாராள வள்ளல் மனம் தாய்மையை உறுதிப்படுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா அவர்களின் எதற்குமே அஞ்சாமை, எவரிடத்தும் கெஞ்சாமை குணம் சிங்கத்தை நினைவுபடுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மாவுக்கு எதிராக எத்தர்கள் சதி செய்ய எத்தனைதான் முயன்றாலும் அவர்களின் சூட்சுமங்களைச் சிதறடித்து, வெற்றியை நிலை நிறுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா அவர்களின் சுடர் முகம் எதிர்கொண்டால், சூரியனே தன் கண்ணைச் சுருக்கிக் கொள்ளும் நிலை பிறக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா அவர்களின் ஆசி பெற்றால் பலவீனமானவர்கள்கூட பலவான்கள் ஆகின்ற சக்தி பிறக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா அவர்களின் பார்வை பட்டால் பாலைவனங்கள்கூட பூப்பூக்கும் சோலைவனங்களாக மணம் பரப்பும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா அவர்களின் அறிவிப்பு எல்லாமே மக்களுக்குப் பலன் தரும் சாதனைத் திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவர்கள் அறிவிப்பு என்றால் அது மக்களுக்கு வேதனையும், சோதனையும் தரும் துன்பக் கூட்டங்கள்.

என்றுமே புதுமை, எதிலும் முதன்மை, இதுவே எங்கள் அம்மா அவர்களின் இயல்பான தன்மை. பள்ளிக்கூடப் பருவத்திலும் படிக்கின்ற

பாடங்களில் முதன்மை. கலையிலும் முதன்மை. அரசியல் நிலையிலும் முதன்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

தன்னுடைய அயராத உழைப்பால், எண்ணற்ற தியாகத்தால், இந்த இயக்கம் அம்மாதான். அம்மாவே இயக்கம் என்ற ஆளுமையிலும் முதன்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று இந்தப் பேரவையிலே அனைத்துக் கேள்விகளுக்கும் சலிப்பின்றி, சரியான பதில் தருவதிலும் முதன்மையோ முதன்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவில் உள்ள 35 மாநில முதலமைச்சர்களிலும் முதன்மை முதல்வராய்த் திகழ்வதிலும் எங்கள் அம்மாவே முதன்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் திருநாட்டிலே முதன்மை நிலைக்குத் தமிழகத்தை முன்னேற்றச் செய்வதிலும் முதன்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னை வாழவைக்கும் மனித நேய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் பணிந்து என் உரையைத் துவக்குகிறேன்.

*பிற்பகல் 12–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நீண்ட நெடுங்காலமாக அவருடைய பகுதியிலே மகளிர் சுகாதார வளாகங்கள் மூடப்பட்டிருப்பதாகக் கூறினார். பொறுமையாக அவர் கேட்க வேண்டுமென்பதற்காக, நான் இதைக் கூறிக்கொள்கிறேன். நீண்ட நெடுங்காலமாக, கிராமத்து மக்கள், குறிப்பாக, பெண்கள் காலைக் கடன்களைக் கழிப்பதற்குக்கூட மாலைவரை காத்திருக்கும் நிலை இருந்தது. இதனால், உடல் நலக் கேடுகூட சமயங்களில் உண்டானது. காலைக் கடன் என்பது அவர்களுக்குப் பெரும் கடன் சுமையாகவே இருந்தது. வெட்ட வெளிகளைக் கழிப்பிடங்களாகப் பயன்படுத்தினார்கள். இந்த நாட்டில் இதற்கு முன்னால் எத்தனையோ தலைவர்கள் வந்து சென்றிருக்கின்றார்கள். யாரும் இதைப்பற்றிச் சிந்தித்ததே இல்லை. பெண்ணினக் காவலராக இருக்கின்ற பெண்ணொளிப் பேரொளி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர்தான், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முழுச் சுகாதாரத் திட்டத்தினை முனைப்போடு செயல்படுத்தியிருக்கின்றார்கள்.



இந்த முழுச் சுகாதாரத் திட்டத்தின் வாயிலாக, 13,064 கழிப்பிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதனால், கிராமப்புற பெண்கள் இன்னல் தீர்ந்து இன்பமுற்று இருக்கின்றார்கள். 15 சதவிகிதமாக இருந்த இந்த முழு சுகாதாரத் திட்டமானது இன்றைக்கு 54 சதவிகிதத்தைக் கடந்து இந்த ஆண்டுக்குள்ளாக 75 சதவிகிதத்தைக் கடக்கும் என்று இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். நிச்சயமாகக் கூறிக்கொள்வேன், எண்ணிய எண்ணியாங்கு செய்து முடிக்கின்ற ஆற்றல் படைத்த எங்கள் அம்மா அவர்கள், 100 சதவிகித முழு சுகாதாரத் திட்டமாக, தமிழகத்தில் நிறைவேற்றிக் காட்டுவார் என்பதை இந்த நேரத்தில் அறுதியிட்டுக் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தூங்குபவர்களை எழுப்பிவிடலாம், ஆனால் தூங்குவதைப்போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது. இந்தச் சுகாதாரத் திட்ட வளாகத்திற்கு அண்மையில் 2004 ஆம் ஆண்டு ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கின்ற – மாண்புமிகு தி.மு.க.வைச் சார்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு கூறிக்கொள்வேன் – ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கின்ற யூனிசெஃப் என்ற நிறுவனம், இந்தத் திட்டத்தை வெகுவாகப் பாராட்டி இந்த அரசாங்கத்திற்குக் கடிதத்தை அனுப்பி இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய அளவிலே ஆண்டுதோறும் மத்திய அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படுகின்ற இந்த முழு சுகாதாரத் திட்டத்திற்குண்டான விருதுகளில், தேர்வு செய்யப்பட்ட 6 மாநிலங்கள் பெற்ற விருதுகளில், 35 சதவிகித விருதுகள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் செயல்படுகின்ற இந்த முழு சுகாதார வளாகத் திட்டத்திற்குத்தான் அளிக்கப்பட்டன என்பதை இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியத் துணைக் கண்ட அளவிலே விருதிற்காக தேர்வு செய்யப்படுகின்ற ஊராட்சி ஒன்றியங்களில், ஒரே ஒரு ஊராட்சி ஒன்றியமாகத் தமிழகத்தில்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற மேல்புரம் என்ற ஊராட்சி ஒன்றியம், தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற ஊராட்சிகளிலே முன்னணி ஊராட்சிகளாகத் திகழ்ந்து கொண்டிருப்பது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் முன்னணி மாநிலமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு சர்க்காரில்தான் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு சிறப்பு விருதுகளைப் பெற்றிருக்கின்ற இந்தத் திட்டத்தை, கண்மூடித்தனமாக, வாய்

புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற வகையிலே மூடப்பட்டிருக்கின்ற திட்டம் என்று கூறிய உறுப்பினர், இந்தப் பதிலைக் கேட்ட பிறகாவது, இனி வருங்காலத்தில் இப்படிப்பட்ட பேச்சுகளைப் பேசாமல் இருந்தால் நல்லது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** Point of order.

**திரு. பி.கே. சேகர்பாபு:** Point of order எல்லாம் நிறைய இருக்கின்றன. நீங்கள் பேசியதற்கெல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்கின்றேன். கடைசியில் Point of order கேட்கலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விருதுகள் எங்கள் தாய் அவர்கள் நிகழ்த்திய சாதனைகளுக்குக் கிடைத்த விருதுகள். புகழ் எங்கள் தாயைத் தேடி தஞ்சமடைகின்றதே தவிர, மற்றவர்களைப் போல புகழைத் தேடி அலைகின்ற தலைவி எங்கள் அம்மா இதயதெய்வம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடித்தளம் இடுவது இந்த உள்ளாட்சித் துறையே. உடலிலுள்ள இரத்தத்தை ஓயாமல் சுத்திகரித்து நாளங்களில் பாய்ந்தோடச் செய்து, ஆரோக்கியத்தையும், சக்தியையும் பாதுகாக்கும் இதயத்தின் இயக்கத்தைப் போன்ற துறை, இந்த உள்ளாட்சித் துறை. தமிழ்நாட்டில் 6 மாநகராட்சிகள், 151 நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் 385, சிறப்பு நிலை ஊராட்சிகள் 562 மற்றும் 12,618 ஊராட்சிகளில் வாழ்கின்ற மக்களின் நல்வாழ்வை ஆதாரமாகக் கொண்ட ஆக்கப் பணிகளை மேற்கொள்ளும் துறை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் தமிழகத்தின் குக்கிராமங்கள் எல்லாம் இன்று ஒளிமயமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்கள்தான் இந்தியாவின் இதயம் என்று அண்ணல் காந்தியடிகள் கூறினார். கடந்தகால ஆட்சியாளர்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற பெயரில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஆண்டுக்கு ஓர் ஊராட்சி என்ற வகையில், ஐந்தாண்டுகளுக்கு ஓர் ஊராட்சியில், கிராமப்புற வளர்ச்சியைச் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே உள்ள 12,618 ஊராட்சிகளிலும் மக்களுடைய தேவைகளை சமச்சீர் முறையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு... (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி, அவர் பேசி முடித்த பிறகு திரு. சாமிநாதனைக் கூப்பிடுகின்றேன். அவர் என்ன பதில் சொல்கிறாரோ, சொல்லட்டும். (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** தொலைநோக்குப் பார்வையோடு இந்தத் திட்டத்தின் பயனைச் சொன்னால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதற்காக எழுந்து குறுக்கிடுவதாக நான் நினைக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி, அனுமதியில்லாமல் பேசக் கூடாது. உட்காருங்கள். அவர் பேசி முடித்தவுடனே நான் திரு. சாமிநாதனைக் கூப்பிடுகின்றேன். விளக்கம் சொல்வதற்குக் கூப்பிடுகின்றேன். (குறுக்கீடு) அமைச்சர்கள் பதில் சொல்கிற நேரத்திலே, அவர் கேட்பதற்குத்தான் அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

பிற்பகல் 12–40

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொலைநோக்குப் பார்வையோடு தீட்டப்பட்ட திட்டத்திற்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 200 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து இந்த வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளார்கள். இந்தத் திட்டமானது, கடந்த ஆண்டு 15–8–2004 அன்று சுதந்திர தின விழாவிலே, இங்கே அருகிலே இருக்கின்ற கோட்டைக் கொத்தளத்திலே கொடியேற்றி வைத்துவிட்டு, அறிவிக்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன்மூலம், சுதந்திரமடைந்த நாளில் மக்கள் எப்படி மகிழ்ச்சியடைகிறார்களோ, அதே அளவு மகிழ்ச்சியை இன்றைக்கு இந்த கிராம மக்கள் தற்போது இந்தத் திட்டங்களால் அடைந்துள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்தில் நான் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராம வளர்ச்சிக்குப் பாடுபடும் கிராம ஊராட்சி அடித்தட்டுப் பணியாளர்களுக்கு 62,831 நபர்களுக்கு 16.24 கோடி ரூபாய் செலவில் ஊதிய உயர்வு அளித்துள்ளார்கள். உண்மை, உழைப்பு, நேர்மை எங்கிருந்தாலும் அதைத் தேடிச் சென்று உதவி செய்வதில், அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எந்த ஒரு திட்டத்தையும் குறிப்பிட்ட காலத்திற்குள் மக்கள் பயனடைகின்ற வகையில், திட்டமிட்டு முடிப்பதில், புரட்சித் தலைவி

அம்மா அவர்களுக்கு ஈடு இணை சொல்ல இந்தியாவில் எந்த முதல்வரும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தில் வாழும் மக்களைப் போன்று கிராம மக்களுக்கும் மின் வசதி செய்து கொடுத்ததில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நிகர், மாண்புமிகு அம்மா அவர்கள்தான். தமிழகத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும், அது பெரிய கிராமமாக இருந்தாலும் சரி, ஐந்து முதல் பத்து வீடுகள் கொண்ட சிறிய கிராமமாக இருந்தாலும் சரி, அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதியை முழுமையாகச் செய்து கொடுத்திருக்கின்ற அரசு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டு நாட்களுக்கு முன்புகூட, நம்முடைய பாரதப் பிரதமர் மன் மோகன் சிங் பல்வேறு மாநில முதல்வர்களுடன் இப்பிரச்சினை குறித்து விஞ்ஞான் பவனில் நடந்த Video Conferencing முறையில் பேசியபோது, இந்தியாவிலுள்ள 74 ஆயிரம் கிராமங்களில் மின்வசதி கிடையாது என்ற ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இதை ஒப்பிடும்போது தமிழகத்தில் அப்படிப்பட்ட நிலை இல்லை. கிராமங்களில் தொடர்ந்து மின்வசதி ஏற்படுத்திக் கொடுத்து அந்த மக்கள் நலமுடன் வாழ வழிவகை செய்திருப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

. நல்லாட்சி என்பது தனது குடிமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, செலவினங்களைப்பற்றிக் கவலைப்படாமல் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கின்ற ஆட்சிக்குப் பெயர்தான் அந்த நல்லாட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மக்களின் தேவைகளை அறிந்து, சீர்நோக்கோடு சிந்தித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் செயலாற்றி வருகையில், இந்த நல்ல திட்டங்களுக்கு இடையூறு ஏற்படுத்துகின்ற வண்ணம்–உறுப்பினர் அவர்கள் பேசும்போது கூட, மின் பாக்கி இருப்பதாகக் கூறினார். அவருக்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் இதற்கான சரியான விளக்கத்தைக் கூறுவது நல்லது என்று கருதுகிறேன். ஏற்கெனவே பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. சாமிநாதன் அவர்கள், இந்த மின் கட்டண பாக்கியைப்பற்றிப் பேசுகின்றபோது, இன்னொரு தி.மு.க. சட்டமன்ற



உறுப்பினர் திரு. வைதியலிங்கம் அவர்கள் குறுக்கிட்டு, ஊராட்சிகள் செலுத்த வேண்டிய மின் கட்டண பாக்கிக்கு அரசு வழங்கிய நிதி, அந்த ஊராட்சிகளுக்குச் செலுத்த வேண்டிய வழக்கமான நிதியிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டதா அல்லது அரசால் தனியாக வழங்கப்பட்டதா என்ற வினாவினை இங்கே எழுப்பினார். கிராம ஊராட்சிகளிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டண பாக்கி *198.29* கோடி ரூபாயாக இருந்தது. இதனை முழுமையாகச் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த அரசு சாதாரணமாக ஆண்டு ஒன்றுக்கு வழங்கக்கூடிய *398.25* கோடி ரூபாய் நிதிப் பங்கீட்டைவிட கூடுதலான ஒரு பங்கீட்டை, அதாவது *198.29* கோடி ரூபாயை *2004–2005*–ல் வழங்கி, இந்த நிலுவையைச் செலுத்த வழிவகை செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தத் தொகை கிராம ஊராட்சிகளுக்குச் சாதாரணமாக வழங்கக்கூடிய நிதிப் பங்கீட்டிலிருந்து எடுத்து செலுத்தப்படவில்லை; கூடுதலான ஓதுக்கீடு வழங்கப்பட்டு, இந்த நிலுவைத் தொகை சரி செய்யப்பட்டுள்ளது. அதாவது, *2004–2005*–ல் *398.25* கோடி ரூபாய் + *198.29* கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–45*

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification, முதலமைச்சரிடம் ஒரு clarification.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இப்படி ஒளிமயமாக இருக்க வேண்டிய கிராமங்களை, இருளில் தள்ளிவிட்டுச் சென்ற இந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலிருந்த கிராமங்களில் முன்பெல்லாம் மங்கி எரிந்து கொண்டிருந்த குமிழ் விளக்குகளைக் குழல் விளக்குகளாகவும், நவீன சோடியம் ஆவி விளக்குகளாகவும் மாற்றித் தந்திருக்கிறார்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிராம வாழ்வில் வீசும் வெளிச்சம்கூட பிரகாசமாக இருக்க வேண்டும் என்கின்ற அம்மா அவர்களின் சிந்தனை, கிராம மக்களுக்கு மங்காத ஒளிவிளக்காக இன்று வீசிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சென்னை மாவட்டம் சம்பந்தப்பட்ட குடிநீர்ப் பிரச்சினை என்பதால் அம்மா அவர்கள் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் போர்க்கால அடிப்படையில்

எப்படி எல்லாம் தீர்த்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எனக்கு சற்று நேரத்தைக் கூடுதலாக ஒதுக்கித் தரவேண்டும் என்ற என் வேண்டுகோளை வைத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்கள், 2001 ஆம் ஆண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும்கட்சியின் சார்பாக நீங்கள் ஒருவர்தான் பேசுகிறீர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இதய தெய்வம் அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தமிழகத்தில் கடுமையான நிதி நெருக்கடி. கடந்த ஆட்சியாளர்களின் கையாலாகாத்தனத்தால் நிதிக்கு மட்டுமல்ல, மக்கள் குடிக்கின்ற நீருக்கும் கடுமையான நெருக்கடி. ஒட்டுமொத்தமாக தங்கள் வாழ்க்கையின் நலன்கள் எல்லாம் துறந்து குடிநீருக்காக, படிக்கின்ற பிள்ளை முதல் வயது முதிர்ந்தவர் வரை கையில் குடங்களோடு இரவு, பகல் பாராமல் அலைந்து கொண்டிருந்த நேரம். இதுவரை இச் சென்னை மாநகரம் இப்படி ஒரு கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தைப் பார்த்ததில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் போர்க்கால நடவடிக்கையினால் நீராதாரங்கள் எந்தெந்தப் பகுதிகளில் இருந்தனவோ அந்தந்தப் பகுதிகளிலிருந்தெல்லாம் லாரிகள் மற்றும் இரயில் வேகன்கள் மூலம் குடிதண்ணீர் கொண்டுவந்து வாடிக் கிடந்த மக்களின் நலம் நாடி, நாளொன்றுக்கு 75 இலட்சம் ரூபாய் குடிநீருக்கு மட்டுமே செலவு செய்யப்பட்டு, குடிநீர்ப் பிரச்சினை சமாளிக்கப்பட்டது அன்றையதினம். ஆகின்ற செலவைப் பற்றிக் கவலைப்படாமல் மக்கள் தாகத்தைப் பற்றிக் கவலைப்பட்ட ஒரே தலைவி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க அம்மா அவர்கள் எண்ணினார்கள். அதனுடைய விளைவுதான் புதிய வீராணம் திட்டம், புதிய வீராண விரிவாக்கத் திட்டம், கடல் நீரைக் குடிநீர் ஆக்குகின்ற திட்டம், மழை நீர் சேகரிப்புத் திட்டம். இந்தப் புதிய வீராணம் திட்டமானது ரூபாய் 720 கோடி செலவில் தீட்டப்பட்டு 16 மாதங்களிலே முடிக்கப்பட்டு மாநகர மக்களுக்கு இந்தத் திட்டத்தின் பயன் சென்றடைந்தது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்புகூட, 16–4–2002 அன்று இதே மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. வினாயகமூர்த்தி அவர்கள் 18 மாதங்களிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால்



இந்த அரசாங்கத்தினுடைய மகத்தான சாதனையாக அது இருக்கும் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன் என்று பேசினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறுகின்றபோது 18 மாதம் என்றார்கள். அந்தத் திட்டத்தை நிறைவு செய்தது 16 மாதங்கள்தான் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தைத் தடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட அனைத்துத் தடைக் கற்களையும் படிக் கற்களாக மாற்றி, சரித்திர சாதனையில் நீடித்த, நிலைத்த புகழுக்குச் சொந்தக்காரராகி இருப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

சென்னை மாநகருக்குத் தேவைப்படுகின்ற ஒரு நாள் குடிநீர் அளவான 840 மில்லியன் லிட்டர் பெறுவதற்கு, இதன் தொடர்ச்சியாக புதிய வீராண விரிவாக்கத் திட்டத்தை ரூபாய் 300 கோடி செலவில் கொள்ளிடம் பகுதியிலிருந்து கொண்டு வருவதற்கு அம்மா அவர்கள் திட்டமிட்டார்கள். இதற்கும் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பிலே மாநிலத்தின் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மக்களின் தேவைக்காக எடுத்துச் செல்லப்படும் குடிநீரைத் தடுக்கக் கூடாது என்று தீர்ப்பு வழங்கினார்கள். நீதி தேவதை என்றுமே எங்கள் அம்மா அவர்களின் திசைநோக்கி இருக்கும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கடல் நீரைக் குடிநீராக்குகின்ற திட்டத்திற்கு, 2003 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கோரப்பட்டது. ஒருசில கெடுமதியாளர்கள் வழக்கம்போல் அதற்கும் தடையாணை பெற்றார்கள். உண்மை நிலையினை எடுத்துச்சொல்லி, வழக்கு முடிவுற்று, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மிக விரைவில் இந்தப் பணி தொடங்கப்படவுள்ளது. மத்திய அரசு கடந்த நிதிநிலை அறிக்கையில், கடல் நீரைக் குடிநீராக்குவதற்கு 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதாக அறிவித்தது. ஒதுக்கியதோ வெறும் 5 கோடி ரூபாய் மட்டும்தான். இந்த நேரத்தில் நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தக் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை மத்திய அரசு, தான் கொண்டு வந்ததைப்போல ஒரு மாயத் தோற்றத்தை மக்களிடம் உருவாக்க நினைக்கின்றது. ஆனால், இந்தக் கடல்நீரைக் குடிநீராக்குகின்ற திட்டம் என்பது, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே எங்கள் அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்திட்ட

திட்டம்தான், இந்தக் கடல்நீரைக் குடிநீராக்குகின்ற திட்டம். *(மேசையைத் தட்டும் ஒலி) 1993 ஆம்...(குறுக்கீடு)* பேசவேண்டுமென்றால் எழுந்து நின்று பேசலாங்க, மாண்புமிகு பொன்முடி அவர்களே, *(குறுக்கீடு)* 1993 ஆம் ஆண்டு ஒரு நாளைக்கு....*(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், திரு. வைதியலிங்கம் உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** 1993 ஆம் ஆண்டு, ஒரு நாளைக்கு 38,00,000 லிட்டர் குடிதண்ணீர் கிடைக்கின்ற வகையிலே, ரூபாய் 55,11,00,000 செலவில் இராமநாதபுரம் மாவட்டம், நரிப்பையூரில் இந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 12 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி வைத்தார்கள் என்பதை நான் இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* பின்பு ஆட்சிக்கு வந்தவர்களால், இந்தத் திட்டம் சரியாகப் பராமரிக்கப்படாததால், சீர்குலைந்திருந்தது. மீண்டும் அதைச் செப்பனிட்டு, கடந்த மே மாதம் 2004 ஆம் ஆண்டிலிருந்து அந்தப் பகுதி மக்களுக்கு தடையில்லாமல், கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்மூலம் ஒரு நாளைக்கு 38,00,000 லிட்டர் குடிதண்ணீர் இன்றைக்கு வழங்கப்பட்டு வருகின்றது என்பதை இங்கே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தடைகள் பல உண்டு என்றால், அதைத் தகர்த்தெறியும் தோள் வலிமை எங்கள் அம்மா அவர்களிடம் உண்டு என்பது, இந்தத் திட்டம் வெற்றியுடன் நிரூபிக்கப்பட்டதிலிருந்து தெரியவருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

1996 ஆம் ஆண்டு தன்னுடைய மகன் மேயர் ஆகவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, வராத கிருஷ்ணா நதிநீருக்கு விழா எடுத்தார்கள் அன்று. அதன் பிறகாவது தங்களது ஆட்சிக் காலத்தில் இந்தக் கிருஷ்ணா நதிநீர் சென்னைக்குக் கிடைப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அந்த ஆட்சியாளர்கள் எடுத்தார்களா என்றால் எடுக்கவேயில்லை. இந்த மாநகர மக்களுக்குத் தேவைப்படுகின்ற நீரை, கடந்த 1–10–2004 அன்று ஆந்திரத்தினுடைய முதலமைச்சரோடு பேசி, இந்த மக்களினுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக, 28–11–2004–ல் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிருஷ்ணா நதித் தண்ணீரை இந்த மாநகரத்திற்குக் கொண்டுவந்தார்கள் என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு தெற்கு ஆசியாவின் நுழைவு வாயிலாக *(குறுக்கீடு)* இன்றைக்கு தெற்கு ஆசியாவின் நுழைவு வாயிலாக...*(குறுக்கீடு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடட்டும், முடித்து விடட்டும். முடித்தவுடனே கூப்பிடுகிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** முன்னேறியிருக்கின்ற சென்னை மாநகரம்... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்த உடனே கூப்பிடுகிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பில் இருந்து குடிநீர்ப் பிரச்சினைக்கு இத்தனை நடவடிக்கை எடுத்திருக்காவிட்டால், சென்னை மாநகரமே இப்பொழுது வெறிச்சோடிப்போய் இருக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்காவது திட்டம்தான் மழைநீர் சேகரிப்புத் திட்டம். மழைநீர் சேகரிப்புத் திட்டம் என்பது அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த ஓர் அற்புதமான திட்டம். இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது, இது ஏதோ சாதாரண திட்டம் என்பதுபோல் அனைவரும் எண்ணினார்கள். ஆனால், இதனை முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்பதை உணர்த்துவதற்காகவே, அம்மா அவர்கள் முதலிலேயே, தன்னுடைய வீட்டிலேயே இந்த மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பை ஏற்படுத்தினார்கள். ஊருக்கு மட்டும் உபதேசம் செய்கின்றவர்கள் அல்லர் எங்கள் அம்மா. சொன்னதைச் செய்து காட்டுபவர். திட்டத்தின் நன்மைகள், அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மழைநீர் பல்வேறு வழிகளில் சேமிக்கப்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் இன்று உயர்ந்துள்ளது. இந்தத் திட்டத்தால் நீரிலுள்ள உப்புத் தன்மை நன்னீராக மாறியுள்ளது. இந்த ஒரு திட்டத்திற்குக் கிடைத்த வரவேற்பைப்போல், இந்திய துணைக் கண்டத்திலேயே செயல்படுத்தப்பட்ட எந்த ஒரு திட்டத்திற்கும் உலகளாவிய வரவேற்பு கிடைத்திருக்கிறதா என்றால், இல்லவே இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தத் திட்டத்தை மேதகு இந்திய நாட்டினுடைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். மாநிலங்கள் அவையில் மத்திய நீர்வளத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சரன் சேத்தி பாராட்டியுள்ளார். புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் பாராட்டியுள்ளார்கள். மத்திய நீர்வள வாரியத்தின் மண்டல இயக்குநர் திரு. சோபாநாத் அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். கேரள

மாநில அரசின் நீர்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. டி.எம். ஜேக்கப் அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். நெதர்லாந்து நாட்டைச் சார்ந்த உணவு ஆராய்ச்சித் துறை மூத்த விஞ்ஞானி டாக்டர் ஜி. வெர்பெர்க் அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். தேசிய மாணவர் படைத் துணைத் தலைவர் திரு. வி.பி. சிங் அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். கல்பாக்கம் அணுமின் சக்தி நிலைய இயக்குநர் திரு. பி.எஸ். இராஜேந்திரன் அவர்கள் பாராட்டியிருக்கின்றனர். அமெரிக்காவின் பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தின் 700 மாணவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி எண்ணற்ற நெஞ்சங்கள் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைப் பாராட்டியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினால், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்புகூட பெய்த மழையின்போது ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீணாகவில்லை. எந்தவித குடியிருப்புகளும் அந்த மழையின் காரணமாக மூழ்கவில்லை, பாதிக்கப்படவில்லை என்பதை இங்கே நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். உலகமே போற்றும் இந்த உன்னதமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை இந்த நாட்டிற்குத் தந்து, மக்கள் தாகத்தை மாத்திரமல்லாமல், எங்களுடைய பூமித் தாயின் தாகத்தையும் சேர்த்தே தீர்த்த ஒரே தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏதோ 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையில்தான் மக்கள் நலப் பணிகள் நடைபெற்றதாக எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய ஆட்சியினுடைய திறமைக்கு ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளை இந்த நேரத்திலே நான் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அன்றையதினம், சென்னை மாவட்டத்தை நிர்வாகம் செய்து கொண்டிருந்த மேயர் அவர்கள், 2001 ஆம் ஆண்டு அவர் மேயர் பொறுப்பிலேயிருந்துவிட்டுச் சென்றபோது, சென்னை மாநகராட்சிக்கு 250 கோடி ரூபாயைக் கடன் சுமையாகத் தந்துவிட்டுச் சென்றார். இன்றைக்கு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்படி, அந்த 250 கோடி ரூபாயிலே 164 கோடி ரூபாயைத் திருப்பிச் செலுத்தியிருக்கின்ற அரசுதான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மாநகராட்சியினுடைய கடன் தொகை வெறும் 86 கோடி ரூபாய்தான். (குறுக்கீடுகள்) இது ஆதாரத்தோடு கூறப்படுவது. வெறும் 86 கோடி ரூபாய்தான். மேலும் ஒன்றைச் சொல்ல



வேண்டுமென்றால், 1991 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை மேயராக இருந்தவர் காலத்திலே போடப்பட்ட சென்னை மாநகராட்சியின் சார்பிலே செலவிடப்பட்ட ஒட்டுமொத்த மூலதனத் தொகையினுடைய மதிப்பு 534 கோடி ரூபாய். ஐந்து ஆண்டுகளில் போடப்பட்ட திட்டத்தின் ஒட்டுமொத்த மதிப்பு 534 கோடி. இன்றைக்கு 3 ½ ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி போடப்பட்டிருக்கின்ற திட்டங்கள், செயல்படுத்தப்பட்டிருக்கின்ற திட்டங்களின் ஒட்டுமொத்த மதிப்பு 548.83 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே இருக்கின்ற வித்தியாசம் மாத்திரம் 14 கோடியே 83 இலட்சம் ரூபாய் என்பதை இந்த அவையிலே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

மேலும் இன்னும் ஓராண்டுக் காலம், அந்த ஐந்து ஆண்டுகள் நிறைவு செய்வதற்கு பாக்கியிருக்கின்றது. இது 100 கோடியாகக்கூட மக்களுக்குத் தேவையென்றால் நலப் பணிகளை ஆற்றுவதற்கு அள்ளித் தரும் வள்ளலாக எங்கள் அம்மா அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளைப் பற்றி விரிவாக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். அவருக்கு நான் செய்து முடித்திருக்கின்ற பணிகளைச் சொல்ல வேண்டுமென்றால் காலமும், நேரமும் போதாது. இன்றைக்கு ஆரம்பித்து நாளை இரவு வரையில்கூட ஆற்றியிருக்கின்ற அரும் பணிகளைச் சொல்லலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்பதற்குத் தயார் என்றால், நாங்கள் சொல்வதற்கும் தயார். (குறுக்கீடுகள்) இந்தச் சென்னை மாநகரில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் சொல்ல முடியும் என்று சொல்கிறார். அதில் ஒன்றுமில்லை.

பிற்பகல் 1–00

**திரு. பி.கே. சேகர்பாபு:** டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்-- இதோ அருகிலே இருக்கின்ற மே தினப் பூங்கா, 1911 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பூங்கா, அந்தப் பூங்கா. அதில் பராமரிப்புப் பணிகள் 1966 ஆம் ஆண்டுதான் நடைபெற்றிருக்கின்றன. இன்றைக்கு எடுத்துக்கொண்டால், இடையிலே வந்துசென்றவர்கூட கவனிக்காத நிலையில், கிட்டத்தட்ட 39 ஆண்டுக்காலம் அந்தப் பூங்காவில் எந்தவிதமான பணிகளும் நடைபெறவில்லை. இன்றைக்கு நீங்கள் விட்டுச்சென்ற பணிகளைக்கூட, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—30 இலட்சம் ரூபாயிலே அந்தப் பூங்காவையும் தரம் உயர்த்துவதற்கு ஆணையிட்டு இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விழா என்றால் உங்களுக்கு வள்ளுவர் கோட்டம், ஆர்ப்பாட்டம் என்றால் உங்களுக்கு வள்ளுவர் கோட்டம், உண்ணாவிரதம் என்றால் உங்களுக்கு வள்ளுவர் கோட்டம். ஆனால், அந்த வள்ளுவர் கோட்டத்தின் முகப்பிலே இருக்கின்ற அந்தப் பூங்காவைக்கூட பராமரிப்பதற்கு உங்களுக்கு மனம் இல்லை. காய்ந்து சருகாகி இருந்த அந்தப் பூங்காக்களுக்கு 25 இலட்சம் ரூபாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி இந்தத் தமிழகத்தின் நிதிநிலையைச் சருகாக்கிவிட்டுச் சென்றீர்களோ, அதேபோல் சருகாகி இருந்த அந்தப் பூங்காவை, இன்றைக்கு வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குகின்ற பூங்காவாக மாற்றிய பெருமை, (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். இன்றைக்கு... (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, செய்ததைத்தானே சொல்லமுடியும்; வேறு எதைச் சொல்லமுடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்தத் திட்டமாக இருந்தாலும், அது நல்ல திட்டமாக இருந்தால், அதை விட்டுவிடமாட்டார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை உங்கள் முன்னால் சொல்லிவிட்டு என் உரையின் நிறைவுப் பகுதிக்குச் சென்றுவிடுகிறேன்.

இங்கே பேசிய எதிர்க் கட்சி உறுப்பினர்கள், கடந்த காலங்களிலே அவர்கள் கொண்டுவந்த நல்ல திட்டங்களை, அம்மா அவர்கள் விட்டுவிட்டதாகக் கூறினார்கள். அதற்காக உதாரணப்படுத்தி ஒன்றைக் கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்னை மாநகராட்சியினுடைய தீர்மானத்தின் அடிப்படையில், 1997 ஆம் ஆண்டு மழலையர் பள்ளிகள் தொடங்கப்பட்டன. 102 ஆசிரியர்கள், 102 ஆயாக்கள், 30 அலுவலக உதவியாளர்களுடன் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டத்திற்கு, அவர்கள் அதன்பிறகு ஆட்சியிலே இருந்த அந்த 3 ஆண்டுக் காலத்திற்கு, அதற்கு அரசாணைகூட பெற மனம் இல்லாதவர்கள்தான், இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்த்து குறை சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் நல்ல திட்டம் என்பதால், கடந்த ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தப் பணியாளர்களுக்கு ஓர் உத்தரவாதத்தினை அளித்து தொகுப்பூதியத் திட்டத்திலே அவர்களுக்கு சம்பளத்தையும் கொடுத்து, அந்த மழலையர் பள்ளித் திட்டத்தைத்



தொடர்ந்திடச் செய்தவர்தான், நல்ல மனம் கொண்ட எங்கள் அம்மா டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் கொண்டுவந்த நல்ல திட்டத்தைச் செயல்படுத்திக் கூறுகின்றபோது, அம்மா அவர்கள் கொண்டுவந்த நல்ல திட்டத்தை, நீங்கள் செயல்படாமல் வைத்ததையும் நான் இந்த அவையிலே கூறினால்தான் அது பொருத்தமாக இருக்கும். 1993 ஆம் ஆண்டு சென்னை காலரா மருத்துவமனை என்று அழைப்பார்கள், தண்டையார்பேட்டையிலே உள்ளது. அதிலே +2 வகுப்பில் தேர்ச்சியுற்றவர்களுக்கு, மருத்துவ ஆய்வகப் படிப்பு என்று 2 ஆண்டுகளுக்கு ஒரு படிப்பு; 10 ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு, ஓர் ஆண்டு மருத்துவ உதவிச் செவிலியர் படிப்பு என்று ஒன்றை ஏற்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தால் ஆண்டு ஒன்றுக்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற 100 பெண்கள் பயனடைந்து கொண்டிருந்தார்கள். இந்தத் திட்டம், அம்மா கொண்டு வந்த திட்டம் என்பதால், 1998 ஆம் ஆண்டு, போதிய ஆசிரியர்கள் இல்லை என்று ஒரு போலிக் கணக்கைக் காட்டி, அந்தத் திட்டத்தை இரத்து செய்துவிட்டார்கள். மீண்டும் இந்த நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கவனத்திற்குக் கொண்டுசென்றவுடன், கடந்த ஆண்டு இந்தத் திட்டம் மறுபடியும் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் வாயிலாக 80 பேர், இன்றைக்கு இரண்டு வருட, ஒரு வருட மருத்துவப் படிப்பைப் படித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தால் பயன் பெறுகிறவர்கள் மிட்டா மிராசுகள் அல்ல. சென்னை மாநகராட்சிப் பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற பிள்ளைகளுக்கு, இந்தத் திட்டத்தில் 80 சதவிகிதம் ஒதுக்கீடு; மாநகராட்சிப் பள்ளிகளிலே, மாநகராட்சியிலே பணி செய்கின்றவர்களுடைய பிள்ளைகளுக்கு 20 சதவிகிதம் இதில் பங்களிப்பு. அப்படி என்றால் வறுமைக்கோட்டிற்குக் கீழே வசிக்கின்ற, மக்கள் பயன்பெறுகின்ற ஓர் உன்னதமான திட்டமாக இருந்தாலும், கெடுமதி கொண்டவர்கள் அந்தத் திட்டத்தினை ஒதுக்கித் தள்ளியதை, இந்த அவையிலே நான் குறிப்பிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்த அளவில், எண்ணிய எண்ணியாங்கு செய்து முடிப்பதில் அவருக்கு நிகர் அவரே என்பதற்குப்

பற்பல உதாரணங்கள் உண்டு. இந்தச் சென்னை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், அரசியல் தேர்தல் என்று வந்தாலே, ஒரு சில தலைவர்களுக்குப் பதுங்கி ஒதுங்கிக்கொள்ளும் இடமாக கடந்த காலங்களிலே காட்சியளித்துக் கொண்டிருந்தது. இன்றையதினம் அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற அதிரடி துரித நடவடிக்கைகள்ால், மாறி வரும் சென்னையின் மக்கள் நிலையைப் புரிந்துகொண்டு இனி வருகின்ற தேர்தலில் வேறு மாவட்டங்களுக்குச் சென்று பதுங்கலாம் என்றுகூட சில தலைவர்கள் யோசனை செய்துகொண்டிருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழகத்தையும், இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்மை மாநிலமாக ஆக்குகின்ற முயற்சியில், கிராமங்களில் இருக்கின்ற உட்புற சாலைகளைக்கூட பிரதான சாலைகளோடு இணைக்கின்ற, கிராமத்தையே நகரத்தை நோக்கி வரச் செய்திருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிறப்பினால் (மேசையைத் தட்டும் ஒலி) இனி தமிழகத்திலே நீங்கள் நின்று ஜெயித்து வருவதற்கு எந்தச் சட்டமன்றத் தொகுதியும் இல்லை என்பதை நான் இங்கே அறுதியிட்டு உறுதியாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எட்டிப் பாய்ந்த குருட்டுப் பூனை விட்டத்தில் முட்டி மோதியதைப் போல'—'எட்டிப் பாய்ந்த குருட்டுப் பூனை விட்டத்தில் முட்டி மோதியதைப் போல'— அம்மா அவர்களின் புகழுக்குக் களங்கம் கற்பிக்க முயல்பவர்கள், குப்புற விழுந்து மண்ணைக் கவ்வுவது நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி) தீங்கு செய்ய முயலும் தீய சக்திகள், அந்தத் தீயிலேயே வெந்து பொசுங்குவது சத்தியம். (மேசையைத் தட்டும் ஒலி) பார்வைக்குத் தென்படாமல் பாறைக்குள் வாழும் தேரைக்கும் உணவளிக்கும் தெய்வத்தைப் போல அம்மா அவர்கள் மக்களுக்காகச் செய்து கொண்டிருக்கும் தர்மங்கள் நிச்சயம் அவர்களைக் காக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) பயிர் வாடிய போதெல்லாம் மனம் வாடிய வள்ளலாரைப் போல, மனம் வாடிய ஏழைகளின் நலம் நாடிய வள்ளல் அல்லவா எங்கள் அம்மா : (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 58 ஆண்டுக் கால சுதந்திர இந்தியாவில் எந்த மாநில முதல்வரும் செய்யாத சாதனைகள், பொருள் இல்லாத ஏழைகளின் இன்னுயிர் காத்திட்ட இதயம் காப்போம் திட்டம். இந்தத் திட்டத்தால் பலன் பெற்ற இதயங்கள் எத்தனை, எத்தனை? (மேசையைத் தட்டும் ஒலி) இணைந்த இதயங்களுக்கு சீருடன் தங்கத் தாலி தந்த இலவசத் திருமணத் திட்டம்.



இதனால் மலர்ந்த ஜோடிகள் எத்தனை, எத்தனை? (மேசையைத் தட்டும் ஒலி) அனாதையான குழந்தைகளுக்கு அடைக்கலம் தந்த தொட்டில் குழந்தை திட்டம். வாழ்வு பெற்ற மழலைகள் எத்தனை, எத்தனை? (மேசையைத் தட்டும் ஒலி) பத்தாம் வகுப்பு வரை பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள். பயன் பெறும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை எத்தனை, எத்தனை? (மேசையைத் தட்டும் ஒலி) ஏக்கத்தை அணிந்திருந்த ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலை எனும் புத்தாடை புனைந்ததால் மகிழ்ந்த முகங்கள் எத்தனை, எத்தனை? (மேசையைத் தட்டும் ஒலி) உழவை நம்பி உழைக்கும் விவசாயிகளுக்கெல்லாம் ஊதிய உயர்வு, பயிர்க் கடன் மற்றும் நிவாரணத் தொகைகள். முகம் மலர்ந்த உழவர்கள் எத்தனை, எத்தனை? (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிதிராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியருக்காக இலவச சைக்கிள் திட்டம். பயன் அடைந்த மாணவியர்கள் எத்தனை, எத்தனை? (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரக் குடிநீர்த் தேவையைத் தீர்க்க நிரந்தரத் தீர்வாக புதிய வீராணம் திட்டம். தாகம் தணிந்த இல்லங்களும், உள்ளங்களும் எத்தனை, எத்தனை? (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லாவற்றிற்கும் மேலாக, சூறையாடிய சுனாமி அழிவிலிருந்து போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணி நிவாரணங்கள். பயன் அடைந்த மீனவ மக்கள் எத்தனை, எத்தனை? (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை என்ற சொல்லை இதுவரை என் தாய் சொன்னதில்லை. அள்ளித் தருவதில் அம்மா அவர்களுக்கு வானமே எல்லை. நெருப்பாற்றில் நீந்திக் கரையேறி, எரிமலைகளைப் பந்தாடிய வெற்றி வீராங்கனை எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தச் சாம்பலில் இருந்தும் உயிர்த்தெழும், பீனிக்ஸ் பறவை எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அக்கினிச் சிறகுகளுக்கு அனல் காட்டும் வீணர்களைப் பொசுக்கிப் பொடிப் பொடியாக்குபவர் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காகத்தான், மக்களைக் காக்கத்தான் இனி இந்தத் தமிழகத்தில் என்றும் எங்கள் தர்மத் தாயின் ஆட்சி தொடரும் என்று அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா எடுக்கின்ற நல்ல திட்டங்களுக்கு இங்கே இருக்கின்ற எதிர்க் கட்சியினர் ஒத்துழைப்பை நல்காவிட்டாலும், சாதகமாக இல்லாவிட்டாலும், பாதகமாக இருக்கின்ற கெட்ட குணத்தை ஆண்டவன் அவர்களுக்குத் தருவதைத் தவிர்க்க வேண்டுமென்று கூறி, என் உரையை நிறைவு செய்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*பிற்பகல் 1–10*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தவறான செய்தி ஒன்று அவையிலே பதிவாகிவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நரிப்பையூர் திட்டத்தை இவர்கள்தான் தொடக்கி வைத்தார்கள் என்று சொன்னார். அது கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தொடக்கி வைக்கப்பட்டது. நானும் அந்த விழாவிற்குப் போயிருந்தேன். நாங்கள்தான் குடிநீர் வழங்கியது. நாங்கள்தான் அந்த விழாவிற்குச் சென்று குடிநீர் வழங்கினோம். அப்போது திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர், அவரும் வந்து கலந்துகொண்டார்.

இரண்டாவது பிரச்சினை, நாங்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பேற்றுக்கொள்கின்றேன். அப்பொழுது அம்மா அவர்களுடைய மேலான அமைச்சரவையில் நான் மீன் வளத் துறை அமைச்சர். நரிப்பையூரிலே அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்டு, தொடங்கப்பட்டது.

**திரு. துரைமுருகன்:** நானும் அதுதான் சொன்னேன். Right தான். ஆனால், தொடங்கப்பட்டது அவர்களால்; ஆனால், குடிநீர் வழங்கியது நாங்கள். அது போகட்டும். (சிரிப்பு) வழங்கியது என்று சொன்னார்கள். தொடங்கி (குறுக்கீடு) நான் ஒன்றும் உங்களைக் குறை சொல்லவில்லை. தொடங்கி வைத்தீர்கள் என்று சொன்னேன். நாங்கள் குடிநீர் வழங்கினோம்.

அடுத்து, இரண்டாவது சொன்னார், நாம் இந்த அவையிலே நீண்டநேரம் அதைப் பேசியாகிவிட்டது. நானும் முதலமைச்சர் அவர்களும் விவாதித்துவிட்டோம். மேயர் தேர்தலுக்காகத்தான் கிருஷ்ணா தண்ணீர், வராத தண்ணீர் வந்தது என்று சொன்னார்கள். இப்போதும் உங்களிடத்திலே மாண்புமிகு அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் இருக்கிறார்; அவர்களிடத்திலே பொதுப் பணித் துறை இருக்கிறது; குடிநீர் வடிகால் வாரியம் இருக்கிறது; அதிகாரிகள் இருக்கிறார்கள்; அதிலே வந்தது கிருஷ்ணா தண்ணீர்தான் என்பதற்கு அதிக ஆதாரங்கள் உண்டு. இன்றைக்கு ஒன்றும் அதிக நேரம் ஆகிப்போய்விடுவதில்லை. அன்றைக்கு என்ன சொன்னார்கள் என்றால், சோமசீலாவுக்கு மேலே கால்வாயே வெட்டவில்லை, எப்படி வரும் என்று சொன்னார்கள். இப்போதும் அப்படித்தான் இருக்கிறது. இப்போதும் அந்தக் கால்வாய் வெட்டவில்லை...(குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், அதுபற்றி நீண்ட விவாதம் எல்லாம் நடைபெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி. திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர் வழங்கலைப் பொறுத்தமட்டில், குடிநீர் வழங்கல் துறையைப் பற்றி, சென்னைக் குடிநீர்த் திட்டங்களைப் பற்றி, இன்றைக்கு விரிவாக இங்கே விவாதம் செய்யப்பட்டது. சென்னையிலே, பல பகுதிகளிலே, மெட்ரோ வாட்டர்மூலம் கிடைக்கக்கூடிய தண்ணீர், சில பகுதிகளுக்குக் கிடைப்பது இல்லை என்று தகவல்கள் சொல்கின்றன. குறிப்பாக, சைதாப்பேட்டை, மேற்கு மாம்பலம், தியாகராய நகர், கே.கே. நகர், எம்.ஜி.ஆர். நகர், வியாசர்பாடி, பெரம்பூர், தண்டையார்பேட்டை, திருவொற்றியூர், மூலக்கடை ஆகிய பகுதிகளிலே, குடிதண்ணீர் சரியாக வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். குடிநீரும் வழங்காமல், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்களிடம் அதற்குரிய குடிநீர் வரிகளை வேகமாக வசூல் செய்வதாகச் சொல்கிறார்கள். சென்னையைப் பொறுத்தமட்டில், சென்னையிலே இரண்டு பெரிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்றையதினம், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னைப் பெருநகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே, புதிய வீராணம் திட்டத்தின் மூலமாக, ஒரு நாளைக்கு 150 மில்லியன் லிட்டர் தண்ணீரானது கொண்டுவரப்பட்டு, மேலும் சென்னையிலிருக்கின்ற மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள், குழாய்களிலே தண்ணீர் கொடுக்கின்ற வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது, ஒரு நாளைக்கு 360 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொடுக்கின்ற வகையிலே, இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே, 15,039 தெருக்களிலே, 13,225 தெருக்களுக்கு தண்ணீரானது குழாய்கள் மூலமாக வழங்கப்படுகிறது. மேலும்,

மீதமுள்ள பகுதிகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, தண்ணீர் தட்டுப்பாடு இல்லை. அவற்றிற்கு லாரிகள் மூலமாக, ஒரு நாளைக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குத் தேவையான தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தண்ணீர் விற்கப்படுகின்றது என்று குற்றச்சாட்டைக் கூறுகின்றார். அதுபோல, எந்தப் பகுதியிலுமே தண்ணீரை விற்பதில்லை, தெருக்களில் குழாய்கள் மூலமாகக் கொடுக்கப்பட்ட தெருக்கள் போக, மீதியிருக்கின்ற பகுதிகளிலே லாரிகள் மூலமாக நல்ல முறையிலே, சிறந்த முறையிலே, சென்னைவாழ் மக்களுக்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–15

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே தண்ணீர் விற்கப்படுவதாக நான் சொல்லவில்லை. தண்ணீர் கொடுக்காமல், அந்தப் பகுதியிலே குடிநீர் வரி வசூல் செய்கிறார்கள் என்று நான் சொன்னேன். அடுத்தபடியாக, இப்பொழுது, நமது சென்னைக் குடிநீரைப் பொறுத்தமட்டில், கடல்நீரைக் குடிநீராக்குகின்ற திட்டத்தை நீங்கள் கூடிய விரைவிலே இங்கே செய்தால்தான் இந்தப் பகுதிக்கும், இந்த நகரத்திற்கும் நிரந்தரமாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி பலமுறை விளக்கம் கூறியாகி விட்டது. சென்னைக்குக் குடிநீர் வழங்க, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு Global tender விடப்பட்டு பல bids பெறப்பட்டு, அந்தத் தேதியும் முடிவடைந்து, அந்த bids–ஐ evaluate செய்வதற்காக, மதிப்பீடு செய்வதற்காக ஒரு technical consultant–இடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த evaluation செய்வதற்கு குறைந்தபட்சம் 60 நாட்கள் தேவைப்படும். 60 நாட்களுக்குள் அவர் அந்த evaluation–ஐ செய்து முடித்து, அறிக்கையை அரசுக்குத் தந்தவுடனேயே மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** அதேபோல, இப்பொழுது இங்கே பேசினார்கள். பேசும்போது, கிருஷ்ணா நதி நீர் எப்பொழுது வரும் என்பதை இந்த அரசு தெளிவாகச் சொல்ல வேண்டும். கிருஷ்ணா நதி நீரினுடைய நிலை இப்பொழுது என்ன நிலையிலே இருக்கிறது? கிருஷ்ணா நதியிலிருந்து நமக்கு இப்பொழுது தண்ணீர் கிடைக்கிறதா இல்லையா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக...



**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில், தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1–10–2004 அன்று ஆந்திர முதல்வர் அவர்களைச் சந்தித்து, 'எங்களுடைய சென்னைக்குத் தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது; அதைத் தீர்த்து வைக்க வேண்டும்' என்று கேட்டவுடன், கிருஷ்ணா நீரானது அன்றைய தினம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, நம்முடைய சென்னைக்குக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே 2.717 டி.எம்.சி. தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை ஒரு முறைகூட, ஓர் ஆண்டுகூட ஆந்திர மாநிலம் நமக்கு வழங்க வேண்டிய கிருஷ்ணா நதிநீரின் அளவை முழுமையாக வழங்கவில்லை. ஒப்பந்தப்படி, ஆந்திர மாநிலம் சென்னைக்கு 12 டி.எம்.சி. அடி குடிநீர் வழங்க வேண்டும். அதாவது 15 டி.எம்.சி. தண்ணீரை விடுவிக்க வேண்டும். வழியில் evaporation loss, seepage loss இவற்றிற்கெல்லாம் இடமளித்து, net realisation இங்கே 12 டி.எம்.சி. அடியாக இருக்க வேண்டும் என்று ஒப்பந்தப்படி உள்ளது. ஆனால், இதுவரை அவ்வப்போது, கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் விடுகிறார்களே தவிர, 1 டி.எம்.சி., 2 டி.எம்.சி. இந்த அளவில்தான் விடுகிறார்களே தவிர, ஒருமுறைகூட முழுமையான அளவு தண்ணீரை அவர்கள் விடுவிக்கவில்லை. தொடர்ந்து தமிழக அரசு முயற்சி மேற்கொண்டுதான் வருகிறது. அங்கே யாரெல்லாம் முதலமைச்சராக பதவி ஏற்கிறார்களோ, ஒவ்வொரு முறையும் அவர்களை நானும் சென்று சந்திப்பதுண்டு; சந்தித்திருக்கிறேன்; பலமுறை முறையிட்டிருக்கிறேன். தலைமைச் செயலாளர் மட்டத்திலும் பலமுறை கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஆகவே, நமக்கு வழங்க வேண்டிய நீரின் அளவை முழுமையாக வழங்க வேண்டும் என்று திரும்பத் திரும்ப ஆந்திர மாநில அரசை நாம் வற்புறுத்திக் கொண்டே இருக்கிறோம். ஆனால் இதுவரை, அவர்கள் வழங்க வேண்டிய நீரின் அளவில் பாதிகூட நமக்கு வழங்கவில்லை. நான்கில் ஒரு பங்கைக்கூட நமக்கு வழங்கவில்லை. ஆகவே, நிலைமை இப்படியே போய்க் கொண்டிருந்தால் சரியாக இருக்காது என்பதை ஏற்கெனவே விவாதித்து, கடைசி முயற்சியாக நாம் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லலாம் என்று ஏற்கெனவே பேசி இருக்கிறோம். ஆகவே, வேறு வழியில்லையென்றால்

உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதைத் தவிர, தமிழக அரசுக்கு வேறு வழியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–20*

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை Metro Water திட்டத்தின்கீழ் பணியாற்றக் கூடியவர்கள் இந்தக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இங்கே ஏறத்தாழ ஆயிரம் பணியிடங்கள் காலியாக உள்ளதாகச் சொல்கிறார்கள். இந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு, இறந்தவர்களுடைய வாரிசுகளுக்கு அந்தப் பதவிகளைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த Metro Water திட்டத்தில் உள்ளவர்களுக்குக் குடிதண்ணீர் வரி விலக்கு வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, திருச்சிக்கு அருகே உள்ள முக்கொம்பிலிருந்து புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு, காவிரி ஆற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டு செல்லும் திட்டம் ஒன்று, இதற்கு முன்பாக இருந்த அரசினர் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தத் திட்டம் தற்பொழுது என்ன நிலையிலே இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மிக மிக இன்றியமையாத ஒரு திட்டம். இந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே நீங்கள் முழுமையடையச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கடல், கடல்சார்ந்த ஊர்கள் அதிகமாக இருக்கின்ற கிராமங்கள் இருக்கின்றன. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்களை அதிகமாக அந்தப் பகுதியிலே நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உள்ளாட்சித் துறை. தமிழகத்திலே உள்ளாட்சித் துறை மிகவும் நலிவடைந்த நிலையிலே உள்ளது. நான் கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்துப் பார்த்தபொழுது உள்ளாட்சித் துறைகளுக்குப் போதிய நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு இதிலே எந்தவிதமான வழிவகைகளும் செய்யப்படவில்லை. இந்த உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால் பஞ்சாயத்து ராஜ்; நகர்பாலிகா சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால், அந்தச் சட்டங்களிலே இருக்கக்கூடிய அதிகாரங்கள் அந்தத் துறைக்கு வழங்கப்படவில்லை. குறிப்பாக 29 வகையான அதிகாரங்கள் அந்தத் துறைக்குச் சென்று அடைந்திருக்கவேண்டும். ஆனால், அந்தத் துறைக்குக் கொண்டு



செல்வதிலே சில பிரச்சினைகள் இருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் இன்றைக்கு தைரியமாக அந்த 29 வகை அதிகாரங்களை உடனடியாக உள்ளாட்சித் துறைக்கு நீங்கள் மாற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நிதிநிலைமைகளைப் பொறுத்தமட்டில், நிதி, உள்ளாட்சித் துறையிலே மிக மிக நலிவுற்றிருக்கிறது. இன்றைக்கு எதற்கெடுத்தாலும் இந்த அதிகாரங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களினுடைய கையிலே இருக்கிறது. இந்த அரசினுடைய Agent–ஆக, ஊழியராக அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே செயல்படுகிறார்கள். அரசு என்ன சொல்கிறதோ அதைத்தான் அவர்கள் செய்வார்கள். இந்த...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு உள்ளாட்சித் துறை நிர்வாகத்திலும் அரசானது தலையிடுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, அந்தத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்குக் குறுக்கீடாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்தில் இருக்கின்ற 12,618 கிராம ஊராட்சிகளிலே கிட்டத்தட்ட 5,600 கிராம ஊராட்சிகளுக்கு மேலாக, நிதியைத் திரட்டுகின்ற வகையிலே, நல்லமுறையிலே அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மீதம் இருக்கின்ற கிராம ஊராட்சிகளுக்கு, அரசுமூலமாகச் செல்கின்ற நிதியை வைத்து, நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர் சொல்லியதுபோல, அந்த மீதம் இருக்கின்ற கிராம ஊராட்சிகள்தான் சிறிது நிதி ஆதாரம் கம்மியாகத் திரட்டுகின்ற வகையிலே அங்கே இருக்கின்றார்களே தவிர, அவர்கள் நிதிநிலை மோசமான நிலையில் இல்லை. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அரசு குறுக்கீட்டின் மூலமாக அவர்கள் செயல்படவில்லை என்று சொல்கின்றார். அது தவறு. அங்கே எந்த ஒரு ஊராட்சி அமைப்பிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்பதற்காக அவர்கள் ஊக்குவித்து, அதன் அடிப்படையிலே இன்றையதினம் அனைத்துக் கிராமங்களும் நல்லமுறையிலே வளர்ச்சியடைந்து இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றையதினம், மத்தியிலே இருந்து வாங்குகின்ற நிதியாகட்டும், மாநிலத்திலேயிருந்து கொடுக்கின்ற நிதியாகட்டும் முழுமையாகப் பயன்படுத்தி கிராமத்தில் இருக்கின்ற மக்களுடைய வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே நூறு சதவீதப் பணியை முடிக்கப்பட்ட பிறகு, மேலும் கூடுதலாக அங்கே நிதியை வாங்குகின்ற வகையிலே மாநில அரசானது, 25 சதவீதத்தைச் செலுத்தி அங்கேயிருந்து

வாங்கப்படுகின்ற 75 சதவீதத்தைப் பெற்று நூறு சதவீதப் பணியானது மிக விரைவில் முடிக்கப்பட்டு, மேற்கொண்டு நிதியும் வாங்கி கிராமப்புற வளர்ச்சிக்காக புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனைப்படி இன்றையதினம் அரசு அலுவலர்கள் முழுமையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அவர் கூறியதுபோல, அரசு அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், எந்தவிதத்திலுமே அந்த உள்ளாட்சிப் பிரதிநிதிகள் செயல்படுகின்றதில் தடையாக இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–25*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிப்பையூரில் செயல்படுத்தப்பட்டு வரும் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைப்பற்றி ஏற்கெனவே இங்கே பேசப்பட்டது. அப்போது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் அந்தத் திட்டம் முழுமையடைந்து செயல்படுத்தப்பட்டது, நிறைவேற்றப்பட்டது என்பதை இங்கே தெரிவித்தார். தற்போது திரு. துரைமுருகன் அவர்கள் இந்த அவையில் இல்லை. இருந்தாலும் இந்தத் திட்டத்தைப் பற்றிய...

*(திரு. துரைமுருகன் அவைக்குள் வந்து தன்னுடைய இருக்கையில் அமர்ந்தார்.)*

(சிரிப்பு) வந்துவிட்டார். மிக்க மகிழ்ச்சி. இந்தத் திட்டத்தைப் பற்றிய உண்மை நிலையை இங்கே தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நரிப்பையூரில் நாளொன்றுக்கு 38 இலட்சம் லிட்டர் கொடுதிறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு 1993 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த அரசாணை எண் 3D/74, நாள் 12–7–1993 அன்று வெளியிடப்பட்டது. இந்தப் பணிகள் 1994–95 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே பணிகள் தொடங்கப்பட்டன. 1999 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு, இந்தத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை. 1999 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டு, இந்தத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை. திட்டமிட்ட குடிநீரும் கிடைக்கப்பெறவில்லை. பின்னர், நாங்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர், 2003 ஆம் ஆண்டு என்னுடைய ஆட்சிக் காலத்தில், இந்தத் திட்டத்திற்கான முழுமையான புனரமைப்புப் பணிகள்



மேற்கொள்ளப்பட்டன. இதன்வாயிலாக ஏப்ரல் 2004 முதல்தான் இத்திட்டம் முழு அளவிலும், உறுதியான முறையிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது கடந்த ஆண்டு, 2004 ஏப்ரல் முதல்தான் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நாளொன்றுக்கு 38 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு, 296 குடியிருப்புகளில் உள்ள மக்கள் பயன்பெற்று வருகின்றனர். ஆகவே உண்மை என்ன? இந்தத் திட்டம் ஏற்கெனவே என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. பணிகளும் தொடங்கப்பட்டன. 1999–இல் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதாக அன்றைய தி.மு.க. ஆட்சி தம்பட்டம் அடித்துக் கொண்டது. ஆனால், அந்தத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை. இப்போதும் தம்பட்டம் அடித்துக்கொள்கிறார்கள். ஆனால், அதன்மூலம் தண்ணீரே கிடைக்கப்பெறவில்லை. அதனால் அப்படியே கிடப்பில் போடப்பட்டது. மீண்டும் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, அதைச் சரி செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு முதல்தான் அது செயல்பட்டு வருகிறது; தண்ணீரும் வழங்கப்பட்டு வருகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் அதற்கு அடிக்கல் நாட்டவில்லை என்றோ அல்லது திட்டத்தைக் கொண்டு வரவில்லை என்றோ நான் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் வாக்குப்படி, திட்டம் முடிந்தது. அன்றைக்கு ஒரு ஆட்சி தொடங்கிய திட்டத்தை, இன்னொரு ஆட்சி முடிகிறபோது, அந்தத் திட்டத்தை தொடக்கி அப்போது நாங்கள் நீர் வழங்கினோம். ஆனால், முதலமைச்சர் சொல்வதுபோல், அந்தத் திட்டம் பரீட்சார்த்தமாகச் செய்யப்பட்ட ஒரு திட்டம், தமிழ்நாட்டில் முதல் திட்டம். எனவே, அந்தத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை. பிறகு நீங்கள் வந்து மாற்றியமைத்துச் செய்திருக்கிறீர்கள். நான் அதைச் சொல்லவில்லை. ஆனால், இதில் தம்பட்டம் எதுவும் இல்லை. நீங்கள் கை அடிக்கிறதே போதும், நாங்கள் தம்பட்டம் அடிக்கவில்லை. எந்த ஆட்சியாக இருந்தாலும், ஒரு ஆட்சி செய்கிறபோது, அடுத்த ஆட்சி வந்தால் தொடங்கும், அடுத்து நாங்கள் வந்தவுடன், இப்போது நீங்கள் தொடங்கியவற்றையெல்லாம் அடுத்து நாங்கள் வந்து திறந்து வைக்க வேண்டும், அவ்வளவுதான் வித்தியாசம்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் சொன்னதை ஏற்க முடியாது. நல்ல technical know how, சிறந்த தொழில்நுட்பத்தோடும், மதிநுட்பத்தோடும்தான் அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, பேசுங்கள். (குறுக்கிடு) திரு. இராம் பிரபு ஏதாவது சொல்ல வேண்டுமா?

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நரிப்பையூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், அந்தப் பகுதிகளிலேயெல்லாம் கடல்நீரைக் குடிநீராக்கி, கிட்டத்தட்ட 150 கிராமங்களுக்கு குடிதண்ணீர் அந்தத் திட்டத்தின்மூலமாகச் சென்று கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 296 குடியிருப்புகளுக்குக் குடிதண்ணீர் இப்போது இத்திட்டத்தின்மூலம் supply செய்யப்பட்டு வருகிறது.

**திரு. இரா. இராம் பிரபு:** இந்தத் திட்டத்தின்மூலம் அதாவது முதுகுளத்தூர் தொகுதியிலே பாதி கிராமங்களும், என்னுடைய பரமக்குடி சட்டமன்றத் தொகுதியிலே பாதி கிராமங்களும் பயனடைந்து வருகின்றன. கடந்த 2002 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் செயல்படாமல் இருந்தபோது, சம்பந்தப்பட்ட....(மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. இரா. இராம் பிரபு:** சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் நான் கலந்து ஆலோசிக்கும்பொழுது அந்த Machinery–ல் உள்ள ஏதோ ஒரு part, repair ஆன காரணத்தால், அது வெளிநாட்டிலிருந்து வந்து, அந்த part பொருத்தப்பட்டு, பின்பு அந்தத் திட்டம் நல்ல முறையிலே நிறைவேற்றப்படும் என்று அந்த அதிகாரி அவர்கள் என்னிடத்திலே தெரிவித்திருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இப்போது 2003–லே அந்த Machinery–ல் repair செய்யப்பட்டு அந்தத் திட்டத்தின்மூலமாக 296 கிராமங்கள் பயனடைகின்ற வகையிலே இந்தத் திட்டத்தை நிறைவு செய்து கொடுத்ததற்கு நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பதில் அவர் சொல்லிவிட்டார் உங்களுக்கு. திரு. இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஊராட்சிகளின் நிதிநிலைமை மிக மோசமான நிலையிலே



இருக்கின்றன. மின் கட்டணங்கள் கட்ட முடியாத நிலை. மின் கட்டணங்கள் கட்டவில்லையென்றால், அந்த மின் கட்டணம் கட்டாத காலத்திற்கு வட்டியும் சேர்த்துக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். குறிப்பாக, கோவை மாவட்டத்திலே, கோவை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி, அதிலே மின் கட்டணம் கட்டவில்லையென்றால் 18 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையெல்லாம் பார்க்கும்போது உள்ளாட்சித் துறைகள்...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, மின் கட்டணம் கட்டவில்லையென்றால் 15 சதவிகிதம் வட்டி என்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டார் என்று ஏற்கெனவே அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் எழுப்பினார். அந்த நேரத்திலேயே பதில் அளிக்கப்பட்டது. இருப்பினும், மீண்டும், இவருக்குப் பதிலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்காக வருகின்ற நிதியிலிருந்து மின்சாரக் கட்டணத்தைக் கட்டாமல் அவர்கள் வேறு எதற்காவது அதைப் பயன்படுத்தி விட்டால், அந்த மின்சாரக் கட்டணம் பாக்கி இருக்கின்ற நேரத்தில்தான் அந்த வட்டி விகிதத்தைச் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அது அவர்களுக்கு உகந்தது அல்ல என்ற அறிவுறுத்துக் கடிதம்தான் அவர் – மாவட்ட ஆட்சித் தலைவர்—அனுப்பினாரே தவிர, அவர்களை மிரட்டுவதற்காக அல்ல. அந்த மின் கட்டணத்திற்கு என்று வரக்கூடிய நிதியிலிருந்து மின் கட்டண பாக்கியைக் கட்டவில்லையென்றால்தான் அந்த வட்டி விகிதம் என்று அறிவுறுத்தப்பட்ட கடிதம் அது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** ஊராட்சிகளுடைய நிதிநிலை இதுபோன்று மிக மோசமாக இருப்பதால், ஊராட்சிகளில் பயன்படுத்தக்கூடிய, குறிப்பாக, குடிதண்ணீர், தெரு விளக்குகள் போன்றவற்றிற்குச் செலவு செய்யக்கூடிய மின்சாரத்தினுடைய முழு அளவையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால், ஊராட்சி ஒன்றியத்தினுடைய வளர்ச்சி சிறப்பாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது உள்ளாட்சி அமைப்புகளிலே 3 அடுக்கு முறை இன்றைக்குச் செயல்பட்டு வருகின்றது. இந்த 3 அடுக்கு முறையிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று. உள்ளாட்சி மன்றத்திற்கும்,

ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தொடர்பு இல்லாத நிலை. அதேபோல ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட அமைப்புகளுக்கும் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பிருந்த 2 அடுக்கு முறையே சிறப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 அடுக்கு முறையைக் கொண்டு வந்ததே அவர்களுடைய தலைவர் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள்தான். இப்போது பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர், திரு. இராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது இந்த அரசியல் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தார் என்று குறிப்பிட்டார். பழைய 2 அடுக்கு முறையே சிறந்த முறை; அதுதான் இருக்க வேண்டுமென்று திரும்பத் திரும்ப அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்தினோம். அப்போது நீங்களும் சேர்ந்து குரல் கொடுத்திருக்கலாம். அதைச் செய்யவில்லை. உங்களுடைய தலைவர் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள்தான் இந்த 3 அடுக்கு முறையைக் கொண்டு வந்தார். ஆகவே, இப்போது உங்கள் கட்சித் தலைமையில்தான் மத்திய ஆட்சி நடைபெறுகிறது. நீங்கள் இங்கே சொல்வதை விடுத்து, டெல்லிக்குச் சென்று அங்கே உங்கள் கருத்தைச் சொல்லி நாடாளுமன்றத்தில் இந்திய அரசியல் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களைக் கொண்டு வரச் சொல்லுங்கள்; நாங்களும் உங்களுக்குப் பாராட்டு தெரிவிக்கிறோம்; நன்றி கூறுகிறோம்.

பிற்பகல் 1–35

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதிலே வேறுபட்ட கருத்து கிடையாது. இதிலே இராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைத் தமிழகத்திலே முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. அதிலே பல இடர்பாடுகள் இருக்கின்றன. அதிலே இருக்கக்கூடிய நல்ல காரியங்களை நாம் எடுத்துக்கொண்டு, நமக்குத் தேவையில்லாத காரியங்களை விடுவதிலே தவறே கிடையாது. அதை நாம் மத்திய அரசிடம் சொல்லி, நமது மாமன்றத்தின் வழியாக மத்திய அரசுக்குச் சொல்லி, நமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டு, தேவையில்லாதவற்றை ஒதுக்கி வைப்பதிலே தவறே இல்லை. அதற்கு நாங்கள் நிச்சயமாக உறுதுணையாக இருப்போம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். இப்பொழுது...



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு அந்த முறைதான் இருந்தது. அந்த முறையை மாற்றியதும் உங்கள் தலைவர் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள்தான். இதற்கும் பல முறை நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம். பழைய முறையையே திரும்பக் கொண்டு வரவேண்டும் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருக்கிறோம். ஆகவே, நீங்கள் எழுப்புகின்ற பிரச்சினைகளுக்கு எல்லாம் இதுதான் பதில்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** இந்த முறையைக் கொண்டு வந்துவிட்டால் ஆட்களைத் தூக்கி ஓட்டு போடுகின்ற நிலையை நாம் தடுத்துவிடலாம். அதற்காக மக்களே தேர்ந்தெடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு விளக்கம் சொன்ன பிறகும், மாண்புமிகு உறுப்பினர் அதே கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆகவே, நான் திரும்ப அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது அவர் கோருகின்ற மாற்றங்களைத்தான் நாங்களும் கோருகின்றோம். ஆனால், அந்த மாற்றங்களைக் கொண்டு வருவது என்பது, மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டதல்ல; மத்திய அரசுதான் செய்யவேண்டும். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நாடாளுமன்றத்தில் உரிய சட்டத் திருத்தங்களை, அரசியல் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும். அதற்கு அங்கே ஆவன செய்யவேண்டும்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தில், இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய நாம் அத்தனை பேரும் ஒரே கருத்தை கொண்டிருக்கிறோம். எனவே, இந்த மன்றத்தின் வாயிலாக நீங்கள் மத்திய அரசுக்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய, ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான இடங்களிலே இருக்கக்கூடிய மரங்களை வெட்டுவது என்றால், அந்த முட்புதர்களை அகற்றுவது என்றாலும்கூட, இன்றைக்கு வருவாய்த் துறையினுடைய முன்னனுமதியை நாம் பெறவேண்டிய நிலை இருக்கிறது.

அதேபோல, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான சாலைகளைச் செப்பனிடுவது என்றால், அதை நெடுஞ்சாலைத் துறைதான் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். அதேபோல ஒன்றியத்திலே இருக்கக்கூடிய கண்மாய்கள், வரத்துக் கால்வாய்கள் போன்றவற்றைப் பொதுப் பணித் துறைதான் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். இது வித்தியாசமான ஒரு நிலை. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே இரண்டு பொறியாளர்கள் இருக்கிறார்கள். திறமையான அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். இதை விட்டு, பொதுப் பணித் துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் ஊராட்சி ஒன்றியத்தினுடைய பணிகளை மாற்ற வேண்டிய நிலை இந்த அரசுக்கு...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கின்றார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற குளங்களைப் பொதுப் பணித் துறைமூலமாக எடுத்துச் செய்வதற்கு எந்த அரசாணையும் பிறப்பிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** இல்லை. ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களைப் பொதுப் பணித் துறை இப்போது எடுத்து வேலை செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கின்றார்கள். பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற வரத்து வாய்க்கால்கள், குளங்களைத்தான் தூர் வாரவோ, ஆழப்படுத்தவோ நாங்கள் எங்களுடைய பணியைச் செய்துகொண்டிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஏக்கர்களுக்கு மேலாக இருக்கக்கூடியவை பொதுப் பணித் துறை கண்மாய்கள். அதற்குக்கீழே இருக்கக்கூடியவை ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கண்மாய்கள். ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கண்மாய்களை, இப்போது மராமத்து செய்யும் வேலையைப் பொதுப் பணித் துறை செய்துகொண்டிருக்கிறது என்று நான் தெரிவிக்க...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. இராமசாமி, எங்கேயாவது அப்படிப் பண்ணியிருந்தால், என்ன என்பது பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** நிறைய இருக்கிறது, நிறைய இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி இருந்தால் எழுதிக் கொடுங்கள்.

பிற்பகல் 1–40

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எஸ்.ஜி.ஆர்.ஒய். என்ற திட்டத்தின்கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை வேண்டுமானால் அதை செய்து கொண்டிருக்கலாமேயொழிய, பொதுப் பணித் துறை அந்த வேலையைச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** போதுமான ஆதாரத்தை உங்களிடம் நான் வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோல, மாவட்ட அமைப்புகளிலே மீண்டும் D.D.C. முறை வேண்டுமென்று நான் கோருகிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கும், மாவட்ட அமைப்பிற்கும் தொடர்பில்லாத நிலையிருக்கிறது. அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய குறைகளை மாவட்ட அமைப்பிடம் எடுத்துச் சொன்னால்தான், அந்தக் குறைகளை நிவர்த்தி செய்யமுடியும். இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கூட்டத்திற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளமுடியாத ஒரு நிலை. எந்தக் கூட்டத்திற்கும் அழைப்பதும் இல்லை. அழைக்கவேண்டிய கூட்டங்களை, அந்தந்த மாவட்ட நிர்வாகம், கூட்டுவதற்கே ஏற்பாடு செய்ய மறுக்கிறார்கள். இந்த நிலை இருக்கிறது. இதற்கு ஒரே வழி, மீண்டும் D.D.C. முறையைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவரின் அழைப்பிற்காகக் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. எந்தப் பிரச்சினையையாவது, எந்த விஷயத்தையாவது, மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று விரும்பினால், எப்பொழுது வேண்டுமானாலும் சட்டமன்ற உறுப்பினர் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து, அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசலாமே?

**திரு. கே.ஆர். இராமசாமி:** இதுபோன்ற வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு நாம் ஒரு subject–ஐக் கொடுத்தால், அந்த subject–க்கு முறையாக அவர்கள் பதில் சொல்லவேண்டுமென்று முதலிலே அந்த நடைமுறை இருந்தது. இப்போது மாவட்ட ஆட்சித் தலைவரைப் போய் ஒரு எம்.எல்.ஏ.–வாக இருப்பவர், request பண்ணலாமேயொழிய, அவர்களிடம் எங்களுடைய right–க்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்கமுடியாது. அப்படி ஒரு நிலையிருக்கிறது. அந்த நிலையை மாற்றுவதற்கு மீண்டும் அந்த வளர்ச்சி மன்றக் கூட்டம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அரசுக்குக் கடிதம் கொடுத்தாலும், பதில் சொல்ல அரசு கடமைப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கடிதம் கொடுத்தாலும், அவர் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** சில பிரச்சினைகளை நாம் நேரடியாக இருந்து, விவாதித்து, முடிவு செய்வதுதான் நல்லது என்று நான் எண்ணுகிறேன். அதற்கு முடிந்தால், நமது அரசு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இப்போது ஊராட்சிகளுக்கு, கடந்த முறை 100% வீட்டு வரியை வசூல் செய்திருந்தால், ஒரு ரூபாய்க்கு, மூன்று ரூபாய் சேர்த்து ஊராட்சிகளுக்கு வழங்கினார்கள். ஆனால், 16–2–2004 அன்று ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவின்படி, ஒரு ரூபாய்க்கு, ஒரு ரூபாய் 25 காசுகள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்பு, 3 ரூபாய் கொடுப்பதாக இருந்தது, இப்போது 1 ரூபாய் 25 காசு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** முடித்துவிடுகிறேன். இப்போது 2003–2004 ஆம் ஆண்டிற்கு, அந்த நிதியும் ஊராட்சிகளுக்கு வந்து சேரவில்லை. இன்றைக்கு ஊராட்சிகள் இருக்கக்கூடிய நிலைக்கு, நீங்கள் வீட்டு வரியை வசூலிக்கக்கூடிய பணத்திலிருந்து கூடுதலாகக் கொடுக்க வேண்டிய பணத்தையும், அரசாங்கம் நமது ஊராட்சிகளுக்குக் கொடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



பொதுவாக, அதற்கு அடுத்தபடியாக, ஈமக்கிரியைக்காக 500 ரூபாய் இலவசமாக வழங்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்த மானியத் தொகைகள், அந்தந்த ஊராட்சிகளுக்கு இதுவரையில், ஏறத்தாழ 3 ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. அதை உடனடியாக வழங்கவேண்டும். இந்த ஏழையெளியவர்கள் ஈமக்கிரியைகள் செய்யும்போது, அந்தப் பணம் மிக உதவியாக இருக்கும். அதை நீங்கள் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், நமது ஏழையெளிய மக்களுக்கு அரசு வழங்குகின்ற நலத் திட்டங்கள், நேரடியாகச் சென்றடைய வேண்டியது, உள்ளாட்சித் துறை வழியாகத்தான். ஆனால், உள்ளாட்சித் துறை இன்றைக்கு மிகமிக நலிவுற்று இருக்கிறது. அதை வலுப்படுத்துவதற்கு நீங்கள் உள்ளாட்சித் துறைக்கு அதிகமாக நிதியை வழங்கி, அதை ஊக்கப்படுத்தவேண்டுமென்று கோரி, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் நாளையும் தொடரும்.

## 4. அரசினர் தீர்மானங்கள்–தொடர்ச்சி

### (ஆ) விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடம் கேள்வி நேரம் இல்லை என்று சொல்கிறீர்களே? இது என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சரி, எப்போது வைத்துக்கொள்ளலாம் பதிலுரையை?

**திரு. ஐ. கணேசன்:** நீங்கள் மதியம் வைத்துக் கொள்ளுங்கள். தினந்தோறும் கேள்வி நேரத்தை ஒத்திவைப்பது சரியல்ல.

[2005 ஏப்ரல் 7

பிற்பகல் 1–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பேசித்தான் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) நாளை சிறிய மானியக் கோரிக்கைத்தான். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கணேசன் (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** Regular ஆக கேள்வி நேரம் இல்லை என்கிறீர்களே? இது என்ன நடைமுறை?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இன்றைக்கு evening வைத்துக்கொள்ளலாமா? (குறுக்கீடு) அப்படி இல்லையென்றால், evening தானே வைத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடு) ஏதாவது ஒன்றைச் செய்யவேண்டுமல்லவா? (குறுக்கீடு) இல்லை, அவர்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை, பிரதான கட்சி ஒத்துக்கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 08–04–2005 வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (08–04–2005) அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.



2005 ஏப்ரல் 7]

### (இ) விதி 55 (6)–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (8–4–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகளை... (குறுக்கீடுகள்) ஐயா, கொஞ்சம் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 55(6)–ஐத் தளர்த்தி, நாளை (08–04–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகளை எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (08–04–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

103. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 27–10–2004 ஆம் நாளிட்ட 164 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2005 ஏப்ரல் 7

104. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மாவட்ட ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், கிராம ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்களின் பதவி விலகலை ஏற்றுக்கொள்ளுதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 1-11-2004 ஆம் நாளிட்ட 167 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

105. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 1-11-2004 ஆம் நாளிட்ட 168 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

106. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பொதுச் சாலைகளையொட்டி அல்லது பொதுச் சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 23-12-2004 ஆம் நாளிட்ட 184 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

107. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நீர் ஆதாரங்களில் மீன்பிடி குத்தகை மற்றும் உரிமம் வழங்குவதை முறைப்படுத்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 5-1-2005 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

199. திரு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.



2005 ஏப்ரல் 7]

200. மானியக் கோரிக்கை எண் 33 – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம்–மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

201. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் – மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் செயல்திறன் பற்றிய குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

202. மானியக் கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

203. ஊரக வளர்ச்சித் துறையின் செயலாக்க வரவு செலவுத் திட்டம், 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

204. கோயமுத்தூர் மாநகராட்சி – மக்கள் சாசனம். (தமிழ்)

205. சேலம் மாநகராட்சி – மக்கள் சாசனம். (தமிழ்)

206. ஈரோடு நகராட்சி – மக்கள் சாசனம். (தமிழ்)

207. கோபிசெட்டிபாளையம் நகராட்சி – மக்கள் சாசனம். (தமிழ்)

– – –

## இணைப்பு I

*(388 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 33

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

**முகவுரை–**

*நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் மற்றும் அவ்வமைப்பு பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும்.*

*தமிழ்நாடு, 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி நாட்டிலேயே அதிக நகர்ப்புற மக்கட்தொகை (43.86%) கொண்ட மாநிலம் ஆகும். இம்மாநிலம் நாட்டின் மொத்த நகர்ப்புற மக்கட் தொகையில் 9.6 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது.*

*1992 ஆம் ஆண்டு 74-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசியலமைப்பு தகுதியுடன் பணிகள் மற்றும் நிதி வசதிகள் குறித்த அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது. நகர்ப்புறச் சீரமைப்பில் முன்னோடி மாநிலமாகத் திகழும் இம்மாநிலம், சீரமைப்புப் பணிகளை மிகுந்த வேகத்துடன் மேற்கொண்டது. மேலும், நகர்ப்புறச் சேவையில் இம்மாநிலம், 1992-ம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட இனங்கள் உள்ளிட்ட பல்வேறு பெரும் சாதனைகளை நிகழ்த்தி வருகிறது:–*

- *நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை மேம்படுத்தவும், அரசிடமிருந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, கணிசமான நிதிப் பகிர்வு செய்திடவும் தொடர்ந்து மூன்று மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.*

[2005 ஏப்ரல் 7

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறித்த தேதியில் தொடர்ந்து இருமுறை தேர்தல்கள் நடத்தப்பட்டன. அவ்வமைப்புகளில் உறுப்பினர்கள் மற்றும் தலைமை பதவிகளில் மகளிர் மற்றும் நலிவுற்றப் பிரிவினருக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- மின்னணு ஆளுகையில் பெரும் முன்னேற்றம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கான கணினி வழி சேவைகள் செய்யப்பட்டன.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பத்திரங்கள் வெளியிடுதல் உள்ளிட்ட தனியார் மூலதனச் சந்தைகளை அடைய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திறனை மேம்படுத்தும் வகையில் பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு பெரிய அளவிலான பயிற்சி அளித்தல் மற்றும் சிறந்த நடைமுறை பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

வளர்ந்து வரும் நகர்ப்புற மக்கட்தொகை மற்றும் தொடர்புடைய வணிக நடவடிக்கைகள் நகர்ப்புற கட்டமைப்புக்கான தேவையை வேகப்படுத்தியுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சேவைகளில் உள்ள பற்றாக்குறையை நீக்குவது மற்றும் அவ்வமைப்புகள் தன்னிறைவு அமைப்புகளாக வளரும்வகையில் அவற்றின் நிதி ஆதாரங்களை பெருக்குவது ஆகியவை இத்துறையின் தலைசிறந்த முன்னுரிமைகளாகும்.

2005–2006 ஆம் நிதியாண்டில் இத்துறையின் முக்கிய நோக்குகள் மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்ச திட்டம் மற்றும் இந்த நூற்றாண்டின் வளர்ச்சி நோக்குகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றில் கீழ்க்கண்டவை முன்னுரிமை பெற்றவைகளாகும்:–

- நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் தொடர்ந்து செயல்படும் வகையில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் பாதுகாப்பான குடிநீர் கிடைக்கச் செய்வதில் முன்னேற்றம்.
- குடிநீர் மற்றும் பிற திட்டங்களை குறைந்த செலவில் மற்றும் தொடர்ந்து செயல்படும் வகையில் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துவதில் மக்கள் பங்களிப்பை உறுதி செய்தல்.



2005 ஏப்ரல் 7]

- அடிப்படை சேவைகள் அளித்தல் மற்றும் கூலி/சுய வேலைவாய்ப்புக்கான உதவிகள் ஆகியவற்றின்மூலம் நகர்ப்புற ஏழைகளின் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைதல்.

சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான சேவைகளை அளித்தல், கழிவு நீரை மறு சுழற்சிக்கு உட்படுத்துதல் மற்றும் திடக்கழிவுகளை தகுந்த முறையில் தீர்வு செய்தல் ஆகியவற்றை வலியுறுத்துதல்.

**நகராட்சி நிர்வாகம்**

தற்போது இம்மாநிலத்தில் நகர்ப்புற அமைப்பில், 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 49 மூன்றாம்நிலை நகராட்சிகள் (முன்பு பேரூராட்சிகள்) உள்ளன.

**மாநிலத்தின் நிலைவாரியான நகராட்சிகளின் விவரங்கள் கீழ்வருமாறு:**

| வ. எண் | நிலை | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | 13 |
| 2 | தேர்வு நிலை | 28 |
| 3 | முதல் நிலை | 36 |
| 4 | இரண்டாம் நிலை | 25 |
| 5 | மூன்றாம் நிலை | 49 |
| | மொத்தம் | 151 |

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நகரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதிகரிக்கப்பட்ட நகர முதலீடும் மற்றும் மேன்மையான நகர வசதிகளும் பொருளாதாரத்தின் உயர்வுக்கும் அதன் நிலைத் தன்மைக்கும் தீர்வுகளாக அமைந்துள்ளன. உட்கட்டமைப்புகளுக்கு அதிக முதலீடு செய்வது பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை நிலை நிறுத்தும்.

[2005 ஏப்ரல் 7

## தொலைநோக்குத் திட்டம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களில் செயல்படுத்த அடுத்த 5 ஆண்டுகளுக்குரிய தொலைநோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, நடப்பாண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ரூ.4,554.65 கோடி மதிப்பீட்டில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்த இரண்டு பகுதிகள் கொண்டதாக இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் பகுதியில் ரூ.2,351.14 கோடி முதலீட்டில், திடக்கழிவு மேலாண்மை, நலவாழ்வு, கல்வி, மின்னனு ஆளுகை, அங்காடிகள் மற்றும் பேருந்து நிலையங்கள் அமைக்க முன்னுரிமையளித்தும் மற்றும் இரண்டாம் பகுதியில் ரூ.2,203.31 கோடி முதலீட்டில் மற்ற பணிகளை உள்ளடக்கியும் தயாரிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட முக்கிய திட்டங்கள் இதில் அடங்கும்:–

| வ.எண் | திட்டங்களின் பெயர்கள் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை | 135.87 |
| 2 | கல்வி | 101.49 |
| 3 | சுகாதாரப் பராமரிப்பு | 44.61 |
| 4 | குடிசைப்பகுதி மேம்பாடு | 63.22 |
| 5 | தெரு விளக்குகள் | 44.48 |
| 6 | பேருந்து நிலையம் மற்றும் நிழற்குடை | 159.18 |
| 7 | பொதுக் கழிப்பிடம் | 31.43 |
| 8 | மற்ற திட்டங்கள் (சத்துணவுக் கூடங்கள், மழைநீர் வடிகால், பாலங்கள்,தொன்மை நகரங்கள் மற்றும் மின்னனு ஆளுகை) | 133.82 |
| 9 | குடிநீர் | 618.95 |
| 10 | பாதாளச் சாக்கடை | 2202.96 |
| 11 | அங்காடிகள் | 115.71 |
| 12 | போக்குவரத்து (சாலைகள்) | 489.50 |
| 13 | மழைநீர் வடிகால் | 260.58 |
| 14 | வருவாய் தரத்தக்க திட்டங்கள் | 42.13 |
| 15 | பூங்கா மற்றும் விளையாட்டு மையங்கள் | 41.33 |
| 16 | வாகனங்கள் நிறுத்துமிடம் | 37.53 |
| 17 | மயானம் | 31.86 |
| | மொத்தம் | 4554.65 |



2005 ஏப்ரல் 7]

2004–2005 ஆம் ஆண்டில் அனைத்து நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் பகுதி–1 திட்டத்திற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதன் சொந்த நிதியிலிருந்து ரூ90.86 கோடி செலவழித்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டு முதல் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களும் தங்களுடைய நிதிநிலை அறிக்கையில் (Budget) இதற்குரிய ஒதுக்கீடுகளைச் செய்திருக்கின்றன.

## இரண்டாவது மாநில நிதிக் குழு (2002–2007)

2004–2005 ஆம் ஆண்டிற்கு, மாநில அரசின் சொந்த வருவாய் அடிப்படையில், 6 மாநகராட்சிகள் மற்றும் 102 நகராட்சிகளுக்கு ரூ.332.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு பின்வரும் விழுக்காட்டில் மானியம் பகிர்ந்தளிக்கப்படுகிறது :

87 சதவிகிதம் – பகிர்வு நிதி
2 சதவிகிதம் – சேம நிதி
5 சதவிகிதம் – ஊக்க நிதி
6 சதவிகிதம் – சமன்பாட்டு நிதி

## மூன்றாவது மாநில நிதிக் குழு

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலை மையை ஆராய்வதற்காக மாநில அரசு, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தை அமைத்துள்ளது. மேலும் இம்மாநில நிதி ஆணையத்தின் வரைமுறைகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. 2007–2012 ஆம் ஆண்டு காலத்திற்கான பரிந்துரைகள் இதில் இடம்பெறும்.

[2005 ஏப்ரல் 7

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களில் சொத்து விவரங்களைப் பற்றிய தகவல் தொகுப்பை உருவாக்குதல்**

மூன்றாவது மாநில நிதி ஆணையத்திற்கு உள்ளாட்சிகளைப் பற்றி ஆராய, நிறைய புள்ளிவிவரங்கள் குறுகிய காலத்தில் தேவைப்படுகிறது. தற்போதைய நிலையில், உள்ளாட்சி அமைப்புக்களின் சொத்துக்கள் பற்றிய கணினி வழி புள்ளிவிவரங்கள் இல்லாததால், சரியான முறையில் திட்டமிட இயலவில்லை. எனவே சொத்துக்களை பற்றிய இன்றைய தற்போதைய புள்ளிவிவரங்களை உருவாக்கி மற்றும் தகவல் தொகுப்பை உருவாக்குவதன் மூலம், எல்லா ஆய்வுகளுக்கும் பயன்படும் வகையிலும் மற்றும் மூன்றாவது நிதிக் குழுவிற்கு தேவையான புள்ளிவிவரத்தினையும் இதன் மூலம் தரமுடியும். இப்பணி தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்ச திட்டத்தில், "சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு" என்ற தலைப்பின்கீழ் சுகாதாரமான முறையில் வாழ்வதன் பொருட்டு திட மற்றும் திரவக் கழிவுகளை அகற்றுவது குறித்தும், மக்கும் மற்றும் மக்காத கழிவுகளை மறு சுழற்சிக்குப் பயன்படுத்துவது குறித்தும், மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவது குறித்தும் தெளிவாக வற்புறுத்தப்பட்டுள்ளது.

திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதி 2000–ன்படி, இத்திட்டத்தினைச் செயலாக்குவது நகராட்சிகளின் முக்கிய பொறுப்பாகும். இவ்விதியின் அடிப்படையில், இவ்வரசு உரக்கிடங்கு அமைப்பதற்கான நிலம் வாங்குவது குறித்தும், குப்பைகள் அகற்றுவது குறித்தும் தகுந்த அறிவுரைகள் வழங்கியுள்ளது.

மேலும், உச்ச நீதிமன்றம் பத்து இலட்சத்திற்கும் அதிகமாக மக்கள் தொகையுள்ள நகரங்களில், திடக்கழிவு மேலாண்மை செயல் திட்டத்தினைத் தயார் செய்யக் கேட்டுக் கொண்டுள்ளது. இதன்படி, தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகராட்சிகளின் செயல் திட்டம் குறித்த அறிக்கை உச்ச நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து நகராட்சிகளிலும் திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதி 2000–த்தின்படி, குறித்த காலவரைக்குள் செயல்திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரகம் தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.



2005 ஏப்ரல் 7]

செயலாக்குவதற்கு, உரக்கிடங்கு
இத்திட்டத்தினைச்
அமைப்பதற்கான நிலங்கள் முக்கிய தேவையாகும். 56 நகராட்சிகள்
மற்றும் 5 மாநகராட்சிகளுக்குத் தேவையான நிலங்கள் உள்ளன. 19
நகராட்சிகளுக்கு தேவையான நிலம் வாங்க அரசு இதுவரை நிதியுதவி
அளித்துள்ளது. எஞ்சியுள்ள நகராட்சிகளுக்கான நிலங்கள் வாங்க
துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேவைப்படும் நிலத்தினை கொள்முதல்
உரக்கிடங்கிற்காகத்
குப்பை சேகரிக்கும் பணியை
செய்வதோடு ஆரம்பக்கட்டமான
குப்பை சேகரிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையை
மேம்படுத்தவும்,
இயந்திரங்கள்
நவீன
உரக்கிடங்கில்
அதிகரிக்கவும்,
உபயோகப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 9,000 முதல் 10,000
நகர்ப்புறங்களில் சராசரியாக
மெட்ரிக் டன் குப்பை உற்பத்தியாகின்றது. மாநிலத்தில் உள்ள அனைத்து
வார்டுகளில் வீடுவீடாக
சதவீத
70
நகராட்சிகளிலும்
பிரித்தெடுக்கப்பட்ட குப்பை சேகரிக்கும் பணி நடைபெறுகிறது. இதனை
100 சதவீதமாக மாற்றி, விஞ்ஞான அடிப்படையில் குப்பை சேகரித்து,
பிரித்து, உரிய முறையில் அகற்றி, குப்பையில்லா நகரமாக மாற்றுவதே
நகர்ப்புற உள்ளாட்சிகளின் குறிக்கோளாகும்.

மாநகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத்
நகராட்சி மற்றும்
திட்டத்தினைத் தனியார்மயமாக்கும் பணி ஊக்குவிக்கப்பட்டுள்ளது.
இதில் சுயஉதவிக் குழுக்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளால் தயாரிக்கப்பட்ட திடக்கழிவு
மேலாண்மை செயல் திட்டத்தை விரிவாகப் பரிசீலித்து,
நகராட்சிகளுக்கு ரூ.181.67 கோடியிலும், மாநகராட்சிகளுக்கு ரூ.55.74
கோடியிலும், 2005–2006 ஆம் ஆண்டில் செயல்படுத்த கொள்கை
அளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. டிசம்பர் திங்கள் 2006–க்குள்
இத்திட்டத்தினைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

செயல்திறன் அறிக்கைப்படி பெருமளவிலான தொகை
நகராட்சிகளின் பொது நிதியிலிருந்தே செலவழிக்கப்பட்டாலும்,
இப்பணிக்கு ஊக்குவிப்பு மற்றும் சமன்பாட்டு நிதியிலிருந்து அரசு
நிதி வழங்கியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டு, இப்பணிக்காக ரூ.33.58
கோடி வழங்கப்பட்டுள்ளது.

## குடிநீர் மேலாண்மை

கடந்த ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை அதிகமாக இருந்தபோதிலும், சாத்தூர், அருப்புக்கோட்டை, இராமநாதபுரம், பரமக்குடி, சிவகாசி, தருமபுரி, ஓசூர், வேலூர் மற்றும் வாணியம்பாடி ஆகிய மழை மறைவு இடங்களில் மழை குறைவாக இருந்ததால் குடிநீர்ப் பற்றாக்குறை காணப்பட்டது. திறமையான முறையில் குடிநீர்ப் பகிர்மானம் செயல்படுத்தப்பட்டதால், குடிநீர்ப் பற்றாக்குறை கட்டுப்படுத்தப்பட்டது. வறட்சியைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு யுக்திகளை மேற்கொண்டது. தேவைப்படும் இடங்களில் புதிய கை பம்ப் மற்றும் சிறிய மின்சார நீரேற்றி பொருத்தப்பட்டது. இதுதவிர, நீர் ஆதாரங்களைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறை இடங்களில், நீர் ஆதாரங்களைப் பெருக்கி வறட்சியான இடங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை சமாளிக்கப்பட்டது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களில் குடிநீர்க் கசிவு/திருட்டு/மறு உபயோகம்/மறுமுறை உபயோகப்படுத்துவது போன்றவை குறித்து தீவிரமான முறையில் மக்களிடையே விழிப்புணர்ச்சி இந்த வருடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில், 10 நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. விருதுநகர், அருப்புக்கோட்டை மற்றும் செங்கற்பட்டு ஆகிய நகராட்சிகளில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. பொள்ளாச்சி, கோபி, துறையூர், சிவகங்கை, போடி மற்றும் கம்பம் ஆகிய நகராட்சிகளில் 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

வருகிற கோடை காலங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க கோடைகால மேலாண்மை செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் அடிப்படையில் வேலூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் செங்கற்பட்டு ஆகிய மண்டலங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை பகுதிகள் கண்டறியப்பட்டு, இக்குறையினைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## மழைநீர் சேகரிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அவசியத்தை வலியுறுத்தியதைத் தொடர்ந்து, ஜூலை 2003–ல், நகர்ப்புறங்களில், பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை -டுபடுத்தி, மாநிலம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு அமைப்புக்கள்



ஏற்படுத்தப்பட்டன. 2004–2005–ல் திறந்தவெளி, பூங்கா மற்றும் சாலைகள் போன்ற இடங்களில், மழைநீர் அமைப்புகள் கீழ்க்கண்டவாறு முடிக்கப்பட்டன:–

| வ. எண் | நகர்ப்புற உள்ளாட்சிகள் | ஏரி | சாலை ஓரம் | திறந்தவெளி/ பூங்கா |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிகள் | 323 | 1984 | 1293 / 57 |
| 2 | மாநகராட்சிகள் | 86 | 785 | 433 / 16 |
| | மொத்தம் | 409 | 2769 | 1726 / 73 |

மேற்கண்ட தீவிர முயற்சிகள் மூலம் நிலத்தடி நீர்மட்டம் (2 மீட்டர் முதல் 3 மீட்டர்) மாநிலத்தின் பெரும்பாலான உள்ளாட்சி அமைப்புக்களில் கணிசமாக உயர்ந்துள்ளது.

## நீர் ஆதாரங்களைத் தூய்மைப்படுத்துதல்

அக்டோபர் 2004 முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களுக்குச் சொந்தமான நீர் ஆதாரங்களைச் சுத்தமாக வைத்திருக்க பெரிய அளவிலான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீர் ஆதாரங்களுக்கு உள்ளேயும் அருகிலும் கொட்டப்பட்டிருந்த குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக்குகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன. தற்போது அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில், நீர் ஆதாரங்களைச் சுத்தம் செய்யும் பணி அன்றாடத் தொடர்பணியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கழிவு நீர், நீர் ஆதாரங்களில் கலப்பதைத் தடுக்கத் தேவையான தடுப்புப்பணிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கள் செய்து வருகின்றன. மேலும் வரும் கோடையில் நீர் ஆதாரங்களில் தூர் வாரும் பணி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்காக ரூ.3.43 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களிலும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய நீர் ஆதாரங்கள் கண்காணிப்புப் பிரிவு உள்ளது. இப்பிரிவானது அவ்வப்போது முறையாக தண்ணீரின் தரம் மற்றும் அப்போதைய நிலை பற்றி ஆய்வு செய்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

[2005 ஏப்ரல் 7

**மின்சக்தி தணிக்கை ஆய்வுக்கு பின்னர் குடிநீர் வழங்கல் மேம்படுத்தும் திட்டங்கள்**

2004–2005 ஆம் ஆண்டில் மின்சக்தி தணிக்கை ஆய்வுகள் உதகமண்டலம், காஞ்சிபுரம், போடிநாயக்கனூர், கோபி செட்டிப்பாளையம் மற்றும் பொள்ளாச்சி நகராட்சிகளின் குடிநீர் வழங்கல் அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகள் மூலம் 30 சதவிகித மின்சக்தியினை சேமிக்க இயலும் என்பதால், கீழ்க்கண்ட நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளன. மின் மோட்டார்களை மாற்றுதல், மின்மாற்றியை மாற்றி அமைத்தல், குடிநீர் வழங்கல் அமைப்பினை மேம்படுத்துதல் மற்றும் பிரதான குழாய்களை மாற்றுதல் ஆகியவை இதில் அடங்கும்.

| வ. எண் | நகராட்சியின் பெயர் | ரூ.கோடியில் |
|---|---|---|
| 1 | உதகமண்டலம் கு.வ.மே.ப. | 0.30 |
| 2 | காஞ்சிபுரம் கு.வ.மே.ப. | 0.99 |
| 3 | கோபிசெட்டிப்பாளையம் கு.வ.மே.ப. | 3.77 |
| 4 | பொள்ளாச்சி கு.வ.மே.ப. | 6.93 |
| 5 | போடிநாயக்கனூர் கு.வ.மே.ப. | 2.32 |

உதமண்டலம் மற்றும் காஞ்சிபுரம் நகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மற்ற நகராட்சிகளில், 2005–2006 ஆம் ஆண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**வறட்சி நிவாரணப் பணிகளும், கோடை மேலாண்மை நடவடிக்கைத் திட்டங்களும்**

2004–2005 ஆம் ஆண்டில் கோடைக்கால மேலாண்மைத் திட்டம் உதகமண்டலம், குன்னூர் மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளில் ரூ.2.88 கோடியில் மேற்கொள்ளப்பட்டன. இதனால் குடிநீர் வழங்கல் ஆதாரங்கள் மேம்படுத்தப்பட்டு கோடைக்காலம் வருவதற்கு முன்பே பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. ரூ.2.85 கோடி செலவில் உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளுக்கு 2005–2006 ஆம் ஆண்டிற்கு செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 7]

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள 151 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில், 15 நகராட்சிகள் மற்றும் 4 மாநகராட்சிகளில் மட்டுமே பாதாளச் சாக்கடைத் திட்டம் நகரின் சில பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது காவிரி ஆறு மாசுபடுதலைத் தவிர்க்கும் பொருட்டு தேசிய நதிநீர் செயல் திட்டம் மூலம் பாதாள சாக்கடைத் திட்டம் ஈரோடு, பள்ளிப்பாளையம், பவானி, கொமாரப்பாளையம் மற்றும் திருச்சி மாநகராட்சியில் செயல்படுத்தப்படுகிறது. புதிய முயற்சியுடன் இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மதுரை மாநகராட்சி, திருநெல்வேலி மாநகராட்சி, கரூர் மற்றும் இனாம் கரூர், கும்பகோணம், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை நகராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பாலாறு மாசுபடுதலைத் தவிர்க்கும்பொருட்டு பாதாள சாக்கடைத் திட்டம் ஆம்பூர், இராணிப்பேட்டை மற்றும் வாலாஜாபேட்டை நகராட்சிகளில் ரூ.50.00 கோடிக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதலுக்குப்பின் 2005–2006–ல் பணிகள் நடைபெற உள்ளன.

2004–2005–ல், 22 மாவட்டத் தலைநகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ள கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டது. விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயலாக்கப்படும். இது தவிர பாதாள சாக்கடைத் திட்டமானது சென்னை பெருநகர் பகுதிக்குட்பட்ட நகராட்சிகளில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின்மூலம் இத்திட்டம் செயலாக்கப்பட உள்ளது. இதற்கான விரிவான திட்டம் தயாரிக்கப்படும்.

**தெரு விளக்குகள்**

இரண்டாவது மாநில நிதி ஆணையம் தனது அறிக்கையில் தெருவிளக்கு அமைக்கும் பணி 17 சதவீதம் குறைவாக உள்ளது எனத் தெரிவித்துள்ளது. இதனை இரண்டு மூன்று ஆண்டுகளில் புதிய விளக்குகள் அமைத்து ஈடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தெரு விளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணியினை தனியார் வசம் ஒப்படைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது 3 மாநகராட்சிகள் மற்றும் 18 நகராட்சிகளில் தெருவிளக்குப் பராமரிப்பு பணிகள் தனியார் நிறுவனம்மூலம் நடைபெற்றுவருகிறது. மேற்கண்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இத்திட்டம் குறைந்த செலவில் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினை ஏனைய மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளிலும் மற்றும் இத்திட்டத்தினை மேற்கொள்ள விரும்பும் இதர நகராட்சிகளிலும் விரிவு படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தெரு விளக்கு உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதில் தரக் கட்டுப்பாட்டு விதிகள் கடைபிடிக்கப்படுவதால் மின்சக்தி சேமிப்பு செய்யப்படுவதுடன் பொதுமக்கள் புகார்கள் இல்லாமல் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு 30 மீட்டருக்கும் ஒரு மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்கு என்ற திட்டத்தின் குறிக்கோளை அடைய நிதி ஆதார வசதியைப் பொறுத்து 2004–2005–ல் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் 10,284 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில் 12,000 புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படும்.

**மின்னணு ஆளுகை**

நகராட்சி நிர்வாக அமைப்புகள் செயல்பாடுகளைத் திறமை மிக்கதாக ஆக்கி, பொதுமக்களுடன் தொடர்பினை மேம்படுத்தல் மின்னணு ஆளுகையின் முக்கிய குறிக்கோளாகும். மின்னணு ஆளுகை சம்பந்தமாக தேவையான உட்கட்டமைப்பு தகவல் தொழில்நுட்ப மனித ஆற்றலை மேம்படுத்துதல், செயல்படுத்தக்கூடிய அடிப்படை விவரங்களை ஏற்படுத்துதல், உள் பரவல் வலைதளம் மற்றும் பரந்த பரவல் வலைதளம், இணையதளம் மற்றும் கணினி பயிற்சி ஆகியவை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

வருவாய் இனங்கள் (சொத்துவரி, குடிநீர்க் கட்டணம், வரியில்லாதவை, தொழில்வரி, காலி மனைவரி) கணினிமயமாக்கப்பட்டுள்ளது. சிட்டா செயல்முறைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இயல்பு கணக்குகள் கணினிமயமாக்கப்பட்டு சிட்டா மற்றும் அனைத்து வருவாய் இனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ், விற்பனை உரிமங்கள் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன. பொறியியல் மென்பொருள் உருவாக்கப்பட்டு மதிப்பீடு தயாரித்தல், ஏல மதிப்பீடு செய்தல், ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் முடிவு அறிக்கை போன்றவைகள் நிறுவப்பட்டுள்ளன. கட்டட வரைபடம், திடக்கழிவு, சொத்துக்கள், பொருள் விவரப் பட்டியல் குறித்த மேலாண்மை தகவல் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படை தகவல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.





அனைத்து நகராட்சிகள் (102) மற்றும் மாநகராட்சிகளுக்கு (5) இணையதளம் வடிவமைக்கப்பட்டு தேசிய தகவல் மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்களுக்கிடையே உள் பரவல் வலைதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து நகராட்சிகளை அந்தந்த நகராட்சிகளுக்கான மண்டல அலுவலகங்களுடன் பரந்த பரவல் வளைதளம் மூலம் இணைக்கப்படும்.

கணினி பயிற்சி 3500 அலுவலர் / பணியாளர்களுக்கு 1999 முதல் 2004 வரை வழங்கப்பட்டது. மேலும் 550 பொறியியல் பணியாளர்களுக்கு, பொறியியல் மென்பொருளில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிகளுக்குப் பின்னர் உள்ளாட்சி அமைப்புக்களின் பணியாளர் மற்றும் அலுவலர்கள் கணினியைப் பயன்படுத்தும் திறன் 10 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**சேவை மையம் (இ–சேவா மையங்கள்)**

பொதுமக்கள் தங்கள் வரியைக் கட்டுவதற்கும், சான்றிதழ்களைச் சுலபமாகப் பெறுவதற்கும் 252 கணினி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்கள் வரி செலுத்துபவர்களுக்கு வசதியாக அருகில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதைத் தவிர 73 வங்கிக் கிளைகளுக்கு மக்களிடமிருந்து பாதுகாப்பான மற்றும் துரித சேவை மூலம் வரிகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மின்னணு ஆளுகை ஏற்படுத்தப்பட்ட பின்னர் வரி வசூலின் செயல்பாடு அதிகரித்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மக்களுக்கு துரித மற்றும் உரிய சேவை அளிக்க முடிகிறது. இதனால் ஆள் திறனுக்காகச் செலவாகும் தொகை குறைந்துள்ளது. இதனால் நம்பகத்தன்மை அதிகரித்துள்ளதால் உள்ளாட்சி அமைப்புகளின் சேவையை நம்ப முடிகிறது. இதனால் பொதுமக்களுக்கு நிறைந்த சேவை செய்ய முடிகிறது. இறுதியாக மின்னஞ்சல் மூலம் விரைவாக உள்தொடர்பு ஏற்படுவதுடன் காகிதத்தொடர்பு குறைந்துள்ளது. இது உள்ளாட்சி அமைப்புகளின் மின்னணு ஆளுகையில் அடுத்த தலைமுறை சீர்திருத்தங்களைக் கொண்டுவர நிர்வாகத்திற்கு நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3-ன்கீழ் தகவல் தொழில்நுட்பத்தின் அடுத்த தலைமுறை செயல்களான வேலைசார்ந்த மேலாண்மை அமைப்பு, ஒளி, ஒலி கலந்தாய்வினை முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்துதல், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு புவியியல் தகவல் அமைப்பு, தகவல் அமைப்பு, தணிக்கை பாதுகாப்பு மற்றும் செயல்படுத்தும் மென்பொருள் பாதுகாப்பு ஆகியவற்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நகர்ப்புற வறுமை குறைப்பு திட்டம்**

**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

நகர்ப்புற ஏழை மக்களின் வறுமையை ஒழிப்பது ஒரு சவாலாக திகழ்கிறது. 1997–1998 முதல் 2003–2004 முடிய உள்ள கால அளவில் மைய அரசு ரூ.86.31 கோடியும், மாநில அரசு தனக்குரிய பங்காகிய ரூ.60.35 கோடியும் இத்திட்டத்திற்கு விடுவித்துள்ளது. இந்த இரு அரசுகளும் வழங்கிய மொத்த தொகையாகிய ரூ.146.66 கோடியில் ரூ.141.76 கோடி பயன்படுத்தப்பட்டு கீழ்க்கண்ட வகையில் நகர்ப்புற ஏழை மக்களுக்குப் பயனளித்துள்ளது:

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க 24,229 பேருக்கு தனிநபர் மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 8,270 மகளிருக்கு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குழுவாக தொழில் செய்ய மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.

12,048 நகர்ப்புற ஏழைகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 64.31 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டுக்கு மைய அரசு ரூ.5.11 கோடியும், மாநில அரசு ரூ.1.70 கோடியும் விடுவித்துள்ளது. இத்தொகையின்மூலம், 2952 பேருக்கு தனிநபர்க்கான மர்னியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 710 மகளிருக்கு மானியத்துடன்கூடிய குழு கடன வழங்கப்பட்டுள்ளது. தனி நபர் ஒருவருக்கு ரூ.2,000/– என்ற அளவில் 8,857 நகர்ப்புற ஏழைகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கூலிக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறிய வடிகால் கட்டுதல், தடுப்புச் சுவர் கட்டுதல், சத்துணவு மையங்கள் கட்டுதல், சாலைகள், நடைபாதைகள், பூங்காக்கள், மழைநீர் சேகரிப்பு



அமைப்புகள் போன்ற பணிகள் எடுக்கப்பட்டதன்மூலம் 78,333 மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

2004–ல் நகர்ப்புறத்தில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்கள் குறித்து விரிவான கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் விவரம் பின்வருமாறு:—

| | கணக்கெடுப்பு 1998 | கணக்கெடுப்பு 2004 |
|---|---|---|
| மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை | 22,35,650 | 35,14,073 |
| வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை | 9,52,592 | 11,14,040 |
| விழுக்காடு | 43 | 32 |

**மாநில நகர்ப்புற மேம்பாட்டு முகமை**

மாநில நகர்ப்புற மேம்பாட்டு முகமை 2004 ஆம் வருடம் அமைக்கப்பட்டு சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட கால வரையறைக்குள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், அனைத்து நகர்ப்புற ஏழை மக்களையும் அடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில நகர்ப்புற மேம்பாட்டு முகமையில் எடுக்கப்பட்ட முக்கிய கொள்கை முடிவுகள் மற்றும் அதன் தொடர் நடவடிக்கைகளாவன:—

அனைத்து நகரங்களிலும் வறுமைக் குறைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதில் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொண்டு செயல்பட சுகாதார அலுவலர்/துப்புரவு அலுவலரைத் தலைவராகக் கொண்ட நகர்ப்புற மேம்பாட்டு வறுமைக் குறைப்பு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், அனைத்து மாவட்டங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் அனைத்து துறைகளுடன் ஒருங்கிணைந்து நலத் திட்டங்களை செயல்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது.

**"வாம்பே–நிர்மல் பாரத் அபியான்"** திட்டத்தின்கீழ் பயன்பெற சுய உதவிக் குழுக்கள் அமைக்கும்போது சிறப்பினமாகத் துப்புரவுப் பணியாளர்களையும் சேர்த்து குழுக்கள் அமைத்திட ஆவன செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி வணிக வளாகங்கள், சந்தை, பேருந்து நிலையம் மற்றும் நகரின் முக்கியப் பகுதிகளில் பொது ஏலம் தவிர்த்து நிர்ணயிக்கப்பட்டக் கட்டணத்தில் கடைகள் ஒதுக்கீடு செய்ய ஆவன செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களை கண்டறிய ஒவ்வொரு ஆண்டும் கணக்கெடுப்பு நடத்தவும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் மாறுதல்களைப் பதிவு செய்யவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் *2005–2006* ஆம் ஆண்டு சுய தொழில் தொடங்க தெரிவு செய்யப்பட்ட பெண் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மூலம் கடனுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்குழு உறுப்பினர்களுக்குத் திறமைக்கேற்ற பயிற்சி சம்பந்தப்பட்ட நகராட்சி வழங்கும். மேலும் அனைத்து அண்டைவீட்டுக் குழுக்களையும் சுய உதவிக் குழுக்களாக மாற்றி திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், *1,500* சுய உதவிக் குழுக்களுக்கு *2005–2006*–ல் நிதியுதவி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் மைய அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், வடிகால் கட்டுதல், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு அமைத்தல், சமுதாய கழிப்பிடம் கட்டுதல், ஒருங்கிணைக்கப்பட்ட துப்புரவுப் பணி செய்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு மையங்கள் உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், குடிசைப் பகுதிகளை மக்கள் வாழ்வதற்கு ஏற்ற குடியிருப்பாக மாற்றவும் இத்திட்டத்தின்மூலம் அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. *1999–2000* முதல் *2003–2004* முடிய உள்ள கால அளவில் நகராட்சி மற்றும் மாநகராட்சியிலுள்ள *650* குடிசைப் பகுதிகளில் ரூ.*113.22* கோடி செலவில் அடிப்படை வசதிகளுக்கானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. *2004–2005*–ல் இத்திட்டத்திற்கு ரூ.*54.57* கோடி ஒதுக்கப்பட்டது. *2005–2006* ஆம் ஆண்டு ரூ.*54.17* கோடி செலவில் அடிப்படை வசதிப் பணிகள் குடிசைப் பகுதிகளில் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



**வால்மீகி அம்பேத்கர் அவாஸ் யோஜனா (நிர்மல் பாரத் அபியான்)**

வாம்பே-நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழ் *10* இருக்கைகளுடன்கூடிய சுகாதார வளாகங்கள் கட்டத் திட்டமிடப்பட்டது. ஒவ்வொன்றின் மதிப்பீடு ரூ.*4.00* இலட்சம் ஆகும். அதன்படி *2004–2005*–ல் *905* சுகாதார வளாகங்கள் ரூ.*36.20* கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. *2005–2006*–ல் இதுபோன்று *1,000* சுகாதார வளாகங்கள் மைய அரசின் நிதி உதவியுடன் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம், மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். ஐந்து இலட்சத்திற்குக்கீழ் மக்கள்தொகை கொண்ட நகரங்களை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் வருவாய் தரத்தக்க திட்டங்களான சந்தை மேம்பாடு, வணிக வளாகம், பேருந்து நிலையம், டிரக் நிறுத்துமிடம் ஆகிய திட்டங்களுக்கு கடன் அடிப்படையிலும், வருவாய் வராத சேவை திட்டங்களான சாலை அமைத்தல், தெரு விளக்கு அமைத்தல், மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்துதல் முதலிய திட்டங்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்படுகிறது. *2005–2006* ஆம் ஆண்டிற்கு ரூ.*30.00* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து ரூ.*45.00* கோடி நிதியுதவி பெறப்படும்.

**பெரு நகரத் திட்டம்**

பெரு நகரத் திட்டம் மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்மூலம் சென்னை மாநகரைச் சுற்றி அமைந்துள்ள நகராட்சிகளின் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், குடிநீர் வசதி, சாலை அமைத்தல், பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. *2005–2006* ஆம் ஆண்டில் ரூ.*38.93* கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், இத்திட்டத்திற்கு மைய அரசின் பங்குத் தொகையும் பெறப்படும்.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–3

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்பட்டு வந்த தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–2 தற்போது முடிவுக்கு வந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்ட முதலீடுகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆற்றலை வளர்த்துக்கொள்வதற்கான நிறுவன மேம்பாட்டுத் திட்டங்கள், 1992 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட நகர்ப்புற சீர்திருத்தங்களின் செயல்முறைகள் ஆகியவை குறிப்பிடத்தக்க மற்றும் நல்ல பயன்களை ஏற்படுத்தியுள்ளன. இதே நிலையினை நிலைப்படுத்தவும், சாதனைகளை ஒருங்கிணைக்கவும் ஏற்கெனவே உள்ள திட்டங்களின் மூலம் பெறப்பட்ட பயன்களை நிலை நிறுத்திக்கொள்ளவும், மேலும் வலுப்படுத்தவும், ஆற்றல்களின் நிலையினை உயர்த்தவும் இதுவரை ஏற்படுத்தியுள்ள அறிவுத்திறன் மற்றும் அடுத்த தலைமுறைக்கான நகர்ப்புற சீர்திருத்தங்களின் ஆதரவிற்கும் நகர்ப்புற உட்கட்டமைப்புக்களை அதிகரிக்கவும் நகர்ப்புற வறுமையைக் குறைப்பதற்கும், ஐந்தாண்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–3,300 மில்லியன் டாலர் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உள்கட்டமைப்புகளின் முதலீட்டுக்கான ஆதாரங்களை திரட்டும் பணி இத்திட்டத்தின்கீழ், 2005 டிசம்பர் இறுதிக்குள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–2–ன் மூலம் தொடங்கப்பட்ட ஆற்றல் வளர்ப்புத் திட்டங்களை விரிவுபடுத்தப்படுவதாலும் மற்றும் பன்முகப்படுத்துவதாலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரம் வலுப்படுத்தப்படும்.

### தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்

தமிழக அரசு நகர்ப்புற அமைப்புகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக கோயம்புத்தூரில், தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனத்தினை ஏற்படுத்தியுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்த அனைத்துப் பிரிவுப் பணியாளர்களுக்கு பணியிடைப் பயிற்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளித்தல், சிறப்பு கொள்கை சம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொள்ளுதல் மற்றும் கலந்தாய்வுகள் நடத்துதல் இப்பயிற்சி நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். இப்பயிற்சி நிறுவனத்தை மத்திய அரசாங்கம் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்குரிய பயிற்சிகள் அளிப்பதற்கும் தகவல், கல்வி மற்றும் செய்தி பற்றிய



விவரங்கள் தயாரிக்கவும் மாநில அளவிலான முக்கிய முகமையாக அங்கீகரித்துள்ளது.

2005–2010 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுக் காலத்திற்கு இப்பயிற்சி நிறுவனம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–3 உடன் இணைந்து செயல்படும். இதன்மூலம் ஆண்டுதோறும் 20 அடிப்படைப் பயிற்சிகள், 30 இடைநிலை பயிற்சிகள் மற்றும் 12 சிறப்புப் பயிற்சிகள் ஒவ்வோர் ஆண்டும் மேற்கொள்ளப்படும்.

### புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பள்ளிக் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பள்ளிகளில், 1,843 சத்துணவு மையங்கள்மூலம் 3,70,802 குழந்தைகள் பயன் அடைகின்றனர். 2004–2005 ஆம் ஆண்டில், சத்துணவு மையங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூ.8.04 கோடி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் 1,187 மையங்களில் பழுதுபார்ப்புப் பணிகள் முடிவுற்றுள்ளன. மேலும் 35 மையங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.2.70 கோடி ஒதுக்கப்படுவதன்மூலம் 383 சத்துணவு மையங்கள் பழுதுபார்க்கப்படும்.

### ஆழிப்பேரலையும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும்

கடந்த 2004–ல் டிசம்பர் 26 ஆம் தேதியில், இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உண்டான ஆழிப்பேரலைகளால் கடற்கரையோர பகுதிகளான நாகப்பட்டினம், வேதாரண்யம், கடலூர், குளச்சல், திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் பகுதிகள் அதிகமாக பாதிக்கப்பட்டன. இப்பேரலைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்செய்ய உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மிகவும் விரைவாக பாதிக்கப்பட்ட இடங்களுக்கு ஆட்கள் மற்றும் பொருட்கள் மற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து அனுப்பப்பட்டன. இத்தருணத்தில் மற்ற நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பாதிக்கப்பட்ட நகராட்சிகளுக்குத் தேவைக்கு அதிகமான பொருட்கள், மருந்துகள் அனுப்பப்பட்டன. உயர் அலுவலர்கள் முகாமிட்டு ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. போர்க்கால அடிப்படையிலான நிவாரணப் பணிகளை சம்பந்தப்பட்ட நகராட்சிகள் செயல்படுத்தியது. பாதிக்கப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் கூட்டு முயற்சி மற்றும் தன்னம்பிக்கையால் இச்சவாலான சூழ்நிலையை எதிர்கொண்டன. ஒருங்கிணைப்பு அதிகாரியின் வழிகாட்டுதலின்படி துப்புரவுப் பணியாளர்கள் மிகச் சிறப்பான

[2005 ஏப்ரல் 7

பணியைச் செய்தனர். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பாதிக்கப்பட்ட பகுதியில் மேற்கொண்ட சிறப்பான பணியினை அனைவரும் பாராட்டத்தக்க வகையில் குறிப்பாக இறந்துபோன சடலங்களைக் கண்டுபிடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் அதனை மொத்தமாக புதைக்குழிக்குள் எரியூட்டியது போன்ற பணிகளை மேற்கொண்ட 3,861 துப்புரவுப் பணியாளர்கள் ஆற்றிய பணியைப் பாராட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதிப்பூதியமாக ஒவ்வொருவருக்கும் ரூ. 2,500/– அளிக்க உத்தரவிட்டார். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மிகக் குறுகிய காலத்தில் சுனாமி பாதித்த பகுதிகளில் மேற்கொண்ட பொது சுகாதாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் சாலைகளின் மறுசீரமைப்புப் பணிகள் ஆகியன அனைவராலும் பாராட்டப்பட்டது. சுனாமி பாதித்த பகுதிகளில் மறுசீரமைப்பிற்காக 6 நகராட்சிகளால் ரூ. 1.03 கோடி செலவு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டோருக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிக்காக ரூ. 53.00 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிதி உதவியைப் பெற பல்வேறு நிதி நிறுவனங்களுக்குக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளன. இப்பணிகள் 2005–2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

## சென்னை மாநகராட்சி

### என்றென்றும் சென்னை – ஒரு புதிய திட்டம்

சென்னை மக்களின் ஈடுபாடு மற்றும் பங்கேற்பினை துரிதப்படுத்தி, சென்னை மாநகரின் வளர்ச்சிக்காக "என்றென்றும் சென்னை" – ஒரு புதிய திட்டம் (Chennai Forever Initiative) என்ற இயக்கத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். சென்னை மாநகரை அழகுபடுத்துதல் மற்றும் திட்டங்களை முறைப்படுத்திட, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் வழிகாட்டல் மூலம் இம்மாநகரை அழகு நகரமாக மாற்றுவதற்கு நல்ல திட்டங்கள் திட்டப்படுகின்றன.

சென்னை மாநகரை தூய்மை மற்றும் பசுமை நகரம் ஆக்குவதற்காகச் சென்னை மாநகராட்சி பல நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. மேலும், நகரச் சாலைகள் மேம்படுத்தப்பட்டன. நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ. 209.40 கோடி செலவில் மூலதனப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 7]

### சாலைகள்

2004–2005 ஆம் ஆண்டில் 595 கி.மீ. நீளமுள்ள உட்புறச் சாலைகள் ரூ. 75.80 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டன. ரூ. 14.89 கோடி செலவில் 52.26 கி.மீ. நீளமுள்ள பேருந்து சாலைகள் மேம்படுத்தப்பட்டன. மேலும் நடைபாதைகள் 107.20 கி.மீ. நீளத்தில் ரூ. 5.39 கோடி செலவில் அமைக்கப்பட்டன.

2005–2006 ஆம் ஆண்டில் உட்புறச் சாலைகள், நடைபாதைகள் மற்றும் பேருந்து சாலைகளை மேம்படுத்த ரூ. 106.30 கோடி செலவிடப்படும்.

### பாலங்கள்

சென்னை மாநகரில் வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு ஏதுவாக பாலங்கள், சுரங்கப்பாதைகள் ஆகியவை ரூ.22.60 கோடி செலவில், 2005–2006 ஆம் ஆண்டில் கட்டப்படும். ஐந்து இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் / இரயில்வே சுரங்கப்பாதைகள் அமைக்கும் திட்டம் 2005–2006 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும். இதனால் மாநகரில் இருப்புப்பாதை சந்திக்கடவுகளில் போக்குவரத்து நெரிசல் குறைக்கப்படும்.

### திடக்கழிவு மேலாண்மை

சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட குப்பைகளைப் பிரித்து வழங்கும் திட்டம், மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றமையால் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டது. தற்போது இத்திட்டம் அனைத்து பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களை மேம்படுத்த உட்புற ஓடுதளங்கள் அமைத்தல், சுற்றுச்சுவர் கட்டுதல், உயர்கோபுர மின் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன. ரூ. 5.25 கோடி செலவில் குப்பையை எருவாக மாற்ற ஒரு இயந்திர எரு தொழிற்சாலை அமைக்கப்படும். திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக 2005–2006 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.10.10 கோடி செலவு செய்யப்படும்.

### பூங்கா

2004–2005 ஆம் ஆண்டில் 97 பூங்காக்கள், 31 சாலையோரப் பூங்காக்கள், 12 சாலை தீவுப் பூங்காக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அடையாறு பகுதியில் "எக்கோ பார்க்" அமைக்கும் பணி நடைபெற்று

வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 28 பூங்காக்கள், 30 சாலையோர பூங்காக்கள், 5 சாலை தீவுப் பூங்காக்கள் புதிதாக உருவாக்கப்படும். சென்னை மாநகருக்கு உட்பட்ட சாலைகளின் இரு புறங்களிலும் நன்கு வளர்ந்த 10,000 மரக்கன்றுகள் நடப்படும்.

2005–2006 ஆம் ஆண்டில், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.7.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கல்வி

2004–2005 ஆம் ஆண்டில் 80 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில் 400 வகுப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் 30 உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் அமைக்கப்படும். அனைத்துப் பள்ளிகளிலும் கழிப்பறைகள் கட்டும் திட்டம் மற்றும் குடிநீர் வசதி செய்யப்படும் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும். ரூ.2.00 கோடி செலவில் பள்ளிகளுக்குத் தேவையான இருக்கைகள் வாங்கப்படும். அனைத்துத் தொடக்கப் பள்ளிகளில் குழந்தை மைய செயல்பாடுகளுடன் கூடிய தானே கற்றல் அணுகுமுறையை ஊக்குவிக்க ரூ. 40/– இலட்சம் செலவில் கற்றல் முறை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் குழந்தை மைய செயல்பாடுகளுடன்கூடிய அணுகுமுறை 2005–2006 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படும்.

### பொதுச் சுகாதாரம்

மலேரியா பரப்பும் கொசுக்களை ஒழிக்கவும், நீண்டகால திட்டமாக, மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் கிணறுகளில் கொசு புகாவண்ணம் மூடி வைக்க தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்தினை வலுப்படுத்த, தெளிப்பான்கள்மூலம், மருந்து தெளிக்கப்பட்டும், புகை அடித்தும், கொசுத் தொல்லை கட்டுப்படுத்தப்படும். மேலும், 2005–2006 ஆம் ஆண்டில் 6 வாயு எரிமேடைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### தாய்-சேய் நலம்

தாய்–சேய் நலனை புதிய உத்வேகத்துடனும் வலுவுடனும் கவனிக்க மாநகராட்சி உறுதி பூண்டுள்ளது. தாய்–சேய் இறப்பு மற்றும் இரத்தம் வெளியேறி மயக்கமடைவதை குறைக்க இரண்டு மருத்துவமனைகளில்



24 மணி நேர பேறுகால அவசரப் பிரிவு தொடங்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. கருச் சிதைவு மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை இரண்டு மருத்துவமனைகளில் தேவையின் அடிப்படையில் செய்யப்படுகிறது. பேறுகால பெண் துணைத் திட்டம் கடந்த வருடம் தொடங்கப்பட்டது.

### வருவாய் திரட்டு

2003–2004 ஆம் ஆண்டு சொத்து வரி இதுவரை இல்லாத அளவிற்கு அதிகமான அளவாக ரூ. 206.61 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர தொழில் வரியும் ரூ. 29.48 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டு இவ்வரி வசூல் கடந்த ஆண்டு வசூலை விஞ்சுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது சொத்து உரிமையாளர் 110–க்கும் மேலான பல வணிக வங்கி கிளைகளில் சொத்து வரியினை செலுத்தலாம்; மற்றும் 10 மண்டல அலுவலகங்களிலும் செலுத்தலாம். அடுத்த கட்டமாக ஆன்–லைன் வங்கிகள் மூலமாக சொத்து வரி வசூல் செய்யப்படும் பணி 2005–2006 ஆம் ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

## மதுரை மாநகராட்சி

### சாலைகள்

நடப்பு ஆண்டில் ரூ.23.20 கோடியில் முக்கிய சாலைகளை புதுப்பிக்கவும் மற்றும் பாதாள சாக்கடைத் திட்ட செயலாக்கத்தினால் பழுதடைந்த சாலைகளை புதுப்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### குடிநீர் வழங்கல்

நடப்பு ஆண்டில் பழுதடைந்த குடிநீர் விநியோக பிரதான குழாய்களை புதுப்பிக்கவும் மற்றும் விரிவாக்கப் பகுதிகளுக்கு, புதிய குடிநீர் விநியோக பிரதான குழாய் அமைக்கவும் ரூ.2.44 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

### திடக்கழிவு மேலாண்மை

ரூ.11.30 கோடி செலவில் உரக்கிடங்கினை மேம்படுத்தவும் மற்றும் சேகரித்து வைக்கப்பட்ட கழிவுகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 7

**பள்ளிக் கல்வி**

மாநகராட்சி பள்ளியின் கல்வித் தரத்தை மேம்படுத்த ஒவ்வொரு மண்டலப் பகுதிகளிலும் தலா ஒரு பல்வகை கணினி மையம் ஏற்படுத்தவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் ரூ. 3.20 கோடி செலவு செய்யப்படும்.

**பொதுச் சுகாதாரம்**

ரூ.3.05 கோடி செலவில் அனைத்து மருத்துவ வசதிகளும் கொண்ட 24 மணி நேர மருத்துவமனை மேற்கு மண்டல பகுதியில் ஏற்படுத்தப்படும். கிழக்கு மண்டலப் பகுதியில் உள்ள மகப்பேறு மருத்துவமனை 24 மணி நேர மருத்துவமனையாக மாற்றப்படும். மேலும், புதியதாக 24 மணி நேர மருத்துவமனை ஒன்றை வடக்கு மண்டலம் கே. புதூர் பகுதியில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**அங்காடி**

மாநகரின் மையப் பகுதியிலுள்ள பழைய சென்ட்ரல் மார்க்கெட்டை வேறு இடத்தில் மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டு, தற்போது காய்கறி வியாபார சங்கத்தினரால் புதிய இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இடமாற்றம் செய்யப்படும் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ. 0.50 கோடி செலவிடப்படவுள்ளது.

**குடிநீர் விநியோகம்**

ஆற்றின்மூலம் இம்மாநகராட்சிக்கு, தண்ணீர் கொண்டு வருவதால் ஆவியாதல் மற்றும் வழிப்புற விவசாயிகள் பம்புசெட்டுகள்மூலம் உறிஞ்ப்படுவதாலும் தண்ணீர் வீணாவதைத் தடுப்பதற்காக, நேரடியாக குழாய்கள்மூலம் தண்ணீர் கொண்டுவர ரூ. 62.69 கோடி செலவில் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றுள்ளன. இதற்காக ரூ.10.00 கோடி 2005–2006 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தெரு விளக்குகள்**

2005–2006 ஆம் ஆண்டில் ரூ.2.16 கோடி செலவில் சோடியம் ஆவி விளக்குகள், உயர்கோபுர விளக்குகள், பூங்கா அலங்கார விளக்குகள் மற்றும் தானியங்கி ஆன்/ஆப் சுவிட்சுக்கள் அமைக்கப்படும்.



2005 ஏப்ரல் 7]

**சுரங்கப் பாதை**

தெற்கு வெளி வீதி – செயின்ட் மேரீஸ் பள்ளி சந்திப்பில் ரூ. 0.45 கோடி செலவில் சுரங்க நடைபாதை அமைக்கப்படவுள்ளது.

**சத்துணவு மையங்கள்**

நடப்பாண்டில் 133 சத்துணவு மையங்களைப் பராமரிப்பு செய்ய ரூ.0.43 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

மதுரை மாநகராட்சியில் பாதாளச் சாக்கடை இல்லாத பகுதிகளில் புதிய பாதாளச் சாக்கடை அமைக்க தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ரூ.165.00 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் முதல் கட்டப் பணியாக 19 வார்டுகளில் ரூ. 42.53 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டப் பணியாக ரூ. 70.25 கோடியில் 15 வார்டுகளில் பணிகள் 2005 ஆம் ஆண்டு முடிவடையும். மீதமுள்ள பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்**

ரூ. 0.98 கோடி செலவில் 'யாத்ரீ நிவாஸ்' அமைக்கப்படவுள்ளது.

**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

இம்மாநகராட்சியில் தற்போது உள்ள பாதாளச் சாக்கடைத் திட்டங்களில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடு ரூ.168.00 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் யாவும் விரைவில் துவக்கப்பட உள்ளன.

**குடிநீர் விநியோகம்**

தற்போது இயங்கிவரும் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்த குடிநீர் விநியோக பழைய பிரதான குழாயினைப் புதுப்பிக்க ரூ. 1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உக்கடம் பகுதியில் சுரங்கப்பாதை அமைத்தல்**

ரூ.1.00 கோடியில் உக்கடம் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக சுரங்க நடைபாதை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வணிக வளாகம் கட்டுதல்**

ஆர்.எஸ்.புரம் பகுதியிலுள்ள டி.பி.சாலையில் காலியாக உள்ள மாநகராட்சி இடத்தில் புதியதாக வணிக வளாகம் கட்ட ரூ. 1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிகளுக்கான அடிப்படை வசதிகள்**

மாநகராட்சியின் அனைத்து பள்ளிகளுக்கும் அடிப்படை வசதி மற்றும் அத்தியாவசிய வசதிகளான கூடுதல் வகுப்பறைகள், கழிவறை வசதிகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் வாங்க ரூ. 3.70 கோடி செலவு செய்யப்படவுள்ளது.

**மின்னணு ஆளுகை**

நடைமுறையில் உள்ள மின்னணு ஆளுகையை மேம்படுத்த ரூ. 0.50 கோடி செலவு செய்யப்படவுள்ளது.

**சாலைகள்**

இம்மாநகராட்சி 690 கி.மீ. சாலைகளைப் பராமரித்து வருகிறது. சாலைகளை நன்முறையில் பராமரிப்பதற்காக 2005–2006 ஆம் ஆண்டில் ரூ. 6.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின் மயானம் கட்டுதல்**

கவுண்டம்பாளையம் மற்றும் சிங்காநல்லூர் பகுதியில் ஒரு நவீன மின் மயானம் ரூ. 1.50 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை**

வெள்ளலூர் உரக்கிடங்கின் மேம்பாட்டிற்காக, குப்பை சேகரம் செய்யும் வாகனங்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் ரூ. 5.78 கோடி நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.



**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**

**திடக்கழிவு மேலாண்மை**

திடக்கழிவு மேலாண்மையைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு புதிய வாகனங்கள் வாங்குவதற்காகவும் மற்றும் உரக்கிடங்கினை மேம்படுத்தவும் ரூ.8.46 கோடி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் "பயோ–மெத்தனேஷன்" நிலையம் அமைப்பதற்குக் கொள்கை அளவில் அரசு அனுமதி அளித்துள்ளது.

**சுகாதாரம் மற்றும் பொது நலன்**

அனைத்து வசதிகளும் கொண்ட 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனை ஒன்றினை கட்ட ரூ. 0.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

**பள்ளிக் கட்டடம் மற்றும் சத்துணவு மைய பராமரிப்பு**

கூடுதல் வகுப்பறைகள், பரிசோதனைக் கூடம், கணினி மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற அனைத்து வசதிகளும் கொண்ட நான்கு மாதிரிப் பள்ளிகள் கோட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம், நான்கு கோட்டங்களில் ரூ.2.00 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது. சத்துணவு மையங்களைப் பராமரிப்பதற்காக ரூபாய் 0.90 கோடி செலவு செய்யப்படவுள்ளது.

**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், இம்மாநகராட்சியில் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி அளித்து, சுயதொழில் புரிவதற்கு உதவி செய்து வருகிறது. இதனடிப்படையில் இந்த ஆண்டு இம்மாநகராட்சியில் 500 நகர்ப்புற ஏழைகளுக்கு சுய தொழில் தொடங்க கடனுதவி அளிக்கப்படும். இதில் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 100 பெண்கள் கொண்ட 10 குழுக்கள், கூட்டுத் தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்கப்படும். 250 நகர்ப்புற ஏழைகளுக்குத் தொழில் பயிற்சியளிக்கவும், ஒரு பயிற்சியாளருக்கு ரூ. 600/– வீதம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 60 சதவீதம் பெண்கள் உறுப்பினர்களாவர்.

[2005 ஏப்ரல் 7

**மரம் நடுதல்**

2005–2006 ஆம் ஆண்டில் இம்மாநகராட்சி பகுதிகளில் 25,000 மரக்கன்றுகள் நடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பேருந்து நிலைய மேம்பாடு**

தற்போதுள்ள பேருந்து நிலையத்தினை மேம்படுத்த 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.3.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் இப்பணிக்காக இரயில்வே துறையிடமிருந்து நிலம் வாங்குவதற்காக ரூ.2.00 கோடி ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**குடிநீர் விநியோகம்**

2005–2006 ஆம் ஆண்டில் ஸ்ரீரங்கம் பகுதியில் ரூ.3.00 கோடி செலவினத்தில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இப்புதிய திட்டப் பணிக்காக மொத்த செலவுத் தொகை ரூ.7.90 கோடி ஆகும்.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.132.00 கோடி செலவில், செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் இவ்வாண்டில் முடிக்கப்படும். இத்திட்ட முடிவில், 25,000 வீடுகளுக்குப் புதிய குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்படும்.

## சேலம் மாநகராட்சி

**சாலை வசதிகள்**

இம்மாநகராட்சி 649 கி.மீ. நீளமுள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் குறுகிய தெருக்களைப் பராமரித்து வருகிறது. நடப்பாண்டில் ரூ. 5.40 கோடி மதிப்பீட்டில் சாலைகளைப் பராமரிக்க மற்றும் மேம்படுத்தும் வகையிலான 106 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம்**

சேலம் மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, ரூ. 0.60 கோடி மதிப்பீட்டில் நகர் ஊரமைப்பு துறை நிதியுதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.



2005 ஏப்ரல் 7]

**திடக்கழிவு மேலாண்மை**

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தற்சமயம் உபயோகத்தில் உள்ள எருமாபாளையம், வீராணம் மற்றும் சூரமங்கலம் ஆகிய பகுதிகளிலுள்ள உரக்கிடங்குகளை, தற்காலிக உரக்கிடங்குகளாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் புதியதாக நவீன "உரக்கிடங்கு" அமைக்க மல்லமூப்பன்பட்டி கிராமத்தில் 19.4 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 2.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் 14 கோட்டங்களில் திடக்கழிவுகளை வீடுவீடாகச் சேகரித்து, மக்கும் கழிவு மற்றும் மக்காத கழிவுகள் எனத் தரம் பிரித்து, அப்புறப்படுத்தும் பணிகளைத் தனியார் வசம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**குடிநீர் விநியோகம்**

வளர்ந்துவரும் மக்கள் தொகையினைக் கணக்கில் கொண்டு, அனைத்து மக்களுக்கும் நன்முறையில் குடிநீர் வழங்க ஏதுவாக இம்மாநகராட்சிக்கென்று தனியாக குடிநீர்த் திட்டம் செயல்படுத்த திட்ட முன்மொழிவுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தயார் செய்யப்பட்டு வருகிறது.

மாநகராட்சியில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்குக் காவிரி குடிநீர் வழங்குவதற்கான அபிவிருத்தித் திட்டம் ரூ.24.84 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

இம்மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி சேவைக் கழகம் மூலம் தொழில்நுட்ப ஆலோசகர் நியமனம் செய்யப்பட்டு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்திற்கு தோராயமாக ரூ.196.00 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், இம்மாநகராட்சியில் 175 நகர்ப்புற ஏழைகளுக்கு கடனுதவி அளித்து சுய தொழில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 15 குழுக்கள் கூட்டுத் தொழில் தொடங்க 50 சதவிகித மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். 175 நகர்ப்புற ஏழைகளுக்குச் சிறுதொழில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பள்ளிக் கட்டடங்கள் மேம்பாடு**

இம்மாநகராட்சியில், 82 பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் 12 பள்ளிகளில் ரூ.1.03 கோடி செலவில் பழுதடைந்துள்ள கட்டடங்கள் அகற்றுதல் மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திருநெல்வேலி மாநகராட்சி**

**சாலைகள்**

பாதாளச் சாக்கடைத் திட்டம் செயலாக்கத்தின்போது பழுதடைந்த சாலைகளைப் புதுப்பிக்க 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்**

2005–2006 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக ரூ.6.62 கோடி புதிய வாகனங்களை வாங்குவதற்கும் மற்றும் உரக்கிடங்கு மேம்பாட்டு பணிக்காகவும் ஒதுக்கப்படவுள்ளது.

**தெரு விளக்குகள்**

தற்போது இம்மாநகராட்சியில் 16,548 தெரு விளக்குகள் உள்ளன. தெரு விளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் 01–11–2000 முதல் தனியாரிடம் விடப்பட்டுள்ளது. தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு தெரு விளக்குகளின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணி செம்மையாகவும், பொதுமக்களிடமிருந்து எந்தவித புகார்கள் இல்லாமலும் நடைபெற்று வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.0.20 கோடியில் 500 புதிய தெருவிளக்குகள் அமைக்கப்பட உள்ளன.





**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் சாலைகள், வடிகால்கள் மற்றும் பொதுக் கழிப்பிடம் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.3.48 கோடி திட்ட மதிப்பீட்டில் 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டம் வறுமை கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்க உதவி புரிகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.0.27 கோடி செலவில் 300 நகர்ப்புற ஏழைகளுக்கு உதவி அளித்து சுயத் தொழில் தொடங்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட உள்ளன. இதில் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

2005–2006 ஆம் ஆண்டில் தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.0.48 கோடி பயன்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் சாலைகள் அமைத்தல், வடிகால் கட்டுதல், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு அமைத்தல், சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டுதல், ஒருங்கிணைக்கப்பட்ட துப்புரவுப் பணி செய்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

**குடிநீர் வழங்கல்**

நீரேற்றும் திறனை அதிகரிப்பதற்காக, ரூ.1.25 கோடி செலவில் புதிய நீரேற்றுகள் (மின் மோட்டார்) வாங்கப்படும். அனைத்துத் தலைமை நீரேற்று நிலையங்களிலும் சிறந்த மேலாண்மைப் பணிக்காக நீர் அளவுமானி (Flow Meter) பொருத்தப்படும்.

**பாதாள சாக்கடைத் திட்டம்**

தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அரசின் ஒப்புதல் பெற்று நடைபெற்று வரும் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.66.00 கோடி மதிப்பீட்டில் டிசம்பர் 2005–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி

தமிழ்நாட்டில் நகர்ப்புறங்கள் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருவதால், தரமான உள்கட்டமைப்புகளை உருவாக்குவது இன்றியமையாததாகும். உள்கட்டமைப்பு முதலீட்டிற்கு தேவைப்படும் நிதிக்கும் தற்போதுள்ள நிதி வசதிக்கும் இடையில் உள்ள இடைவெளி குறைப்பதற்காக, மூலதனச் சந்தையுடன் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் தொடர்பினை ஏற்படுத்தவும் மற்றும் சந்தை நெறிமுறைகளை உணர்த்தும் வகையில், தமிழ்நாடு அரசு, ஒரு முன்னோடி நடவடிக்கையாக, பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாக ICICI, HDFC மற்றும் IL&FS பங்களிப்புடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியை உருவாக்கியது. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நிதி மேலாளராகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோள்கள்:-

(அ) நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு, நிதி அளிப்பதன் மூலம் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்

(ஆ) பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உள்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்

(இ) நகர்ப்புற ஏழைகளின் பிரச்சனைகளைத் தீர்க்க உதவும் வகையில் மானிய நிதியெனும் துணை திட்டத்தை செயல்படுத்துதல்

(ஈ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்

"தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம்" நகராட்சிகளுக்கு 75% நிதி வழங்கியதன் மூலம், அவை, நிரந்தர சொத்துக்களை, திட்ட காலத்திற்குள் உருவாக்குவதற்கு ஏதுவாக இருந்தமையால், உலக வங்கியின் கூற்றின்படி இந்நிதியம் ஒரு வெற்றிகரமான திட்டமாகும். இந்நிதியம் இதுவரை ரூ.1,070 கோடி மதிப்பிலான 192 திட்டங்களுக்கு ஒப்புதலும், ரூ.604.82 கோடியை கடனுதவியாகவும் வழங்கியுள்ளது. இந்நிதியம், வணிகத் திட்டங்களான வணிக வளாகம் மற்றும் சந்தை வளாகங்களுக்கும் மற்றும் சமுதாய நோக்குடைய திட்டங்களான குடிநீர்த் திட்டங்கள், மழைநீர் வடிகால், திடக்கழிவு நிர்வாகம் மற்றும்



பாதாளச் சாக்கடைகளுக்கு ஒப்புதலும், கடனுதவியும் அளித்துள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.344.27 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ரூ. 147.61 கோடியை கடன் உதவியாக வழங்கியுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.125.00 கோடி மதிப்பிலான நகர்ப்புறத் திட்டங்களுக்கு ரூ. 75.00 கோடி நிதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் – II

(அ) தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்-I (TNUDP-I)-ஐ பன்னாட்டு வளர்ச்சி முகாமின் நிதியுதவியுடன் நிறைவேற்றியது. இத்திட்டத்தினைத் தொடர்ந்து உலக வங்கியின் நிதியுதவியுடன் நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக TNUDP-II செயல்படுத்தப்பட்டது. இத்திட்டங்கள், உள்கட்டமைப்பிற்கு தேவைப்படும் நிதிக்கும் உள்நாட்டு மூலதன சந்தைக்கும் இணைப்பாக இருக்கிறது. இத்திட்டம் நவம்பர் 2004-ல் முடிவடைந்தது.

(ஆ) இத்திட்டத்தின் நிதி செயலாக்கத்தை மதிப்பீடு செய்த உலக வங்கி, இத்திட்டத்தை ஒரு நிறைவான திட்டமாக மதிப்பீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் வெற்றியினை மேலும் தொடர்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

## மூலதன சந்தைகளை அணுகல்

நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதி திரட்ட மூன்று விதமான புதிய வழிமுறைகளை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

(அ) முதலாவதாக, மதுரை மாநகராட்சியின் வருவாய்க் கடன் பத்திரங்கள் வெளியிட்டது ஆகும். இந்தியாவிலேயே மூலதன சொத்தினை உருவாக்க பெறப்பட்ட கடனை அடைக்க மாநகராட்சியின் பொது நிதியைப் பயன்படுத்தாது அந்த சொத்தின் மூலம் கிடைக்கும் வருவாயினை பயன்படுத்துவது இதுவே முதன்முறையாகும். இது தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தால் (TNUIFSL) அமல்படுத்தப்பட்டது. இதன் மதிப்பீடு ரூ. 29 கோடி ஆகும்.

(ஆ) இரண்டாவதாக, குடிநீர் மற்றும் சுகாதார பொதுநிதி (WSPF)-ஐ உருவாக்கியதன் மூலம் நகர்ப்புற அடிப்படைத் தேவைகளை ஒன்று திரட்டி வெளிச்சந்தையில் கடன் பெற உதவியது. சிறிய மற்றும் நடுத்தர நகராட்சிகள் தங்களின் நிதி

[2005 ஏப்ரல் 7

ஆதாரங்களின் அடிப்படையில் கூட்டாக மூலதன சந்தையை அணுக குடிநீர் மற்றும் சுகாதாரப் பொது நிதியை தமிழ்நாடு அரசு அமைத்தது. ரூ. 30.41 கோடிக்கான முதல் கடன் பத்திரங்களை வெளியிட்டதன் மூலம் நகர்ப்புற அமைப்புகள், தங்களின் கடன்களை அடைப்பதற்கு வேண்டிய நிதியில் பெருமளவு சேமித்து, அதனை பிற மேம்பாட்டிற்கு செலவழிக்க வழிவகை செய்தது. அமெரிக்க பன்னாட்டு வளர்ச்சி முகமை கடன் பத்திரங்கள் மூலம் திரட்டப்பட்ட அசல் தொகையில் 50 சதவீதம் வரைக்கும் காப்புறுதி அளித்தது. உள்கட்டமைப்பு நிதி திரட்ட மூன்றடுக்கிலான தேவைகளான நிறுவன அடிப்படையிலான அணுகுமுறை, குறைந்த செலவிலான கடனுதவி, காப்புறுதியில்லா வழிமுறை ஆகியவை குடிநீர் மற்றும் சுகாதார பொதுநிதியின் சாதனையாகும். 13 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இதில் பங்கேற்றுள்ளன. இப்பொது நிதி, இந்தியாவிலேயே முதலாவதாக உருவாக்கப்பட்டதாகும்.

(இ) சென்னை குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலதனச் சந்தையில் ரூ. 42 கோடிக்கான கடன் பத்திரங்களை வெளியிட தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் உதவி செய்துள்ளது. மூலதனச் சந்தையில் வரியில்லா கடன் பத்திரங்களை இவ்வாரியம் வெளியிடுவது இதுவே முதல் முறையாகும்.

## மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNUDP–III)

(i) உள்கட்டமைப்பிற்கு முதலீடு தேவைப்படும் நிதிக்கும் தற்போதுள்ள நிதி வசதிக்கும் இடையிலான இடைவெளியை குறைத்து நகர்ப்புற அடிப்படைத் தேவைகளின் தரம் மற்றும் அளவினை மேம்படுத்தி நிறைவான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி மற்றும் கடமைகளைப் பகிர்ந்தளிக்கும்பொருட்டு பெருமளவில் நகர்ப்புற சீர்திருத்தங்களை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான நிதித் தேவைகளைத் தொடர்ந்து அளிப்பதற்காக மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது.



2005 ஏப்ரல் 7]

(ii) உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம், TNUDP–II–வின் சாதனைகளை ஒருமுகப்படுத்துவதையும் தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து மேம்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும்.

(iii) நிறுவன மேம்பாடு மற்றும் நகர்ப்புற நிதி முதலீடுகள் மூலம் இக்குறிக்கோள்கள் அடையப்படும்.

(iv) அடிப்படை நகர்ப்புற உள்கட்டமைப்பிற்குத் தேவையான முதலீடுகளை உருவாக்குவது குடிநீர் வழங்குதல், சுகாதாரம், கழிவுநீர் அகற்றுதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள், போக்குவரத்து கட்டமைப்பு, மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள் மேலும் சில வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் வாழும் பகுதிகளில் முதலீடு செய்ய சலுகையாக மானிய உதவி அளித்தல், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி மற்றும் நகர்ப்புற கடன் பத்திரங்கள் வெளியிடுதல், நகர்ப்புற உள்கட்டமைப்பிற்குத் தேவையான நிதியினைப் பெறுவதற்கு வழிவகை செய்தல் ஆகியன நகர்ப்புற முதலீட்டு அமைப்பால் மேற்கொள்ளப்படும்.

(v) இத்திட்டத்தின் அளவு ஆரம்ப கட்ட மதிப்பீட்டின்படி 435 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும் (ரூ.1,900 கோடி தோராயமாக) உலக வங்கி இத்திட்டத்திற்கு 300 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.1,350 கோடி தோராயமாக) வழங்க உத்தேசித்துள்ளது.

## தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழகத்தில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் பல்வேறு அரசு அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு தமிழக அரசால் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு திட்டங்கள், சாலைகள் அமைத்தல், பாலங்கள் அமைத்தல், சிறிய மேம்பாலங்கள் அமைத்தல், வணிக வளாகம் கட்டுதல் போன்ற பல்வேறு அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. மேலும், இந்நிறுவனம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களான மகாநகர திட்டம் மற்றும் சிறிய நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கு முக்மை நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 7

## சென்னை மாநகரத் திட்டம் (Mega City Programme)

நகர்ப்புறங்களில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்பொருட்டு மத்திய அரசானது மகாநகரத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, இத்திட்டம் 5 பெரு நகரங்களான மும்பை, கொல்கத்தா, பெங்களூர், ஹைதராபாத் மற்றும் சென்னை நிதியுதவி பெறும்பொருட்டு தேர்வு செய்துள்ளது. இத்திட்டம் சென்னை பெருநகர பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளான 15 நகராட்சிகள் மற்றும் 21 சிறப்பு ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த செலவில் 50 சதவீதம் குறைந்த வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மானிய அளவு முறையே மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து சமபங்காக பெறப்படுகிறது. எஞ்சியுள்ள 50 சதவிகிதத்திற்கான நிதியை நிதி நிறுவனங்கள் மூலமாக பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் தொடங்கிய கால கட்டத்திலிருந்து இது நாள் வரை மத்திய மற்றும் மாநில அரசானது முறையே ரூ.228.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில் இந்நிறுவனமானது ரூ.219.00 கோடி மதிப்புள்ள திட்டங்களைச் செயல்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. அவற்றில் மகாநகரத் திட்டத்தின் பங்கானது ரூபாய் 108.00 கோடியாகும். அவற்றில், சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட செம்மாஞ்சேரி மற்றும் தள்ளான்குப்பம் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்ட குடிசைகள் மேம்பாட்டுத் திட்டம், வெள்ள நிவாரணத் திட்டம், தாம்பரம் மற்றும் பல்லாவரத்தில் செயல்படுத்தப்படும். மூன்று வழி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை சில முக்கியத் திட்டங்களாகும். வரும் நிதியாண்டு 2005–2006–ல் ரூ.300.00 கோடி மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவற்றில் ரூ.150.00 கோடி மகாநகரத் திட்டத்தின் பங்காகும்.

## சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (IDSMT)

நல்ல வாழ்க்கைச் சூழலை பெறும் நோக்கத்தோடு சிறிய நகரங்களிலிருந்து மக்கள் பெரு நகரங்களுக்கு இடம் பெயர்தலைத் தடுக்கும்பொருட்டு மத்திய அரசானது சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் மேம்பாட்டுத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தது. இத்திட்டமானது 1979–1980–ல் இருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை தமிழகத்தில் 175 நகரங்களில் மொத்தம்



2005 ஏப்ரல் 7]

ரூ.196.00 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

2004–2005 ஆம் ஆண்டில் மத்திய அரசானது 25 நகரங்களுக்கு ரூ.49.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.50.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

மாநகரத் திட்டம் மற்றும் சிறிய நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் ஒரு பகுதியாக இந்நிறுவனம் ஒரு நிதித் திட்டத்தை வகுத்துள்ளது. மத்திய மற்றும் மாநில அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களில் அரசின் பங்கு போக மீதியுள்ள நிதிப் பற்றாக்குறையை நிறைவு செய்ய உள்ளாட்சி மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் அதிக வட்டிக்கு கடன் வழங்கும் பல்வேறு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை நாட வேண்டியுள்ளது. இந்த அதிக வட்டி சுமையைக் குறைக்கும்பொருட்டு இந்நிறுவனமானது தனது சுயநிதியிலிருந்து மிகவும் குறைந்த வட்டிக்கு நிதி வழங்குகிறது. இந்நிதி உதவி அளிக்கும்முன் இந்நிறுவனம் ஒவ்வொரு திட்டங்களையும் திட்ட வாரியாக மதிப்பீடு செய்து நிதி வழங்குகிறது.

2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.129.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு இந்நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ளன. வரும் நிதியாண்டு 2005–2006–ல் ரூ.150.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனம்

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகமானது மாநில அரசு கட்டமைப்பு குத்தகை நிதியாளர்கள் நிறுவனம் மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் முதலிய அமைப்புகளின் முயற்சியால் சிறப்பு நோக்கு நிறுவனமாக 1995 ஆம் வருடம் பிப்ரவரி மாதம், இந்திய கம்பெனி சட்டம் 1956–ன்கீழ் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது திருப்பூர் பகுதி வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்துவதாகும். இந்திய நாட்டிலேயே அரசு மற்றும் தனியார் இணைந்து குடிநீர் வழங்குவதற்காக நிறுவப்பட்ட முதல் திட்டம் இதுவே ஆகும்.

[2005 ஏப்ரல் 7

இத்திட்டத்தின்மூலம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு திருப்பூரில் உள்ள சாயப்பட்டறை மற்றும் சலவை தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர் நகராட்சி, 15 கிராமப் பஞ்சாயத்துக்கள், 3 நகரப் பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றிற்கும் குடிநீர் வழங்கப்படும். மேலும் நீரேற்று குழாய் அமைக்கப்பட்டுள்ள பாதையில் அமைந்துள்ள 5 ஒன்றியங்களுக்கும் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2002–ல் ஜூன் மாதம் 20 ஆம் தேதி இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணியானது நவம்பர் 2002–ல் துவங்கப்பட்டு ஜனவரி 31, 2005 வரை 87% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான பணிகள் அனைத்தும் திட்டமிட்ட கால அளவில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான முதல் கட்டப் பணிகள் ஏப்ரல் மாதம் 2005–ல் முடிக்கப்பட்டு தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கப்படும். இரண்டாவது மற்றும் இறுதி கட்டப் பணிகள் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதி அக்டோபர் 2005–ல் முடிக்கப்பட்டு திருப்பூர் நகராட்சி மற்றும் இதர கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்குத் தேவையான மொத்த மதிப்பீட்டுச் செலவான ரூ.1,023 கோடியை கீழ்க்காணும் வகையில் திரட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| சமபங்கு | .. | ரூ. 322.70 கோடி |
| சாதாரணக் கடன் | .. | ரூ. 86.50 கோடி |
| கடன் | .. | ரூ. 613.80 கோடி |
| மொத்தம் | .. | ரூ.1023.00 கோடி |

இத்திட்டத்திற்காக ஜனவரி 31, 2005 வரை ரூ.725 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழக அரசு, ஊரக மற்றும் நகரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் ஊரக மற்றும் நகரகப் பகுதிகளில் பல்வேறு குடிநீர்த் திட்டங்களைத் துவக்கி செயல்படுத்தி



2005 ஏப்ரல் 7]

வருவதில் முன்னிலை வகிக்கிறது. கிராமப்புற சுகாதாரம் மற்றும் நகரங்களுக்குப் பாதாள சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் சமமான முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இருக்கும் நீரை சேமித்து நீராதாரத்தின் நிலைத் தன்மையை மேம்படுத்தும் வழிமுறைகளுக்கு அரசு ஏற்கெனவே வழிகாட்டியுள்ளது. மழை நீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் ஆகியவைகளை முழுமையாக எய்த முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகும். மழை நீரை குறிப்பாக சேமிப்பதன் அத்தியாவசியத்தை வலியுறுத்தும்வகையில் மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிறுவ மக்களுக்கு அறிவுரை அளிக்கப்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் நீங்கலாக தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றும் ஒரு தனித்துவம் பெற்ற நிறுவனமாகும்.

### ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்

ஊரகப் பகுதிகளில் குறைந்தபட்ச தேவைத் திட்டம் மற்றும் மத்திய அரசின் நிதி உதவியோடு செயல்படுத்தப்படும் துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் ஊரகக் குடிநீர் வழங்குதலுக்கு அதிக நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டதிலிருந்து இத்துறைக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை உணரலாம்.

### 2004–2005 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயலாக்க சாதனை

2004–2005 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.662.36 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டன.

➢ 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்கு தனி மின்விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இது தவிர 10,000 சிறுமின்விசைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

➢ சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.137.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,000 ஆதி திராவிடர் மற்றும்

பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

- மாண்புமிகு பாரதப் பிரதமரின் அறிவிப்புத் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் 7,784 கையிறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 9,772 மரபு வழி நீராதாரங்களைச் சீரமைக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- சுவஜல்தாரா திட்டத்தின்கீழ் ரூ.28.35 கோடி மதிப்பீட்டில் 569 குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.
- மாண்புமிகு பாரதப் பிரதமரின் கிராம யோஜனா திட்டத்தின்கீழ் 400 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் நீராதாரத்தின் நிலைத் தன்மையை மேம்படுத்தும் வகையில் நிறுவப்பட்டுள்ளன.
- மேலும் 523 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ரூ.15.76 கோடி மதிப்பீட்டில் தேசிய ஊரக வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்**

40 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நகரக மற்றும் ஊரகப் பகுதிகள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றில் கீழ்க்கண்ட பெரிய அளவிலான திட்டங்களும் அடங்கும்:–

- தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி நகராட்சிகள், பேரையூர், ஏழுமலை, டி.கல்லுப்பட்டி ஆகிய முந்தைய பேரூராட்சிகள் மற்றும் 406 ஊரக குடியிருப்புகளில் வாழும் 4.03 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.74 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை, மருங்காபுரி ஒன்றியங்களைச் சார்ந்த 674 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் பொன்னம்பட்டியில் வாழும் 2.95 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.69.20 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.





- நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள திருவாரூர், திருத்துறைப்பூண்டி நகராட்சிகள் 3 முந்தைய பேரூராட்சிகள் மற்றும் 642 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 4.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.133.05 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ஈரோடு மாவட்டத்தில் நல்லம்பட்டி, பெத்தம்பாளையம், காஞ்சிகோயில் பள்ளப்பாளையம் ஆகிய முந்தைய பேரூராட்சிகள் மற்றும் 64 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 1.01 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.12.47 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு, கிணத்துக்கடவு மற்றும் குடிமங்கலம் ஒன்றியங்களைச் சார்ந்த 295 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 2.18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.54.70 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

2004–2005 ஆம் ஆண்டில், 72 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் கீழ்க்கண்ட பெரிய அளவிலான திட்டங்களும் அடங்கும்:–

- கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.30.38 கோடி மதிப்பீட்டில் 71 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கவுண்டம்பாளையம் மற்றும் வடவள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.49.93 கோடி மதிப்பீட்டில் 1.42 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் கிணத்துக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் ரூ.68.00 கோடி மதிப்பீட்டில் 3.91 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 239 கடலோர/ஊரகக் குடியிருப்புகள், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த அருப்புக்கோட்டை, விருதுநகர், மல்லாங்கிணறு, காரியாப்பட்டி ஆகியவற்றிற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- தருமபுரி மாவட்டத்தில் ரூ.2.87 கோடி மதிப்பீட்டில் 35 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் பி. மல்லபுரம் மற்றும் 35 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சுமார் ரூ.16.94 கோடி மதிப்பீட்டில் 1.52 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் திருப்பூர் மாஸ்டர் பிளான் குடிநீர்த் திட்டத்தின்கீழ் எடுப்புமுனை 1,2,3,4,4அ மற்றும் 5–ன் மூலம் ஈரோடு மாவட்டத்திலுள்ள சென்னிமலை, பெருந்துறை, ஊத்துக்குளி ஒன்றியங்களைச் சார்ந்த 530 குடியிருப்புகளும், (அவினாசி–அத்திக்கடவு திட்டப்பகுதி) ஊத்துக்குளி சிறப்பு ஊராட்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள திருப்பூர் ஒன்றியத்தைச் சார்ந்த 83 குடியிருப்புகளும் ஆகமொத்தம், 613 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.16.60 கோடி மதிப்பீட்டில் 78 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் பாளையங்கோட்டை, நாங்குநேரி மற்றும் களக்காடு ஒன்றியங்களைச் சார்ந்த 185 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**நகரக குடிநீர்த் திட்டங்கள்**

55 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.205.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றில் 11 நகரங்களுக்கு விரைவுபடுத்தப்பட்ட நகரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு அறிவித்தபடி, 50 நகரங்களுக்கு புதியதாக குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகள் 2005–2006ஆம் ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**திட்ட உருவாக்கம்**

2004–2005 ஆம் ஆண்டில், திருநெல்வேலி மாநகராட்சி (பகுதி), 5 நகராட்சிகள், 45 முந்தைய பேரூராட்சிகள் மற்றும் 3,514 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 24.44 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.392.69 கோடி மதிப்பீட்டில் 53 குடிநீர்த் திட்டங்களுக்கு திட்ட உருவாக்கப் பணிகள் முடிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல்





அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடிநீர்த் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம்**

2005–2006 ஆம் ஆண்டிலிருந்து உலக வங்கியின் நிதி உதவியோடு மாநிலம் தழுவிய ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. குடிநீர்த் திட்டங்களை உருவாக்குதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் மக்களின் பங்கேற்பை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 5 ஆண்டு கால அளவிற்கு உத்தேசமாக ரூ.3,000 கோடி ஆகும். 2004–2005 ஆம் ஆண்டில் 145 ஊராட்சிகளில் திட்டப் பணிகள் முன்னோடியாக செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**2005–2006 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்**

**ஊரகக் குடிநீர் வழங்குதல்**

மாநிலத்தில் மொத்தம் 81,787 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில், 74,546 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 7,241 குடியிருப்புகள் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வசதி பெறுபவையாகும். இக்குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்**

- 2005–2006 ஆம் ஆண்டில், குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளித்து 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.
- 5000 சிறு மின்விசைத் திட்டங்கள் தேவைப்படும் இடங்களில் ஆய்வுக்குப்பின் அமைக்கப்படும்
- 'சுவஜல்தாரா' திட்டத்திற்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை கருத்திற்கொண்டு 2005–2006 ஆம் ஆண்டில் 'சுவஜல்தாரா' திட்டத்தின்கீழ் 362 குடிநீர்த் திட்டங்கள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

[2005 ஏப்ரல் 7

## கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

2005–2006 ஆம் ஆண்டில், 40 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பணிகளை முடித்து பயனுக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் கீழ்க்கண்ட பெரிய அளவிலான திட்டங்களும் அடங்கும்:–

- திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள திண்டுக்கல் நகராட்சி, தாடிக்கொம்பு, எரியோடு, வடமதுரை, அகரம், அய்யலூர் மற்றும் 816 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 6 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.85 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சார்ந்த, நாகப்பட்டினம் நகராட்சி மற்றும் 890 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 1.34 இலட்சம் மக்கள் பயன்பெறும்வகையில் ரூ.98.85 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த சேந்தமங்கலம், காளப்பநாயக்கன்பட்டி, நாமகிரிப்பேட்டை, பட்டினம், சீராப்பள்ளி, ஆர்.புதுப்பட்டி மற்றும் 1,399 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 7.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.126.85 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சார்ந்த மானூர் மற்றும் 400 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 4.60 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும், சங்கரன்கோவில், சிவகாசி நகராட்சிகள், திருவேங்கடம் மற்றும் திருத்தங்கல் ஆகிய முந்தைய பேரூராட்சிகளுக்கு குடிநீர் மொத்த ஒதுக்கீடு செய்யப்படும் வகையிலும், ரூ.78.70 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

இதைத் தவிர, திட்டம் தயாரிக்கும் நிலையில் உள்ள 52 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.463.70 கோடி மதிப்பீட்டில் 35.75 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட உள்ளன. குறிப்பாக:–

- திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.29.92 கோடி மதிப்பீட்டில் 1.86 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் அச்சம்புதூர், ஆயக்குடி, பொன்பொழி, வடகரை, கீழ்பிடாகை மற்றும்



2005 ஏப்ரல் 7]

செங்கோட்டை, தென்காசி, கீழப்பாவூர் மற்றும் கடையம் ஒன்றியங்களைச் சார்ந்த 151 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், அரிமளம், மணமேல்குடி ஒன்றியங்களைச் சேர்ந்த 685 கடலோரக் குடியிருப்புகளில் வாழும் 1.94 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி, பல்லடம் நகராட்சி, 23 சிறப்பு நிலை ஊராட்சிகள் மற்றும் 965 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 17.93 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையினை நீராதாரமாகக் கொண்டு ரூ.201.83 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் மற்றும் வாசுதேவநல்லூர், ஆலங்குளம், கீழப்பாவூர், கடையநல்லூர் ஒன்றியங்களைச் சார்ந்த 127 வழியோரக் குடியிருப்புகளில் வாழும் 1.17 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களைச் சார்ந்த வேடசந்தூர், பாளையம், ஒட்டன்சத்திரம், கன்னிவாடி, ஸ்ரீராமபுரம் ஆகிய நகரங்கள் மற்றும் 743 ஊரக குடியிருப்புகளில் வாழும் 3.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.61.20 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

2005–2006 ஆம் ஆண்டில் ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.600 கோடி செலவிடப்படும்.

## நகர குடிநீர்த் திட்டங்கள்

மாநிலத்தில் மொத்தம் 6 மாநகராட்சிகள் (சென்னை உட்பட), 102 நகராட்சிகள், 611 பேரூராட்சிகள் இருந்தன. இவற்றில் 49 நகரப் பேரூராட்சிகளை நகராட்சிகளாகவும், 562 நகரப் பேரூராட்சிகளை சிறப்பு ஊராட்சிகளாகவும் அரசு மாற்றி அமைத்துள்ளது. அதன்படி தற்போது 6 மாநகராட்சிகளும், 151 நகராட்சிகளும், 562 சிறப்பு

ஊராட்சிகளும் உள்ளன. இவற்றில் 51 நகராட்சிகளும் 292 சிறப்பு நிலை ஊராட்சிகளும் முழுமையான குடிநீர் வசதி பெற்றவையாகும். எஞ்சியுள்ள 5 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) 100 நகராட்சிகள் மற்றும் 270 சிறப்பு நிலை ஊராட்சிகள் பகுதி அளவு குடிநீர் வசதி பெற்றவையாகவும் உள்ளன.

நகரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் திருச்சி மாநகராட்சியில் ஸ்ரீரங்கம், 14 நகராட்சிகள், 95 முந்தைய பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் 110 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டங்கள் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகின்றன. மேலும் 50 நகரங்களுக்குப் புதிதாக குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. 60 நகரங்களுக்குக் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**துரிதப்படுத்தப்பட்ட நகரக குடிநீர்த் திட்டம்**

துரிதப்படுத்தப்பட்ட நகரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் 81 நகரங்களுக்கு ரூ.98.62 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ள மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை, மொத்தம் 48 நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.81.92 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில், 18 நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து செயலாக்கப்படுவதுடன் மேலும் 15 நகரங்களில் புதிதாக குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இராமநாதபுரம் மற்றும் கீழக்கரை நகரங்களில் 2.5 எம்.எல்.டி. திறன் கொண்ட உவர்நீரை நன்னீராக்கும் கலன்கள் ரூ.20.73 கோடி மதிப்பீட்டில் துரிதப்படுத்தப்பட்ட நகரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டில் துரிதப்படுத்தப்பட்ட நகரக குடிநீர்த் திட்டத்திற்கான ரூ.25 கோடி நிதி ஒதுக்கீட்டையும் சேர்த்து நகர குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.200 கோடி செலவிடப்படும்.

**மழைநீர் சேகரிப்பு**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2002–2003 ஆம் ஆண்டில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கட்டமைப்புகளால் ஏற்பட்டு வருகின்ற நிலத்தடி நீர் மட்டத்தின் உயர்வு, நீரின் தர மேம்பாடு ஆகியவை குறிப்பிட்ட கால அளவில் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.



இந்த ஆய்வின்படி தமிழகத்தில் கடந்த வடகிழக்கு பருவ மழை காலத்தில் பெய்த மழைக்குப்பின் சராசரியாக நிலத்தடி நீர்மட்டம் 2.06 மீட்டர் வரை உயர்ந்து வந்துள்ளது தெரியவந்துள்ளது.

**குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மை**

பருவ மழை தொடர்ந்து போதிய அளவு கிடைக்காத காரணத்தால், குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மையை நீடிக்கும் வகையில் தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள், நிலத்தடி தடுப்பணைகள், மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்புகள் முதலிய நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மையை நீர்செறிவூட்டும் முறையில் உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு தொழில் நுட்ப மையத்துடன் இணைந்து தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள், நீர் செறிவூட்டும் குழிகள் முதலிய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்க 13,357 இடங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதுவரை 8,515 இடங்களில் இத்தகைய நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில், தேசிய ஊரக வளர்ச்சி வங்கி, பாரதப் பிரதமரின் கிராம யோஜனா திட்டம் மற்றும் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மேலும் 1,250 இடங்களில் நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ரூ.33 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளன.

**நீரின் தரப் பரிசோதனையும், கண்காணிப்பும்**

பொதுமக்களுக்கு தூய்மையான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கும்பொருட்டு ஒரு மாநில அளவிலான நீர்ப் பரிசோதனைக் கூடமும், 28 மாவட்ட அளவிலான நீர்ப் பரிசோதனைக் கூடங்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் இயங்கும் 434 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உட்பட பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் நீரின் தரம் இப்பரிசோதனைக் கூடங்கள் வாயிலாக பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது.

குடிநீரின் தரத்தை கிராம அளவில் கண்காணிக்கும்பொருட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சமீபத்தில் ஒரு திட்டத்தை கடலூர்

மாவட்டம் கீரப்பாளையம் ஒன்றியத்தில் செயல்படுத்தி உள்ளது. இத்திட்டத்தில் கீரப்பாளையத்தைச் சார்ந்த பள்ளி சிறுவர், சிறுமியர், ஆசிரியர்கள், பஞ்சாயத்து அலுவலர்கள், மகளிர், தன்னார்வ சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் பயிற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வடிவமைத்துள்ள கள நீர்ப் பரிசோதனைப் பெட்டிகளைப் பயன்படுத்தி நீர்மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. கிராம அளவில் மேற்கொள்ளப்பட்ட நீர் பரிசோதனை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதால் மற்ற மாவட்டங்களுக்கும் நீராதாரங்களின் தரத்தை கண்காணிக்கும் வகையில் விரிவுபடுத்தப்படவுள்ளது. கிராம அளவில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு நீரின் தரம் கண்காணிப்பு திட்டங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் களப் பரிசோதனை கலன்கள் வழங்கப்படும். நீரினை மாசுபடுத்தும் பல வேதியியல் பொருட்களைக் கண்டறிவதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசோதனைக் கூடங்களின் வசதிகள் வரும் ஆண்டில் மேம்படுத்தப்பட உள்ளன.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பு**

ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சிகளின் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை உள்ளாட்சிகளிடமிருந்து வாரியமே ஏற்று பராமரிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி *4* மாநகராட்சிகள், *42* நகராட்சிகள், *187* சிறப்பு நிலை ஊராட்சிகள், *10,249* ஊரகக் குடியிருப்புகள் மற்றும் *356* நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் பயன்பெறும் வகையில் *434* கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை *1.38* கோடி மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரித்து வருகின்றது.

மேற்கண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பிற்கு *2004–2005* ஆம் ஆண்டில் ரூ.*114* கோடி செலவிடப்பட்டுள்ளது. அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் குடிநீர்க் கட்டணங்களின் அடிப்படையில் பயனீட்டாளர்களிடமிருந்து குடிநீர்க் கட்டணம் வசூலிக்கப்பட்டு இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் புனரமைப்புப் பணிகள்**

*2004–2005* ஆம் ஆண்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.*5* கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்ட புனரமைப்புப்





பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 'தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின்'கீழ் உலக வங்கி நிதியுதவியுடன், வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுள் *308* திட்டங்களின் புனரமைப்புப் பணிகளை ரூ.*65.44* கோடி திட்ட மதிப்பீட்டில் படிப்படியாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்ட பணிகள் *2005–2006*–ல் உலக வங்கி ஒப்புதல் பெறப்பட்டபின் துவங்கப்படும். மேற்குறிப்பிட்ட புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முழுமையாக உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டு *7,652* ஊரகக் குடியிருப்புகளில் உள்ள *98* இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

**தேசிய நதி நீர் மாசுபடுதலைத் தடுக்கும் திட்டம்**

தேசிய நதி நீர் மாசுபடுதலைத் தடுக்கும் திட்டத்தின்கீழ் காவிரி ஆறு மாசுபடுதலைத் தடுக்கும் வகையில் திருச்சி, ஈரோடு, பவானி, குமாரபாளையம் நகரங்களுக்கு ரூ.*25.05* கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் திருச்சி மற்றும் ஈரோடு நகரில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. குமாரப்பாளையம் நகர திட்டப் பணிகள் ஏப்ரல் *2005*–ல் நிறைவேற்றப்படும். கழிவுநீரைத் தடுத்தல் மற்றும் திருப்புதல் பணிகள் மேற்கொள்ள பவானி நகரத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு ரூ.*2.64* கோடி மதிப்பீட்டிலும், பள்ளிப்பாளையம் நகரத்திற்கு ரூ.*7.72* கோடி மதிப்பீட்டிலும் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டம்**

தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி, தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருச்சி, கரூர் மற்றும் இனாம் கரூர் ஆகிய நகரங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டங்கள் ரூ.*359.70* கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு இந்த நகரங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்கள் மத்திய அரசு, மாநில அரசு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்துப் பணிகளும் டிசம்பர் *2005*–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்**

தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கொடைக்கானல் ஏரி மாசுபடுதலைத் தடுக்கும் பணி மற்றும் ஏரியினை சீரமைக்கும் பணிகளுக்கான திட்டம் ரூ.9.13 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏரியில் கலக்கும் கழிவு நீரினைத் தடுத்து திருப்புதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. “நுண் உயிரியல் முறையில்” ஏரியினை சீரமைக்கும் பணிகள் பொதுப் பணித் துறையால் ரூ.4.65 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதர பணிகளான குறைந்த செலவில் பொது சுகாதாரம் மற்றும் சமுதாய கழிப்பிட வசதிகள் அமைக்கும் பணிகள் ரூ.1.01 கோடி மதிப்பீட்டில் உள்ளாட்சி அமைப்புமூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை 3/2006–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**கணிப்பொறி மேலாண்மைத் திட்டம்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்போதைய கணினிமயமாக்கும் நடவடிக்கைகளை மேம்படுத்தும்பொருட்டு மத்திய அரசு ரூ.334.873 இலட்சங்களை, பத்தாவது திட்ட காலத்திற்கு நிதி ஒப்புதல் அளித்து, முதல் தவணையாக, மார்ச் 2004–ல் ரூ.100.46 இலட்சங்களை நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், பெரும் பரப்பு வலையமைப்பைப் (Wide Area Network) பயன்படுத்தி மாவட்டங்களில் உள்ள 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகங்களின் முக்கிய செயல்பாடுகளைத் தனித்தியங்கு அமைப்பிலிருந்து (Standalone system) ஒருங்கிணைக்கப்பட்ட உடன் நிகழ் அமைப்பின் (Online System) மூலமாக இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான மென்பொருளை உருவாக்கும் ஆயத்த பணிகளை, தேசிய தகவல் மையம், சென்னை மேற்கொண்டு வருகிறது. வரும் 2005–2006 நிதியாண்டில், முன்னோடி திட்டமாக சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகம், ஒரு தலைமைப் பொறியாளர் அலுவலகம், ஒரு வட்ட அலுவலகம் மற்றும் அதன் கோட்டங்கள், இத்திட்டத்தின்கீழ் இணைக்கப்படும். முன்னோடி திட்டம் வெற்றிகரமாக முடிந்தவுடன்



மாநில அளவில் அனைத்து கோட்ட அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**பயிற்சி**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பயிற்சி மையத்தில் வாரிய அலுவலர்களுக்கும் மற்றும் பல்வேறு மாநில பொறியாளர்களுக்கும் மத்திய அரசின் பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் நிறுவனத்தின் நிதி உதவியோடு பல்வேறு பயிற்சித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் 6 தேசிய அளவிலான பயிற்சித் திட்டங்களும் 30 வாரிய அளவிலான பயிற்சித் திட்டங்களும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாறுதல் மேலாண்மைக்குத் தேவையான திறனை வளர்த்தல்**

மக்கள் பங்கேற்புடன்கூடிய நிரந்தரக் குடிநீர்த் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே அரசின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடைவதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், யுனிசெப் உதவியுடன் மாறுதல் மேலாண்மைக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் சமுதாயப் பங்கேற்புடன் குடிநீர்த் திட்டங்களை உருவாக்குதலும் அதை நிறைவேற்ற தேவையான முடிவுகளை எடுத்தலும் மையப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குறைந்த செலவினத்துடன்கூடிய நிரந்தரக் குடிநீர்த் திட்டங்களைச் சமுதாயத்துடன் இணைந்து செயல்படும் வகையில் தனது செயல்பாடுகளை முழுவதுமாக மாற்றியமைக்கும் குறிக்கோளை நோக்கி செயல்படுகிறது. இந்த மேலாண்மை மாற்றத்தில் ஊரகக் குடிநீர் வழங்கல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பொறியாளர்களையும் மாறுதல் மேலாண்மைக்கு உட்படுத்த ஏற்ற நடவடிக்கைகளையும் வாரியம் மேற்கொள்ள உள்ளது.

இப்பொறியாளர்கள், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தனிக் குடிநீர்த் திட்டத்தைச் சமுதாயப் பங்கேற்புடன் அமைத்து “ஆயிரம் ஆண்டு முன்னேற்ற இலக்கான” மக்கள் பங்கேற்புடன்கூடிய குடிநீர்த் திட்டத்தைப் பாகுபாடு இல்லாத மக்கள் திட்டமாகச் செயல்படுத்த உள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வரும் 2005–2006 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் முழுச் சமுதாயக் குடிநீர் மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 7

## சுனாமி நிவாரணப் பணிகள் மற்றும் குடிநீர் விநியோகம்

தமிழகக் கடலோரப் பகுதிகளில் 26–12–2004 அன்று ஏற்பட்ட சுனாமி நாகப்பட்டினம், கடலூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கன்னியாகுமரி, திருவள்ளூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய கடலோர மாவட்டங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, மேற்கூறிய மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளில் உள்ள 204 குடியிருப்புகளில் அமைந்துள்ள அனைத்து குடிநீர்த் திட்டங்களும் பாதிக்கப்பட்டன. தவிர, நாகப்பட்டினம், கடலூர், குளச்சல் ஆகிய நகரங்களில் உள்ள குடிநீர்த் திட்டங்களும் பாதிக்கப்பட்டன.

இத்திட்டங்களை உடனடியாக ஆய்வு செய்ததில் பெரும்பாலான திட்டங்களில், நீராதாரங்கள், நீரேற்றுக் குழாய்கள், பகிர்மானக் குழாய்கள் மற்றும் மின்னிறைப்பான்கள் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

### உடனடி நிவாரண நடவடிக்கைகள்

பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும்பொருட்டு உடனடி நிவாரணமாக, பாலிதின் பைகளில் குடிநீர் வழங்குதல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் 573 பிளாஸ்டிக் குடிநீர்த் தொட்டிகள் மூலமாகவும் ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கப்பட்டது.

### குடிநீர்த் திட்டங்களைச் சீரமைத்தல்

52 குறைந்த ஆழமுள்ள குழாய்க் கிணறுகள், 15 நீருறிஞ்சு கிணறுகள், 9 வடிமுனைக் குழாய்கள், 26 மின் அறைகள், 84 கி.மீ. நீளத்திற்கு நீரேற்றுக் குழாய்கள், 119 கி.மீ. நீளத்திற்கு பகிர்மானக் குழாய்கள், 44 மின்னிறைப்பான்கள் மற்றும் 430 பொது நல்லிகள் ஆகியவை ரூ.12.40 கோடி மதிப்பீட்டில், பாதிக்கப்பட்ட நகராட்சிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகளில் அமைக்கப்பட்டு குடிநீர்த் திட்டங்கள் அனைத்தும் அதிவிரைவில் சீரமைக்கப்பட்டு செயலுக்கு கொண்டுவரப்பட்டன. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது.



2005 ஏப்ரல் 7]

### தொலைநோக்குத் திட்டங்கள்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதியதாக குடியிருப்புகளை உருவாக்கி, இக்குடியிருப்புகளில் நிலைத்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும்பொருட்டு ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட உள்ளன. மேற்கண்ட பணிகள் அனைத்தையும் செயலாக்க ரூ.25.00 கோடிக்குக் கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது.

பாலிதின் பைகள், லாரிகள் மற்றும் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்ட பிளாஸ்டிக் குடிநீர்த் தொட்டிகள் மூலம் அரசும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் குடிநீர் வழங்கியதாலும் மற்றும் குறுகிய காலத்தில் குடிநீர்த் திட்டங்களைச் சீரமைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கியதன் விளைவாகவும், சுனாமியைத் தொடர்ந்து ஏற்படும் என்று அஞ்சிய தொற்றுநோய் தவிர்க்கப்பட்டது.

## சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

### நீர் மேலாண்மை

சென்னைப் பெருநகர மக்களின் பெருகிவரும் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், திட்டமிட்ட முன்னேற்றம் அடைவதற்கும், முக்கியமாக சுகாதாரத்தைக் காத்தல் மற்றும் அதன் தொடர்பான பணிகளைச் செய்யும் நோக்கில், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று திட்டங்களைத் திட்டமிட்டு முறைப்படி செயல்படுத்த, ஆகஸ்ட் 1978–ல் சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (சென்னைக் குடிநீர் வாரியம்) உருவாக்கப்பட்டது. தற்போது, சென்னைக் குடிநீர் வாரியம் செயல்படும் பகுதி, நகரில் 170 ச.கி.மீ. பரப்பளவையும், அருகிலுள்ள நகரகப் பகுதியில் சுமார் 10 ச.கி.மீ. பரப்பளவையும் கொண்டது ஆகும்.

### 2004 ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கல் நிலை

2004 ஆம் ஆண்டு மிகக் கடுமையான வறட்சி காலத்தில் அதாவது அக்டோபர் மாதம் 2004 வரையிலும், சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் நீர் ஆதாரங்கள் முற்றிலுமாக வறண்டு போயிருந்ததன் காரணமாகவும், தெலுங்கு கங்கைத் திட்டத்தின்கீழ், கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து நீர் பெறப்படாததன் காரணமாகவும், சுமார் 120 கி.மீட்டரிலிருந்து 150 கி.மீ. வரையிலான தூரத்தில் உள்ள

கும்மிடிப்பூண்டி, மீஞ்சூர், தாமரைபபாக்கம், பெரியபாளையம், பூந்தமல்லி, மாமண்டூர்–பாலூர், திருப்போரூர் மற்றும் கருங்குழி ஆகிய தொலைதூர ஆதாரங்களிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 100 மில்லியன் லிட்டர் வீதம் 27–6–2003–லிருந்து 9–11–2004 வரை 23,439.79 மில்லியன் லிட்டர் நீர் லாரிகள் மூலம் பெறப்பட்டு, சென்னை நகருக்கு விநியோகம் செய்யப்பட்டது. சென்னை நகரில் உள்ள 14,602 தெருக்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. இந்தப் பெரும் பணியினை, மிகப் பொறுப்பான முறையில் சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின்மூலம் ரூ.196.69 கோடி செலவில் 2004–2005–ல் அரசு செயலாக்கியது.

சென்னை நகரில் 3,000 புதிய குடிநீர்த் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. மக்களின் குடிநீர் மற்றும் சமையல் உபயோகத் தேவைகளைத் தவிர மற்ற உபயோகங்களுக்காக 1,757 இந்தியா மார்க்–2 பம்புகள் நிறுவப்பட்டுள்ளன.

பிப்ரவரி 2003–ல், ரூ.720 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய வீராணம் திட்டம் துவக்கப்பட்டு, அக்டோபர் 2004–ல் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. வீராணம் ஏரியில் நீர் கிடைக்கப்பெற்று துரிதமாக நிரம்பியவுடன், 13–10–2004 அன்று புதிய வீராணம் திட்டத்தின் மூலம் அதன் முழு அளவான நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீர் சென்னை நகருக்கு வழங்கப்பட்டது.

**தற்போதுள்ள குடிநீர் வழங்கல் நிலை**

சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் பிரதான நீர் ஆதாரங்களாகிய பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஆண்டின் இயல்பான மழை அளவான 1,400 மி.மீட்டரில், 2004 ஆம் ஆண்டு 1,171 மி.மீட்டர் அளவு மழை மட்டுமே பெறப்பட்டது. சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் பிரதான நீர் ஆதாரங்களாகிய பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஆகிய மூன்று ஏரிகளிலும் சேர்த்து மொத்த கொள்ளளவான 7,412 மில்லியன் கன அடியில், 1–1–2005 அன்று 1,859 மில்லியன் கன அடி நீர் இருந்தது. கடந்த ஆண்டு இதே நாளில், அதாவது 2004–ல் இந்த மூன்று ஏரிகளிலும் உள்ள நீர் இருப்பு 272 மில்லியன் கன அடியாகும். சென்னை நகரின்



குடிநீர் விநியோகத்திற்கு ஓரளவிற்கு உபயோகப்படுத்தப்படும் நீர் ஆதாரமான செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவான 3,645 மில்லியன் கன அடியில் 1–1–2005 அன்று 405 மில்லியன் கனஅடி நீர் இருந்தது. அக்டோபர்–டிசம்பர் 2004–ல் பொழிந்த மழைக்கு பின்னர் அதன் விளைவாக நிலத்தடி நீர்மட்டம் உயர்வடைந்ததாலும், இந்த கிணற்றுத்தளங்களிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 95 மில்லியன் லிட்டர் வரை நீர் எடுக்கப்பட்டது.

2004–ல், தென்மேற்குப் பருவமழைக்குப் பின்னர், சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர் இருப்பு மேம்பாடு அடையாததால், சென்னை நகர மக்கள் மற்றுமொரு வறட்சியை சந்திக்க வேண்டியதிருக்குமென எதிர்நோக்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் அவர்களை 1–10–2004 அன்று ஹைதராபாத்தில் சந்தித்து, சென்னை நகருக்குக் கிருஷ்ணா நீர் வழங்குமாறு ஏற்கெனவே ஏற்படுத்திய ஒப்பந்தத்தின்படி கோரினார்கள். இந்த முயற்சியின் காரணமாக, 23–11–2004 முதல் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நீர் அனுப்புவது துவக்கப்பட்டு 28–11–2004 அன்று முதல் தமிழக எல்லையின் நுழைவுமுனையில் பெறப்பட்டு வருகிறது. ஓராண்டில் பெறப்பட வேண்டிய 12 ஆயிரம் மில்லியன் கன அடி நீரில், 28–2–2005 வரையிலும், சுமார் 2.702 ஆயிரம் மில்லியன் கன அடி நீரே பெறப்பட்டுள்ளது.

மேற்பரப்பு நீர் ஆதாரங்களில் இருக்கின்ற நீரைக் கொண்டும், தெலுங்கு கங்கைத் திட்டத்தின்மூலம் கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து பெறப்பட்ட நீரைக் கொண்டும் மற்றும் புதிய வீராணம் திட்டத்திலிருந்து பெறப்பட்ட நீரைக் கொண்டும், சென்னை நகருக்கு சராசரியாக 600 மில்லியன் லிட்டர் நீர் ஒருநாள் விட்டு ஒருநாள் வழங்கப்படுவதுடன், மணலியிலுள்ள தொழிற்சாலைகளுக்கும், மொத்தமாகக் குடிநீர் நுகர்வோர்களுக்கும் தினமும் 60 மில்லியன் லிட்டர் நீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை நகரின் சுமார் 89 சதவீத பகுதிகளில் நுகர்வோருக்கு குழாய்கள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் வழங்கப்படுவதால் குழாய்களின் மூலம் குடிநீர் பெறப்படாத பகுதிகளுக்கு, 9,000 லிட்டர் கொள்ளளவுடைய 2,650 லாரி நடைகள் மூலம் நகரின் பல்வேறு இடங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 7

**செம்பரம்பாக்கத்தில் நாளொன்றுக்கு 530 மில்லியன் கொள்திறனுடைய நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்**

தெலுங்கு கங்கைத் திட்டத்தின்கீழ் கூடுதலாகப் பெறக்கூடிய நீரை சுத்திகரிப்பு செய்வதற்கு, நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு செய்யும் கொள்திறனுடைய சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் கட்டுமானப் பணி பிரெஞ்சு அரசு நிதி உதவியுடன் செம்பரம்பாக்கத்தில் நடைபெற்று வருகிறது. கட்டுமானப் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. கட்டுமானப் பணியில், இது வரையிலும் 45% முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் மே 2005-ல் முடிக்கப்படும். இப்பணிக்காக, இதுவரையிலும் ரூ.59,77.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**இரண்டாம் சென்னைக் குடிநீர்த் திட்டம்**

இரண்டாம் சென்னைக் குடிநீர்த் திட்டம் உலக வங்கி உதவியுடன் பிப்ரவரி 1996 ஆம் ஆண்டு ரூபாய் 778.79 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பெரும்பான்மையான பணிகள் முடிக்கப்பட்டன. இத்திட்டத்தின் முக்கிய பணிகளான புதிய நீர் பகிர்மான நிலையங்கள் கட்டுதல் (7 நிலையங்கள்), குடிநீர் கொண்டு செல்லும் பிரதானக் குழாய்கள் அமைக்கும் பணிகள் (36 கி.மீ) மற்றும் 11 மண்டலங்களில் பகிர்மான அமைப்பை பலப்படுத்தும் பணிகள் முடிவுபெற்றுள்ளன. இப்பணிகளுடன் கசிவு கண்டறிதல் மற்றும் சரி செய்தல் பணி சென்னை மாநகரின் 70% பகுதிகளில் முடிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பகிர்மான நிலையங்களில் வெற்றிடம் நிரப்பும் குளோரினேட்டர்கள் அமைத்தல், கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துதல் மற்றும் நீர் பாயும் திறனை அளக்கும் 44 மின்காந்த அளவுமானிகள் பொருத்துதல் ஆகிய பணிகள் 2004 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன.

**குடிநீர் வழங்கல் குறித்த எதிர்காலத் திட்டங்கள்**

**மூன்றாவது சென்னைத் திட்டம்**

சென்னை மாநகருக்கும், சென்னை நகரின் அருகிலுள்ள நகரமயமாக்கப்பட்ட பகுதிகளுக்கும் மேலும் குடிநீர் வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு ரூபாய் 750 கோடி மதிப்பீட்டில் மூன்றாவது சென்னைத் திட்டம் வகுக்கப்பட்டு உலக வங்கியிடம் உதவி



2005 ஏப்ரல் 7]

கோரியுள்ளது. உலக வங்கிக்கு இந்திய அரசு இத்திட்டத்தை உதவித்தொகைக்கு அனுப்பியுள்ளது. நீர் ஆதாரங்களை அதிகரிக்க அம்பத்தூர், கொரட்டூர் மற்றும் மாதவரம் ஏரிகளைத் தூர் வாரும் பணிகள், போரூர் ஏரியைச் செப்பனிடும் பணிகள் மற்றும் தடுப்பணை கட்டும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. தேவையான வருமானம் கிடைப்பதற்காக அனைத்து நுகர்வோர்களுக்கும், கொள்ளளவு அடிப்படையில் நீர் அளவுமானி பொருத்தப்படவுள்ளது.

**இத்திட்டத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு:–**

**குடிநீர் விநியோக அமைப்பை 5 மண்டலங்களில் பலப்படுத்துதல்**

மீதமுள்ள 5 மண்டலங்களான அண்ணா பூங்கா, கீழ்ப்பாக்கம், திருவல்லிக்கேணி, தெற்கு நீரேற்று நிலையம் மற்றும் கே.கே.நகர் ஆகியவற்றிலும் குடிநீர் விநியோக அமைப்பைப் பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ.150 கோடி செலவில், 305 கி.மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் அமைக்கப்படவுள்ளது. பகிர்மானத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காக இந்த மண்டலங்களைத் தனிமைப்படுத்த 16 மண்டலங்களிலும் வால்வுகள் அமைக்க ஒதுக்கீடு அளிக்கப்படுகின்றது.

தற்போதுள்ள அண்ணா பூங்கா, கீழ்ப்பாக்கம், திருவல்லிக்கேணி மற்றும் கே.கே.நகர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர்ப் பகிர்மான நிலையங்களும் மேம்படுத்தப்படவுள்ளன.

**ஆரணியாறு, கொசத்தலையாறு படுகையிலிருந்து கூடுதலான நிலத்தடி நீர் பெறுவதற்கு அடிப்படை வசதிகள் செய்தல்**

இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் நிலத்தடி நீர் உள்ளாற்றல் பற்றிய மறுமதிப்பீடு செய்வதற்காக திருவாளர்கள் ஸ்காட் வில்சன் லிமிடெட் அவர்களால் கலந்தாய்வு செய்யும் பணி செயல்பட்டு வருகிறது. பின்னர் மூன்றாம் சென்னைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

**விடுபட்ட பகுதிகளில் கணக்கிடப்படாத குடிநீர்**

பிரதான குழாய்களிலும், வீட்டு இணைப்புகளிலும் குடிநீர் இழப்பு ஏற்படுவது முன்னர் செய்த ஆய்வு மூலமாகக் கண்டறியப்பட்டது. ஆகையால், இரண்டாவது சென்னைத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதியுடன் கணக்கிடப்படாத குடிநீரைக் குறைப்பதற்கு குடிநீர் கசிவு

கண்டறிதல் மற்றும் நிவர்த்தி செய்யும் பணி பல கட்டங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,95,000 வீட்டுக் குடிநீர் இணைப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. பழுதடைந்துள்ள 58.5 கிலோமீட்டர் பிரதானக் குழாய்கள் சரிசெய்யப்பட்டுள்ளன.

விடுபட்ட தெருக்களில் ஏ.சி./பி.வி.சி./சி.ஐ. பழுதடைந்த பிரதான குழாய்களை ஏறத்தாழ 300 கி.மீ. நீளம் மாற்றுவதற்கும் மற்றும் மீதமுள்ள வீட்டுக் குடிநீர் இணைப்புகளை (ஏறத்தாழ 80,000) மாற்றுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அருகிலுள்ள நகரப் பகுதிகளுக்கும், தொலைவிலுள்ள நகரப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க அடிப்படை வசதிகளை அமைத்தல்**

குடிநீர் வழங்கல் பெருந்திட்டத்தை எதிர்நோக்கி, 12 உள்ளாட்சி அமைப்புகளில் பிரதான அனுப்பும் குழாய்களையும், தேக்கி வைக்கப்படும் கொள்ளளவைப் பலப்படுத்தும் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. அருகில் உள்ள நகர்மயமாக்கப்பட்ட பகுதிகளுக்கும், தொலைவிலுள்ள நகர்மயமாக்கப்பட்ட பகுதிகளுக்கும் நீரை வழங்க நிதி ஆதாரங்களை முடிவு செய்த பின்பு சுமார் 898 கி.மீ. நீளத்திற்கான குடிநீர்ப் பகிர்மான அமைப்புகளையும் மற்றும் குடிநீர் வழங்கும் நிலையங்களையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**புதிய வீராண விரிவாக்கத் திட்டம்**

மழை பொய்க்கும் வருடங்களில் வீராணம் ஏரியிலுள்ள நீர் பற்றாமல் போய்விடும். ஆதலால் கொள்ளிடம் ஆற்றுப் படுகையிலிருந்து உட்பரப்பு நீரை எடுத்து சேத்தியாதோப்பிற்கு உந்து விசைமூலம் அனுப்பி பின்னர் புதிய வீராணம் திட்டத்திலுள்ள உட்கட்ட அமைப்புகள்மூலம் சென்னைக்கு அனுப்ப புதிய வீராண விரிவாக்கத் திட்டம் என்கிற திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக அரசு, ரூபாய் 300 கோடி செலவினத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ரூ.300 கோடியில் மூன்றில் ஒரு பகுதி செலவினம் அரசாங்கத்தாலும் மீதமுள்ள இரு பகுதி சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியத்தால் டுபிட்கோ/வணிக வங்கிகள் கடன் மூலம் ஈடுகட்டப்படும்.

கொள்ளிடம் ஆற்றுப்படுகையிலிருந்து கொள்ளிடம் ஆறு 39/3 மற்றும் 59/0 தூரங்களின் நடுவிலிருந்து 6 சேகரிப்பு கிணறுகள் கட்டுவதன்





மூலம் 150 எம்.எல்.டி உட்பரப்பு நீர் எடுக்கப்படும். சேகரிப்புக் கிணறுகளிலிருந்து கீழ்நிலைத் தொட்டிக்கு உந்து விசைமூலம் நீர் அனுப்பப்பட்டு, பின்னர் சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–1–ன்கீழ் கட்டப்பட்ட சேத்தியாதோப்பு சுத்திகரிக்கப்படாத நீரேற்று நிலையத்திற்கு குழாய் மூலம் நீர் அனுப்பப்பட்டு, சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–I (புதிய வீராணம் திட்டம்)–ன் உந்து விசை மற்றும் குழாய் அமைப்புகள்மூலம் சென்னை மாநகருக்கு நீர் அனுப்புதலே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 12 மாதங்களுக்குள் நிறைவேற்றப்படும்.

**சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம் – II**

கொசத்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் பாலாறுகளில் அதிகமாகவுள்ள நீரைத் தேக்கி வைப்பதற்காகத் தடுப்பணைகள், நீர்த்தேக்கங்கள், ஊடுருவும் தொட்டிகள் கட்டுவதன்மூலம் சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் II செயற்படுத்துவதற்கு அரசு 2002–ல் ரூ.493 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் அளித்தது. விரிவான விவாதத்திற்குப் பின் சில முன்மொழிவுகள் விலக்கப்பட்டு திருத்திய முன்மொழிவை அரசு ஏற்றுக்கொண்டு திருத்திய திட்ட மதிப்பான ரூ.124 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்தது. மேலும் அரசு திட்ட மதிப்பில் மூன்றில் ஒரு பகுதியை முதல் ஈட்டு மானியமாக வழங்கவுள்ளது. அதில் ரூபாய் 10 கோடி மானியம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகளைச் செயற்படுத்துவதன்மூலம் 60 எம்.எல்.டி. நிலத்தடி நீரை எடுக்க ஏதுவாகும்:–

(1) பாலாற்றின் குறுக்கே வயலூரில் தடுப்பணைக் கட்டுதல் மற்றும் அங்கிருந்து மங்கலத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரை அனுப்பி அதன் பின் சென்னைக் குடிநீர் பெருக்கத் திட்டம்–I–ன் குழாய்களில் செலுத்துதல் (20 எம்.எல்.டி)

(2) அடையாற்றின் குறுக்கே மணப்பாக்கம், நந்தம்பாக்கம், அனகாபுத்தூர் மற்றும் கவுல் பஜார் ஆகிய இடங்களில் 4 தடுப்பணைகள் கட்டுதல் (15 எம்.எல்.டி)

(3) கூவம் ஆற்றின் குறுக்கே பருத்திப்பட்டு மற்றும் கண்ணாபாளையம் ஆகிய இடங்களில் உள்ள 2 தடுப்பணைகளை மறுசிரமைத்தல் (5 எம்.எல்.டி)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

[2005 ஏப்ரல் 7

(4) மங்கலத்தில் 20 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல்

(5) மங்கலத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வயலூரிலிருந்து குழாய் அமைத்து அனுப்பி, அந்த நீரை சென்னைக் குடிநீர் பெருக்கத் திட்டம்–1–ன் குழாய்களில் செலுத்துதல் ( 20 எம்.எல்.டி)

இப்பணிகள் டிசம்பர் 2006–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**கடல் நீரை நன்னீராக்கும் திட்டம்**

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், அடிக்கடி பருவமழை பொய்த்து வருவதால் ஏற்படும் குடிநீர்ப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு, இப்பகுதி மக்களுக்குக் குடிக்கத்தகுந்த குடிநீர் வழங்குவதற்காக எல்லா பருவ காலங்களிலும் ஒரு நம்பத்தகுந்த ஆதாரமாக கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் அமைக்க அரசு முடிவு செய்தது. இதன்படி மீஞ்சூரில் 100/200 எம்.எல்.டி கொள்ளளவு கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் வடிவமைத்து, கட்டி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் மாற்றும் அடிப்படையில், செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்குரிய 60 ஏக்கர் நிலமும் சென்னை மாநகரில் மீஞ்சூர் அருகே வட எல்லையில் ஒதுக்கப்பட்டது.

பணி ஆணை அளித்த பின்னர், வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர் நிலையத்தை 15 மாதங்களுக்குள் படிப்படியாகக் கட்டி இயக்க வேண்டும். அவ்வாறான ஒப்பந்ததாரர் தேர்வு நிலையில் உள்ளார்.

**கழிவு நீர்த் திட்டங்கள்**

**சென்னை மாநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்**

சென்னை நகருக்கான கழிவுநீர்த் தொடர் அமைப்பு 1891ஆம் ஆண்டு நிறுவப்பட்டு தற்போது 98 சதவீதப் பகுதிகளுக்குச் சென்று அடையும்படி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறைபடுத்திக் கொண்டிருக்கும் குடிநீர் புனரமைப்புத் திட்டங்களினால் உண்டாகும் அதிகப்படியான கழிவுநீர் ஓட்டம் மற்றும் சென்னை நகர நதிகளில் பாயும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் ரூ. 720.15 கோடி செலவில் சென்னை மாநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ. 491.52 கோடி இந்திய அரசு மூலம் மானியமாகவும் மீதி சென்னைக் குடிநீர் வாரியத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம் 16 பணி செறிவுகளாக



2005 ஏப்ரல் 7]

மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. 4 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி உட்பட அனைத்துப் பணிகளும் ஏப்ரல் 2005–ல் முடிய உள்ளன.

**புறநகர்ப் பகுதிகளுக்குக் கழிவுநீர் வசதி**

சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளை நகர்மயமாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இப்பகுதிகளில் உள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் சுற்றுப்புற சூழல் ஆகியவற்றை சீரமைக்கும் நோக்குடன் இப்பகுதிகளுக்காக விரிவான கழிவுநீர் அகற்றும் அமைப்புகளை ஏற்படுத்த தேவையான செயற்குறிப்பு உருவாக்கும் நிலையில் உள்ளது. சென்னைக் குடிநீர் வாரியத்தால் பணிகள் வைப்பு நிதிப் பணிகளாக அதைச் சார்ந்த உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படும்.

**நகரில் கழிவுநீர்க் குழாய்களல்லாத தெருக்களுக்குக் கழிவுநீர்க் குழாய்கள் அமைத்தல்**

சென்னை மாநகரில் சுமார் 98 விழுக்காடு தெருக்கள் மற்றும் சாலைகளுக்குக் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு விட்டன. தற்பொழுதும் சில தெருக்களில் இவ்வாறு கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்படவில்லை. இது போன்ற தெருக்களிலிருந்து கழிவுநீர்க் குழாய்கள் அமைக்க விண்ணப்பங்கள் வந்த வண்ணம் உள்ளன. இந்த நிதியாண்டில் ரூ. 1.78 கோடி செலவில் 10.46 கி.மீ. நீளத்திற்குக் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கும் பணிக்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதற்கான பணிகள் வெவ்வேறு நிலையில் முடிக்கப்படும் தருவாயில் உள்ளன. இந்தப் பணி மாநகரின் அனைத்து பகுதிகளும் கழிவுநீர் அமைப்பை பெறும் வரை தொடரப்படும்.

**நிதி சார்ந்த பணிகள்**

**மின்னணு நிர்வாகம்**

2002–2003–க்கான வரவு–செலவுத் திட்ட தொடரின்போது, மின்னணு ஒப்படைப்பு முறைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னைக் குடிநீர் வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்குச் செலுத்த வேண்டிய தொகையை மின்னணு ஒப்படைப்பு முகப்பின் (EDS Counter) மூலம் பொது மக்கள் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதற்காகவே, சென்னைக் குடிநீர் வாரியம் 10 பல்வேறு தமிழ்நாடு மின்சார வாரிய செயலிட முகப்பில் மின்னணு ஒப்படைப்பு முறை செயலிட முகப்பினைத் திறந்துள்ளது.

இந்த மின்னணு ஒப்படைப்பு முறை செயலிடமுகப்பானது ஒரு பொதுவான வசூல் முகப்பாக குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணத்தை சென்னை நகரில் உள்ள அனைத்து நுகர்வோர்களும் அவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் வசூல் செய்யும். அனைத்து 10 மின்னணு ஒப்படைப்பு முறை செயலிடமுகப்பிலும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணத்தை காசோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ அல்லது வங்கிக் கேட்புக் காசோலையாகவோ செலுத்தலாம். இந்த மின்னணு ஒப்படைப்பு முறை செயலிடமுகப்பின் வாயிலாக, சென்னைக் குடிநீர் வாரியம் இதுவரை ரூ. 68.5.15 இலட்சம் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணத்தை 31–01–2005 வரை வசூலித்துள்ளது.

**இணையதளத்தின் மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை வசூல் செய்தல்**

தற்போது சென்னைக் குடிநீர் வாரியம் தனது 10 பகுதி அலுவலகங்கள், 70 பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் உள்ள வசூல் மையங்களில் கணினி அமைப்பின் மூலம் குடிநீர், கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை வசூல் செய்து வருகிறது. இவை தவிர சென்னைக் குடிநீர் வாரியத்திற்காக தெரிந்தெடுக்கப்பட்ட 22 கனரா வங்கிக் கிளைகள் மூலமும் வசூல் முனைவுகாலங்களில் குடிநீர், கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

வாரியம் தனது வசூல் திறனை வெவ்வேறு வகையில் மேம்படுத்தும்பொருட்டு மின்கம்பி (online) முறை வாயிலாக இணையதளத்தின் மூலம் குடிநீர், கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களைச் செலுத்தும் முறையை அறிமுகப்படுத்தியது. ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி இவ்வொருங்கிணைப்புப் பணியினை ஏற்றுக் கொண்டது. இம்முறையானது ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியில் சேமிப்புக் கணக்கு அல்லது அவ்வங்கியின் பற்று அட்டை உடைய சென்னைக் குடிநீர் வாரியத்தின் நுகர்வோர்கள் எவரும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் வலைதளத்தினுள் www.chennaimetrowater.com சென்று அல்லது ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் வலைதளத்தினுள் www.icicibank.com சென்று நுகர்வோர்களின் நிலுவை விவரங்களை அறிந்து கட்டணங்களைச்



செலுத்தலாம். மேலும் வாரியம், ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியுடன் இணைந்து சென்னைக் குடிநீர் வாரியத்தின் வலைதளத்தில் உருவாக்கப்பட்ட கட்டணம் செலுத்தும் வாயில் (pay seal) வழியாக மாஸ்டர் (Master) மற்றும் விசா (Visa) பற்று அட்டை உள்ளவர்கள் தங்களது குடிநீர், கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களைச் செலுத்துவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் 2003 முதல் ஜனவரி 2005 வரை ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி குடிநீர், கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை மின்கம்பி (online) முறையில் இணையதளத்தின் வாயிலாக ரூ.4.53 இலட்சம் வசூல் செய்துள்ளது.

**வரி இல்லாத முனிசிபல் இணைப்புப் பத்திரம் அளித்தல்**

வாரியம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் திட்டம்–I–ன் ஒரு பகுதி நிதிக்கு ரூ. 50 கோடி வரி இல்லாத முனிசிபல் இணைப்புப் பத்திரங்கள் வழங்கியதன் மூலம் 2003–2004 ஆம் ஆண்டில் முதலீட்டு நிதி சந்தையில் இணைந்துள்ளது. குடிநீர் வாரியம் முன்னிலையில் உள்ள மதிப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான கிரெடிட் ரேட்டிங் மற்றும் இன்வெஸ்ட்மெண்ட் சர்வீஸஸ் இந்தியா லிமிடெட் (சிஆர்ஐஎஸ்ஐஎல்)–ல் இருந்து ஏஏ(எஸ்.ஓ) மதிப்பீடு வாங்கியது. இந்த மதிப்பீடு பணம் செலுத்துபவர்க்கு பலமான தரம் மற்றும் பாதுகாப்பு அளிக்கின்றது. கூப்பன் வட்டி விகிதம் 7 வருடங்களுக்கு 5.2 சதவீதம் ஆகும். இதுதான் இந்தியாவிலேயே, வழங்கப்பட்ட வரி இல்லாத இணைப்புப் பத்திரங்களுக்கான குறைந்த விலை கூப்பன் ஆகும். இத்திட்டம் மிகக் குறுகிய காலத்தில் முடிக்கப்பட்டு சந்தா வெற்றிகரமாக முழுமையாகப் பெறப்பட்டது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்–I திட்டத்தில் வரி இல்லாத இணைப்புப் பத்திரங்கள் வழங்குதல் வெற்றி அடைந்ததால் வாரியம் 530 மில்லியன் லிட்டர் கொள்ளளவு சுத்திகரிப்பு நிலையத்திற்கும் ஒரு பகுதி நிதிக்கு இந்திய அரசின் ஒப்புதலுடன் ரூபாய் 50 கோடி வரி இல்லாத முனிசிபல் இணைப்புப் பத்திரங்கள் வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

**தகவல் முறை மற்றும் தொழில்நுட்ப திட்டம்**

மின்கம்பி தகவல் தொழில்நுட்பத்துடன் செயல்படுத்தக்கூடிய பட்டியல் மற்றும் வசூல், கணக்கு அலுவல்கள் மற்றும் பண்டகக்

கணக்கு முறைகள், முன் மாதிரி (Pilot) முயற்சியாக, சென்னைக் குடிநீர் வாரியம் அதன் தலைமை அலுவலகம் மற்றும் வாரியத்தின் ஒரு பகுதி அலுவலகமான பகுதி–5, அதனுள் அடங்கிய 18 பணிமனை அலுவலகங்கள் மற்றும் பண்டகசாலைகளில் நடைமுறைபடுத்தப்பட்டது.

இத்திட்டம் வாரியத்தின் மற்றைய 9 பகுதி அலுவலகங்கள் மற்றும் அதனுள் அடங்கியுள்ள 140 பணிமனை அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவதற்காகத் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் வசூல் மையங்களில் பயன்படுத்தக்கூடிய கணினிகள் மற்றும் ஆரக்கிள் அலுவலக மறுசிரமைப்புத் திட்டத்திற்கான பயன்பாடுடைய மென்பொருள் (Oracle ERP application) மற்றும் தற்போதுள்ள விநியோக மையத்தை (Server) மேம்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தை விரிவுபடுத்துவதால் 5.50 இலட்சம் நுகர்வோர்கள் பயன் பெறுவதனுடன் மேலும் நகரில் எப்பகுதியில் வசிக்கும் நுகர்வோர்களும் தங்களது நிலுவைகளை 200 வசூல் மையங்களில் எங்கு வேண்டுமாயின் செலுத்தும் வகையில் இதன் வலைதளம் இணைக்கப்படும். அலுவலக துறைகளில் இப்பயன்பாட்டினை உபயோகப்படுத்துவதால், அலுவலக தானியங்கி முறை (Office automation) மூலம் 460 அலுவலக கணினி உபயோகிப்பாளர்கள் பயன்பெறுவர்.





கோயம்புத்தூர் மாவட்டத்தில் கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி சிறப்பு ஊராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்




ரூ. 30.38 கோடி மதிப்பீட்டிலான
இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவோர்



திருநெல்வேலி மாவட்டத்தில் அச்சம்புதூர், ஆயகுடி, பொன்பொழி, வடகரை, கீழ்ப்பிடாகை, சிறப்பு ஊராட்சிகள் மற்றும் கடையம், கீழப்பாவூர், தென்காசி, செங்கோட்டை ஒன்றியங்களை சார்ந்த 151 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்




**பயனாளிகள்**

| சிறப்பு ஊராட்சிகள் | ஊரகக் குடியிருப்புகள் | |
|---|---|---|
| ஆயகுடி | கடையம் ஒன்றியம் | 11 |
| அச்சம்புதூர் | கீழப்பாவூர் ஒன்றியம் | 81 |
| பொன்பொழி | தென்காசி ஒன்றியம் | 34 |
| வடகரை | செங்கோட்டை ஒன்றியம் | 25 |
| கீழ்ப்பிடாகை | | |

**ரூ. 29.92 கோடி மதிப்பீட்டிலான**
**இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவோர்—1.86 இலட்சம்**





## இணைப்பு II

*(388 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 40

### ஊரக வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005—2006

**1. முன்னுரை**

சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள், வேலைக்கு ஊதியம் திட்டத்தின்மூலம் கூடுதல் வருவாய்க்கு வழி செய்தல், மற்றும் ஊரக உள்கட்டமைப்பு வசதிகளுக்கு வலிமை சேர்த்தல், ஊரகக் குடியிருப்பு திட்டம் மற்றும் சுகாதாரத் திட்டங்களின்மூலம் ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், வளர்ச்சிக்கான செயல்பாட்டில் மக்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டினை ஊராட்சி அமைப்புகள்மூலம் ஏற்படுத்தல் ஆகியவற்றின்மூலம், ஊரக மக்களின் வறுமையைக் குறைக்கவும் அவர்களின் நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துவதில், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் அக்கறை கொண்டுள்ளன.

சிறப்புச் சிற்றூராட்சிகளில் வசிக்கும் மக்களும் ஊரக வளர்ச்சித் திட்டங்களின் பயன்களை அடைந்திடும் வகையில், சிறப்புச் சிற்றூராட்சிகள் இயக்குநரகம், ஊரக வளர்ச்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

### ஊரக வளர்ச்சி இயக்ககம்

**2. 2004-2005 ஆம் ஆண்டில் சிறப்பான சாதனைகள்**

முழுமையான ஊரக வளர்ச்சி என்ற இலக்கினை, பல்வேறு மத்திய, மாநில திட்டங்கள்மூலம் அடைந்திட அரசு முழு முயற்சி எடுத்து வருகின்றது. 2004—2005 ஆம் ஆண்டில் அடைந்துள்ள தனித்தன்மை வாய்ந்த சிரிய சாதனைகளின் விவரம் பின்வருமாறு:

### 2.1 ஊரக சுகாதாரம்

மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "தூய்மையான கிராம இயக்கம்", தமிழ்நாட்டில் ஊரக சுகாதாரம் பற்றிய ஒரு புரட்சியை ஏற்படுத்தி, தேசிய அளவில் இம்மாநிலத்திற்கு பெரும்புகழை ஈட்டியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகள், மத்திய அரசு அளித்துள்ள நிர்மல் கிராம புரஸ்கார் விருதுகளில் ரூ. 48 இலட்சம் பெறுமான அதிக எண்ணிக்கையிலான விருதுகளைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில், தூய்மையான கிராமம் விருதை 15 கிராம ஊராட்சிகள் பெற்றுள்ளன. தமிழ்நாட்டிலிருந்து 12 கிராம ஊராட்சிகளும், 10 ஊராட்சிகளை உள்ளடக்கிய ஓர் ஊராட்சி ஒன்றியமும் ஆக மொத்தம் 22 கிராம ஊராட்சிகள் தேசிய அளவில் நிர்மல் கிராம புரஸ்கார் விருதை பெற்றுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மேல்புரம் ஊராட்சி ஒன்றியமானது நாட்டிலேயே இவ்விருதிற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள ஒரே ஒன்றியமாகும்.

மத்திய அரசு, கிராம ஊராட்சிகளுக்கென முதன் முதலாக அறிவித்த நிர்மல் கிராம புரஸ்கார் பரிசுகளில், தமிழக கிராம ஊராட்சிகள் மட்டும் 35% பரிசாக பெற்றுள்ளன. மேதகு இந்திய ஜனாதிபதி அவர்கள், இந்திய அளவில் ஊரக சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக உருவெடுத்து வருகின்றது என்று குறிப்பிட்டு, கடலூர் மாவட்டத்தில் கீரப்பாளையம் கிராம ஊராட்சி, வேலூர் மாவட்டத்தில் காந்தி நகர் சிறப்புக் கிராம ஊராட்சி ஆகியவற்றின் சாதனையை, சுகாதாரத்தில் முதன்மையான நிலைக்கு முன்மாதிரியாக மேற்கோள் காட்டினார். ஊரக சுகாதாரத்தில் தமிழகத்தின் சாதனை தேசிய அளவில் பாராட்டப்பட்டுள்ளது. 'தூய்மையான கிராமம்' விருதும், 'நிர்மல் கிராம புரஸ்கார்' விருதும், ஊராட்சி அமைப்புகள் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார ரீதியில் மேம்பாடு அடைந்திட வழிவகுக்கும் சிறந்த முன்மாதிரிகளாக உள்ளன.

மேற்கண்ட நடவடிக்கைகள் அனைத்தும், 2001 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் 15 சதவீதத்தினருக்கு மட்டும் கிடைத்த சுகாதார வசதிகள், 2005 ஆம் ஆண்டில் 54 சதவீதத்தினருக்குக் கிடைத்திட வழிவகுத்துள்ளது.

### 2. கிராம ஊராட்சிகள் கணினிமயமாக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 13-10-2004 அன்று கிராம ஊராட்சிகளைக் கணினிமயமாக்கும் திட்டத்தைத் தொடங்கி





வைத்தார்கள். 1,113 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 29 உதவி இயக்குநர் (ஊராட்சி) அலுவலகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரகம் ஆகியவற்றிற்கு ரூ. 10.37 கோடி செலவில் கணினிகள் வழங்கப்பட்டு, கிராம அளவில் தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் மின்னணு நிர்வாகம் நடைபெற முன்முயற்சிகளை மேற்கொண்டதால், தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. ஊராட்சி அமைப்புகளின் கணக்குகளைப் பராமரித்திட, தேசிய தகவல் மையத்தின் ஒத்துழைப்புடன், இணையதளம்மூலம் செயல்படக் கூடிய "பிரியாசாஃப்ட்" என்ற மென்பொருள் ஒன்று, ஊராட்சி அமைப்புகளின் கணக்குகள் பராமரிப்பிற்கென வடிவமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் உள்ள கணினிகளை இணையதள தகவல் மையங்களாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன்படுத்துகின்றன.

### 2.3. மாதிரி கிராம பயிற்சி மையங்கள்

2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒரு கொள்கையாக அறிவிக்கப்பட்ட "மாதிரி கிராம பயிற்சி மையம்", 13-10-2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கிவைத்து தேனி மாவட்டம் அரண்மனைபுதூர் கிராம ஊராட்சித் தலைவருடன் வீடியோ கான்பரன்சிங் நிகழ்ச்சியில் பங்கு பெற்றதன்மூலம் செயலாக்கம் பெற்றுள்ளது. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம், மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையேயுள்ள தகவல் பரிமாற்றம், மற்றும் சிறந்த செயல்பாடுகள் குறித்த பகிர்வுகளுக்கு உதவிடும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மின்னணுத் தொடர்புகள், தேசிய அளவில் சிறந்த முன்னோடி நடவடிக்கைகளாக உள்ளன என்று தலைமை இயக்குநர், தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஐதராபாத் அவர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

### 2.4 வறுமை ஒழிப்பு

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் மிகுந்த வறிய நிலையிலுள்ள 25 குடும்பங்களுக்கு, இருப்பிடப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, உடல் நலப் பாதுகாப்பு மற்றும் இதர வளர்ச்சித் திட்ட உதவிகளை வழங்க 2004-2005 ஆம் ஆண்டில் "அதிகாரமளித்தல் மற்றும் வறுமை ஒழிப்பு" என்ற புதிய திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஆதரவற்றவர்களைக் கண்டறிவதன்மூலம் இந்த முன்னோடித் திட்டத்தினுடைய செயலாக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்தகைய மிகுந்த ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு அளிக்கக்கூடிய பல்வேறு வகையான ஆதரவு மற்றும் உதவிகள் குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் ரூபாய் 5.00 கோடி இத்திட்டத்திற்கென விடுவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் தேவைப்படுபவர்களுக்குப் பயன்கள் சென்றடைவதை அடிப்படையாகக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொலைநோக்குப் பார்வையுடன் அறிவிக்கப்பட்டுள்ள இத்திட்டம், சந்தேகமின்றி, ஊரகப் பகுதியில் நிலவும் வறுமையைக் குறைக்க அடித்தளம் வகுக்கும்.

### 2.5 ஊரகக் குடியிருப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் உள்ள 20,000 சாதாரண (கச்சா) வீடுகளைக் கடனுதவி மற்றும் பங்கேற்புடன் கூடிய திட்டத்தின்மூலம் மேம்படுத்த அரசு ஒரு திட்டத்தை வகுத்தது. சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராகவுள்ள வறுமைக் கோட்டிற்குகீழே வாழும் குடும்பங்களுக்கு உதவி செய்வதே, இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த புதிய திட்டத்தில் கீழ்க்கண்ட கூறுகள் உள்ளடங்கியுள்ளன:-

| | | |
|---|---|---|
| அ) பயனாளிகள் பங்களிப்பு | ரூ. | 500/— |
| ஆ) அரசு மானியம் | ரூ. | 2500/— |
| இ) கடனாக பெறவேண்டிய தொகை | ரூ. | 7000/— |
| மொத்தம் | ரூ. | 10000/— |

இத்திட்டத்திற்கென ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயனாளிகளைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

### 2.6 நமது கிராமம்

அதிகாரம் உண்மையிலேயே மக்களின்வசம் ஒப்படைக்கப்படும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 15-8-2004 அன்று, அனைத்து 12,618 ஊராட்சிகளிலும் செயல்படுத்த "நமது கிராமம்" என்ற புதிய திட்டத்தை ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் அறிவித்தார்கள். இத்திட்டத்தின்கீழ், கிராமங்களின் வளர்ச்சிப் பணிகளிலும், தமது வாழ்க்கைத் தர முன்னேற்றத்திலும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும் பொதுமக்களும் ஒன்றிணைந்து செயல்படுவது ஊக்குவிக்கப்படுகிறது. பொதுமக்களும் கிராம ஊராட்சியும் சேர்ந்து, கிராம வளர்ச்சித் திட்டத்தை தயாரித்து, தமது வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்குத் தாமே





பொறுப்பேற்றுக் கொள்கின்றனர். ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா ரூ. 1.10 இலட்சம் வீதம் அனைத்து 12,618 ஊராட்சிகளுக்கும் மொத்தம் ரூ. 140 கோடியை அரசு நேரடியாக வழங்கியுள்ளது. இந்த நிதியின் மூலம் கிராம ஊராட்சிகள் சிமெண்ட் சாலை அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற உள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளன. கிராம வளர்ச்சிக்கு வழிவகுக்கத் தக்கவாறு பொது மக்களின் பங்கேற்பை ஊக்குவிக்க மனித வள மேம்பாட்டுக் குறியீடுகளில் முன்னேற்றம், பொது பிரச்சினைகளின் தீர்வு ஆகியவை குறித்த செயல்பாடுகள் போன்றவற்றிற்காகச் செயலாக்கத்தின் அடிப்படையில் ஊராட்சிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை ரூ.55.00 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மாநில அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஒட்டுமொத்த, நீடித்த மற்றும் முழுமையான ஊரக வளர்ச்சிக்கு ஏற்ற ஒருங்கிணைந்த சுய சார்பு நடவடிக்கைகளை, மிகுந்த ஊக்கத்துடன் ஊராட்சிகள் மேற்கொள்வதற்கு இந்தத் திட்டம் வழி வகுத்துள்ளது.

### 2.7 ஊரகக் குடும்ப நல தன்னார்வலர் திட்டம்

2004-2005 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட ஊரகக் குடும்ப நல தன்னார்வலர் திட்டமானது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 5 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 சுய உதவிக் குழுக்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தேவையான பயிற்சிகளை அளித்திட, குழுக்களைத் தேர்வு செய்யும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனை மேம்படுத்திட இத்திட்டம் பெரிதும் உதவும்.

### 2.8 பழமையான குடிநீர் ஊருணிகளைப் புனரமைத்தல்

இராமநாதபுரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் குடிநீர் ஊருணிகளைப் புனரமைக்கும் முன்னோடித் திட்டத்திற்கு கிடைத்த வெற்றியின் அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப உதவியுடன், ரூ. 7.38 கோடி மதிப்பீட்டில் 246 ஊருணிகள் ஊரக வளர்ச்சித் துறையால் புனரமைக்கப்பட்டு, மின்சக்தி ஏதும் தேவையில்லாமல், குடிநீர் ஊருணிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஊருணிகளின் பராமரிப்பு, பயன்படுத்துவோர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

[2005 ஏப்ரல் 7

### 2.9 ஊரகப் பகுதிகளில் எரிசக்தித் திறன் மிகுந்த அமைப்புகளை ஏற்படுத்துதல்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இத்துறையால் அமைக்கப்பட்டுள்ள, 11 எரிசக்தி கலன்கள், 1,274 கழிப்பறையுடன் இணைந்த கரிம வாயுக் கலன்கள், 1,587 கரிம வாயுக் கலன்கள், 3,003 சூரிய ஒளியில் இயங்கும் தெரு விளக்குகள், 304 சூரிய ஒளியில் செயல்படும் வீட்டு மின் விளக்குகள் மற்றும் 22 சூரிய ஒளியில் இயங்கும் பம்புகள் ஆகியவை தேசிய அளவில் பாராட்டைப் பெற்றுள்ளன. கிராம அளவிலும் மற்றும் தனி நபர்கள் அளவிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதில் தேசிய அளவில் சிறந்த ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

### 2.10 ஊரக வளர்ச்சித் திட்டங்களின் ஒத்திசைவு

ஊராட்சி நிர்வாக அமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியவை தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களில் ஒருங்கிணைந்து செயல்படுவது மற்ற மாநிலங்கள் பின்பற்றத்தக்க, ஒரு முன்னோடி நடவடிக்கையாக உள்ளது. 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 மற்றும் 28 தேதிகளில் புது டில்லியில் நடைபெற்ற மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களின் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்த தமிழ்நாட்டின் சாதனைகள் மற்றும் செயல்பாடுகள், மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் சுற்றறிக்கையாக மத்திய அரசால் அனுப்பப்பட்டது. வீட்டு வசதி, சுகாதாரம், சாலைப் பணிகள், சுய மற்றும் ஊதியத்திற்கான வேலை, மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற திட்டங்களில் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சிகளை ஒருங்கிணைக்கும் பணி, மாநிலத்தின் அனைத்து ஊரக வளர்ச்சி முகமைகளால் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### 2.11 கிராம ஊராட்சிகளின் தன்னிறைவு

தமிழ்நாட்டில் 1,051 கிராம ஊராட்சிகள், தேவையான நிதி ஆதாரங்களைத் தாமே திரட்டுதல், புதுமையான நடவடிக்கைகளின்மூலம் தெரு விளக்குகள் பராமரிப்புச் செலவினத்தை குறைத்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றின்மூலம் தன்னிறைவு நிலையை அடைந்துள்ளன. மேலும், 5,780 கிராம ஊராட்சிகள் தங்களின் நிதி ஆதாரங்கள் மற்றும் மாநில நிதிக் குழுவின் மானியத்துடன், தங்களின் செலவுகளை நிர்வகித்துக் கொள்கின்றன.



2005 ஏப்ரல் 7]

## 3. 2004-2005 ஆம் ஆண்டின் செயலாக்கம் மற்றும் 2005-2006 ஆம் ஆண்டின் முன்முயற்சிகள்

### 3.1 ஊரக சுகாதாரம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் "நிர்மல் கிராம புரஸ்கார்" விருது பெற்றவர்களைப் பாராட்டியபோது "இந்தியா கிராமங்களில் வாழ்கிறது" என்று மகாத்மா காந்தியடிகள் கூறியதை நினைவு கூர்ந்ததோடு, இடைவிடாத கடின முயற்சிகள்மூலம் "தூய்மையான கிராம இயக்கம்" தொடர வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

2004-2005 ஆம் ஆண்டில், "தூய்மையான கிராமம்" விருதின்கீழ் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது. திடக் கழிவு மேலாண்மைமூலம் பாதுகாப்பாக கழிவுகளை அகற்றுதல் மற்றும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாகப் பராமரித்தல் ஆகியவற்றை பொதுமக்கள் மேற்கொள்வதற்கு இந்த ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை ஊக்குவித்துள்ளது. இந்தப் பரிசுத் தொகை ரூ.75 இலட்சத்திலிருந்து, ரூ.13.16 இலட்சம் மரபு சாரா எரிசக்தி அமைப்புகளை ஏற்படுத்துவதற்கும், ரூ.30.35 இலட்சம் கூடுதல் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி பராமரிப்பதற்கும், ரூ.10.60 இலட்சம் கட்டடம் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கும் செலவிடப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட சிறப்பு முன்முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளதன் அடிப்படையில் நாட்டிலேயே சிறந்து செயல்படும் மாநிலம் என்று, தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது:

- சுய உதவிக் குழுக்களின்மூலம் குறைந்த செலவு மற்றும் குறைந்த அளவு தண்ணீர் தேவைப்படும் ஊரக சுகாதார கழிப்பறைக் கோப்பைகள் தயாரிப்பது ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் இத்தகைய கழிப்பறைக் கோப்பைகள் தயாரிக்கும் நடவடிக்கையில் 146 சுய உதவிக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.
- ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு சுய உதவிக் குழு, பெண்களுக்கான சுகாதார தேவைகளைக் கவனித்து வருகிறது. 100-க்கு மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் சானிடரி நாப்கின்கள் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இவை மகளிர் சுகாதார வளாகங்கள், பெண்கள் பள்ளிகள், சுய உதவிக் குழுக் கூட்டங்கள் மற்றும் மருத்துவமனைகள் ஆகிய இடங்களில்

விற்பனை செய்யப்படுகின்றன. சானிடரி நாப்கின்கள் எளிதாகக் கிடைப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதன்மூலம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், பெண்கள் பள்ளிகளிலிருந்து இடையில் விலகும் எண்ணிக்கை குறைந்துள்ளது.

- பயன்படுத்தப்பட்ட சானிடரி நாப்கினை உரிய முறையில் கழிவு செய்வதற்காக அனைத்து பெண்கள் பள்ளிகள் மற்றும் மகளிர் சுகாதார வளாகங்களில் கழிவு எரியூட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இதுவரை 6,923 கழிவு எரியூட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் திட்டங்களில் அடைந்துள்ள சாதனைகளும் வெற்றிகளும் வெளிமாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும், பார்வையாளர்களை ஈர்த்துள்ளது. அரியானா, மகாராட்டிரம் மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களிலிருந்தும் ஸ்ரீலங்கா மற்றும் வங்காளதேசம் போன்ற அயல்நாடுகளிலிருந்தும், ஊரக சுகாதாரம் குறித்து தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு முயற்சிகள் பற்றி பார்வையிட்டு தகவல் அறிந்திட பல குழுக்கள் வந்துள்ளன.

### 3.2 ஊரகச் சாலைகள்

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ், அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற ஊரகச் சாலைகள் மொத்தம் ரூ.552 கோடி செலவில் 4,197 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன. திட்ட நிதியைப் பயன்படுத்துதல் மற்றும் சாலைகளின் தரம் அடிப்படையில் இம்மாநில அரசின் செயல்பாடானது மத்திய அரசால் பாராட்டப்பட்டு முந்தைய ஆண்டின் ஒதுக்கீடான ரூ. 80 கோடிக்கு மேல் ரூ.118 கோடி அதாவது முதலில் இருந்த ஒதுக்கீட்டைவிட 47 சதவீதம் உயர்த்தப்பட்டு, 2004-2005 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

### 3.3 ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

#### 3.3.1 வேலைக்கு ஊதியம் திட்டம்

##### அ. சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

பல்வேறு மாவட்டங்களின் ஊரக வளர்ச்சித் திட்ட முகமைகளின் திட்ட அலுவலர்கள், ஊழியர்கள், பொருட்கள் மற்றும் இயந்திரங்களுடன் வந்து, சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்கு சிறப்பாகப் பாடுபட்டனர்.





பேரிடர் மேலாண்மைப் பயிற்சி பெற்றிருந்த உள்ளாட்சிகளின் மக்கள் பிரதிநிதிகள் நிவாரண நடவடிக்கைகளில் சிறந்த முறையில் பங்கேற்றனர்.

சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளில் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறப்பு ஒதுக்கீடு அளிக்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டு, அக்கோரிக்கை மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேலைக்கு ஊதியத் திட்டத்திற்காக ரூ.210 இலட்சம் மற்றும் 2,629 மெட்ரிக் டன் அரிசி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- முந்தைய ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட ரூ.256.20 கோடி, 2004-2005 ஆம் ஆண்டில் 7 சதவீதம் உயர்த்தப்பட்டு ரூ.273.84 கோடி வழங்கப்பட்டது.
- 2004-2005 ஆம் ஆண்டில் 12,204 உரக் குழிகள், 9,177 கிராமக் குளங்கள், 188 மீனவர்களுக்கான பல்நோக்கு மையங்கள், 733 சிறு கிடங்குகள், 3,180 மதிய உணவு மையக் கட்டடங்கள், 1,254 சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் மற்றும் 246 குடிநீர் ஊருணிகள் ஆகிய பணிகளை உள்ளடக்கிய 1,34,842 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

##### ஆ. சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்ட சிறப்புக் கூறு

- மத்திய அரசு ஒதுக்கீடு செய்த 3,04,000 மெட்ரிக் டன் அரிசியைப் பயன்படுத்தி 55,516 பணிகளும், இதற்கென மாநில அரசு வழங்கிய ரூ.57.25 கோடி ஊதியத்திற்கான ரொக்கத் தொகையும் முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது.
- 432.520 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன.
- கூடுதல் ஒதுக்கீடாக மத்திய அரசிடமிருந்து 1,50,000 மெ. டன் அரிசி பெறப்பட்டது. இதற்கென ரூ.77.25 கோடி ஊதியத்திற்கான ரொக்கத் தொகையாக மாநில அரசால் வழங்கப்பட்டு, 23,256 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

##### இ. தேசிய வேலைக்கு உணவுத் திட்டம்

தமிழ்நாட்டில் கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்கள் இத்திட்டத்தின் செயலாக்கத்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதற்காக ரூ.4,851.58 இலட்சம் ரொக்கமும், 49,815 மெட்ரிக் டன் அரிசியும் ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களுக்கான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. திட்ட அங்கீகாரத்தை எதிர்நோக்கி, 2,868 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். நீர் சேகரிப்பு பணிகள், நில மேம்பாடு மற்றும் காடுகளை உருவாக்குதல் உள்ளிட்ட வறட்சி நிவாரணப் பணிகள், வெள்ளத் தடுப்புப் பணிகள் மற்றும் ஊரக இணைப்புச் சாலை வசதி ஆகியவை இத்திட்டப் பணிகளில் அடங்கும்.

**3.3.2 சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

**பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் ஊரகப் பகுதிகளில் நடத்தப்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள குடும்பங்களின் மறு ஆய்வில், 31,339 குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது தெரிய வந்துள்ளது. சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளில், பாதிக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை தொடர்பாக ஓர் ஆய்வும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டது. 2,491 சுய உதவிக் குழுக்கள் சொத்துக்களை இழந்துள்ளனர் என்றும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 831 உறுப்பினர்கள் இறந்துள்ளனர் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடன் வழங்குவது தொடர்பான விதிமுறைகளைத் தளர்த்துவதற்காக, மாநில வங்கிகள் ஒருங்கிணைப்புக் குழுவில் இத்துறை சிறப்பான முயற்சிகள் மேற்கொண்டதன் காரணமாக, கடன் வழங்குவதில் கீழ்க்கண்டவாறு விதித்தளர்வுகள் அறிவிக்கப்பட்டன:

அ. சுனாமியால் பாதிக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் மதிப்பீடு வற்புறுத்தப்படமாட்டாது.

ஆ. ரூ. 40,000-க்கு உயர்த்தப்பட்ட சுழற்சி நிதி, பாதிக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

இ. துணைப்பிணையம் கேட்காமல் கடன் வழங்கப்படும்.

ஈ. ஏற்கெனவே வழங்கப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்த நிர்பந்தம் செய்யாமல், சுய உதவிக் குழு பெற்ற மானியத்தின் அதிகபட்சமாக 4 மடங்குக்கு ஈடான கூடுதல் கடனை வழங்குமாறு அனைத்து வங்கிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.



சுழற்சி நிதி மற்றும் பொருளாதார உதவிக்காக ரூ.1,400.510 இலட்சம், 1,814 சுய உதவிக் குழுக்களுக்கும் 2,336 தனிப்பட்ட பயனாளிகளுக்கும் உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. இதில் 151 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கூடுதல் உதவியான ரூ.201.33 இலட்சமும் அடங்கும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 429 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கிக் கடனுதவி பெற்ற சுய உதவிக் குழுக்களிடமிருந்து கடன் தொகையைத் திரும்ப வசூலிக்கும் முறைகள் குறித்து பல்வேறு மாநிலங்களில் இந்திய ரிசர்வ் வங்கி நடத்திய ஓர் ஆய்வறிக்கையின்படி, சுய உதவிக் குழுக்கள் கடன் தொகையை வங்கிக்கு திரும்ப செலுத்துவதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்று தெரிய வந்துள்ளது. தேசிய அளவில் 78.17 சதவீதமாக உள்ள வசூல் விகிதம், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 97.42 சதவீதமாக உள்ளது.

- இந்த ஆய்வின்மூலம், குழுக்களுக்கு மொத்தமாக நிதியுதவி பெறும் போக்கு தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளது என்றும், தேசிய அளவில் 18 சதவீதமாக உள்ள செயல்படாத சொத்துக்களின் விகிதம் தமிழ்நாட்டில் 0.53 சதவீதமாக மட்டும் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இம்மாநிலத்தின் தொடர்ந்த தலைசிறந்த செயல்பாடானது, பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான 2004-2005 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டினை முந்தைய ஆண்டின் ஒதுக்கீட்டிலிருந்து 25.17 சதவீதம் அதிகரித்து, ரூ.6,255.53 இலட்சமாக உயர்த்திப் பெற வழி வகுத்துள்ளது. இத்திட்ட நிதி ஒதுக்கீட்டினை முழுமையாகப் பயன்படுத்துவதில் நாட்டிலேயே இம்மாநிலம் முதல் வரிசையில் உள்ளது என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

- சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனை உதவிகள்: தமிழ்நாடு சுய உதவிக் குழு நலச் சங்கம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டதன்மூலம் ஊரக சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவியாக பல்வேறு சந்தைப்படுத்தும் முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூலப் பொருட்களை வழங்குதல்

மற்றும் ஏற்றுமதி உட்பட ஊரக சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் மற்றும் இவற்றிற்குத் தேவையான இதர உதவிகளை வழங்குதல் ஆகியவற்றை செய்திட, இந்தச் சங்கமானது பதிவு பெற்ற சங்கமாக அமைக்கப்பட்டுள்ளது. ஊரகச் சந்தை இணைய வலைதளம் மூலமாக சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் மாவட்ட விநியோகம் மற்றும் விற்பனை சங்கங்களை அமைத்தல் ஆகியவற்றின்மூலம் மேற்கண்ட செயல்பாடுகளுக்குக் கூடுதல் ஆதரவு அளிக்கப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி ஊரக சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்குத் தனியாக வர்த்தகப் பெயர்கள் 29 மாவட்டங்களிலும் உருவாக்கப் பட்டுள்ளன.
- 2003-2004 ஆம் ஆண்டில் 166 இடங்களில் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்பட்ட "ராசி" (இணையதளம் மூலம் ஊரகப் பகுதிகளில் சேவைகளைப் பெறுதல்) மையங்கள், 2004-2005 ஆம் ஆண்டில் 1,852 ஆக அதிகரித்துள்ளன.
- 27,146 ஊரக மகளிருக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது.
- கட்டடப் பணியாளர், குழாய் பொருத்துநர் மற்றும் மின்னாளர் பயிற்சி.

2004-2005 ஆம் ஆண்டில், 268 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள், அடிபம்பு பழுதுபார்த்தல், தெரு விளக்குகள் பராமரிப்பு மற்றும் சுகாதாரப் பணிகள் போன்ற குடிமைப் பணி பராமரிப்புச் சேவைகளை மேற்கொண்டனர்.

2005-2006 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 சுய உதவிக் குழுக்கள் வீதம் மொத்தம் 2,175 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ. 1,08.750 இலட்சம் செலவில் கட்டடப்பணி, குழாய் பொருத்துதல், மின் வல்லுநர் பணி ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

- **சிறு கடன் மற்றும் வாழ்வாதார உதவி**

2005-2006 ஆம் ஆண்டில் ஏற்கெனவே தகுதி பெற்றுள்ள 36,642 சுய உதவிக் குழுக்களுக்கு சிறு கடன் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும்.



- **சுய உதவிக் குழுக்களுக்கான ஊரக உணவகம் மற்றும் விற்பனை மையம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 13-10-2004 அன்று தலைமைச் செயலகத்தில் ஊரக சுய உதவிக் குழுவினரின் உணவகம் மற்றும் விற்பனை மையத்தைத் தொடங்கி வைத்தார்கள். தலைமைச் செயலக ஊழியர்கள் மற்றும் வருகை தரும் பொதுமக்களுக்கு சுய உதவிக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்கும் இம்மையம், சுய உதவிக் குழுவின் விற்பனை வாய்ப்புகளை மிகவும் மேம்படுத்துவதில் பங்கு பெறுகின்றது.

- **மூலிகைப் பொருட்களின் விற்பனை**

2004-2005 ஆம் ஆண்டில் பழங்குடி இன இருளர்கள் தயாரிக்கும் 10 வகையான மூலிகைப் பொருட்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு மருந்துப் பொருட்களுக்கான உரிமம் பெறப்பட்டுள்ளது. இந்த உற்பத்திப் பொருட்கள் இவற்றிற்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சிப்பங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

காஞ்சிபுரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மூலிகைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஊரக சுய உதவிக் குழுவினர், இப்பொருட்களை விற்பனை செய்வதற்கு இந்திய பழங்குடி கூட்டுறவு விற்பனை மேம்பாட்டு இணையத்துடன் (TRIFED) கூட்டு நடவடிக்கை விதிக் குறிப்பு ஆவணத்தில் (Memorandum of Understanding) கையொப்பம் இட்டுள்ளனர். தேசிய அளவில் இப்பொருட்களின் விற்பனையானது, கடந்த 18-3-2005 அன்று புது டில்லியில் இந்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சக செயலாளர் மற்றும் பழங்குடியினர் விவகார அமைச்சக செயலாளர் ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள இருளர் பழங்குடி மக்களுடன் இதர மாவட்டங்களில் உள்ள பழங்குடியினரையும் ஒருங்கிணைத்து, அவர்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.4 ஊரக வீட்டு வசதி**

**2004-2005**

- 2003-2004 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கு ரூ.93.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தியதன் காரணமாக 2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்ட நிதி ஒதுக்கீடு 29 சதவீதம் உயர்த்தப்பட்டு, ரூ.120.40 கோடியாக இம்மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- கான்கிரீட் கூரையுடன்கூடிய 37,676 புதிய வீடுகள் கட்டப்பட்டன.
- 19,265 சாதாரண (கச்சா) வீடுகள் பக்கா வீடுகளாக மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.
- கட்டுமானப் பணிகளில் குறைந்த செலவிலான மற்றும் புதுமையான தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், 313 ஊரக சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்குக் காந்தி கிராம ஊரகத் தொழில்நுட்ப மையம், திண்டுக்கல், விவேகானந்தா கல்வி கேந்திரம், கன்னியாகுமரி மற்றும் ஆரோவில், பாண்டிச்சேரி ஆகிய நிறுவனங்களின்மூலம் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

**2005-2006**

2005-2006 ஆம் ஆண்டில் 37,676 புதிய வீடுகள் கட்டவும், 19,265 சாதாரண (கச்சா) வீடுகளை மேம்படுத்தவும் அரசு கருதியுள்ளது. இதற்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.29.42 கோடியும், மேலும் கான்கிரீட் கூரை அமைத்திட மாநில அரசின் மானியமாக ரூ.43.05 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.5 பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டம் (ஊரகக் குடியிருப்பு)**

**2004-2005**

இத்திட்டத்தின்கீழ் 5,478 புதிய வீடுகள் ரூ.18.78 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டன..

**2005-2006**

2005-2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 5,478 புதிய வீடுகள் மொத்தம் ரூ.18.78 கோடி மதிப்பில் கட்டப்பட் உள்ளன.



**3.6 ஊரக எரிசக்தி**

**2004-2005**

சுற்றுச்சூழலுக்கு இசைவாக, ஒவ்வொரு குடும்பத்திற்கும் கழிவறையுடன் இணைக்கப்பட்ட கரிம வாயு கலன்கள் அமைப்பதன்மூலம் பல்வேறுபட்ட பயன்கள் கிடைக்கும்வகையில், மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவது என்பது இத்திட்டத்தின் இலக்காகும். இதற்கு முழுமையான நிதியுதவி மத்திய அரசினால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கரிம வாயு கலன் அமைத்திட சமவெளிப் பகுதிகளில், ஆதிதிராவிட/பழங்குடியின பயனாளிகளுக்கு ரூ.2,800/-ம் இதர பயனாளிகளுக்கு ரூ.2,100/-ம், மலைப் பகுதிகள் மற்றும் கடின மண் பகுதிகளில் பயனாளிகளுக்கு ஒரே அளவாக ரூ.3,500/-ம் மானியமாக வழங்கப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் 1,500 கரிம வாயுக் கலன்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது.

கரிம வாயு மேம்பாடுத் திட்டத்தை இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், முழு சுகாதார இயக்கம் போன்ற திட்டங்களுடன் இணைத்து செயல்படுத்திட சிறப்பான கவனம் செலுத்தப்பட்டது.

மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க தமிழக எரிசக்தி மேம்பாட்டு முகமையின்மூலம் மாநில அளவிலான விழிப்புணர்வுப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கருத்தரங்கில் சுமார் 300 கிராம ஊராட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

**2005-2006**

தனி நபர் இல்லக் கழிப்பறைகளுடன் இணைந்த 3,000 கரிம வாயுக் கலன்கள் அமைக்கவும், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகக் கழிவறைகளுடன் இணைந்த 30 கரிம வாயுக் கலன்கள் அமைக்கவும், தாவரக் கழிவுகள் மூலம் செயல்படும் 10 எரிசக்தி கலன்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.62.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்திலுள்ள சிறந்த பொறியியல் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், 5 மண்டல மையங்களில், 1,500-க்கும் மேற்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துதல் குறித்து விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்படும்.

## 3.7. ஊராட்சி அமைப்புகள் நிர்வாகம்

### 3.7.1. மாநில நிதி ஆணைய மானியம்

**2004-2005**

2004-2005 ஆம் ஆண்டில் ஊராட்சி அமைப்புகளுக்கு ரூ.862.84 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டது. குடிநீர் அமைப்புகள், தெருவிளக்குகள் ஆகியவற்றைப் பராமரித்தல், மின் நுகர்வுக் கட்டணம் செலுத்துதல், ஓய்வூதிய பங்குத் தொகை, சிறு பாசனக் குளங்கள் பராமரிப்பு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைப் பராமரிப்பு போன்றவற்றிற்கு இந்த மானியம் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய பராமரிப்புப் பணிகளுக்குச் செலவானது போக எஞ்சிய ரூ.159.95 கோடி மதிப்பில் 16,850 மூலதனப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

**2005-2006**

2005-2006 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ஊராட்சி அமைப்புகளுக்கு மானியமாக ரூ.899 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.7.2. பதினோராவது நிதி ஆணைய மானியம்

**2004-2005**

அடிப்படை கல்வி, அடிப்படை சுகாதார சேவை, பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருவிளக்குகள், சுகாதாரம், இடுகாடுகள் போன்றவற்றின் பராமரிப்பிற்காக ஊரக உள்ளாட்சி அமைப்புகள், குடிமைசேவைகளைப் பராமரிப்பதற்கென, பதினோராவது நிதி ஆணைய மானியம் வழங்கப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.113.988 கோடி செலவில் 27,442 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

### 3.7.3. திறனாக்க மேம்பாடு

**2004-2005**

உள் கட்டமைப்புகளுக்கென செய்யப்படும் முதலீடானது வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும். ஆனால், பல ஆண்டுகளாக



இவ்வாறு முதலீடு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பயன்பாடு, நீடித்த பயன்பாடு மற்றும் அதற்கு மேலாக, ஏழை மக்கள் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு ஆகியவை பற்றிய ஐயங்களும் நிலவுகின்றன. மகளிர் முன்னேற்றம், மழைநீரைச் சேகரித்தல் போன்றவற்றில் மக்கள் பங்கேற்புடன் சிறப்பான சாதனைகளை நிகழ்த்தி, நாட்டின் இதர பகுதிகளுக்குத் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. பயிற்சிகள் அளிக்கப்பட்டதும், தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதும் இவ்விரண்டு இனங்களிலும் நிகழ்த்தப்பட்டுள்ள பெரும் சாதனைக்கு காரணம். தகவல், கல்வி மற்றும் மக்கள் தொடர்பிற்கென செய்யப்படும் முதலீடு, வளர்ச்சிக்கும், மக்களுக்குமாக செய்யப்படும் முதலீடாகும் என்ற அடிப்படையில் திறனாக்க மேம்பாடு குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது.

- நீடித்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊரகத் தொழில்நுட்பம் குறித்த பயிற்சிகள், சிறந்த பயிற்சி நிறுவனங்களில், வெளி இட பயிற்சியாக அளிக்கப்பட்டன.
- 385 கிராம ஊராட்சி தலைவர்களுக்குக் கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தா கல்வி கேந்திரத்தில், பயிற்சி அளிக்கப்பட்டது.
- ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவராக உள்ள, ஆதிதிராவிட/பழங்குடியின மகளிர்களுக்கு காந்தி கிராம ஊரகப் பல்கலைக் கழகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.
- மாவட்ட ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்களாக உள்ள, ஆதிதிராவிட/பழங்குடியின மகளிர் உறுப்பினர்களுக்கு டாட்டா—தான் அறக்கட்டளை ஒத்துழைப்புடன் பயிற்சியளிக்கப்பட்டது.
- பிற மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறந்த நடைமுறைகளை நேரடியாகக் கண்டு, கற்றறிந்திட ஏதுவாக மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கு, கிராம ஊராட்சித் தலைவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.
- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் பயிற்சி அளிக்கும் திறனை வலுப்படுத்தி மேம்படுத்தும்வகையில், வீடியோ—கான்பரன்சிங் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 7

- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள்மூலம் ஊரக வளர்ச்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் என மொத்தம் 30,600 பேர்களுக்கு திறனாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**2005-2006**

ஊரக வளர்ச்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் சார்புத்துறை அலுவலர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் என மொத்தம் 33,750 பேருக்குப் பயிற்சி அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**3.8. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

**2004-2005**

2004-2005 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.102.00 கோடியில், இத்திட்ட வழிகாட்டி நெறிமுறையின்படி 4,135 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**2005-2006**

2005-2006 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் ரூ.114 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**3.9. முழுமையாக மாநில அரசு நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**3.9.1. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

**2004-2005**

2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.192.70 கோடி விடுவிக்கப்பட்டு, இதுவரை 9,983 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2005-2006**

இத்திட்டத்தின்கீழ், சட்டமன்ற தொகுதிக்கான நிதி ஒதுக்கீடு ரூ.82.00 இலட்சத்தில் இருந்து ரூ.100 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைப்படி, வழிகாட்டி



2005 ஏப்ரல் 7]

நெறிமுறைகளுக்குட்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.235 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.9.2. நமது கிராமம்**

நமது கிராமம் திட்ட செயலாக்கம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. முதல் கட்டம் நிறைவடையும் நிலையில் உள்ளது. ஊக்கத் தொகையைப் பெறுவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீடுகளின் நோக்கங்களை பொறுத்து, தாம் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கிராம ஊராட்சிகள் தற்போது மதிப்பீடு செய்து வருகின்றன. ஊராட்சிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கிட ஏதுவாக அரசு விரிவான வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்துள்ளது. வெவ்வேறு அளவிலான முயற்சிகளின் அடிப்படையில், மாறுபட்ட முன்னேற்றத்தை வழிகாட்டி நெறியின்கீழான இலக்கீடுகளைப் பொறுத்து அடைந்துள்ள அனைத்து ஊராட்சிகளையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஊக்கத் தொகை ரூ.3 இலட்சம், ரூ.1 இலட்சம் மற்றும் ரூ.20,000 என்ற மூன்று நிலைகளில் வழங்கப்பட உள்ளது.

2005-2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 175 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.9.3 ஊரக வீட்டுவசதித் திட்டம்**

**2004-2005**

ஊரகப் பகுதிகளில் உள்ள கச்சா வீடுகளை மேம்படுத்துவதற்காக, கடனுதவியுடன் இணைந்த பங்கேற்பின் அடிப்படையிலான "ஊரகப் பகுதி ஏழைகளுக்கான வீட்டு வசதித் திட்டம்" 2004-2005 ஆம் ஆண்டிலிருந்து சுய உதவிக் குழுக்களின்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 20,000 கச்சா வீடுகளைத் தரம் உயர்த்துவதற்கென ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2005-2006**

2005-2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் 1 இலட்சம் வீடுகளை மேம்படுத்திட அரசு கருதியுள்ளது.

[2005 ஏப்ரல் 7

### 3.9.4 அதிகாரமளித்தல் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டம்

**2004-2005**

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் மிக வறிய நிலையில் உள்ள 25 குடும்பங்களுக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பு, இருப்பிடப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து பாதுகாப்பு, உடல்நலப் பாதுகாப்பு போன்றவை நடைமுறையில் உள்ள வளர்ச்சித் திட்டங்களின்மூலம் வழங்கப்படும். இதற்கென மாவட்டங்களுக்கு 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி விடுவிக்கப்பட்டது.

**2005-2006**

2005-2006 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் ரூ.20.00 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும்.

### 3.9.5 தன்னிறைவுத் திட்டம்

**2004-2005**

பொது மக்களிடமிருந்து மொத்த பணி மதிப்பீட்டில் 25 சதவீதத்திற்குக் குறையாமல் ரொக்கம், பொருள், அல்லது உழைப்பு என்ற ஏதாவதொரு வகையில் பெறப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் சமுதாயத்தின் தேவைகள் கண்டறியப்பட்டு, இதர திட்டங்களின்மூலம் மேற்கொள்ளப்படாத பணிகள், முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன. 2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.40.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,176 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**2005-2006**

2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.9.6 கிராம உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

**2004-2005**

பல கிராம சந்தைகள் குறைந்தபட்ச உள்கட்டமைப்பு வசதிகள் இன்றியும், சுகாதாரமற்ற நிலையிலும் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சந்தைகள் ஊரக உற்பத்திப் பொருட்கள் மற்றும் இதர ஊரகப் பொருட்களின் விற்பனைக்காக நடத்தப்படுகின்றன. 2004-2005 ஆம் ஆண்டில் இத்தகைய 33 சந்தைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளாக கடைகள் கட்டுதல், தெரு மின் விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, அணுகு சாலை மற்றும் வடிகால் வசதி, ஆகியவற்றை அமைக்கும் பணிகள் நபார்டு (தேசிய விவசாய



2005 ஏப்ரல் 7]

மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி) உதவியின்கீழ் ரூ.244.04 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

**2005-2006**

நபார்டு நிதியுதவியின்கீழ் ரூ. 432.82 இலட்சம் செலவில் 71 கிராம சந்தைகளுக்குத் தேவையான கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை அளித்திட துறை கருதியுள்ளது.

### 3.9.7 தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு சமூகப் பொருளாதார மேம்பாட்டுச் சங்கம்

**2004-2005**

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் தேவைகளின் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.6.00 கோடியும், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ.3.00 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 3.9.8 நிர்வாக உள்கட்டமைப்பு ஆதரவு

2004-2005 ஆம் ஆண்டில், ஊரக வளர்ச்சித் துறையின் நிர்வாக உள்கட்டமைப்பு வசதிகளை, மேம்படுத்தவும் பணியிட வசதிகள் மற்றும் செயல்திறன் மேம்பாடு ஆகியவற்றை அடைந்திடவும் அரசு கீழ்க்கண்ட செயல்பாடுகளை மேற்கொண்டது:

- கன்னியாகுமரி மாவட்டத்தில், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் கட்டுதல்.
- இராமநாதபுரம் மாவட்டத்தில், போகலூர், பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பூர் மற்றும் வேப்பந்தட்டை, தேனி மாவட்டத்தில் உத்தமபாளையம், திருவள்ளூர் மாவட்டத்தில் மீஞ்சூர், திருவண்ணாமலை மாவட்டத்தில் சேத்துபட்டு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் அலுவலகக் கட்டடங்களை ரூ.30.00 இலட்சம் செலவில் பழுதுபார்த்தல்.
- மதுரை மாவட்டம், டி. கல்லுப்பட்டியில் அமைந்துள்ள மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் எரிசக்திப் பூங்கா அமைத்தல்.

[2005 ஏப்ரல் 7

- ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் ஜெராக்ஸ் மற்றும் பேக்ஸ் இயந்திரம் அமைத்தல், ஈபிபிஎக்ஸ் இயந்திரத்தை மாற்றியமைத்தல் போன்ற பணிகளைச் செய்தல்.
- பெரம்பலூர், கரூர், சேலம், நீலகிரி, நாகப்பட்டினம், கடலூர், மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இம்மாவட்ட ஆட்சியரக வளர்ச்சிப் பிரிவுகளுக்கு மொத்தம் ரூ.2.75 இலட்சம் மதிப்பில் பேக்ஸ் இயந்திரம் வழங்குதல்.
- ரூ.30.00 இலட்சம் மதிப்பில் தருமபுரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட அலுவலர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்டுதல்.

**2005-2006**

*2005-2006* ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்காக ரூ.443.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

- விழுப்புரம் மாவட்டத்தில் திருநாவலூர், தருமபுரி மாவட்டத்தில் பென்னாகரம் மற்றும் நல்லாம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் ரூ.165.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.
- திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர், பெரம்பலூர் மாவட்டத்தில் அரியலூர், திருமானூர், ஆண்டிமடம், சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி, கல்லல், கண்ணங்குடி, சாக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, ஈரோடு மாவட்டத்தில் கொடுமுடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் அலுவலகக் கட்டடங்கள் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்க்கப்படும்.
- கடலூர், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களின் திட்ட அலுவலர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கான முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ரூ.48.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.
- திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு ரூ.70.00 இலட்சம் செலவில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.



2005 ஏப்ரல் 7]

- நாமக்கல் மாவட்டத்தில் கபிலர்மலை, பள்ளிப்பாளையம், கொல்லிமலை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலும், ஈரோடு மாவட்டத்திள்ள தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள பணியாளர் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகள் மொத்தம் ரூ.14.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்திய விஜயநகரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் தலா ரூ.2.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.6.00 இலட்சம் செலவில் எரிசக்திப் பூங்கா அமைக்கப்படும்.
- மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரகப் (வளர்ச்சி) பிரிவை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான வளர்ச்சித் துறை அலுவலகங்களுக்கு ரூ.53.00 இலட்சம் செலவில் கணினிகள், ஜெராக்ஸ் இயந்திரங்கள், பேக்ஸ் இயந்திரங்கள் ஆகிய அலுவலகப் பயன்பாட்டிற்கான உபகரணங்கள் வழங்கப்படும்.
- சென்னையிலுள்ள ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு ரூ.47.00 இலட்சம் செலவில் கணினிகள், கணினி உபரிப் பொருட்கள் மற்றும் அலுவலகப் பயன்பாட்டுக் கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டு கணினி அறை விரிவுபடுத்தப்படும்.

**4. நிதிநிலை ஒதுக்கீடு 2005-2006**

(ரூ.ஆயிரத்தில்)

| வ. எண் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2005-2006 கணக்குத் தலைப்பு | | திட்டம் அல்லாதவை | திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 2202 | பொதுக் கல்வி | 0 | 0 | 0 |
| 2 | 2210 | மருத்துவம் மற்றும் பொது நலன் | 10261 | 0 | 10261 |
| 3 | 2215 | குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரம் | 24480 | 155598 | 180078 |
| 4 | 2216 | வீட்டு வசதி | 0 | 430478 | 430478 |

[2005 ஏப்ரல் 7

| வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2005-2006 | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | கணக்குத் தலைப்பு | | திட்டம் அல்லா-தவை | திட்டம் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 5 | 2225 | ஆ.தி./ப.கு மற்றும் பிற்பட்டோர் வகுப்பினர் நலன் | 52553 | 0 | 52553 |
| 6 | 2235 | சமுதாய பாதுகாப்பு மற்றும் நலம் | 0 | 200000 | 200000 |
| 7 | 2236 | ஊட்டச் சத்து | 104090 | 2011955 | 2116045 |
| 8 | 2501 | ஊரக வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டம் | 0 | 234509 | 234509 |
| 9 | 2505 | ஊரக வேலைவாய்ப்பு | 0 | 1403750 | 1403750 |
| 10 | 2515 | இதர ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | 1478777 | 1074538 | 2553315 |
| 11 | 2810 | மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் | 0 | 13181 | 13181 |
| 12 | 3454 | மக்கள் தொகை கணக் கெடுப்பு மற்றும் புள்ளிவிவரம் | 1959 | 0 | 1959 |
| 13 | 3604 | உ.அ / ஊராட்சி நிறுவனங் களுக்கான இழப்பீடு மற்றும் ஒதுக்கீடு | 8990001 | 932228 | 9922229 |
| 14 | 4216 | வீட்டு வசதி மூலதன ஒதுக்கீடு | 0 | 1 | 1 |
| 15 | 4515 | இதர ஊரக வசதிகளுக்கான மூலதன திட்ட ஒதுக்கீடு | 0 | 4797638 | 4797638 |
| 16 | 4702 | சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு | 0 | 0 | 0 |
| | | **மொத்தம்** | **10662121** | **11253876** | **21915997** |
| | | **கூட்டுக (பிடித்தங்கள்)** | **15** | **1** | **16** |
| | | **சாற்றப்பட்டது** | **1** | **0** | **1** |
| | | **பெரு மொத்தம்** | **10662136** | **11253877** | **21916013** |



2005 ஏப்ரல் 7]

## 5. 2005-2006 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள்

### 5.1. ஊரக சுகாதாரம்

**அ. ஊரக சுகாதார மேம்பாட்டில் கூட்டாண்மை அமைப்புகளை ஈடுபடுத்துதல் :**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருவிடந்தை கிராமத்தில் கூட்டாண்மை அமைப்பு பங்கேற்புடன் ஊரக சுகாதாரத்தைச் சிறப்பாக மேம்படுத்தியுள்ளதன் அடிப்படையில், புனித தலமாகவும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் உள்ள 100 கிராமங்களில் ஊரக சுகாதார மேம்பாட்டினை ஏற்படுத்துவதில் கூட்டாண்மை அமைப்புகளின் பங்கேற்பினைப் பெற்றிட துறை கருதியுள்ளது.

**ஆ. 75 சதவீத சுகாதார வசதியை அடைதல் :**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள தூய்மையான கிராம இயக்கத்திற்கான விருது மற்றும் மத்திய அரசு அறிவித்துள்ள நிர்மல் கிராம புரஸ்கார் விருது ஆகியவை ஊரகப் பகுதிகளில் சுகாதாரம் குறித்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஊக்கத்தை ஊராட்சிகளிடையே அதிகரித்துள்ளது. 2005-2006 ஆம் ஆண்டிற்குள் ஊரகப் பகுதிகளில் 75 சதவீதத்தினருக்கு சுகாதார கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திட துறை கருதியுள்ளது.

**இ. தூய்மையான கிராம இயக்க விருது :**

தூய்மையான கிராம இயக்க விருதினை அதிக ஊராட்சிகள் பெறுகின்றவகையில் ஊக்குவித்திட, இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு ஆண்டில் அதிகரிக்கப்படும். தகுதி உடைய கிராம ஊராட்சிகள் மற்றும் சிறப்பு கிராம ஊராட்சிகளுக்கு தூய்மையான கிராம இயக்க விருதுகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்படும்.

**ஈ. சுகாதாரமான பிளாஸ்டிக் கழிவறை :**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஊரக மகளிர் சுய உதவிக் குழுவின்மூலம் ஒரு அலகிற்கு தலா ரூ.10.00 இலட்சம் வீதம் சுகாதாரமான பிளாஸ்டிக் கழிவறை கோப்பைகளின் தயாரிப்பு மேற்கொள்ளப்படும்.

[2005 ஏப்ரல் 7

## 5.2. சுய வேலைவாய்ப்புத் திட்டம்

### அ. மின் சலவையகம்

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், உணவகங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் பல பெரிய நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு தினசரி பெருமளவில் துணிகள் சுத்தம் செய்யும் தேவை உள்ளது. சலவையகத் தொழில் துறையில் வருமானத்தைப் பெருக்கவல்ல நடவடிக்கைகளை ஊரக சுய உதவிக் குழுக்கள் கண்டறியலாம். எனவே, 580 ஊரக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சுய வேலைவாய்ப்பு கிடைக்கும் அளவில், ஒவ்வொரு மாவட்டத்திலும் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் ஒரு மின் சலவையகம், மொத்தம் ரூ.145.00 இலட்சம் செலவில், ஏற்படுத்தப்படும்.

### ஆ. வாழ்வாதாரப் பயிற்சி

10 மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதியைச் சார்ந்த 18 முதல் 35 வயதிற்குட்பட்ட 5,000 இளைஞர்களுக்கு வாழ்வாதார திறன் அடிப்படையிலான பயிற்சிகள் மற்றும் அடிப்படை கணினி பயிற்சிகள், இதர சேவை தொடர்பான பயிற்சிகள் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட சிறப்புத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும்.

### இ. புத்துணர்வு மற்றும் முடநீக்கியல் சிகிச்சை பயிற்சி

பாரம்பரிய மற்றும் உள்நாட்டு மரபு சார்ந்த மருத்துவ சிகிச்சை முறைகள், ஆயுர்வேதம் மற்றும் சித்தா வைத்திய முறைகள் போன்றவை உலகளாவிய அளவில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. ஆயுர்வேதம் மற்றும் சித்த வைத்தியம் போன்ற மரபு சார்ந்த மருத்துவ முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான சிகிச்சை முறைகளை அளிக்கக்கூடிய பயிற்சி பெற்ற உதவியாளர்களுக்கான தேவை அதிகமாக உள்ளது. எனவே, 2005-2006 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 5 சுய உதவிக் குழுக்கள் வீதம் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களைச் சார்ந்த 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட 3,000 நபர்களுக்கு மதிப்பு வாய்ந்த நிறுவனங்கள்மூலம் முடநீக்கியல் மருத்துவ சிகிச்சை பயிற்சி மற்றும் ஆயுர்வேத புத்துணர்வுப் பயிற்சி போன்றவை மொத்தம் ரூ.150.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.



2005 ஏப்ரல் 7]

### ஈ. சுய உதவிக் குழுக்கள் இடையேயான தொடர்பமைப்பு

சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை இக்குழுக்களிடையே விற்பனை செய்வதற்கு மிகுந்த வாய்ப்புகள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும், சுய உதவிக் குழுக்களால் உள்ளூரில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கான தேவை அதிகமாக உள்ள பொருட்கள் கண்டறியப்பட்டு, அவற்றிற்கான விற்பனை வாய்ப்புகள் மேம்படுத்தப்படும். மாவட்ட அளவில் உள்ள மாவட்ட விற்பனை மற்றும் விநியோக சங்கம், சுய உதவிக் குழுக்கள் இடையேயான தொடர்பமைப்பு ஏற்படுத்தும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படும். இத்தகைய தொடர்பமைப்பினால், சுய உதவிக் குழுக்கள்மூலம் கைவினை சம்பந்தமான தொழில்களை மட்டும் நம்பியிருக்கும் மனப்போக்கினைக் குறைப்பதற்கு வழிவகை செய்து, இக்குழுக்கள் நுகர்வோர் மற்றும் சேவை சம்பந்தமான தொழில்களையும் மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கப்படும்.

### உ. செல்லிட தொலைபேசி

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகப்படுத்தும் வகையில் விற்பனை நடவடிக்கைகளுக்கான தூரத்தையும், நேரத்தையும் பெருமளவு குறைப்பதற்கு உதவியாக ஏறத்தாழ 3,000 ஊரக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விற்பனை மேம்பாட்டிற்காக செல்லிட தொலைபேசிகள் வழங்கப்படும். 2005-2006 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 சுய உதவிக் குழுக்களுக்கு அவற்றின் விற்பனை செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் செல்லிட தொலைபேசிகள் வழங்கப்படும்.

### ஊ. பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள்

ஊரகப் பகுதிகளில் பொதுமக்கள் தொடர்பு சாதனங்களுக்கான தேவையானது ஆண்டு முழுவதும் தொடர்ந்து உள்ளது. ஊரக சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் இத்தகைய பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் அவர்களின் வாழ்வாதாரமாக மட்டுமல்லாமல், இயற்கை சீற்றங்களான வெள்ளம், நில நடுக்கம், சுனாமி போன்றவை ஏற்படும் காலங்களில் பொதுமக்களை முன்கூட்டியே எச்சரிப்பதற்கான கருவியாகவும் பயன்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் 2 சுய உதவிக் குழுக்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் பொருளாதார உதவி நடவடிக்கை மேற்கொள்ளத்தக்க வகையில், பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் வழங்கப்படும்.

[2005 ஏப்ரல் 7

### 5.3 வேலைக்கு ஊதியம்

#### அ. மீன் குட்டைகள் அமைத்தல்

தங்களுடைய விளை நிலங்களில் மழை நீரைச் சேகரித்து, தேக்கி வைப்பதற்காக விவசாயிகள் பண்ணை குட்டைகளை அமைப்பது வழக்கமாக உள்ளது. இந்த நடைமுறை நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதுடன், மீன் வளர்ப்பின்மூலம் கூடுதல் வருவாய் பெற்று தருகின்றது. இந்த நடைமுறையைப் பரவலாக அறிய செய்ய வேண்டிய தேவை உள்ளதால், வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் இதர நடைமுறையில் உள்ள திட்டங்கள்மூலம் 12 கடலோர மாவட்டங்களில் உள்ள 218 கடலோர கிராம ஊராட்சிகளில் இதுபோன்ற ஒரு குட்டை, தலா ரூ.75,000/— மதிப்பீட்டில் மொத்தம் ரூ.163.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

#### ஆ. வண்டிச் சாலைகளை மேம்படுத்தல்

ஊரகப் பொருளாதாரத்திற்கு உயிர் நாளமாக விளங்கும் வண்டிச் சாலைகள், ஊரகப் பகுதிகளையும் விற்பனை மையங்களையும் இணைக்கும் சாலையாகப் பயன்படுகின்றன. தமிழ்நாட்டில், 12,940.32 கி.மீ. நீளத்துக்கு உள்ள வண்டிச் சாலைகள் மண் சாலைகளாக உள்ளன. விவசாய விளை பொருட்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை உடனடியாக விற்பனை இடங்களுக்கு எடுத்துச் செல்ல ஏற்றவாறு இம் மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக படிப்படியாக மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2005-2006-ல் 500 கி.மீ. நீளமுள்ள வண்டிச் சாலைகள் ரூ.6,750 இலட்சம் மதிப்பீட்டில், வேலைக்கு ஊதியம் மற்றும் இதர திட்டங்களின்கீழ் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படும்.

#### இ. சத்துணவு /அங்கன்வாடி மையங்களுக்கான கட்டடங்கள்

மாநிலத்தில் 40,000-க்கும் மேற்பட்ட சத்துணவு/அங்கன்வாடி மையங்கள் உள்ளன. ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள சில மையங்கள் சொந்தக் கட்டடங்கள் இல்லாமலும், போதுமான இடவசதி இல்லாமலும் செயல்பட்டு வருகின்றன. 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூ.577.50 இலட்சம் செலவில் வேலைக்கு ஊதியம் மற்றும் இதர திட்டங்களின்கீழ் தலா ஒரு அங்கன்வாடி கட்டடம் கட்டப்படும்.



2005 ஏப்ரல் 7]

### 5.4. ஊரகச் சாலைகள்

#### ஊரகச் சாலைகளுக்கான தரக்கட்டுப்பாடு ஆய்வகம்

ஊரகச் சாலைகளின் தரத்தை உறுதி செய்யும் வகையில் மாவட்டத்திற்கு ஒன்று மற்றும் மாநிலத் தலைமையிடத்தில் ஒன்று என்ற அடிப்படையில் 30 தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் ரூ.106.46 இலட்சம் செலவில் மத்திய அரசு நிதி உதவியின்கீழ் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.5 கிராம ஊராட்சிகளுக்கு கணினி வழங்குதல்

மாநிலத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 50 சதவீத ஊராட்சிகளுக்குமேல் கணினி வசதி உடையவையாக மாறும் வகையில், 2005-2006 ஆம் ஆண்டில் மேலும் 5,363 கிராம ஊராட்சிகளுக்குக் கணினிகள் வழங்கப்படும்.

### 5.6 ஊரக எரிசக்தி

ஊரகப் பகுதிகளில் கீழ்கண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வள அமைப்புகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:

- தனிநபர் கழிப்பறைகளுடன் இணைந்து அமைக்கப்படும் 3,000 கரிம வாயுக் கலன்கள்
- மகளிர் சுகாதார வளாக கழிப்பறைகளுடன் இணைந்து அமைக்கப்படும் 30 கரிம வாயுக் கலன்கள்
- 10 தாவரக் கழிவு எரிசக்திக் கலன்கள்
- திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 5 காற்றாலைகள் அமைக்கப்படும்.

கிராம ஊராட்சிகளில் பராமரிப்பு மற்றும் தொடர் செலவினங்களைக் குறைக்கவும், அதிகரித்துவரும் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தகுந்த புதுப்பிக்கத்தக்க மாற்று எரிசக்தி அமைப்புகளின் தேவையை அதிகரிக்கவும், மேற்கண்ட சிறப்பு முன்முயற்சிகள் வழிவகுக்கும். பொது மின்விநியோக அமைப்பின்மீதான சார்புத் தன்மையும், கூடுதல் மின்கட்டண செலவினமும் இதனால் குறையும்.

[2005 ஏப்ரல் 7

### 5.7. கிராம ஊராட்சிகளில் மின் சக்தி தணிக்கை

கிராம ஊராட்சிகளின் மின் நுகர்வு கட்டண செலவின சுமையை குறைத்திடும் வகையினைக் கண்டறிய முன்னோடி நடவடிக்கையாக, அனைத்து மாவட்டங்களிலும், தலா ஒரு கிராம ஊராட்சியில் அவற்றின் மின் சக்தி நுகர்வு குறித்த கணக்கீட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்படும்.

### 5.8. திறன் மேம்பாட்டிற்கான முன்முயற்சிகள்

மாநிலம் முழுவதும் உள்ள ஊராட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளுக்கு, விண்கோள் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமாக தகவல், கல்வி மற்றும் தொடர்பு குறித்த பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

மேம்பட்ட ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊராட்சி அமைப்புகளின் திறன் மேம்பாடு ஆகியவற்றிற்கு உதவும் வகையிலும், தேவையான அளவிற்கு இப்பொருள் குறித்து பயிற்சி அளிக்கக்கூடிய திறனாளர்களை உருவாக்கும் வகையிலும் ஊராட்சி நிர்வாகம் குறித்த ஒரு சான்றிதழ் பாடத் திட்டத்தை நடைமுறைபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சிறந்த நிர்வாகத்திற்குத் தேவையான கணினி பயிற்சி ஊராட்சிகளுக்கும், இணையதள தகவல் மையங்களை நிர்வகிக்கும் பயிற்சி சுய உதவிக் குழுக்களுக்கும் அளிப்பதன்மூலம் ஊராட்சி அளவில் மின்னணு நிர்வாகத்தைச் செயல்படுத்த சிறப்புக் கவனம் அளிக்கப்படும்.

## சிறப்புச் சிற்றூராட்சிகள் இயக்ககம்

### 6. சிறப்புச் சிற்றூராட்சிகள்

562 முன்னாள் பேரூராட்சிகளைச் சிறப்புச் சிற்றூராட்சிகளாக வகைப்படுத்தி, 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில், உரிய வகையில் 1-10-2004 அன்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதனால் வள ஆதாரங்களைப் பயன்படுத்திக்கொள்ளவும், பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின்கீழ் நிதி உதவி பெறவும் வாய்ப்பு பெறும். அதேசமயம், இந்த உள்ளாட்சி அமைப்புக்களின் தனித் தன்மையை நிலைநிறுத்திக்கொள்ள இந்தத் திருத்தம் உறுதி செய்துள்ளது. முந்தைய பேரூராட்சிகள் இயக்ககம், சிறப்புச் சிற்றூராட்சிகள் இயக்ககம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 7]

## 7. 2004-2005 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றம்

### மாநிலத் திட்டங்கள்

சிறப்புச் சிற்றூராட்சிப் பகுதிகளில் வாழும் பொதுமக்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த மாநில மற்றும் மத்திய அரசின் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தி, கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க சாதனைகளை இத்துறை எட்டியுள்ளது :

### 7.1. குடிநீர் வழங்கல்

மொத்தம் ரூ.9.23 கோடி மதிப்பீட்டில் கூடுதல் குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தியதன்மூலம், 117 சிறப்புச் சிற்றூராட்சிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டு வறட்சி நிலைமை தணிக்கப்பட்டது.

### 7.2. சாலைகள்

சிறப்புச் சிற்றூராட்சிகளில் சாலை மேம்பாடு செய்ய முன்னுரிமை அளிக்கப்பட்டது. மொத்தம் ரூ.28.30 கோடி செலவினத்தில் 283 கி.மீ நீளம் உள்ள புதிய சாலைகள் அமைக்கப்பட்டு, மேலும் 50.70 கி.மீ நீளமுள்ள சாலைகள், தார்ச் சாலைகள் மற்றும் சிமென்ட் சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டன.

### 7.3. தெரு மின்விளக்குகள்

சிறப்புச் சிற்றூராட்சிப் பகுதிகளில் தெரு மின்விளக்கு அமைக்கும் பணிக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து மொத்தம் ரூ.6.00 கோடி செலவில் 12,000 புதிய தெரு மின் விளக்குகள், அனைத்து 562 சிறப்புச் சிற்றூராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

### 7.4. சுகாதாரம்

சமுதாயத்தில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள மகளிர் மற்றும் குழந்தைகள் பயன்பெறத் தக்க வகையில் கழிவறை, குளியலறை மற்றும் துணி துவைக்கும் வசதி ஆகியவை அடங்கிய 720 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் ரூ.18.72 கோடி செலவில் பொருத்தமான இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த வளாகங்கள் அனைத்தும் "பயனாளர் குழு"க்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 7.5. திடக் கழிவு மேலாண்மை

குப்பைகளை அவை உற்பத்தியாகும் இடங்களிலேயே, மக்கும் மற்றும் மக்காத தன்மையுள்ள குப்பைகள் என்று பிரித்து கையாளுவதும், அவற்றை முறையாக கழிவு செய்வதும், இந்தப் பணிகளுக்காக் பொது மக்களுக்குப் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் மிக சவாலான பணியாகும். இந்தப் பணியைச் சிறப்புச் சிற்றூராட்சி நிர்வாகம் மிகவும் சிறப்பாக நடைமுறைப்படுத்தி, அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது. அண்மையில் "மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்" அவர்கள் புதுடில்லியில் நடைபெற்ற "சுகாதார கிராமங்களுக்கான பரிசளிப்பு விழா"வில் ஆற்றிய உரையின்போது, வேலூர் மாவட்டத்திலுள்ள காந்திநகர் சிறப்புச் சிற்றூராட்சியில் செயல்படுத்தப்பட்டுவரும் "திடக் கழிவு மேலாண்மை" திட்டத்தினை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.

பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சியின் பங்களிப்புடன் காந்தி நகர் சிறப்புச் சிற்றூராட்சியில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு சிறப்புச் சிற்றூராட்சியில், பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து சிறப்புச் சிற்றூராட்சிகளிலும், திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் சுய உதவிக் குழுவினர் பங்கேற்றதன் காரணமாக, சராசரியாக ஒரு நகருக்கு 30 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட 26 சிறப்புச் சிற்றூராட்சிப் பகுதிகளிலும், மற்றும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள இதர 50 சிறப்புச் சிற்றூராட்சிகளிலும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தினசரி சுமார் 250 டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு குப்பைகள் மறு சுழற்சி செய்யப்படுவதால் சுற்றுச்சூழல் மாசுபடுவது குறைக்கப்படுகிறது.

## 7.6. திரவக் கழிவு மேலாண்மை

கோவை மாவட்டத்திலுள்ள சூலூர் சிறப்புச் சிற்றூராட்சியில் சிக்கனமான முறையில் சிறப்பு திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு, மற்ற பகுதிகளில் பின்பற்றத்தக்க வகையில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை 26-8-2004-ல் பார்வையிட்ட உலக வங்கியினர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.





## 7.7. மின்னணு நிர்வாகம்

சிறப்புச் சிற்றூராட்சிகள் நிர்வாகத்தை மின்னணு நிர்வாகம் ஆக்கும் முயற்சியின் ஒரு அங்கமாக மொத்தம் உள்ள 562 சிறப்புச் சிற்றூராட்சிகளிலும், அனைத்து உதவி இயக்குநர் அலுவலகங்களிலும், கணினிகள் பொருத்தப்பட்டு, அவை மாவட்ட ஆட்சியரகத்துடனும், சிறப்புச் சிற்றூராட்சிகள் இயக்குநரகத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு உடனுக்குடன் பிறப்பு, இறப்பு குறித்து பதிவு செய்தல் மற்றும் அதற்குரிய சான்று வழங்குதல் கணினி மூலமாக சிறப்பாக செய்யப்பட்டு வருகிறது.

## 7.8. மழை நீர் வடிகால்கள்

பெருமழைக் காலங்களில், தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமப் பகுதிகளுக்குட்பட்ட சிறப்புச் சிற்றூராட்சிப் பகுதிகளில் நீரில் மூழ்கும் பகுதிகள் கண்டறியப்பட்டு, ரூ.5.00 கோடி செலவில் தேவையான இடங்களில் மழை நீர் வாய்க்கால்கள் ஏற்படுத்தி அவை அருகில் உள்ள நீர் ஆதாரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## 8. ஆழிப் பேரலை பேரழிவு மீட்புப் பணி

கடற்கரைகளை ஒட்டிய பகுதிகளில் உள்ள 50 சிறப்புச் சிற்றூராட்சிகளில் 20 சிறப்புச் சிற்றூராட்சிகளில் 26-12-2004-ல் ஏற்பட்ட ஆழிப் பேரலையினால் கடும் பாதிப்பு ஏற்பட்டு மனித உயிர்கள், உடைமைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்தில் உள்ள வேளாங்கண்ணி மற்றும் தரங்கம்பாடி; கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கணபதிபுரம், புத்தளம், மணவாளக்குறிச்சி மற்றும் கன்னியாகுமரி; காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மாமல்லபுரம்; கடலூர் மாவட்டத்தில் உள்ள கிள்ளை மற்றும் பரங்கிப்பேட்டை ஆகிய சிறப்புச் சிற்றூராட்சி பகுதிகள், மனித உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்ட பகுதிக்ளில் சிலவாகும்.

நிவாரணப் பணிகளுக்குத் தேவையான பொருள், நிதியுதவி போன்றவற்றை அளித்து, நெருக்கடி நிலையைச் சமாளிக்க, சிறப்புச் சிற்றூராட்சி இயக்ககத்தின் அனைத்து நிர்வாக அமைப்புகளும் ஈடுபட்டன. மிகவும் சிறப்பாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட சிறப்புச்

[2005 ஏப்ரல் 7

சிற்றூராட்சிகளில் பணியாற்றிய 938 துப்புரவுப் பணியாளர்களது சேவையைப் பாராட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.2,500/— வீதம் வெகுமதி அளித்து பாராட்டியுள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில், குறிப்பாக வேளாங்கண்ணி, தரங்கம்பாடி மற்றும் மாமல்லபுரம் போன்ற சுற்றுலா/கோயில் நகரங்களில் மறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வது மிகப் பெரிய சவாலான பணியாகும். இந்தப் பகுதிகளில் அடிப்படை கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களைச் சீர் செய்யவும், வாழ்வாதாரங்களை இழந்தவர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தித் தருவதற்கும், இத்துறை மாநில மீட்புப் பணி ஆணையருடன் கலந்தாலோசித்து சுனாமி பாதிக்கப்பட்ட சிறப்புச் சிற்றூராட்சிகளில் சிறப்புச் செயல் திட்டம் ஒன்றினை உருவாக்கியுள்ளது.

**9. மத்திய அரசு மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன்கூடிய திட்டங்கள்**

**9.1. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்**

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் பொன்விழா ஆண்டு நகர வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ.1.91 கோடி மதிப்பீட்டில் 1,285 வேலைகள் செய்து முடிக்கப்பட்டு, 25,376 மனித வேலை நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 562 சிறப்புச் சிற்றூராட்சிகளிலும் 1,686 சமுதாய வளர்ச்சி சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 3,540 மகளிருக்கு பல்வேறு பிரிவுகளில் தங்களது திறமையை வளர்த்துக்கொள்ள உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 35 குழுக்களுக்குத் தொழில்கள் நடத்துவதற்காகக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 873 பயனாளிகளுக்குத் தனி நபர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.1,60,68,403/— கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**9.2. இதரத் திட்டங்கள்**

ஒருங்கிணைந்த சிறு மற்றும் குறு நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழும், பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழும் மொத்தம் 34 சமுதாய



2005 ஏப்ரல் 7]

சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பாரம்பரியம்மிக்க மற்றும் சுற்றுலா நகரங்களான, செஞ்சி, கழுகுமலை, குற்றாலம் மற்றும் செட்டிநாடு ஆகிய சிறப்புச் சிற்றூராட்சிப் பகுதிகளில் "கோயில் மற்றும் புராதன நகரங்கள்" திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் 98 வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**10. மத்திய அரசு உதவித் திட்டங்கள்**

**10.1. தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2004-2005 ஆம் ஆண்டு 562 குடிசைப் பகுதிகளில் மொத்தம் ரூ.15.30 கோடி செலவினத்தில் சாலைகள் அமைத்தல், கழிவு நீர் கால்வாய்கள் அமைத்தல், சிறு பாலங்கள் அமைத்தல், குடிநீர் வழங்குதல், தெரு மின் விளக்கு அமைத்தல், கழிவறைகள் அமைத்தல் ஆகிய வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

**10.2. 11-வது நிதிக் குழு**

சமுதாய சொத்துக்களைப் பராமரித்தல், குடிநீர் வழங்கல், பொது சுகாதாரம் ஆகிய பணிகளுக்காக 11-வது நிதிக் குழு மானியத்தின்கீழ் ரூ.17.53 கோடி மதிப்பீட்டில் 1,817 பணிகள் அனைத்துச் சிறப்புச் சிற்றூராட்சிகளிலும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**11. சிறப்புக் கூறு திட்டங்கள்**

2004-2005 ஆம் ஆண்டில் சிறப்புச் சிற்றூராட்சிப் பகுதிகளில் அனைத்துத் திட்டங்களின்கீழும் மொத்தம் ரூ.139.00 கோடி மதிப்பீட்டில் செய்யப்பட்ட பணிகளில், ரூ.40.00 கோடி மதிப்பீட்டிலான வேலைகள், 12,62,553 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் பணிகள் ஆகும். இது மொத்த மதிப்பீட்டில் 29% ஆகும்.

**12. 2005-2006 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு**

2005-2006 ஆம் ஆண்டில் சிறப்புச் சிற்றூராட்சிகளது நிர்வாகத்திற்கான மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.21,752.78 இலட்சம் ஆகும்.

[2005 ஏப்ரல் 7

### 13. சிறப்பு முயற்சிகள்

#### 13.1. குப்பையிலிருந்து செல்வம் உருவாக்கும் திட்டம்

குப்பைகளைத் தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக்கி, வீணாகும் தண்ணீரை மறு சுழற்சிக்கு உட்படுத்தும் திட்டம் தற்போது *74* சிறப்புச் சிற்றூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை மேலும் விரிவுபடுத்தி பொதுமக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் பங்கேற்புடன் கோயில் மற்றும் புராதனமிக்க நகரங்கள் உள்ளடக்கிய மொத்தம் *150* சிறப்புச் சிற்றூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

#### 13.2. திறமையை வளர்த்தல் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு சுயசார்பு அளித்தல்

*10* சிறப்புச் சிற்றூராட்சிகளில் சோதனை முறையில் வரி வசூல், குடிநீர் பராமரிப்பு, திடக் கழிவு மேலாண்மை ஆகிய திட்டங்கள் சுய உதவி குழுக்கள் மூலமாக செயல்படுத்தப்பட உள்ளன.

#### 13.3. சேவை மையங்கள்

வீட்டு உபயோகப் பொருள்கள், குழாய் பழுது பார்த்தல், கொத்து வேலை செய்தல் மற்றும் சிறிய பழுதுபார்த்தல் முதலானவற்றில் மகளிர் குழுக்களுக்கு உரிய பயிற்சி அளித்து, அவர்கள் மூலமாக, முக்கியமான சிறப்புச் சிற்றூராட்சிகளில், மொத்தம் ரூ.*50.00* இலட்சம் மதிப்பீட்டில் சேவை மையங்கள் நடத்தப்பட உள்ளன.

#### 13.4. அலுவலகங்களைத் தன்னியக்கம் ஆக்குதல்

*2005-2006* ஆம் ஆண்டில் *562* சிறப்புச் சிற்றூராட்சிகளிலும் வரி வசூல் மற்றும் அலுவலக நிர்வாகம் ஆகிய அனைத்துப் பணிகளும் கணினிமயமாக்கப்பட உள்ளன. இந்த முயற்சி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் முதல் முயற்சியாகும்.

### 14. முடிவுரை

தமிழ்நாட்டை நாட்டிலேயே முதல் மாநிலமாக ஆக்கிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீர்மானித்துள்ளார். இந்தக் குறிக்கோளைத் தனது ஒவ்வொரு செயல்பாடு மற்றும் திட்டங்களிலும், ஊரக வளர்ச்சித் துறை பின்பற்றி வருகிறது. ஊரகப் பொருளாதாரத்தின் விரைவான மேம்பாடு என்பது தொடர்ந்து இத்துறையின் இலட்சியமாகத் திகழும்.



2005 ஏப்ரல் 7]



[2005 ஏப்ரல் 7




II



2005 ஏப்ரல் 7]




III

[2005 ஏப்ரல் 7




தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
186280
சென்னை-600 008

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 112, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.